www.padippakam.com



# தாழ்த்தப்பட்டோரும் இந்துக்களும்

அண்ணல் அம்பேத்கர்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தாழ்த்தப்பட்டோரும் இந்துக்களும்

அண்ணல் அம்பேத்கர்

சமூகநீதிப் பதிப்பகம்
54, கண்ணகி நகர், பெருமாநல்லூர் சாலை
திருப்பூர்-638 602

படிப்பகம்

www.padippakam.com

தாழ்த்தப்பட்டோரும் இந்துக்களும்

ஆசிரியர் : அம்பேத்கர்

முதல் பதிப்பு : டிசம்பர் 1993

இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 1995

மொழியாக்கம் : வெ. கோவிந்தசாமி

வெளியீடு : சமூகநீதிப் பதிப்பகம்
54, கண்ணகி நகர்
பெருமாநல்லூர் சாலை
திருப்பூர்-638 602.
தொலைபேசி : 24875

விலை : ரூ. 25-00

மகாராட்டிர அரசு வெளியிட்டுள்ள அம்பேத்கரின் ''எழுத்துகளும் பேச்சுகளும்'' என்ற நூல் தொகுதி ஐந்தின் 'Untouchables or the Children of India's Ghetto' கட்டுரையின் தமிழாக்கமே இந்நூல்! அத்தியாயம் ஏழும் அத்தியாயம் எட்டில் இரண்டாம் பகுதியும் இத்தமிழாக்க நூலில் விடப்பட்டுள்ளது.

அச்சகம் : அலைகள் அச்சகம்
36, தெற்குச் சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தீண்டாமையின் தோற்றம் | 5 |
| 2. | தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை | 11 |
| 3. | அடிமைகளும் தாழ்த்தப்பட்டவர்களும் | 18 |
| 4. | இந்தியச் சேரிகள் தீண்டாமையின் மையம் | 38 |
| 5. | மனித உறவுக்கு அருகதையற்றவர்கள் | 54 |
| 6. | தீண்டாமையின் சட்டச் சீர்குலைவு | 69 |
| 7. | பிரச்சினைக்கான வேர்கள் இணையான உதாரணங்கள் | 121 |
| 8. | இந்துக்களும் மனச்சாட்சித் தேவையும் | 132 |
| 9. | இந்துக்களும் சமூக மனச்சாட்சித் தேவையும் | 143 |
| 10. | இந்துவும் சாதியில் அவன் கொண்டுள்ள நம்பிக்கையும் | 155 |
| 11. | அரசு இயந்திரத்தின் பகைமை | 162 |
| 12. | ஓரவஞ்சனைப் பிரச்சினை | 171 |
| 13. | ஒதுக்குதல் என்ற பிரச்சினை | 178 |


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## அத்தியாயம்—1

# தீண்டாமையின் தோற்றம்

தாழ்த்தப்பட்டவர்களின் துயரமான நிலைமையை உணர்ந்த எவருமே, "தாழ்த்தப்பட்டவர்களுக்கு நாம் ஏதாவது செய்யவேண்டும்" என அங்கலாய்ப்பது வழக்கமான ஒன்று. இந்தப் பிரச்சினையில் நாட்டமுள்ள ஒருவராவது, "சாதி இந்துக்களைத் திருத்த நாம் ஏதாவது செய்யவேண்டும்" எனச் சொல்வது மிக அரிதாகவே இருக்கிறது. திருத்தப்பட வேண்டியவர்கள் தாழ்த்தப் பட்டவர்களே என்ற கருத்து பொதுவாகக் காணப்படு கிறது. மக்களைச் சீர்திருத்தும் மத குருமார்களின் நிறுவனம் ஒன்று இருக்குமேயானால் அது பணியாற்ற வேண்டியது தாழ்த்தப்பட்டவர்களிடையேதான். தாழ்த் தப்பட்டவர்களைத் திருத்திவிட்டால் தீண்டாமை ஒழிந்துவிடும், சாதி இந்துக்களைச் சீர்திருத்த வேண்டிய தேவை இல்லை. அவன் நல்ல புத்தியோடு, நல்லொழுக் கதோடு நன்னடத்தையோடுதான் இருக்கிறான். அவனி டம் எந்தத் தவறும் இல்லை. இந்தக் கருத்துகள் சரி யானவையா? சரியோ அல்லது தவறோ? இந்துக்கள் இப்படித்தான் கருதுகிறார்கள். இம்மாதிரியான முடிவு களால், அதிகப்பட்ச நன்மை ஒன்று இருக்கிறது. தீண்டாமைக்குத் தாங்கள் பொறுப்பல்ல என்ற சுய திருப்திக்கு இது வழி வகுக்கிறது என்பதே அது.

படிப்பகம்

www.padippakam.com



யூதர்களோடு, புறச்சமயத்தினர் (Gentile) கொண்டுள்ள அணுகுமுறையை விளக்குவதன் மூலம் இம்மாதிரியான அணுகுமுறையின் எதார்த்தத்தைப் புரிந்துகொள்ளலாம். இந்துக்களைப் போலவே, புறச்சமயத்தினரும் யூதப் பிரச்சினைக்குத் தாங்கள்தான் காரணம் என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. இந்தப் பிரச்சினையின் மீதான லூயிஸ் கோல்டிங் என்பவரின் கருத்துகள் மிகத் தெளிவானவையாக இருக்கின்றன. யூதப் பிரச்சினை சாராம்சத்தில் புறச்சமயப் பிரச்சினைதான் என்பதைக் காட்ட அவர் பின்வருமாறு சொல்கிறார் :

''யூதப் பிரச்சினை என்பது சாராம்சத்தில் புறச்சமயப் பிரச்சினைதான் என்று நான் கருதுகிறேன். இதனை விளக்க ஒரு எளிய நிகழ்ச்சியை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஜான்சுமித் என்பவர் எனக்கு மிக நெருக்கமான அண்டை வீட்டுக்காரர். இவர் பேடி என்று ஒரு நாயை வளர்த்து வந்தார். இது ஒரு அயர்லாந்து பகுதிக் கலப்பின நாய் ஆகும். எனது நண்பர் இந்நாயைக் கண்ணின் மணி போலப் பார்த்து வந்தார். இந்த நாய்க்கு ஸ்காட்லாந்து பகுதி நாய்களைக் கண்டால் பிடிக்காது. இந்த நாய்க்கு இருபது அடி தூரத்தில் அந்த நாய்கள் ஏதேனும் வந்தால், பிறர் காது செவிடாகும்படி குரைக்க ஆரம்பித்து விடும். ஜான்சுமித் இதற்காக வருத்தப் படுவார் ஆகவே, அந்த நாயின் பக்கம் வாயில்லாப் பூச்சிகள் எந்த ஒன்றும் செல்லாவண்ணம் மிகக் கவனமாகப் பார்த்துக் கொண்டார். பேடி என்ற அந்த நாயின் மீது அவர் மிகுந்த அன்பு வைத்திருந்தார் இருப்பினும் நாயின் இந்த மோசமான பழக்கத்திற்கு அதனுள் பொதிந்துள்ள ஏதேனும் ஒரு பாரம்பரிய குணாம்சமே காரணமாக இருக்கக்கூடும் என்று அவர் கருதினார். நானும் அப்படியே கருதுகிறேன். ஸ்காட்லாந்து பகுதியைச் சார்ந்த நாய்கள் தான் இங்குப் பிரச்சினைக்குக் காரணமாயிருக்கிறது என நாங்கள் கருதவில்லை. ஏதேனும் ஒரு

படிப்பகம்

www.padippakam.com



நாய் மாலை நேரத்தில் மோப்பம் பிடித்தபடி அமைதியாக நின்று கொண்டிருந்தால் உடனே பேடி அதைப் பார்த்துக் குரைக்க ஆரம்பித்துவிடும். அந்த நாயின் இருப்பே இதனைச் சண்டைக்குத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

யூதப் பிரச்சினைக்கும், தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினைக்கும் இடையே முழுமையான ஒற்றுமை காணப்படுகிறது. பேடி என்ற நாய்க்கு ஸ்காட்லாந்து நாய் எப்படியோ அதேபோலப் புறச்சமயத்தவருக்கு யூதர்கள், இந்துக்களுக்குத் தாழ்த்தப்பட்டவர்கள். ஆனால் ஒரு அம்சத்தில் புறச்சமயத்தினர் பிரச்சினையோடு யூதப் பிரச்சினை முரண்பட்டுள்ளது. ஒன்றுக்கொன்று முரணான சமயக் கோட்பாடுகளினால் யூதர்களும், புறச்சமயத்தினரும் பிரிந்து நிற்கின்றனர். புறச்சமயத்தவர் கோட்பாடுகளை யூதச் சமயக் கோட்பாடு எதிர்க்கிறது. ஆனால் இந்துக்களும் தாழ்த்தப்பட்டவர்களும் இம்மாதிரியான சமய முரண்பாடுகளால் பிரிந்து இருக்கவில்லை. இந்த இரு தரப்பினரும் ஒரே சமயத்தை, வழிபாட்டு முறையைக் கொண்டிருப்பவர்கள்தான்.

யூதர்கள் புறச்சமயத்தாரிடமிருந்து பிரிந்து இருக்கவே விரும்புகிறார்கள் என்றும் ஒரு விளக்கம் தரப்படுகிறது. முதல் விளக்கம் குறுந் தேசிய வெறித்தன்மை கொண்டது. இரண்டாவது விளக்கமோ, வரலாற்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதுபோலத் தோன்றுகிறது. கடந்த காலங்களில் யூதர்களைத் தன்வயமாக்கப் புறச்சமயத்தினர் எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். ஆனால் யூதர்களோ, இம்மாதிரியான முயற்சிகள் அனைத்தையும் எதிர்த்தே வந்தனர். இதுகுறித்து இரண்டு மாதிரிகளைச் சுட்டிக் காட்டலாம்.

முதல் மாதிரி நெப்போலியன் காலத்தைச் சார்ந்தது, பிரெஞ்சு தேசிய அவை, யூதர்களுக்கும் மனித உரிமை

www.padippakam.com



அளிப்பது குறித்த அறிவிப்பை ஏற்றுக் கொண்டது. உடனே அல்காஸ் பகுதி வணிகர்களும் மதப் பிற்போக்காளர்களும் யூதப் பிரச்சினையை மீண்டும் கிளறிவிட்டனர், நெப்போலியனோ, இப்பிரச்சினையை யூதர்கள் வசமே விட்டுவிட முடிவு செய்தார். பிரெஞ்சு, ஜெர்மனி, இத்தாலி நாடுகளைச் சேர்ந்த முக்கிய யூதப் பிரமுகர்களின் அவையைக் கூட்டினார். யூதர்கள் ஏனைய மக்களோடு ஒன்று கலப்பதற்குக் குடியுரிமைகள் அவசியம் என நெப்போலியன் விரும்பினார். இந்தக் குடியுரிமைகள் யூதச் சமயக் கோட்பாட்டிற்கு ஒத்திசைவாய் இருக்கின்றனவா என்பதை நிச்சயப்படுத்த இந்த அவை கூட்டப்பட்டது. 111 உறுப்பினர்களைக் கொண்ட இந்த அவை 1806 சூலை 25ஆம் தேதியன்று பாரிஸ் நகரக் கட்டிடத்தில் கூடியது.

யூதத் தேசபக்திக்கான சாத்தியக்கூறு, யூதர்களுக்கும் ஏனையோருக்குமிடையே கலப்பு மணத்திற்கு அனுமதி, வட்டித் தொழிலுக்குச் சட்ட அனுமதி ஆகிய பிரச்சினைகள் உள்ளிட்ட 12 கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்படி இந்த அவையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த அவையின் வேண்டுகோளினால் மனம் மகிழ்ந்து நெப்போலியன் ஜெருசலத்தின் பழைய அவையை ஒத்த சேங்கிரிடிரின் (The Sanhedrin) என்ற அவையைக் கூட்டினார். பிரெஞ்சு, ஜெர்மனி, ஆலந்து, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 17 உறுப்பினர்களைக் கொண்ட இந்த அவை; ரபி ஜின்ஸ்கிம் என்பவர் தலைமையில் 1807 பிப்ரவரி 9 அன்று கூடியது. அது பின்வரும் விசயங்கள் அடங்கிய சாசனத்தை வெளியிட்டது. அதன்படி யூதர்கள் பிரெஞ்சு நாட்டைத் தங்கள் தந்தையர் நாடாகக் கருதவேண்டும். பிரெஞ்சு மக்களைத் தங்கள் சகோதரர்களாகக் கருதவேண்டும். பிரெஞ்சு மொழியைப் பேச வேண்டும். அத்தோடு யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே நடக்கும் திருமணங்களைச் சகித்துக்கொள்ள

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். ஆனால் இத்திருமணங்களை யூதத் திருச்சபை ஏற்றுக்கொள்ளாது என்றும் கூறினர் யூதர்களுக்கும் ஏனையோருக்கும் இடையே நடக்கும் கலப்புத் திருமணங்களை அங்கீகரிக்க யூதர்கள் மறுத்தனர் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இம்மாதிரியான திருமணங்களைச் சகித்துக் கொள்கிறோம் என்று மட்டுமே ஒத்துக் கொண்டார்கள்.

இரண்டாவது எடுத்துக்காட்டு 1795இல் பட்டாவின் குடியரசு ஏற்பட்ட போது நேர்ந்ததாகும். மிகவும் செல்வாக்கு வாய்ந்த யூதப்பிரமுகர்கள் தங்கள் சமூகம் அனுபவிக்கும் பல தடைகளை அகற்றக்கோரி அழுத்தம் தந்து வந்தனர். ஆனால் யூதர்களுக்கு முழுக்குடியுரிமை வேண்டும் என முற்போக்கு யூதர்கள் முன்வைத்த கோரிக்கையை ஆச்சரியப்படும்படியாக முதலில் எதிர்த்தவர்கள் ஆமஸ்ட்ராம் சமூகத் தலைவர்கள்தான். சமத்துவக் குடியுரிமை யூதச் சமயத்தின் தனித்தன்மைக்கு எதிராக இருந்து விடுமோ என்று அச்சம் கொண்டிருந்தனர். தங்கள் சமயச் சகோதரர்கள் தங்கள் சமய நம்பிக்கைக்கு விசுவாசமாகக் குடியுரிமையைக் கைவிடவேண்டும் எனக் கோரினர். ஒரு சமூகத்தின் உறுப்பினர்களாக இருப்பதைவிட அன்னியர்களாக இருக்கவே யூதர்கள் விரும்பியதை இது காட்டுகிறது.

புறச்சமயத்தினர் கொடுத்த விளக்கங்களுக்கு என்ன மதிப்பு இருந்தபோதிலும், யூதர்களுக்கு எதிரான தங்களது அநாகரிக அணுகுமுறைக்குத் தாங்கள் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டவேண்டும் என்பதையாவது குறைந்தபட்சம் உணர்ந்திருந்தனர். தாழ்த்தப்பட்டவர்களைத் தாங்கள் நடத்தும் விதத்தை "நியாயப்படுத்த வேண்டும் என்பதை இந்துக்கள் எப்பொழுதுமே உணர்ந்ததில்லை. இதில் இந்துக்களுக்குத்தான் பெரும் பொறுப்பு இருக்கிறது. காரணம், தீண்டாமையை

www.padippakam.com



நியாயப்படுத்த எந்த ஒரு சாதாரண விளக்கத்தையும் கூட இவர்கள் தரமுடியாது. தாழ்த்தப்பட்டவர்கள் ஒரு தொழுநோயாளி அல்லது ஒழுக்கக்கேடானவன், எனவே அவனை வெறுக்க வேண்டும் என ஒரு இந்து சொல்ல முடியாது. தங்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையில் சமயப் பகைமை இருக்கிறது. அவற்றைச் சமரசப்படுத்துவது சாத்தியமில்லை என்றும் ஒரு இந்துவால் சொல்லிவிட முடியாது. அல்லது தாழ்த்தப்பட்டவர்கள் தான் தங்களுடன் ஒன்று கலக்க விரும்பவில்லை என்றும் வாதாட முடியாது.

ஆனால் தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்தமட்டில் விசயம் அப்படி இல்லை. ஒரு பொருளில் பார்த்தால், இவர்களும் பிற பகுதி மக்களிடமிருந்து நிரந்தரமாகவே பிரிந்து இருக்கிறார்கள்.

ஆனால் இந்தப் பிரிவு— இந்தத் தனிமைப்படுத்தல்— இவர்கள் விருப்பத்தால் ஏற்பட்டதல்ல. தாழ்த்தப்பட்டவர்கள் மற்றவர்களுடன் ஒன்று கலக்க விரும்பவில்லை என்பதால் அவர்கள் தண்டிக்கப்படவில்லை. அவர்களும் இந்துக்களில் ஒருவராக இருக்க விரும்பியதாலேதான் தண்டிக்கப்பட்டார்கள். யூதப்பிரச்சினையும், தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினையும், 'மற்றவர்களால் இப்பிரச்சினை உருவாக்கப்பட்டது' என்ற அளவில் இயல்பில் ஒன்றாக இருந்தாலும், சாராம்சத்தில் வேறுபட்டது. யூதர்களின் பிரச்சினை அவர்களின் தன்னிச்சையான ஒதுங்கும் தன்மையினால் விளைந்தது தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினையோ, கட்டாயத் தனிமைப்படுத்தல் ஆகும். தீண்டாமை திணிக்கப்பட்டதே ஒழிய விருப்பப்படி தெரிவு செய்யப்பட்டதல்ல. □□

படிப்பகம்

www.padippakam.com

## அத்தியாயம்—2

# தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை

தீண்டாமை என்றால் என்ன என்பதை ஒருவர் தெரிந்துகொள்ளும் முன்பு, இந்தியாவில் தாழ்த்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதைத் தெரிந்துகொள்ள மக்கள்தொகைப் புள்ளிவிவரத்தை நாடவேண்டும்.

இந்தியாவில் முதல் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 1881இல் எடுக்கப்பட்டது. சாதிகள், மதங்கள் ஆகியவற்றைப் பட்டியலிட்டு அவற்றின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, இந்தியாவின் மொத்த மக்கள் தொகையைக் கணக்கிட முயற்சித்தது தவிர 1881 கணக்கெடுப்பு வேறெதையும் செய்துவிடவில்லை— பல்வேறு இந்துச் சாதிகளை மேல் சாதி, கீழ் சாதி என்றோ அல்லது தீண்டத்தகுந்தவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்றோ வகைப்படுத்த இக்கணக்கெடுப்பு எந்த ஒரு முயற்சியும் செய்யவில்லை. இரண்டாவது மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 1891-இல் எடுக்கப்பட்டது. சாதி, இனம், படிநிலை ஆகியவற்றின் அடிப்படையில் மக்கள்தொகையை வகைப்படுத்த கணக்கெடுப்பு ஆணையர் முதன்முறையாக முயற்சித்தார். ஆனால் இது ஒரு முயற்சி மட்டுமே.

படிப்பகம்

www.padippakam.com



மூன்றாவது மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 1901இல் நடைபெற்றது. 'சுதேசி மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்ட பொதுக் கருத்தின்படி சமூக நடைமுறைகளின் அடிப்படையில் வகைப்படுத்துவது' என்ற புதிய கொள்கை இக்கணக்கெடுப்பில் கையாளப்பட்டது. மேல் சாதி இந்துக்கள் மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்குச் சாதி பயன்படுத்தப்படுவதைக் கடுமையாக எதிர்த்தனர். சாதி பற்றிய கேள்வியைக் கைவிடும்படி அவர்கள் வலி யுறுத்தினர்.

கணக்கெடுப்பு ஆணையர் இந்த எதிர்ப்பைக் கண்டு கொள்ளவேயில்லை. ஆணையரின் கருத்தின்படி சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பு முக்கியமானது, அவசியமானது. ''ஒரு சமூக நிறுவனம் என்ற அளவில் சாதியின் நன்மை அல்லது தீமை குறித்த கருத்துகள் என்ன வாக இருந்தபோதிலும், இந்தியாவில் சாதியை அடிப் படையாகக் கொள்ளாத மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பற்றிய விவாதத்தில் எந்தப்பயனும் இருக்காது. இன்ன மும் கூட, 'இந்தியச் சமூகக் கட்டுமானத்தின் அடிப்படை யாக' சாதி இருந்து வருகிறது. இந்தியச் சமூகத்தின் பல்வேறு அடுக்குகளில் மாற்றத்தைத் தெரிந்துகொள்வதற் கான சிறந்த வழிகாட்டியாகச் சாதி பற்றிய தகவல் இருந்து வருகிறது'' ஒவ்வொரு இந்துவும் (இந்தச்சொல் லின் மிகவும் நெகிழ்வான பொருளில்) ஒரு சாதியில்தான் பிறக்கிறான். மதம், பொருளாதாரம், குடும்பவாழ்க்கை உள்ளிட்டு, தொட்டிலிலிருந்து சுடுகாடுவரை அனைத்தை யும் அவன் சாதிதான் நிர்ணயிக்கிறது. மேற்கு நாடுகளில் சமூகத்தின் பல்வேறு அடுக்குகளை நிர்ணயிப்பது செல் வம், கல்வி, தொழில், கத்தோலிக்க மதம் போன்றவை. இவற்றில் முன்னது (செல்வம், கல்வி, தொழில்) எளிதில் மாறக்கூடியவை, நெகிழ்வானவை. இவை பிறப்பின் இறுக்கத்தையும் பாரம்பரியத் தன்மையையும் மாற்ற உதவும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவில் மதம், சமூக வகுப்பு, மரபுத்தொழில், ஆகியன ஏனைய அனைத்துக் காரணிகளையும் பின்னுக்குத் தள்ளிவிடுகின்றன. மேற்கு நாடுகளில் பொருளாதாரம் அல்லது தொழில் அடிப்படையிலான மக்கள் பிரிவுகள் சமூகப் புள்ளிவிவரக் கணக்கெடுப்பிற்கு அடிப்படையாக இருக்கின்றன. இந்தியாவிலோ மதம், சாதி ஆகியன மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்கு அடிப்படையாக இருக்கின்றன. சாதி ஒரு ''தேசியச் சமூக அமைப்பு'' என்ற அளவில் இதன்மீது எந்தவிதமான கருத்துகள் இருந்து வந்தபோதிலும் இதனைப் (சாதி) புறக்கணிப்பது பயனற்றது.

ஒரு தனிநபரின் தொழில் சமூக அடையாளங்களைக் காண்பிக்கும் சிறப்புக் காரணியாகச் சாதி தொடர்ந்து பயன்பட்டு வருகிறது. ஆகவே இந்நிலை நீடிக்கும் வரை மக்கள்தொகைக் கணக்கெடுப்பினால் விரும்பத்தகாத நிறுவனமான சாதி தொடர்கிறது எனக் குற்றம் சாட்ட முடியாது.

1901 மக்கள் தொகைக் கணக்கெடுப்பானது தாழ்த்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையைச் சரிவரத் தரவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, தாழ்த்தப்பட்டவர் யார்? என்பதை நிர்ணயிப்பதற்கான எந்தக் கராறான வழியும் பின்பற்றப்படவில்லை. இரண்டாவது பொருளாதார நிலையிலும் கல்வி வழியிலும் பிற்பட்ட நிலையில் உள்ள ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத சாதிகளும் தாழ்த்தப்பட்ட சாதியோடு கலந்து கணக்கெடுக்கப்பட்டது.

1911 கணக்கெடுப்பு ஒருப்படி முன்னேற்றமானது. தாழ்த்தப்படாத சாதிகளிடமிருந்து தாழ்த்தப்பட்டவர்களைப் பிரிப்பதற்குப் பத்து அளவுகோல்கள் கையாளப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டன. இந்த அளவுகோல்களின் கீழ்க் கணக்கெடுப்பு ஆய்வாளர்கள் சாதிகள் பற்றியும் பழங்குடி மக்கள் பற்றியும் தனியாகக் கணக்கெடுத்தனர்.

**அளவுகோல்கள் :**

1. பார்ப்பனிய மேலாதிக்கத்தை மறுப்பது.
2. பார்ப்பனர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட இந்துக் குருவிடமிருந்து மந்திரங்கள் பெற்றுக் கொள்ளாமல் இருப்பது.
3. வேதங்களின் அதிகாரத்தை மறுப்பது.
4. பெரும் இந்துக் கடவுள்களை வணங்காமல் இருப்பது.
5. சுத்தபார்ப்பனர்களின் தொண்டு கிடைக்காமல் இருப்பது.
6. பார்ப்பனப் புரோகிதர்கள் இல்லாமல் இருப்பது.
7. சாதாரண இந்துக் கோயில்களின் கருவறைக்குள் கூட அனுமதி மறுக்கப்பட்டவர்கள்.
8. தீட்டுக்கு ஆளானவர்கள்.
9. இறந்த உடலைப் புதைப்பவர்கள்.
10. மாட்டுக்கறி உண்பவர்கள், பசுவை மதிக்காதவர்கள்.

1910 சனவரி 27 ஆம் தேதியன்று முஸ்லீம்கள் சார்பில் அரசாங்கத்திற்குத் தரப்பட்ட மனுவில் 'தீண்டத்தகாதவர்களை இந்துக்களிடமிருந்து பிரித்துப் பார்க்க

www.padippakam.com



வேண்டும்'என வலியுறுத்தப்பட்டு இருந்தது. அதற்குப் பின் வரும் காரணங்கள் கூறப்பட்டன. இந்துக்களுக்கு இந்த நாட்டின் அரசியல் நிறுவனங்களில் தரப்படும் பிரதிநிதித்துவம் தீண்டத்தகுந்த இந்துக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தான் இருக்கவேண்டும். இந்துக்கள் என்ற மொத்தக் கணக்கு கூடாது. காரணம் தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக்களல்ல.

1911 கணக்கெடுப்பானது தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதற்கான தொடக்கமாக இருந்தது. இந்த வழியில்தான் 1921, 1931 கணக்கெடுப்புகளும் நடைபெற்றன.

இந்த முயற்சிகளின் பயனாக 1930 இல் இந்தியாவிற்கு வருகைபுரிந்து இருந்த சைமன் குழுவானது பிரிட்டிஷ் இந்தியாவில் வாழும் தாழ்த்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 44.5 மில்லியன் என உறுதியாகச் சொல்ல வழி ஏற்பட்டது.

1932 இல் சீர்திருத்தப்பட்ட சட்ட மன்றங்களுக்கு வாக்களிக்கும் உரிமையை ஆராய்வதற்காக லோத்தியன் (Lothian) குழு வருகை தந்தபோது இந்துக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் பற்றி சைமன் குழு தந்த எண்ணிக்கை பொய்யானது எனக்கூறி அதனை ஏற்றுக்கொள்ள உறுதியாக மறுத்தனர். சில மாகாணங்களில் இருந்த இந்துக்கள் ''தங்கள் பகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்களே இல்லை'' என்று சொல்லும் அளவிற்குக்கூடச் சென்றார்கள். இதற்குக் காரணம் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொண்டால் தங்களுக்கு வரும் ஆபத்தை இந்துக்கள் உணர்ந்து கொண்டதே ஆகும். இதுவரை இந்துக்கள் அனுபவித்து வந்த பிரதிநிதித்துவத்தின் ஒரு பகுதியைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தரவேண்டும் என்ற அச்சமும் இதற்குக் காரணம்.

படிப்பகம்

www.padippakam.com



1941 கணக்கெடுப்பு நமது விவாதத்திற்குத் தேவை இல்லை. காரணம் இது போர்க்காலத்தில் எடுக்கப்பட்ட சுமாரான மதிப்பீடாகும்.

1951 இல் எடுக்கப்பட்டதுதான் மிகச் சமீபத்திய கணக்கெடுப்பாகும். பின்வரும் புள்ளி விவரங்கள் இதிலிருந்து எடுக்கப்பட்டவை ஆகும். இந்தியாவில் உள்ள தாழ்த்தப்பட்ட சாதி மக்களின் எண்ணிக்கை 513 லட்சங்கள் எனக் கணக்கெடுப்பு ஆணையர் கூறுகிறார்.

1951 கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் 3567 இலட்சங்கள். 1.35 லட்ச மக்களின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை. காரணம் இதுபற்றிய ஆவணங்கள் ஜலந்தர் அலுவலகத்தில் தீக்கிரையாகிவிட்டது.

மொத்த மக்கள் தொகையான 3567 இலட்சங்களில் 2949 இலட்ச மக்கள் கிராமப்புறங்களில் வசித்து வருகிறார்கள். 618 இலட்சம் மக்கள் நகர்ப்புறங்களில் வசித்து வருகிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் மொத்த எண்ணிக்கை 462 இலட்சங்கள். நகரப்புறங்களில் இவர்களின் எண்ணிக்கை 51 இலட்சங்கள்.

மொத்த மக்கள் தொகையில் விவசாயம் சாராத மக்கள் தொகையின் எண்ணிக்கை 1076 இலட்சம், தாழ்த்தப்பட்ட சாதிகளின் எண்ணிக்கை 132 இலட்சம்.

நிலத்தை முழுமையாகவோ, அல்லது முதன்மையாகவோ கொண்டு விவசாயம் செய்பவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் மொத்த மக்கள் தொகையில் 1674 இலட்சங்கள் ஆகும். தாழ்த்தப்பட்டோரில் அவர்களின் தொகை 174 இலட்சங்கள் ஆகும்.

மொத்த மக்கள் தொகையில் விவசாயக் கூலிகளும் அவர்களைச் சார்ந்தவர்களும் 448 இலட்சம். தாழ்த்தப்

படிப்பகம்

www.padippakam.com



பட்ட சாதிகளிடையே விவசாயக் கூலிகளின் எண்ணிக்கை 148 இலட்சம். விவசாயம் சாராத தொழில்களின் எண்ணிக்கை பின்வருமாறு :

விவசாயம் சாராத உற்பத்தித் தொழிலில் மொத்த எண்ணிக்கை 377 இலட்சம். தாழ்த்தப்பட்ட சாதியினர் 53 இலட்சம். வணிகம்: மொத்த எண்ணிக்கை 213 இலட்சம். தாழ்த்தப்பட்ட சாதியினர் 9 இலட்சம். போக்கு வரத்து : மொத்த எண்ணிக்கை 56 இலட்சம். தாழ்த்தப் பட்ட சாதியினர் தொகை 6 இலட்சம் மட்டுமே.

ஏனைய சிறு தொழில்கள்: மொத்த எண்ணிக்கை 430 இலட்சம். தாழ்த்தப்பட்ட சாதியினர் 64 இலட்சம் மட்டுமே.

தாழ்த்தப்பட்ட சாதியினரின் மொத்த எண்ணிக்கை 513 இலட்சம். இதில் 114 இலட்சம் பேர் வட இந்தியா விலும் (உத்திரப்பிரதேசம்) 128 இலட்சம் பேர் கிழக்கு இந்தியாவிலும் (பீகார், ஒரிசா, மேற்குவங்காளம், அசாம், மணிப்பூர், திரிபுரா) 110 இலட்சம் பேர் தென்னிந்தியா விலும் (சென்னை, மைசூர், திருவாங்கூர்—கொச்சின், கூர்க்) 31 இலட்சம் பேர் மேற்கு இந்தியாவிலும் (பம்பாய் சௌராஷ்டிரம், கட்ச்) 76 இலட்சம் பேர் மத்திய இந்தி யாவிலும் (மத்தியப்பிரதேசம், மத்திய பாரதம், ஐதரா பாத், போபால், விந்திய பிரதேசம்) 52 இலட்சம் பேர் வடமேற்கு இந்தியாவிலும் (இராஜஸ்தான், பஞ்சாப். பாட்டியாலா, கிழக்கு பஞ்சாப் மாநிலங்கள், ஆஜ்மீர், டெல்லி, பிளாஸ்பூர், ஹிமாசலப் பிரதேசம்) வாழ்ந்து வருகிறார்கள்.

□□



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம்—3

# அடிமைகளும் தாழ்த்தப்பட்டவர்களும்

தீண்டாமை குறித்து வெட்கப்படுவதைக் காட்டிலும் அதனை நியாயப்படுத்தவே இந்துக்கள் முயல்கிறார்கள். இந்துக்கள் மற்ற நாட்டினரைப்போல அடிமை முறையை உயர்த்திப்பிடிக்கவில்லை; தீண்டாமை என்பது அடிமை முறையைவிட மோசமானது அல்ல; இதுவே இந்துக்களின் நியாயப்படுத்தும் முயற்சியாகும். இம்மாதிரியான வாதங்களை முன்வைப்பது ஏதோ ஒரு சாதாரண நபரல்ல. லாலா லஜபதிராய் இவ்வாறு சொல்கிறார், "துயரமான இந்தியா" என்ற தன் புத்தகத்திலேயே இவ்வாறு அவர் கூறுகிறார். இந்த வாதத்தை மறுப்பதற்காக நாம் காலத்தை விரயம் ஆக்கவேண்டியது தேவையில்லைதான்; ஆனால் அடிமை முறையைவிட மோசமான வேறொன்றை அனுபவித்து இருக்காத ஏனைய நாட்டினர் தீண்டாமை அடிமை முறையைவிட மோசமானது அல்ல என நம்பிக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதால் நாம் இதை மறுக்க வேண்டியதாக இருக்கிறது.

இந்துக்கள் அடிமை முறையை அங்கீகரிக்கவில்லை என்பது முழுப்பொய். அடிமைமுறை இந்துக்களின் மிகப் பழமையான முறையாகும். இந்துச் சட்டத்தின் தந்தை

படிப்பகம்

www.padippakam.com



யான மனுவால் இது அங்கீகரிக்கப்பட்டது. மனுவின் வாரிசுகளான சுமிருதி ஆசிரியர்களால் இது விரிவாக்கப் பட்டு முறைப்படுத்தப்பட்டது. அடிமை முறை என்பது இந்துக்களிடையே ஏதோ மிக நெடுங்காலத்திற்கு முன்பு நடைமுறையில் இருந்த அமைப்பாக இல்லை. இது இந்திய வரலாற்றில் 1843 வரை நடைமுறையில் இருந்து வந்த பழமையான நிறுவனமாகும். ஆங்கில அரசாங்கம் சட்டத்தின் மூலம் இதை நீக்கி இருக்காவிட்டால் இன்றைக்கும் கூட இது தொடர்ந்து நடைமுறையில் இருந் திருக்கும்.

பண்டைய உரோமாபுரியில் இருந்த அடிமைமுறையை யும் நவீன அமெரிக்காவில் இருந்துவரும் அடிமை முறை யையும் தீண்டாமையோடு ஒப்பிட்டும், முரண்படுத்தி யும் பார்த்தால் இந்த இரண்டின் நன்மைகளைத் தெரிந்து கொள்ளலாம். எதிர்க் குற்றச்சாட்டைச் சந்திப்பதறகு இதுவே சிறந்த வழி.

உரோமானியப் பேரரசில் அடிமைகளின் உண்மை யான நிலை என்ன? திரு. பாரோவின் ''உரோமப் பேரரசில் அடிமை முறை'' என்ற புத்தகத்தில் கொடுத் துள்ள விளக்கமே சிறப்பானது எனக் கருதுகிறேன். அவர் பின்வருமாறு கூறுகிறார்:

''இதுவரை குடும்ப அடிமை முறையின் வெறுக்கத் தக்க பக்கமே விவரிக்கப்பட்டு வந்தது. இதற்கு வேறு ஒரு பக்கமும் உண்டு. எண்ணற்ற குடும்பங்கள் சமூகமாக இருந்ததை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. ஒரு வேளை இவை விதிவிலக்காக இருந்திருக்கலாம். ஐயத் திற்கு இடமின்றி அடிமை வேலையாட்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்திருக்கிறார்கள். பொதுவாக அவர்கள் உரோம் நகரத்திலேயே இருந்திருக்கிறார்கள். இத்தாலியிலும் ஏனைய மாகாணங்களிலும், வில்லாவின்

படிப்பகம்

www.padippakam.com



(Villa) எண்ணற்ற உறுப்பினர்கள் நிலத்திலும் அது சார்ந்த உற்பத்தித் தொழிலிலும் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். எசமானனுக்கும் அடிமைக்கும் இடையிலான பழைய பாணி உறவு முறை தொடர்ந்து இருந்திருக்கிறது. பெரும்பாலான நேரங்களில அடிமை சகத் தொழிலாளியாகவே இருந்திருக்கிறான். எசமான் அடிமையின்மீது கொண்டிருந்த கருணை நன்கு தெரிந்ததே. தன்னொழுக்க உணர்வினால் இந்தக் கருணை உண்டாகி விடவில்லை. அடிமையின் சுகவீனத்தாலும், அவன் இறந்ததினாலும் தனக்கு ஏற்பட்ட இன்னல்கள் குறித்து தான் எழுதிய குறிப்புகளைப் படிக்கும் எதிர்காலத் தலைமுறை தன்னை நியாயமானவனாகப் பார்க்கவேண்டுமென்ற விருப்பத்தினாலும் இந்தக் கருணை ஏற்பட்டுவிடவில்லை.

குடும்பம் என்பது அடிமையின் குடியரசாகும். அடிமையிடம் எசமானன் கொண்டிருந்த அணுகுமுறை பொதுவான முன்னேற்றம் குறித்த அக்கறையாகவே சில சமயம் கருதப்பட்டது. அல்லது இதை ஒரு மதிப்பற்ற ஆதாரமாக எடுத்துக் கொள்ளுமளவுக்குத் தற்காலிக அணுகுமுறையாகக் கருதப்பட்டது. இந்த அணுகுமுறைக்கு எந்தக் காரணமும் இல்லை.

பகட்டு உண்மையான் இலக்கிய ஆர்வம் ஆகிய இரண்டிற்காகவும், கலை, இலக்கியத்தில் பயிற்சி பெற்ற அடிமைகளைப் பணக்காரக் குடும்பங்கள் தங்களுடன் வைத்திருந்தனர். ஹோமர். கெசிஆய்ட் ஆகியோர் பாடல்களைக் கற்றுத்தர பதினொரு அடிமைகளை வைத்திருந்ததாகக் கிளே பிசிஸ் சேபினஸிடம், சேனிமா சொல்லியுள்ளார்.

அச்சு முறை இல்லாத காலத்தில், இம்மாதிரியான அடிமைகள் தேவையாயிருந்தனர். சுறு சுறுப்பான வக்கீல்; கவிஞர், தத்துவவாதி, இலக்கியச் சுவைகளைக் கற்றுத்

www.padippakam.com



தேர்ந்த படித்த கனவான், படியெடுப்பவர், படித்துக் காட்டுபவர், செயலர்கள் ஆகியோர் தேவைப்பட்டனர். இம்மாதிரியான மனிதர்கள் இயல்பாகவே மொழியிய லாளர்களாகவும் இருந்தனர். இருபது வயதில் மாண்டு போன ஒரு நூலகர் தன்னை இலத்தீன் இலக்கியத்தின் ஜாம்பவான் எனப்பெருமையோடு சொல்லிக்கொண்டார்.

படியெடுக்கும் செயலர்கள் பரவலாக இருந்து வந்தனர். பொது / தனியார் நூலகங்களில் நூலகர்கள் இருந்தனர். பேரரசில் சுருக்கெழுத்து முறை பரவலாக நடைமுறையில் இருந்தது. இதற்கு வழக்கமாக அடிமை கள் அமர்த்தப்பட்டிருந்தனர். எண்ணற்ற சுதந்திர மனிதர்கள், நாவல்லுநர்கள், இலக்கண ஆசிரியர்கள் குறித்த விவரங்களைத் திரு. நெட்டோனியஸ் தன் ஆய்வுக் கட்டுரையில் திரட்டியுள்ளார். அகஸ்டஸின் பேரனுக்கு வெரியஸ் பிளேக்கஸ் என்ற அடிமை ஆசிரியராக இருந் திருக்கிறார். இவர் இறந்தபோது, சிலைவைத்து மரியாதை தரப்பட்டது. சிகிரிபோனியல் அப்ரோடியஸ் என்பவர் அடிமை. இவர் ஆர்ப்பிளஸ் என்பவருக்குச் சீடராக இருந்திருக்கிறார் பின்பு, ஸ்கிரிபினியா என்பவரால் விடுதலை பெற்றிருக்கிறார்.

பாலதீன் நூலகத்தின் நூலகராக, ஹைசினஸ் இருந் திருக்கிறார். இவருக்குப் பின்பு, ஜூலியஸ் போடஸ்டஸ் என்ற இவரின் சக நண்பர் நூலகராக இருந்திருக்கிறார். அடிமைத்தத்துவ்வாதிகளின் வரலாற்றை எழுதும் ஆய்வா ளர்களாகச் சுதந்திர மனிதர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிய முடிகிறது. இவர்கள் தங்கள் எசமா னர்களுடனும் அடிமைகளின் நண்பர்களுடனும் விவாதிக் கும்படி ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். சுதந்திரமான மனிதர் கள் மருத்துவர்களாக இருந்ததாகக் கல்வெட்டுகளில்

www.padippakam.com



காணப்படுகிறது. இவர்களில் சிலர் குறிப்பிட்ட துறைகளில் தேர்ச்சியாளர்களாக இருந்திருக்கின்றனர். இவர்கள் அடிமைகள் என்ற முறையில் பணக்காரக் குடும்பங்களில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர். ஒன்று அல்லது இரண்டு உதாரணங்களின் மூலம் இதனை அறிய முடிகிறது. இவர்கள் பிரபலமானவர்களாக இருந்திருக்கின்றனர். அநியாயக் கட்டணம் வாங்கியதாகக் கெட்ட பெயர் வாங்கியவர்கள்."

சமூகத்தில் சில பிரிவினரின் கலை உணர்வு நாட்டியக்காரர்கள், பாடகர்கள், இசைஞர்கள், பல்வேறு கலைஞர்கள், விளையாட்டுப் பயிற்சியாளர்கள் ஆகியோரின் வருகையைக் கோருகிறது. அடிமை முறையில் இவை அனைத்தையும் காண்கிறோம். ஆசிரியர்களால் பயிற்சி பெற்றவர்கள் பேரும் புகழும் பெற்றிருக்கிறார்கள்.

அகஸ்தஸின் காலம் வணிகம், தொழில் இவற்றின் விரிவாக்கத்தோடு தொடங்குகிறது. இதற்கு முன்பும் கூட அடிமைகள் வேலையில் ஈடுபட்டு இருந்திருக்கிறார்கள். ஆனால் வணிகத்தில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சியினால் அவர்கள் எண்ணிக்கை அதிகமானது. உரோமானியர்கள் பல்வேறு வணிகத் தொழில் முயற்சிகளில் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். இருப்பினும்கூட வணிகச் செயல்பாடுகள் மிகப் பரவலானதால் முகவர் (Agent) மிக அவசியமானவராகிவிட்டார். பெரும்பாலும் அடிமைகளே இம்மாதிரியான முகவர்களாக இருந்து வந்தார்கள்.

இதற்குக் காரணம் அடிமைமுறையின் விதிகள் நெகிழ்வானவையாக இருந்தன. செல்வமும் வளமும் குவிந்த நேரங்களில் அடிமைக்கு ஊக்கத் தொகையும், அடிமையின் தவறான செயல்களினால் தொழிலில் நட்டம் ஏற்படும் போது எசமானனைக் காத்துக்கொள்ள அடிமையின்

www.padippakam.com



மீது கட்டுப்பாடுகளும் கொண்டு வருமளவுக்கு, இந்த விதிகள் நெகிழ்வானவையாக இருந்தன. அடிமைக்கும் எசமானனுக்குமிடையில் அல்லது மூன்றாம் மனிதனுக்கிடையில் வணிக ஒப்பந்தங்கள் சாதாரணமாக இருந்து வந்தன. இலாபமும் கணிசமாக இருந்து வந்தது. அடிமைகளுக்கு நிலத்தை வாடகைக்கு விடுவது ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்தது. தொழில் துறையில்கூட இதே முறை பல்வேறு வடிவங்களில் நடைமுறையில் இருந்து வந்தது. எசமானன் ஒரு வங்கியையோ அல்லது ஒரு கப்பலையோ வாடகைக்குத் தரலாம். அடிமைக்கு இலாபத்தின் அடிப்படையிலோ பிற வகையிலோ தொகை தரப்பட்டது.

அடிமையின் பணம் பல்வேறு நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. பெரும்பாலான நேரங்களில் இந்த நிதி உணவுக்காக அல்லது மகிழ்ச்சிக்காகச் செலவிடப்பட்டது என்பதில் அய்யமில்லை. ஆனால் இந்த நிதி வெறும் சிறு சேமிப்பாகவோ தற்செயல் சம்பளமாகவோ சுருதப்பட்டு வீணாகச் செலவிடப்படவில்லை. தன் எசமானனின் வணிகத்தில் இலாபம் சம்பாதிக்கும் ஒரு அடிமை— அந்த இலாபம் அடிமையின் இலாபமும்கூட— அப்பணத்தை நல்வழியில் செலவழிப்பதில் கூர்மையான கவனத்தைக் கொண்டிருப்பான். பெரும்பாலும் அவன் இப்பணத்தை தன் எசமானனின் வணிகத்திலேயே மறுமுதலீடு செய்வான் அல்லது அதனுடன் சம்பந்தப்படாத மாற்றுத் தொழிலிலும் முதலீடு செய்வான். தன் எசமானனுடன் வணிக உறவில் அவன் ஈடுபடவேண்டிவரும். அப்பொழுது அவன் முழுக்க வித்தியாசமான நபராகவே கருதப்படுவான். அல்லது மூன்றாம் நபரிடம் வணிக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். அடிமை தன் சொத்தையும், வணிக நலன்களையும் பார்த்துக் கொள்ள ஒரு முகவரை நியமித்துக்கொள்ள முடிந்தது. நிலம், வீடுகள், கடைகள்

படிப்பகம்

www.padippakam.com



ஆகியவற்றில் மட்டுமல்ல, உரிமைகளிலும் சொந்தங்களிலும் இதனைக் காண முடிந்திருக்கிறது

வணிகத்துறையில் அடிமைகளின் செயல்பாடுகள் எண்ணற்றவையாக இருந்தன. உணவு, ரொட்டி, மாமிசம், உப்பு, மீன், மது, காய்கறிகள், பீன்ஸ், தேன், தயிர், வாத்து, ஆடைகள், சந்தனம், காலுறைகள், கவுன்கள் இவ்வாறான பொருட்களை விற்கும் சில்லறை வியாபாரிகளாக எண்ணற்ற அடிமைகள் இருந்து வந்தார்கள். சர்க்கஸ் மேமிஸ் அல்லது போர்டிகஸ், டிரிக்மீமஸ் அல்லது எஸ்கியு லைன் சந்தை அல்லது பெருமார்ட் அல்லது சுப்ரா போன்ற பகுதிகளுக்கும் தங்கள் வணிகத்தை விரிவாக்கி வைத்திருந்தார்கள்.

போம்பி இடத்திலுள்ள கேசிலியேட்ஸ் ஜகுண்டஸ் குடும்பத்தில் கண்டுள்ள வரவுகளில் இருந்து அடிமை உதவியாளர்களும், முகவர்களும் தங்கள் எசமானர்களுக்காக எவ்வளவு தூரம் உழைத்தார்கள் என்பதைக் கண்டு கொள்ளலாம். அரசாங்கம் அடிமைகளை வைத்திருந்தது வியப்பிற்குரிய ஒன்றல்ல. அரசாங்கத்தின் கடமை போர். போரில் பிடிபட்டவர்கள் அரசாங்கத்தின் உடைமையாவர். பேரரசின் கீழ் இந்தப் பொது அடிமைகள் பயன்படுத்தப்பட்ட விதமும் இவ்வடிமைகள் பெற்றிருந்த சிறப்பான சமூகத் தகுதியும் வியப்பைத் தருவதாக இருக்கின்றன.

''பேரரசு தன் எண்ணற்ற அரசாங்க வேலைகளுக்கு அமர்த்தியுள்ள அடிமையின் பெயரே பொது அடிமை என்பதாகும். இந்தச் சொல் குறிப்பிட்ட தொழிலையும் சமூகத் தகுதியையும் குறிக்கிறது. அரசாங்கம், நகராட்சி ஆகியவற்றின் கீழிருந்த அடிமைகள் அனைவரும் உயரிய பதவிகளையும் கீழ்நிலைப் பதவிகளையும் கவனித்து வந்தார்கள். மூளையுழைப்பு, உடலுழைப்பு ஆகிய இரண்

படிப்பகம்

www.padippakam.com



டிலுமே அவர்கள் ஈடுபட்டு வந்தார்கள். கீழ்மட்டத்தில் எண்ணற்ற எழுத்தர்களும் நிதி அதிகாரிகளும் பணியாற்றி வந்தார்கள். இதில் சுதந்திரமானவர்களும் அடிமைகளும் இருந்துவந்தார்கள். விரிவான எல்லையில் இச்செயல்பாடு நடந்திருக்க வேண்டும். நாணய அச்சடிப்பில் ஒரு போர் வீரர் மேலதிகாரியாக இருந்தார். நாணய அச்சடிப்பில் சுதந்திரமானவர்களும் அடிமைகளும் வேலைபார்த்து வந்தார்கள். அரசாங்கத்தின் ஒரு துறையில் மட்டும் சில விதிவிலக்கான நேரங்கள் தவிர மற்ற சமயங்களில் எக்காரணத்தைக் கொண்டும் அடிமைகள் அனுமதிக்கப் படவே இல்லை. அத்துறை இராணுவமாகும். இதற்குக் காரணம் அவர்கள் நேர்மையின்மீது கொண்ட ஐயப்பாடு அல்ல. ஐயத்திற்கு இடமின்றி இதற்கு வேறு பல காரணங் களும் இருந்தன. எண்ணற்ற அடிமைகளுக்கு முறையான ஆயுதப்பயிற்சி தருவது ஆபத்தான சோதனையாகவே கருதப்பட்டது. இராணுவத்தில் போர்ச் செயல்களில் அடிமைகள் அரிதாகவே பணியாற்றி வந்தபோதிலும் இராணுவம் சம்பந்தப்பட்ட உணவுத்துறையிலும், போக்குவரத்துத் துறையிலும், அவர்கள் பெரும் எண்ணிக்கையில் வேலையாட்களாக அமர்த்தப்பட்டிருந் தார்கள். கப்பல் படையில் அடிமைகள் பரவலாக இடம் பெற்றிருந்தார்கள்.

## II

அமெரிக்க நாட்டில் சட்டத்தின் பார்வையில் கறுப்பர் கள் அடிமையாகப் பார்க்கபபட்ட காலத்தில், அவர்களின் உண்மையான நிலை எப்படியிருந்தது என்பதைப் பார்ப் போம். கீழ்வரும் சில எதார்த்தங்கள் கறுப்பரின் நிலை குறித்து ஒரு சிறந்த சித்திரத்தைத் தரும்.

www.padippakam.com



''புரட்சியின்போது வெள்ளை/கறுப்பின மாலுமிகளும், படை வீரர்களும் எந்தவித வேறுபாடுமின்றி ஒருங்கிணைந்தே போரிட்டனர் என திரு. லேபாய்ட்டி ஒத்துக் கொள்கிறார். பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற ஜான்சாவிஸ் என்ற கறுப்பர் வடக்குக் கரோலினாவைச் சார்ந்த கிரேன்வில்லி பகுதியில் வெள்ளையின மாணவர்களுக்குத் தனியார் பள்ளி ஒன்றை நடத்தி வந்தார். வெள்ளையின மக்களுக்குக் க வி கற்றுத் தருவதற்காக முறையான அனுமதிச் சான்றிதழும் பெற்றிருந்தார். இவரிடம் கல்வி பயின்ற ஒரு மாணவன் வடக்குக் கரோலினா ஆளுநராக உயர்ந்தார். இன்னொரு மாணவன் அம்மாநிலத்தின் பிரபல செனட் உறுப்பினராக ஆனார் இம்மாநிலத்தின் மிகப் பெரிய இராணுவக் கலைக் கழக நிறுவனரின் தந்தை இக்கறுப்பர் பள்ளியைப் பார்வையிட்டதோடு அவர் வீட்டிலும் தங்கிச் சென்றார். அனைத்து வகை வேலைகளுக்கும் அடிமைத் தொழிலாளிகளும் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள்.

''அறிவுக் கூர்மை நிரம்பப் பெற்ற கறுப்பின அடிமைகள் கைவினைஞர்களாகப் பயிற்சி அளிக்கப்பட்டுப் பயன் படுத்தப்பட்டார்கள் வாடகைக்கு விடப்பட்டார்கள். சராசரி அடிமைகளைக் காட்டிலும். அடிமைக் கைவினைஞர்கள் சந்தையில் இரட்டிப்பு வருமானத்தைப் பெற்றுத் தந்தார்கள். கைத்தொழில் முதலாளிகள் தமக்கென ஊழியர்களை வைத்திருந்தனர். வணிகப் பெருக்கத்தை ஒட்டிச் சில முதலாளிகள் தங்கள் அடிமைக் கைவினைஞர்களுக்கு ஊழியம் புரிய சில அடிமைகளை வாடகைக்கு அமர்த்திக் கொண்டனர். பெரும்பாலான அடிமைக் கைவினைஞர்கள் தங்களிடம் எதிர்பார்க்கப்பட்ட சராசரி உழைப்பைக் காட்டிலும் அதிகம் உழைத்து அதைச் சேமித்து அதன் மூலம் தங்களை அடிமை நிலையிலிருந்து விடுவித்துக் கொண்டனர்.''

படிப்பகம்

www.padippakam.com



"தப்பியோடிய அடிமைகள் குறித்த விளம்பரங்களும், இவர்களின் விற்பனையும் இந்தத் திறமைக்கு அடையாளங்கள் ஆகும். ஏழை வெள்ளையினத் தொழிலாளிக்குச் சமமான அல்லது கூடுதலான சம்பளமே இவர்கள் பெற்று வந்தனர். முதலாளியின் செல்வாக்கினால் நல்ல வேலையும் இவர்களுக்குக் கிடைத்தது. ஜியார்ஜியாவைச் சேர்ந்த ஏதென்ஸ் பகுதிக் கட்டிட வேலை, தச்சு வேலை ஒப்பந்தக்காரர்கள் 1838 இல் (வேலை வாய்ப்புகளில்—மொர்) கறுப்பர்களுக்கு முன்னுரிமை தரப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என விண்ணப்பம் தந்திருந்தனர். அது பின் வருமாறு: "வெள்ளையனே இந்த மாநிலத்தின், நாட்டின் உண்மையான சட்ட ரீதியான, தார்மீக ரீதியான உரிமையாளன் ஆவான். பூமியில் இந்தப் பகுதியைக் கோபர் நிகஸ், கலிலியோ என்ற இரு வெள்ளையர்கள் அடையாளம் காட்ட, அதைக் கொண்டு கொலம்பஸ் என்ற வெள்ளையன் மேற்குத் திசையாகக் கடல் பயணம் செய்து இந்நாட்டைக் கண்டுபிடித்தான். அந்த நாளிலிருந்தே இந்தச் சொத்துரிமை வெள்ளையனுக்கு இருந்து வருகிறது. வெள்ளையினத்தவர் மட்டுமே இக்கண்டத்தைக் கண்டுபிடித்தார்கள். பேரத்தில் கறுப்பர்கள் பக்கத்திற்கு அதிக ஆதரவு காட்டப்படுவதால், வறுமையில் வாடும் வெள்ளையினக் குடும்பங்களுக்கு உணவோ உடையோ வாங்கப் பணம் கிடைப்பதில்லை."

வெள்ளையினத்தைச் சேர்ந்த 2 மெக்கானிக்குகளும், தொழிலாளர்களும் கையெழுத்திட்ட விண்ணப்பம் ஒன்று 1858 இல் அட்லாண்டாவில் வெளியிடப்பட்டது. மற்ற தொழிற் பிரிவில் தொழில் புரியும் அடிமைக் கறுப்பினத் தொழிலாளிகளிடமிருந்து தமக்குப் பாதுகாப்புத் தேவை என்பதே அவ்விண்ணப்பம். இதற்கு அடுத்த ஆண்டு, தங்களுக்கு மத்தியில் ஒரு கறுப்பு பல் மருத்துவர் செயல்பட்டு வருவதை நகரக் குழு சகித்துக் கொள்வது பற்றி,

www.padippakam.com



வெள்ளை இனத்தவர் தங்கள் மனக் குறையை வெளியிட்டிருந்தனர்.

''தங்களுக்கும், தங்கள் சமூகத்திற்கும் நியாயம் செய்ய இதைத் தடை செய்ய வேண்டும் அட்லாண்டா நகரவாசிகளான நாங்கள் நீதி கேட்டு உங்களிடம் விண்ணப்பிக்கிறோம்.''

1819இல் ஜியார்ஜியா மாநிலத்தைச் சேர்ந்த ரிச்மண்ட் பகுதி வெளியிட்ட புள்ளி விபரம் ஒன்றின் மூலம் சுதந்திரக் கறுப்பர்கள், நாவிதர்கள், தச்சர்கள், குதிரை வணிகர்கள், நூற்பர்கள், ஆலை நிர்மாணிகள், நெசவாளிகள், மாலுமிகள் ஆகிய தொழில்களில் இருந்ததாக அறிய முடிகிறது. கைகளால் காலணி தயாரிக்கும் ஒரு கறுப்பரின் கடையைக் குடியரசுத் தலைவர் மன்றோ திறந்து வைத்திருக்கிறார். மாண்டிசெலோ பகுதியிலுள்ள திரு. தாமஸ் ஜெபர்சன் என்பவரின் வீட்டினை நிர்மாணித்த அடிமைகளின் வேலைப்பாடுகளைக் கண்டு திரு. ஹேரியட் மார்டினியு வியப்படைந்திருக்கிறார். இன்றும்கூட அந்தப் பெரிய பழைய வீடுகளில் கறுப்பர்களின் கைத்திறனிற்கான அடையாளங்களைக் காண முடியும். சுத்தமான ஓக் மரங்களை வெட்டி அவற்றை மரத் துண்டுகளால் இணைத்து உறுதியான மாளிகைகளைக் கட்டியிருக்கிறார்கள்.

கறுப்பினப் பெண்கள் நூற்பு, நெசவு வேலைகளில் திறமை பெற்றிருந்தார்கள் ஏதென்ஸ், ஜியார்ஜியா மாகாணங்களில் "வெள்ளையினப் பெண்கள் எந்தவித வெறுப்பும் மறுப்பும் இன்றி இவர்களோடு பணி புரிந்ததை 1839இல் திரு.பக்கிங்காம் கண்டிருக்கிறார். தெற்குப் பகுதிகளில் இருந்த கறுப்பினக் கைவினைஞர்கள்-அடிமைகளும் சரி, சுதந்திரமானவர்களும் சரி வடக்குப் பகுதியில் இருந்த தங்கள் சகோதரர்களைக் காட்டிலும், நல்ல

www.padippakam.com



நிலையில் இருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அயர்லாந்துக்காரர்கள் அமெரிக்காவில் குவியத் தொடங்கிய சமயத்தில், வடக்குப் பகுதியில் ஏறத்தாழக் கறுப்பின அடிமைகள் பயன்படுத்தப்பட்ட அதே நோக்கங்களுக்காக இவர்களும் பயன்படுத்தப்பட்டு வந்தனர். ஒரு அயர்லாந்துக் கத்தோலிக்கர் தன் நிலையிலிருந்து மேலே உயரச் செய்த முயற்சிகள் தோற்றுப் போயின. ஆனால் கறுப்பர்கள் அடிக்கடி இம்முயற்சிகளில் வெற்றியடைந்திருக்கிறார்கள். கறுப்பின அடிமை வணிகம் நடந்து வந்த காலத்தில் டுரோக்கிடா படுகொலையில் தப்பித்த அனைத்து அயர்லாந்துக்காரர்களையும் பார்ப்படோஸ்க்குப் பழம் ஆலிவர் கிராம்வெல் விற்றுவிடவில்லையா? நியூயார்க், பென்ஸில்வேனியா பகுதிகளில் இருந்த சுதந்திரக் கறுப்பர்களும், கறுப்பின அகதிகளும் இவர்களோடு நிரந்தர மோதல்களைக் கொண்டிருந்தனர்.

நியூயார்க் கலகங்களின்போது, இந்த வெறுப்பு பகைமை மிகுந்த வன்முறையாக வடிவம் எடுத்தது. இந்த அயர்லாந்துக்காரர்கள் பொது வேலைவாய்ப்புகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். கறுப்பர்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும், அமெரிக்காவில் தாங்கள் பெற்றிருக்கும் பிடிப்பிற்கும் தங்கள் வாழ்நிலைக்கும் வரும் அச்சுறுத்தலாகவே இவர்கள் பார்த்தனர்.

உரோமாபுரி அடிமைகள், அமெரிக்கக் கறுப்பின அடிமைகள் ஆகியோரின் உண்மை நிலை இதுதான். இவர்களின் நிலையோடு, எந்த ஒரு அம்சத்திலாவது, இந்தியத் தாழ்த்தப்பட்டவர்களின் நிலையை ஒப்பிட முடியுமா? உரோமாபுரிப் பேரரசின் கீழிருந்த அடிமைகளின் நிலையோடு தாழ்த்தப்பட்டவர்களின் நிலையை ஒப்பிடுவதற்குச் சமமான காலத்தை எடுத்துக் கொள்வது நியாயமில்லை என்றாகிவிடாது. ஆனால் உரோமப் பேரரசுக்

படிப்பகம்

www.padippakam.com



கால அடிமைகள் நிலையைத் தாழ்த்தப்பட்டவர்களின் இன்றைய நிலையோடு ஒப்பிடுவதை நான் அனுமதிக்கலாம் என்றிருக்கிறேன். தற்போதைய நிலை தாழ்த்தப்பட்டவர்களின் பொற்காலமாகக் கருதப்பட்டு வருகிறது. ஆகவே, இந்த ஒப்பீடு மோசமான ஒன்றோடு, நல்லது ஒன்றை ஒப்பிடுவதாகவே இருக்கும் தாழ்த்தப்பட்டவர்களின் உண்மையான நிலை (உரோம) அடிமைகளின் உண்மை நிலையோடு எப்படி ஒத்துப் போகும்?

உரோமாபுரியில் அடிமைகள் நூலகர்களாக, சுருக்கெழுத்தர்களாக இருந்து வந்ததைப்போல தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர் இம்மாதிரியான தொழில்களில் ஈடுபட்டு இருக்கிறார்கள்? நாவல்லுநர்களாக, இலக்கண ஆசியர்களாக, தத்துவவாதிகளாக, ஆசிரியர்களாக, கலைஞர்களாக அடிமைகள் உரோமாபுரியில் தொழில் புரிந்து வந்தார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் இம்மாதிரியான தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள்? எந்த ஒரு இந்துவிற்காவது இதற்குச் சாதகமான ஒரு பதிலைச் சொல்லும் துணிவிருக்கிறதா? இம்மாதிரியான தொழில்களில் அடிமைகளுக்குப் பெரும் அளவு வாய்ப்பு தரப்பட்டிருந்தது. ஆனால் இங்கே தாழ்த்தப்பட்டவர்கள் முற்றாகவே இத்துறைகளில் அனுமதிக்கப்படுவதில்லை. தீண்டாமையை இந்துக்கள் நியாயப்படுத்துவது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை இது நிரூபிக்கிறது.

ஒரு மனிதன் அல்லது ஒரு வர்க்கம் சட்டத்தின் மூலம் இன்னொரு மனிதனின் அல்லது வர்க்கத்தின் வாழ்வு -சாவு மீது அதிகாரம் கொண்டிருப்பது தவறானது என்ற சாதகமான காரணத்தைக் காட்டிப் பெரும்பாலான மக்கள் அடிமை முறையைக் கண்டிக்கிறார்கள் இது ஒரு பரிதாபகரமானது. அடிமை முறை இல்லையென்ற போதிலும் கூட இதைவிடக் குரூரமான அடக்குமுறையும்

www.padippakam.com



கொடுங்கோன்மையும், அதனால் வரும் அவலச் சூழலும் வெறுப்புணர்ச்சியும் மனக்கசப்பும் ஏற்படுவது நடந்தே இருக்கும். அடிமைகளின் உண்மையான நிலையைப் பொறுத்தமட்டில் மேற்கூறிய யதார்த்தங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டவர்கள் அடிமை முறையை அந்தச் சொல்லுக்குரிய அர்த்தத்தின்படி இலேசாகவோ அல்லது அவசரப்பட்டோ கண்டிப்பது அர்த்தமற்றது என்பதை ஒத்துக்கொள்வார்கள். சட்டம் அனுமதித்த அனைத்துமே சமூக நடைமுறையில் நிலவுகிறது என ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியாது. பெரும்பாலான அடிமைகள், அடிமை முறைக்குத் தாங்கள் உடன்படுவதாக ஒத்துக் கொண்டார்கள். மற்றவர்கள் ஒத்துக்கொண்டாலும் சரி அல்லது ஒத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரி இப்படித் தான் கருதி வந்தார்கள்.

அடிமைமுறை ஒரு சுதந்திரமான சமூக அமைப்பு அல்ல என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும் ஆனால் தீண்டாமையை ஒரு சுதந்திரமான சமூக அமைப்பு முறை யாக வர்ணிக்க முடியுமா? தீண்டாமையை நியாயப் படுத்த முன்வரும் இந்துக்கள் இதை ஒரு சுதந்திரமான சமூக அமைப்பு என ஐயத்துக்கிடமின்றி உரிமை கொண் டாடுகிறார்கள். தீண்டாமைக்கும் அடிமை முறைக்கும் இடையிலே வேறுபாடுகள் இருப்பதையும், இவ் வேறு பாடுகள் தீண்டாமையை ஒரு மோசமான சுதந்திரமற்ற சமூக அமைப்பாகக் காட்டுகின்றன என்பதையும் மறந்து விடுகிறார்கள். அடிமைமுறை கட்டாயமானது அல்ல ஆனால் தீண்டாமை கட்டாயமானது.

ஒருவன் இன்னொருவனை அடிமையாக வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறான். அவனுக்கு அதில் விருப்பம் இல்லையென்றால் அவன் மீது எந்தக் கட்டாயமும் செலுத்தப்படாது. ஆனால் ஒரு தாழ்த்தப்பட்டவனுக்குத் தன் விருப்பத்தைத் தேர்வு செய்துகொள்ளும் சுதந்திர

படிப்பகம்

www.padippakam.com



யில்லை. ஒருமுறை ஒருவர் தாழ்த்தப்பட்டவராகப் பிறந்து விட்டாலே போதும் அவர் தீண்டாமையின் அனைத்துத் தொல்லைகளுக்கும் உட்படநேரிடும். அடிமை முறைச் சட்டம் அடிமையின் விடுதலையை அனுமதிக் கிறது. ஒருவர் ஒருமுறை அடிமையாகிவிட்டால் அதுவே நிரந்தரத் தலைவிதியாக இருந்ததில்லை. ஆனால் தீண்டாமையிலிருந்து தப்ப ஒரு வழியுமில்லை தாழ்த்தப் பட்டவராகப் பிறந்துவிட்டால் இறுதிவரை அவர் தாழ்த்தப்பட்டவரே! மேலும் ஒரு வேறுபாடு— தீண்டாமை என்பது மறைமுகமான அடிமைமுறை. ஆகவே அடிமைமுறைகளில் இது ஒரு மிகமோசமான வடிவமாகும்.

மனிதனின் சுதந்திரத்தை வெளிப்படையான— நேர்மையான வழியில் பறித்துக் கொள்வது அடிமை முறையின் ஒரு வடிவமாகும். இதனால் தன் அடிமைநிலை குறிந்து அடிமைக்கு உணர்விருக்கும். இந்த உணர்வு விடுதலைக்கான போராட்டத்தில் முதலாவதான முக்கிய மான அடியாகும். ஆனால் ஒரு மனிதனின் விடுதலை மறைமுகமாகப் பறிக்கப்பட்டால், தன் அடிமை நிலை குறித்து அம்மனிதனுக்கு எந்த உணர்வும் இருக்காது. தீண்டாமை என்பது மறைமுகமான அடிமை முறை யாகும்.

தாழ்த்தப்பட்டவனிடம், ''நீ சுதந்திரமானவன், நீ ஒரு குடிமகன், ஒரு குடிமகனுக்குள்ள அனைத்து உரிமை களும் உனக்கும் இருக்கிறது'' என்று ஒருபுறம் சொல்லிக் கொள்வது, மறுபுறமோ இந்த இலட்சியங்களை அடை வதற்கான ஏந்த வாய்ப்பும் தரப்படாமல் அவன் கைகள் கட்டப்பட்டிருப்பது. இது ஒரு குரூரமான ஏமாற்று வேலையாகும். தன் அடிமை நிலை குறித்துத் தாழ்த்தப் பட்டவரிடம் எந்த உணர்வும் ஏற்படாத வகையில் அவரை அடிமையாக வைத்திருப்பது இது. தீண்டாமை

www.padippakam.com



யாக இருந்தபோதிலும் இது ஒரு அடிமை முறையாகும். இது மறைமுக வடிவில் இருந்தபோதிலும் உண்மையானது. இதில் அடிமைக்குத் தன் நிலை குறித்த உணர்வு இல்லாததால் இம்முறை நீண்டகாலம் நீடித்திருக்கிறது. இந்த இரண்டு முறைகளிலும் ஐயத்துக்கு இடமின்றித் தீண்டாமை மோசமானது.

அடிமைமுறையும் சரி, தீண்டாமையும் சரி, சுதந்திரமான சமூக அமைப்புகள் அல்ல. ஆனால் இவை இரண்டையும் வித்தியாசப்படுத்திப் பார்க்கவேண்டும். இவ்விரண்டிற்குமிடையில் வேறுபாடுகள் இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. அடிமைமுறையில் அல்லது தீண்டாமையில் கல்வி, நற்குணங்கள், மகிழ்ச்சி, பண்பாடு, செல்வம் ஆகியன சாத்தியம்தானா என்ற சோதனையை முன் வைத்துப் பார்க்கலாம். இச்சோதனைகளை முன் வைத்துப் பார்த்தால் தீண்டாமையைக் காட்டிலும் அடிமைமுறை 100 மடங்கு மேலானது என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்டது. அடிமை முறையில் கல்வி, மகிழ்ச்சி, பண்பாடு, அல்லது செல்வம் ஆகியவற்றிற்கான வாய்ப்புகள் உண்டு. ஆனால் தீண்டாமையில் இவை அறவே இல்லை. அடிமைமுறை போன்ற ஒரு சுதந்திரமற்ற சமூக அமைப்பின் எந்தவொரு நன்மையும் தீண்டாமையில் இல்லை. அடிமைமுறையில் வணிகத்தில், கைத்தொழிலில் அல்லது கலையில் அல்லது பேராசிரியர் மூர்ஸ் சொல்வதுபோல "உயரிய பண்பாட்டில் நுழைவதற்கான" சாத்தியங்கள் உண்டு.

இந்தப் பயிற்சி, இந்தப் பண்பாட்டு நுழைவு அடிமைக்கு மாபெரும் நன்மை என்பதில் ஐயமில்லை. அடிமைக்குப் பயிற்சி கொடுப்பதற்குப் பண்பாட்டிற்கு அவனைத் துவக்குவதற்கு எஜமானனுக்குப் பெருமளவி-



படிப்பகம்

www.padippakam.com



லான செலவும் இதில் ஏற்படும். அடிமை முறைக்கு முன்பு கல்வி கற்று அல்லது பயிற்சி பெற்ற அடிமை களின் வினியோகம் குறைவாகவே இருந்திருக்க வேண்டும். இதற்கு மாற்று வழி அடிமைகள் இளமையாக இருக்கும்போதே அவர்களுக்கு வேலைகளில் திறமையான கைத்தொழில்களில் பயிற்சி தருவார்கள். உண்மையில் பேரரசிற்கு முன்பு இம்முறை குறிப்பிட்ட வளர்ச்சியை அடைந்திருந்தது இப்பயிற்சி எசமானனாலும், அவ னிடம் வேலைக்கிருந்த ஊழியனாலும் தரப்பட்டது. உண்மையில் செல்வந்தர்கள் இதற்கான பயிற்சி ஆசிரியர் களை வைத்திருந்தார்கள். தொழில், வணிகம், கலை, இலக்கியம் என இப்பயிற்சி பல வடிவங்களில் நடக்கும்.''

ஒரு எஜமானன் அடிமைக்கு உயர்தரமான தொழிலை யும் பண்பாட்டையும் கற்றுத்தருவதில் எண்ணற்ற இன்னல்களைச் சந்தித்திருப்பார். அவன் நோக்கமெல் லாம் இலாபமே என்பதில் ஐயமில்லை. ஒரு திறமையற்ற அடிமையைக் காட்டிலும் திறமையான அடிமை மிகவும் மதிப்பு வாய்ந்தவன். இந்தத் திறமையான அடிமையை விற்றால் நல்ல விலை கிடைக்கும். அவனைக் குத்தகைக்கு விட்டாலோ நிறைய பணம் கிடைக்கும். ஆகவே ஒரு அடிமைக்குப் பயிற்சியளிக்க எஜமானன் எதிர்கொள்ளும் இடையூறுகள் மூலதனமாகும்.

அடிமைமுறையைப் போன்ற சுதந்திரமற்ற சமூக அமைப்பில் அடிமையின் வாழ்க்கையைப் பாதுகாப்பது எஜமானனின் கடமையாகும். ஒரு அடிமைக்குத் தன் உணவு, உடை, உறையுள் இவைபற்றிய எந்தக் கவலை யும் தேவையில்லை. அந்த அனைத்தையும் அவனது எஜ மானன் கவனித்துக் கொள்ள வேண்டும். இவை எஜமானனுக்கு ஒரு சுமையல்ல. காரணம், அடிமை தன் தேவைக்கு மேல் சம்பாதிப்பவன். ஆனால் சுதந்திரமான மனிதர்கள் அனைவருக்கும் உணவும் இருப்பிடமும்

www.padippakam.com



உத்திரவாதமானது அல்ல. காரணம் இவற்றிற்கான செலவு பற்றி அனைத்து உழைப்பாளிகளும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். உழைக்கத் தயாராக உள்ள எல்லோருக்கும் வேலை எப்பொழுதும் கிடைத்துவிடாது அதனால் வேலையில்லாத காலத்தில் அவருக்கு உண்ண வழியில்லை, வேலையில்லை, ஆகவே உணவில்லை என்ற இந்த விதியானது அடிமைக்குப் பொருந்திவராது.

ஒரு அடிமையின் உணவையும், தொழிலையும் தேடித் தருவது எஜமானனின் கடமை. எஜமானன் அடிமைக்குத் தொழில் தேட தவறிவிட்டதனால் அவ்வடிமை உணவுண்ணும் உரிமையை இழந்துவிட மாட்டான். தொழிலின் ஏற்ற இறக்கங்கள், பொற்காலம் இருண்டகாலம் ஆகிய விஷச்சூழல்களை அனைத்துச் சுதந்திரத் தொழிலாளிகளும் எதிர்கொண்டே ஆகவேண்டும். ஆனால் ஒரு அடிமையை இவை ஒன்றும் பாதிக்காது. அவன் எஜமானனை இவை பாதிக்கலாம். ஆனால் அடிமைக்கு அதில் எந்தப் பாதிப்பும் இல்லை. தொழிலின் இருண்ட காலமோ அல்லது பொற்காலமோ அடிமைக்கு உணவு கிடைத்தே தீரும்.

அடிமைமுறையைப் போன்ற சுதந்திரமற்ற சமூக அமைப்பில் அடிமையின் உடல் நலத்திலும், ஆரோக்கியத்திலும், அவன் எஜமானன் பெரிய அக்கறை காண்பிப்பான். அடிமை எஜமானனின் சொத்து. அடிமையின் இந்தப் பாதகமான அம்சமே சுதந்திர மனிதனுக்கு இல்லாத ஒரு சாதகத்தை அவனுக்குப் பெற்றுத் தருகிறது. அடிமை எஜமானனின் சொத்து. ஆகவே மதிப்பு வாய்ந்தவன். அதனால் அவன் எஜமான்னின் முற்றுமுழு சுயநல நோக்கத்தில்— அடிமையின் உடல் நலத்தில் அக்கறை காட்டுவான். உரோமாபுரியில் அடிமைகள் சதுப்பு நிலக்காடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டதே இல்லை! அம்மாதிரியான நிலங்களில் சுதந்திரமான்

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளர்கள் மட்டுமே வேலை பார்த்து வந்தனர். உரோமாபுரி விவசாயிகள் சதுப்புநிலக்காடுகளில் அடிமை களை வேலைக்கு அமர்த்தியதே இல்லை எனக் கேட்டோ கூறுகிறார். இது வியப்பாகத் தோன்றும். ஆனால் ஒரு சிறு ஆய்வே இது இயல்பானதுதான் என்பதைக் காட்டி விடும். அடிமை ஒரு மதிப்பு வாய்ந்த சொத்து. ஆகவே புத்தியுள்ள எந்த மனிதனும் மலேரியாவினால் தன் மதிப்பு வாய்ந்த பொருளை இழக்க விரும்பமாட்டான். ஆனால் சுதந்திரமான மனிதனின் விஷயத்தில் இந்த அக்கறைக்கு எந்தத் தேவையும் இல்லை. ஏனெனில் அவன் மதிப்பு வாய்ந்த சொத்தல்ல. இந்தப் பார்வை அடிமைக்குப் பெரிய சாதகமாக இருந்தது. எல்லாவற்றைக் காட்டிலும் அவன் கவனமாகப் பார்க்கப்பட்டு வந்தான்.

சுதந்திரமற்ற சமூக அமைப்பில் காணப்பட்ட இந்த மூன்று தன்மைகளில் எந்த ஒன்றுமே தீண்டாமையில் இல்லை. தாழ்த்தப்பட்டவர் உயரிய பண்பாட்டு—கலைத் துறைகளில் அனுமதிக்கப்படவே இல்லை. இவன் அல்லாடிக்கொண்டே இருக்க வேண்டும். அதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியாது. இவனின் உணவிற்கோ உடைகளுக்கோ இருப்பிடத்திற்கோ இந்துக்களிடம் இருந்து எந்தப் பொறுப்பையும் எதிர்பார்க்க முடியாது. தாழ்த்தப்பட்டவனின் உடல்நலம் குறித்துக் கவலைப்படு வார் யாருமில்லை. உண்மையில் தாழ்த்தப்பட்டவர் இறப்பதே அவனுக்கு விடுதலையாகக் கருதப்படுகிறது. ''தீண்டத்தகாதவன் இறந்தான் தீட்டுப் பயமும் போயிற்று'', என்றொரு பழமொழியே உண்டு.

மறுபுறம் தீண்டாமை—சுதந்திரமற்ற சமூக அமைப் பின் அனைத்துத் தீமைகளையும் கொண்டிருக்கிறது. சுதந்திரமான சமூக அமைப்பில் வாழ்க்கைக்கான போராட்டத்தில் நிலைத்து நிற்கும் பொறுப்பு தனி நபரைச் சார்ந்தது. இந்தப் பொறுப்பானது சுதந்திரச்

www.padippakam.com



சமூக அமைப்பின் பெரும் தீமையாகும். இந்தப் போராட்டத்தில் தனிநபர் வெற்றியானது நாணயமான தொடக்கம், சமவாய்ப்பு போன்ற விசயங்களைச் சார்ந்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர் சுதந்திரமான நபராக இருந்த போதிலும் நாணயமான தொடக்கம், சமவாய்ப்பு ஆகியன இவருக்குக் கிடைக்காது. இந்தக் கருத்தில் பார்த்தால் அடிமை முறையைக் காட்டிலும் தீண்டாமை மோசமானது மட்டுமல்ல; குரூரமானதும் கூட. அடிமை முறையில் அடிமைக்குத் தொழில் தேடித் தருவது எஜமானின் கடமையாகும். சுதந்திரமான சமூக அமைப்பில் தொழிலுக்காகத் தொழிலாளர்கள் தங்களுக்குள் போட்டியிட வேண்டி வருகிறது. தொழிலுக்கான இந்தச் சண்டையில் தாழ்த்தப்பட்டவருக்கு என்ன நியாயமான வாய்ப்பு கிடைக்கும். சுருக்கமாகச் சொல்லுவதானால் இந்தப் போட்டியில் சமூகம் இவர் மீது சுமத்திய தீட்டின் காரணமாக இவருக்குக் கடைசியில்தான் வேலை கிடைக்கும். முதலாவதாக வெளியேறறப்படுவார். அடிமை முறையோடு ஒப்பிடும்போது தீண்டாமை குரூரமானது. காரணம் ஒரு தாழ்த்தப்பட்டவருக்கு வாழ்க்கைக்கான அனைத்து வாய்ப்புகளும் முழுதாக அனுமதிக்கப் படாத சூழலில் அவரைப் பராமரித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அவர் மீதே விழுகின்றது.

தொகுத்துச் சொல்வதானால், அடிமைகளைப்போல் அல்லாமல் தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக்களின் நன்மைகளுக்காக அவர்களுக்குக் கீழே வைக்கப்பட்டிருக்கிறார்கள் இந்துக்களுக்கு இவர்கள் சுமையாக இருக்கும்போது இவர்களைக் கைசுவிட்டுவார்கள். ஒரு சுதந்திரமற்ற சமூக அமைப்பின் எந்தவொரு தன்மையையும் தாழ்த்தப்பட்டவர்கள் பெறமுடியாது. சுதந்திரச் சமூக அமைப்பின் அனைத்துத் தீமைகளையும் தாங்கிக் கொள்ள வேண்டிய நிலையில் அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். □□

www.padippakam.com

## அத்தியாயம்—4

## இந்தியச் சேரிகள் - தீண்டாமையின் மையம்

இந்துச் சமூக அமைப்பின் கீழ்த் தாழ்த்தப்பட்டவர்களின் நிலை என்ன? தீண்டாமை என்றால் என்ன என்று எதுவுமே அறியாதவர்களுக்கு, அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்நிலை அல்லது இந்துச் சமூக அமைப்பு அவர்கள் மீது திணித்த வாழ்க்கை முறை குறித்து ஒரு எதார்த்தமான, துலமான சித்திரத்தைத் தருவது அவ்வளவு எளிதல்ல. இதற்கான ஒரு வழி, இந்துச் சமூக அமைப்பையும், அதிலே தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தரப்படும் இடத்தையும் காட்ட ஒரு வரைபடத்தை வரைவதே இதற்காக ஒரு இந்துக்கிராமத்திற்குச் செல்வது மிக அவசியம் இதைத் தவிர வேறெந்த வழியும் நமக்குப் பயன்படாது. இந்துச் சமூக அமைப்பு செயல்படும் களமாக இந்துக் கிராமம் இருக்கிறது. இந்துச் சமூக அமைப்பு கிராமத்தில் முழு ஆற்றலோடு செயல்படுவதை ஒருவர் காண முடியும். இந்தியக் கிராமங்களைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஒரு சராசரி இந்து புளகாங்கிதம்டைகிறான். இந்தியக் கிராமங்கள் என்பது ஒரு இலட்சியப்பூர்வமான சமூக நிறுவனத்தின் வடிவமாகும் என்றும் இதற்கு உலகில் இணை ஏதுமில்லை எனவும் அவன் கருதுகிறான். சமூக நிறுவனக் கொள்

www.padippakam.com



கைக்கு இது ஒரு சிறப்பு பங்களிப்பு எனக் கருதப்படுகிறது. இதற்காக இந்தியா பெருமிதம் கொள்ளலாம்.

இந்தியக் கிராமங்கள் தங்களுக்கெனச் சொந்தமான சட்டமன்றம், நிர்வாகம், நீதிமன்றம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் சுய ஆட்சி நிறுவனங்களாகும். ஆகவே, இநதியக் கிராம முறையை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என இந்திய அரசியல் நிர்ணய சபையில் இந்து உறுப்பினர்கள் ஆவேசமாக உரையாற்றினார்கள். சமுதாய அமைப்பில் இந்தியக் கிராமம் ஒரு இலட்சிய அலகாக உள்ளது என்ற தங்களுடைய நம்பிக்கையில் இந்துக்கள் எவ்வளவு வெறித் தனமாக உள்ளார்கள் என்பதையே இது காட்டுகிறது. தாழ்த்தப்பட்டவர்கள் பார்வையில் இதைவிட (இந்தியக் கிராமங்கள்) மிகப் பெரிய பேரழிவு வேறு எதுவும் இருக் காது: நல்லவேளை அரசியல் நிர்ணய சபை இதனை (இந்தியக் கிராமத்தை) முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. இதற்காகக் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். எப்படி இருப்பினும் இந்தியக் கிராமம் ஒரு இலட்சியப் பூர்வமான சமூக நிறுவன வடிவமாகும் என்ற தங்கள் நம்பிக்கையில் இநதுக்கள் விடாப்பிடியாக நிற்கி றார்கள். இந்துக்களின் இந்த நம்பிக்கை அவர்களின் முன்னோர்களிடமிருந்தோ பழங்காலத்தில் இருந்தோ வந்ததல்ல; கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியரான திரு. சார்லஸ் மெட்காப் என்பவரிடமிருந்து இது பெறப்பட்ட தாகும்.

வருமானத்துறை அதிகாரியாக இருந்த திரு.மெட்காப் தனது அறிக்கையில் இந்தியக் கிராமத்தைப் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

''கிராமச் சமூகங்கள் சிறிய குடியரசுகளாகும், ஏறத் தாழ அவை தங்கள் தேவைகள் அனைததையும் தங்க

www.padippakam.com



ளிடமே பெற்றிருக்கின்றன. வெளித் தொடர்பு இன்றிச் சுதந்திரமாய் இயங்குகின்றன. எல்லாமே நிலையில்லாமல் மாறிக் கொண்டிருக்கும்போது இந்தியக் கிராமங்கள் மாற்றம் நிகழாமல் இருக்கின்றன.

''பேரரசுகள் ஒவ்வொன்றாக நொறுங்கியிருக்கின்றன. புரட்சிகள் தொடர்ச்சியாக நடந்தேறியிருக்கின்றன. இந்துக்கள், புறச்சமயத்தார், முகலாயர்கள், மராட்டியர்கள், சீக்கியர்கள் ஆகிய அனைவரும் ஒவ்வொரு காலத்தில் எசமானர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால் கிராமச் சமூகங்களோ மாற்றமின்றி அப்படியே இருக்கின்றன. நெருக்கடியான காலங்களில் கிராமச் சமூகங்கள் ஆயுதம் ஏந்தித் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்கின்றன. எதிரி இராணுவம் ஒன்று தங்கள் கிராம வழியாகச் செல்லும் பொழுது தங்கள் கால்நடைகளை வீட்டிற்குள் அடைத்து வைத்துக் கொண்டு எதிராளியைச் சீண்டாமல் அவர்கள் செல்ல அனுமதிப்பார்கள்.

''இவர்களுக்கு எதிராக மிகப்பெரும் கொள்ளையில் ஈடுபட்டால் கொள்ளையர்களை எதிர்க்க முடியாத நிலையில் பக்கத்தில் இருக்கும் சகோதரக் கிராமங்களுக்குச் சென்று விடுகின்றனர். புயல் அடங்கிய பிறகு மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பித் தங்கள் தொழிலைத் தொடங்குகின்றனர். கிராமங்களில் வாழ முடியாத அளவுக்குத் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளுக்குத் தொற்று நோய் அல்லது எதிரிகளின் தாக்குதல் நீடித்த போதிலும் கூட அமைதி திரும்பிய பிறகாவது சிதறுண்ட கிராம மக்கள் மீண்டும் ஒன்று சேர்ந்துவிடுவர்.

''ஒரு தலைமுறையே கூட மாண்டுபோய்விடலாம். ஆனால் அத்தலைமுறையின் வாரிசுகளோ மீண்டும் தங்கள் சொந்தக் கிராமத்திற்கே திரும்பி விடுவர். தங்கள் தந்தையர்களின் இடத்தையே பிள்ளைகளும் எடுத்துக்

படிப்பகம்

www.padippakam.com



கொள்வர். தங்கள் தந்தையர் வாழ்ந்து வந்த அதே வீட்டை, அதே நிலத்தை அவர்கள் சந்ததியரும் உரிமையாக்கிக் கொள்வர். இடையூறான காலக்கட்டங்களிலும் சமுதாயக் குழப்பங்களிலும்கூடத் தேவையான எளிமையைச் சேகரித்துக் கொண்டு ஒடுக்குமுறையையும் கொள்ளையையும் வெற்றிகரமாக எதிர்த்துத் தங்களை நிலை நிறுத்திக் கொள்வார்கள். ஆகவே அற்பமான காரணங்களால் இவர்கள் வெளியேறிவிட மாட்டார்கள். கிராமச் சமூகங்களின் இந்த ஒற்றுமைதான்—தங்களுக்குள்ளே ஒரு சிறிய அரசாங்கத்தைக் கொண்டுள்ள இவைதான் அனைத்துப் புரட்சிகளையும் மாற்றங்களையும் எதிர்த்து இந்திய மக்கள் நீடித்து வருவதற்குக் காரணமாய் இருக்கின்றன. இவைதான் அவர்களின் மகிழ்ச்சிக்கு உறுதுணையாகவும் விடுதலையையும் சுதந்திரத்தையும் அனுபவிப்பதற்குக் காரணமாய் இருக்கின்றன."

தங்களை ஆட்சி செய்த ஒரு வர்க்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதி இந்தியக் கிராமங்களைப்பற்றித் தந்த வர்ணனையைப் படித்த ஒரு இந்து அகந்தையோடு காணப்படுகிறான். தனது கருத்துகள் பாராட்டுக்குரியவை எனக் கருதுகிறான். இந்தியக் கிராமங்களைப் பற்றிய இந்தக் கருத்துகளினால் இந்துக்கள் தங்கள் அறிவிற்கோ, புரிதலுக்கோ நியாயம் கற்பித்துவிடமுடியாது. அடக்கப்பட்ட அனைத்து மக்களைப் போலவே இவர்களும் தங்கள் பலவீனத்தைத்தான் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இந்தியக் கிராமங்களைப் பற்றிய இந்தக் கருத்தை எண்ணற்ற அந்நியர்களும் ஒத்துக்கொண்டிருப்பதால் அதுகுறித்து ஒரு உண்மையான சித்திரத்தை முன் வைப்பது நல்லது.

இந்தியக் கிராமம் ஒரு தனித்த சமூக அலகல்ல. இது எண்ணற்ற சாதிகளைக் கொண்டது. ஆனால் நமது வசதிக்காகப் பின்வருமாறு குறிப்பிடுவது போதுமானது—

படிப்பகம்

www.padippakam.com



1. கிராம மக்கள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒன்று தாழ்த்தப்படாதவர்கள்; இரண்டு, தாழ்த்தப்பட்டவர்கள்.

2. தாழ்த்தப்படாதவர்கள் பெரும்பான்மையினர்; தாழ்த்தப்பட்டவர்கள் சிறுபான்மையினர்.

3. தாழ்த்தப்படாதவர்கள் கிராமங்களுக்குள் வாழ்கின்றனர். தாழ்த்தப்பட்டவர்கள் கிராமங்களுக்கு வெளியே தனிச் சேரியில் வாழ்கின்றனர்.

4. தாழ்த்தப்படாதவர்கள் பொருளாதார ரீதியில் வலிமையான பலம் வாய்ந்த சமூகத்தினர். தாழ்த்தப்பட்டவர்கள் ஏழைகள், பிறரை அண்டிப் பிழைப்பவர்கள்.

5. சமூக ரீதியில் தாழ்த்தப்படாதவர்கள் ஆளும் இனம் என்ற இடத்தில் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் அடிமைப்பட்ட இனமாக, கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். இந்தியக் கிராமங்களில் தாழ்த்தப்படாதவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் எந்த அடிப்படையில் உறவு வைத்து இருக்கிறார்கள்? ஒவ்வொரு கிராமத்திலும் தாழ்த்தப்படாதவர்கள் சில கட்டளைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவற்றைத் தாழ்த்தப்பட்டவர்கள் பின்பற்றியே ஆக வேண்டும். இந்தக் கட்டளைகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் மீறினால் அதை ஒரு குற்றமாகத் தாழ்த்தப்படாதவர்கள் எடுத்துக் கொள்வார்கள். பின் வருவன அம்மாதிரியான குற்றங்களாகும்.

1. தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக்களின் குடியிருப்புகளில் இருந்து விலகித் தனித்த சேரிகளில் வாழவேண்டும். இதை மீறுவது அல்லது இந்த ஒதுக்குதல் விதியைத் தவிர்ப்பது குற்றமாகும்.

www.padippakam.com



2. தாழ்த்தப்பட்டவர்களின் சேரிகள் தெற்குத் திசையை நோக்கி இருக்க வேண்டும். காரணம் நான்கு திசைகளிலும் தெறகுத் திசைதான் அமங்களமானது. இந்தக் கட்டளையை மீறுவது குற்றமாகும்.

3. தூரத் தீட்டு அல்லது நிழல் தீட்டு ஆகிய விதிகளைத் தாழ்த்தப்பட்டவர்கள கடைப்பிடிக்க வேண்டும். இந்த விதிகளை மீறுவது குற்றமாகும்.

4. தாழ்த்தப்பட்டவர்கள் நிலம் அல்லது கால்நடைகள் போன்ற செல்வங்களைப் பெறுவது அல்லது பெற்றிருப்பது குற்றமாகும்.

5. தாழ்த்தப்பட்டவர்கள் ஓட்டு வீடுகட்டுவது குற்றமாகும்.

6 தாழ்த்தப்பட்டவர்கள் சுத்தமாக உடை உடுத்துவதோ காலணி அணிவதோ, கடிகாரம் அல்லது தங்க நகைகள் அணிவதோ குற்றமாகும்.

7. தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மதிப்பான பெயர்களை இடக்கூடாது. இகழ்ச்சிக்குரிய பெயர்களையே இடவேண்டும்.

8. ஒரு இந்துவின் முன்னிலையில் தாழ்த்தப்பட்டவர் நாற்காலியில் அமர்வது குற்றமாகும்.

9. கிராமத்திற்குள் தாழ்த்தப்பட்டவர் குதிரைச் சவாரி செய்வதோ பல்லக்கில் பயணம் செய்வதோ குற்றமாகும்.

10. தாழ்த்தப்பட்ட்வர்கள் கிராமத்திற்குள் ஊர்வலமாகச் செல்வது குற்றமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



11. தாழ்த்தப்பட்டவர்கள் இந்துவை வணங்க மறுப்பது குற்றமாகும்.

12. தாழ்த்தப்பட்டவர்கள் பண்பான மொழியில் பேசுவது குற்றமாகும்.

13 இந்துக்கள் விரதம் இருக்கின்ற அல்லது விரதத்தை முடித்துக் கொள்கின்ற புனிதமான நேரத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் கிராமத்திற்குள் நுழைவது, பேசுவது ஆகியன குற்றமாகும். காரணம் இவர்கள் மூச்சே காற்றையும் இந்துக்களின் உணவையும் அசுத்தப்படுத்தி விடும்.

14. தாழ்த்தப்படாதவர்களைப் போலத் தாழ்த்தப்பட்டவர்கள் உடை அணிந்து செல்வது குற்றமாகும்.

15. ஒரு தாழ்த்தப்பட்டவன் தாழ்வான நிலையிலேயே தன் அந்தஸ்தை வைத்துக்கொள்ள வேண்டும். வெளியுலகிற்குத் தன் தாழ்வான நிலையைத் தெரிவிக்கும் வகையில் தன் அடையாளங்களைக் கொண்டிருக்க வேண்டும். (அ) இகழ்ச்சிக்குரிய பெயரை வைத்திருப்பது (ஆ) அசுத்தமான ஆடைகளை அணிவது (இ) ஓலைக் குடிசையில் இருப்பது (ஈ) வெள்ளி, தங்க நகைகளை அணியாமல் இருப்பது.

மேற்கண்ட விதிகளை மீறுவது குற்றமாகும். அடுத்ததாகத் தாழ்த்தப்பட்டவர்கள் தாழ்த்தப்படாதவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் பற்றிய விதிகளைப் பார்ப்போம்.

1. ஒரு இந்துவின் வீட்டில் ஏற்படும் சாவு அல்லது திருமணச் செய்திகளை அந்த இந்துவின் உறவினர்களுக்கு அவன் எவ்வளவு தொலைவில் இருந்த போதிலும்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டு போய்ச் சேர்ப்பது தாழ்த்தப்பட்டவனின் கடமையாகும்.

2. ஒரு இந்துவின் வீட்டில் திருமணம் நடக்கும்பொழுது விறகு உடைப்பது, திருமணச் செய்தி சொல்வது போன்ற வேலைகளைத் தாழ்த்தப்பட்டவன் செய்ய வேண்டும்.

3. ஒரு இந்துப் பெண் மணமாகித் தன் கணவன் வீட்டிற்குச் செல்லும் பொழுது அது எவ்வளவு தொலைவு இருந்தபோதிலும் அப்பெண்ணுடன் தாழ்த்தப்பட்டவன் செல்ல வேண்டும்.

4. ஹோலி அல்லது தசரா போன்ற திருவிழாக்களைக் கிராமச் சமூகங்கள் கொண்டாடும்போது அவ்விழாவிற்குத் தேவையான அனைத்து அடிமட்ட வேலைகளையும் தாழ்த்தப்பட்டவன் செய்ய வேண்டும்.

5. குறிப்பிட்ட பண்டிகைகளின்போது கிராமச் சமூகங்களின் கேலி விளையாட்டிற்குத் தங்கள் பெண்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

இந்த அனைத்துக் கடமைகளையும் எவ்விதக் கூலியுமின்றிச் செய்ய வேண்டும்.

இந்தக் கடமைகளின் முக்கியத்துவத்தை உணர வேண்டுமானால் இவை எப்படி நடைமுறைக்கு வந்தன என்பதைத் தெரிந்துகொள்வது மிக முக்கியம். கிராமத்திலுள்ள ஒவ்வொரு இந்துவும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மேலானவனாகத் தன்னைக் கருதிக் கொள்கிறான். எசமான் என்ற முறையில் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதை மிக முக்கியமானதாகக் கருதுகிறான். தான் இட்ட வேலைகளைச் செய்து முடிக்கும் ஒரு கூட்டம் இன்றி இந்தக் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. தான் இட்ட வேலைகளைச் செய்யத் தயார்

www.padippakam.com



நிலையில் இருக்கும் ஒரு கூட்டமாகத் தாழ்த்தப்பட்டவர் களை அவன் பார்க்கிறான். அதற்காக எந்தக் கூலியும் அவன் தரவேண்டியதில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் தங்க ளின் ஆதரவற்ற நிலையினால் இந்த வேலைகளைச் செய்ய மறுக்கமுடியாது. ஒரு இந்து தன் கௌரவத்தைக் காப்பாற்ற தாழ்த்தப்பட்டவர்களை நிர்ப்பந்தப் படுத்தவும் தயங்கமாட்டான்.

ஆங்கில அரசாங்கம் இயற்றிய சட்டங்களில் இந்தக் குற்றங்கள் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தாழ்த்தப் பட்டவர்களைப் பொறுத்தவரை இவை நடைமுறையில் இருக்கின்றன. இந்தக் குற்றங்களைப் புரிந்தால் தாழ்த்தப் பட்டவர்களுக்கு நிச்சயம் தண்டனை உண்டு. இந்தத் தண்டனைகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதை அத்தியாயம் ஐந்து, ஆறு ஆகியவற்றில் மிகத் தெளிவாகப் பார்த்துக்கொள்ளலாம்.

மேலும் ஒரு முக்கியமான விசயம் இந்தத் தண்டனை கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மொத்தமாகத் தரப்படும். தனி ஒரு தாழ்த்தப்பட்டவர் செய்த தவறாக இருந்தாலும் கூடத் தண்டனை அம்மக்கள் அனைவருக்கும் தரப்படும்.

தாழ்த்தப்பட்டவர்கள் எப்படி வாழ்க்கை நடத்து கிறார்கள்? எப்படித் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வற்றைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள்? தாழ்த்தப்பட்ட வர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைச் சம்பாதித்துக்கொள்வதற்காக அனுமதிக்கப்பட்ட வழி களைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும். இதன்றி இந்துச் சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப் பட்டுள்ள இடம் பற்றி ஒரு தெளிவான கருத்தைப் பெற முடியாது.

ஒரு விவசாய நாட்டில் வாழ்க்கைக்கான முக்கிய வரு வாய் விவசாயமே. ஆனால் இந்த வழி தாழ்த்தப்பட்டவர்

படிப்பகம்

www.padippakam.com



களுக்கு அனுமதிக்கப்படவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக நிலம் வாங்குவது அவர்களுக்குச் சாத்தியமில்லாத ஒன்று இரண்டாவதாக ஒருவேளை தாழ்த்தப்பட்டவன் ஒருவன் நிலம் வாங்கும் அளவிற்குப் பணம் வைத்திருந்தால்கூட நிலம் வாங்கி விடமுடியாது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் நிலத்தை விலைக்கு வாங்கி அதன் மூலம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இணையாக வர முயற்சிப்பது இந்துக்களின் கோபத்தைத் தூண்டிவிடும். இம்மாதிரியான ஒரு துணிகர நடவடிக்கையினால் தாழ்த்தப்பட்டவர் இந்துக்களின் கோபத்திற்கு மட்டுமல்ல; தண்டனைக்கும் உள்ளாக நேரிடும். சில பகுதிகளில் இவர்கள் நிலம் வாங்குவது சட்டத்தால் தடுக்கப்பட்டு இருக்கிறது. பஞ்சாபில் நிலமாற்றச் சட்டம் என்ற ஒரு சட்டம் இருக்கிறது. இச்சட்டம் எந்த எந்தச் சாதிகள் நிலம் வாங்க வேண்டும் என்பதை விளக்குகிறது. தாழ்த்தப்பட்டவர்கள் இதிலிருந்து விலக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் விவசாயக் கூலிகளாகவே இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டு இருக்கிறார்கள். கூலிகள் என்ற முறையில் இவர்கள் நியாயமான கூலியைக் கோர முடியாது. தங்கள் எசமானர்களான இந்து விவசாயிகள் விரும்பிக் கொடுக்கும் கூலிக்கே உழைக்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் இந்து விவசாயிகள் அனைவரும் சேர்ந்து தங்கள் நலன்களுக்குச் சாதகமான அளவில் கூலியைக் குறைந்த அளவிலேயே வைத்து இருக்கிறார்கள். மறுபுறம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று எந்த ஒரு அதிகாரமும் இல்லை. ஒன்று அவர்கள் கூலி வேலை செய்யவேண்டும் அல்லது பட்டினியில் வாடவேண்டும். இவர்களுக்கென்று பேரம் பேசப்படும் சக்தி ஒன்றும் கிடையாது. கொடுத்த கூலியை வாங்கிக் கொள்ள வேண்டும் அல்லது வறுமையில் வாடவேண்டும்.

www.padippakam.com



தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பணமாகவோ அல்லது பண்டமாகவோ கூலி தரப்படுகிறது. உத்திரப்பிரதேசத்தின் சில பகுதிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தானியமே கூலியாக தரப்படுகிறது. அந்தத் தானியம் கோபரா (Gobraha) என்று அழைக்கப்படுகிறது. விலங்குகளின் மலத்தில் கிடந்த தானியங்கள் என்பதே இதன் பொருள். கதிர்கள் நன்கு வளர்ச்சியடைந்த மார்ச் அல்லது ஏப்ரல் மாதங்களில் அவை அறுவடை செய்யப்பட்டுக்கதிரடிக்கும் களத்தில் பரப்பி வைக்கப்படும். எருதுகளைக் கொண்டு தாம்பு அடிக்கப்படும். அவ்வாறு தாம்பு அடிக்கும் பொழுது எருதுகள் தானியங்களையும் கதிர்களையும் அவ்வப்போது உண்டுவிடும். அதிகமாக உட்கொண்டதனால் தானியங்கள் சரிவர செரிக்காது. அடுத்தநாள் அவை மலம் கழிக்கும் பொழுது அத்தானியங்கள் வெளியில் வந்து விடும். இந்த மலம் சுத்தம் செய்யப்பட்டுத் தானியங்கள் பிரிக்கப்பட்டபின் அவற்றைத்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கூலியாகத் தருவார்க்ள். இதைத்தான் அம்மக்க்ள் மாவாக்கித் தங்கள் உணவர்க்கிக் கொள்வர்.

விவசாயப் பருவம் முடிந்தவுடன் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேறு எந்த வேலைவாய்ப்பும் இருக்காது. சம்பாத்தியத்திற்கான எந்த வழிகளுமில்லை. இம்மாதிரியான காலங்களில் காடுகளுக்குச் சென்று புல் மற்றும் மரம் வெட்டி அண்மையிலுள்ள நகரங்களில் விற்று வாழ்க்கையை நடத்துவர். இங்கும்கூட இவர்கள் இதற்காக வனத்துறை அதிகாரிகளைச் சார்ந்து இருக்க வேண்டியதாய் உள்ளது. அதிகாரிகளுக்குக் கையூட்டு தந்தால்தான் அவர்கள் அரசாங்கக் காடுகளில் மரம் வெட்ட அனுமதிப்பர். இந்தப் பொருட்களை நகரங்களில் விற்பதிலும் அவர்கள் சந்தையை எதிர்கொள்ள நேரிடுகிறது. இந்தப் பொருட்களை வாங்குபவர்கள் பெரும்பாலும் இந்துக்கள் தான். இவர்கள் எப்பொழுதுமே பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கவே திட்டமிடுவர். தாழ்த்தப்

www.padippakam.com



பட்டவர்களுக்கென்று எந்த அதிகாரமும் இல்லாததால் தங்களுக்குத் தரும் பணத்திற்குப் பொருள்களை விற்க வேண்டியதாக உள்ளது. இந்தப் பொருள்களை விற்க அவர்கள் ஒவ்வொரு முறையும் பத்து மைல்களுக்கு அப்பால் போய் வரவேண்டியிருக்கிறது.

வாழ்க்கைச் சம்பாத்தியத்திற்கு என்று இவர்கள் எந்த வணிகத்திலும ஈடுபடுவதில்லை. அதற்கான மூலதனமும் இல்லை. ஒருவேளை மூலதனம் இருந்தாலும் கூட இவர்களிடம் பொருள்களை யாரும் வாங்க வரமாட்டார்கள்.

வாழ்க்கைச் சம்பாத்தியத்திற்கான அனைத்து வழிகளும் இடையூறுகள் கொண்டவை, கைநழுவிச் செல்பவை. இவற்றில் எந்தப்பாதுகாப்பும் இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்க்கைக்கெனப் பாதுகாப்பான ஒரே ஒரு வழிமுறைதான் இருக்கிறது. அது நாட்டின் சில பகுதிகளில் நடைமுறையில் இருப்பது எனக்குத் தெரியும். கிராமப்புறங்களில் இந்து விவசாயிகளிடம் பிச்சை எடுத்துப் பிழைப்பதே அந்த வழி. ஒவ்வொரு கிராமமும் தனக்கென நிர்வாக எந்திரத்தைக் கொண்டிருக்கிறது. இந்தக் கிராம நிர்வாகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் பரம்பரையாகவே குற்றேவல் செய்து வருகின்றனர். இதற்குக் கூலியாகத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மொத்தமாக ஒரு சிறு பகுதி நிலம் பழங்காலத்தில் தரப்பட்டது. இந்த நிலங்களில் அவர்கள் பயிரிடமுடியாது. காரணம் அவை துண்டு துண்டாகப் பிரிந்து காணப்படும். இத்தோடு பிச்சை எடுப்பதற்கும் இவர்களுக்கு உரிமை தரப்பட்டு இருக்கிறது.

இவையெல்லாம் அதிர்ச்சியைத் தரலாம். பிச்சை எடுத்தல் தாழ்த்தப்பட்டவர்களின் பரம்பரை உரிமை.



படிப்பகம்

www.padippakam.com



அரசாங்க வேலையில் அமர்த்தப்படும்பொழுது தாழ்த்தப் பட்டவர்களின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்காக அரசாங்கமும் கூட பிச்சையால் வரும் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

தாழ்த்தப்படாதவர்களிடமிருந்து உணவிற்காகப் பிச்சை எடுக்கும் உரிமை இன்று அறுபது மில்லியன் தாழ்த்தப்பட்ட மக்களின் முக்கிய வாழ்க்கை வழியாக இருந்து வருகிறது. வழக்கமாக இரவு உணவிற்கு பின் ஒருவர் கிராமத்திற்குள் சென்றுபார்த்தால் பிச்சைக்காகத் தாழ்த்தப்பட்டவர்கள் கூட்டமாக உலாவுவதைத் தெரிந்து கொள்ளலாம்.

தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமான இந்தச் சட்ட ரீதியான பிச்சை ஒரு அமைப்பு முறை யாகவே மாறிவிட்டது. மத்தியகால ஐரோப்பாவின் நிலப் பிரபுக்களுக்கு அடிமைகளாக இருந்ததைப் போல் இங்குக் கிராமங்களில் தாழ்த்தப்படாதவர்கள் குடும்பங்களுக்குத் தாழ்த்தப்பட்டவர் குடும்பங்கள் உழைத்து வருகின்றன. தாழ்த்தப்படாதவர் குடும்பஅதிகாரத்தின் கீழ்த் தாழ்த்தப் பட்டவர் குடும்பங்கள் உழைத்து வரும். ஒரு தாழ்த்தப் படாதவர் தனக்கு தாழ்த்தப்பட்டவர் அடிமையாக இருந்த போதிலும் அவரைப் பற்றி மற்றவர்களிடம் குறிப்பிடும் போது, ''இவன் நம் ஆள்'' என்று கூறும் அளவிற்கு இந்த உறவு நெருக்கமானதாக மாறிவிட்டது. அந்த உறவுமுறை தாழ்த்தப்படாதவர்களிடமிருந்து தாழ்த்தப்பட்டவர்கள் பிச்சை எடுக்கும் வழக்கத்தை ஒரு முறையாகவே மாற்றி விட்டது.

இந்தக் கிராம குடியரசுகளைப் பற்றித்தான் இந்துக் கள் பெருமிதம் கொள்கிறார்கள். இந்தக் குடியரசுகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய இடம் என்ன? அவர்கள் கடைநிலையில் மட்டுமல்ல; இழிநிலையிலும் வைக்கப்

www.padippakam.com



பட்டு இருந்தார்கள். தாழ்வானவர்கள் என்ற முத்திரை குததப்பட்டு உள்ளது. பெரும்பான்மையினர் அனைத்து வழிகளிலும் இவர்களை அதிகாரம் செய்யும் அளவிற்குக் கீழ்நிலையில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த இழி நிலை ஏதோ தனி நபரின் தலைவிதியல்ல; ஒரு வர்க்கம் முழுவதின் தலைவிதியாகும். வயது அல்லது அந்தஸ்து விததியாசமின்றித் தாழ்த்தப்படடவர்கள் அனைவரும் தாழ்த்தப்படாதவர்களுக்குக் கீழ்நிலையில் இருக்கின்றனர். ஒரு வயதான தாழ்த்தப்பட்டவரைக் காட்டிலும் தாழ்த்தப்படாத இளைஞன் மேலானவன். படித்த தாழ்த்தப்பட்டவர் தாழ்த்தப்படாத முட்டாளுக்குக் கீழ்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்.

நிலை நிறுத்தப்பட்ட இந்த அமைப்பு தாழ்த்தப்படாதவாகள் ஏற்படுத்திய சட்டமாகும். இதற்கு அடிபணிந்து மரியாதை காட்டுவதைவிடத் தாழ்த்தப்பட்டவர்கள் வேறு ஒன்றும் செய்ய முடியாது.

தாழ்த்தப்படாதவர்களுக்கு எதிராகத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று எந்த ஒரு உரிமையும் இல்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சம உரிமை, சமநீதி என்பது இல்லை. தாழ்த்தப்படாதவர்கள் தருவதை இவர்கள் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் கேட்க முடியாது. இவர்கள் தங்கள் உரிமைகளை வலியுறுத்திக் கொண்டு இருக்க முடியாது. கருணை கூறி மன்றாடிக் கிடைப்பதைப் பெற்றுக் கொண்டு திருப்தி கொள்ள வேண்டும்.

நிலைநிறுத்தப்பட்ட இந்தச் சமூக ஒழுங்கு, அந்தஸ்து, தொழில் ஆகிய இரண்டிலும் பரம்பரையானது. ஒருவன் ஒருமுறை தாழ்த்தப்படாதவனாக இருந்தால் அவன் பரம்பரையே தாழ்த்தப்படாத பரம்பரைதான். ஒரு முறை ஒருவன் தாழ்த்தப்பட்டவனாக இருந்தால் அவன் பரம்பரையே தாழ்த்தப்பட்டவர்கள்தான். ஒரு

www.padippakam.com



பார்ப்பனன் வாழ்நாள் முழுவதும் பார்ப்பனன்தான். ஒரு தோட்டி வாழ்நாள் முழுவதும் தோட்டிதான் இந்த அமைப்பில் மேல் சாதியில் பிறந்தவன் இறுதிவரை மேல் நிலையிலேயே இருப்பான். கீழ்ச்சாதியில் பிறந்தவன் இறுதிவரை கீழ்நிலையிலேயே இருப்பான். வேறு வார்த்தையில் சொல்வதானால் நிலைநிறுத்தப்பட்ட இந்தச் சமூக ஒழுங்கு, தலைவிதி அல்லது கர்ம விதியின் அடிப்படையில் மாற்றத்திற்கு இடம்தராத ஒன்று. ஒருமுறை இவை நிர்ணயிக்கப்பட்டு விட்டால் பின் எப்பொழுதும் மாற்றப்பட முடியாது. இந்தத் தலைவிதிக்கும் இதன் கீழ் வாழும் தனிநபர்களின் திறமைகளுக்கும் எந்த ஒரு உறவும் இல்லை. தாழ்த்தப்பட்டவர் சிந்தனை ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் எவ்வளவுதான் மேலானவராக இருந்தபோதிலும், பண்பு குறைந்த சிந்தனை குறைந்த தாழ்த்தப்படாதவனுக்குக் கீழான நிலையில் தான் இருப்பார். ஒரு தாழ்த்தப்படாதவர் எவ்வளவு வறுமையில் இருந்த போதிலும் ஒரு பணக்காரத் தாழ்த்தப்பட்டவரைக் காட்டிலும் மேலான நிலையிலேயே இருப்பார்.

இந்தியக் கிராமங்களின் அகவாழ்வுத் தோற்றமே இதுதான். இந்தக் குடியரசுகளில் சனநாயகத்திற்கு இடமில்லை. சமத்துவத்திற்கு இடமில்லை. விடுதலைக்கு இடமில்லை. சகோதரத்துவத்திற்கு இடமில்லை. இந்தியக் கிராமங்கள் குடியரசுக்கு எதிரானவை. ஒருவேளை இவை குடியரசு என்றால் அது தாழ்த்தப்படாதவர்களின் குடியரசுதான். தாழ்த்தப்படாதவர்கள் தங்களுக்குத் தாங்களே நடத்திக்கொள்ளும் குடியரசாகத்தான் இருக்கும். இந்தக் குடியரசுகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான இந்துக்களின் பேரரசு ஆகும். இது தாழ்த்தப்பட்டவர்களைச் சுரண்டுவதற்கு இந்துக்கள் திட்டமிட்ட ஒரு வகைக் காலனி ஆதிக்கம் ஆகும். தாழ்த்தப்பட்டவர்

படிப்பகம்

www.padippakam.com



களுக்கு எந்த உரிமைகளும் இல்லை. காத்திருப்பது, பணியாற்றுவது, தங்களை அர்ப்பணித்துக் கொள்வது, இது தான் அவர்கள் செய்யவேண்டியது.

அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஏனென்றால் அவர்கள் கிராமக் குடியரசுக்கு வெளியே இருப்பவர்கள். குடியரசு என அழைக்கப்படுகின்ற இவற்றுக்கு வெளியே இருப்பதால் இந்துக் குடைக்கும் வெளியே இருப்பவர்கள் இது ஒரு நச்சு வட்டமாகும். ஆனால் இதுவே எதார்த்தமானதாகும். இதை யாரும் மறுக்க முடியாது. □□

படிப்பகம்

www.padippakam.com

## அத்தியாயம் — 5

# மனித உறவுக்கு அருகதை அற்றவர்கள்

சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக் குடைக்கு அப்பால் இருப்பவர்கள் எனினும் இன்னமும் ஒரு கேள்வி தொடர்கிறது. இந்துக்களிடமிருந்து இவர்கள் எவ்வளவு தூரம் விலக்கப்பட்டுள்ளார்கள்? இவர்கள் இந்துக்கள் இல்லையென்றால் பின் எந்தப் பொருளில், எந்தக் கண்ணோட்டத்தில் இந்துக்கள் இவர்களை மனித உயிர்களாகப் பார்க்கிறார்கள்? இந்தக் கேள்விகளுக்குப் பதில் இல்லாமல் தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்க்கை பற்றிய முழுச் சித்திரத்தையும் பெற முடியாது. இப்பிரச்சினையைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் எவருக்குமே பதில் கிடைத்துவிடும். ஆனால் அப்பதிலை எப்படி முன்வைப்பது என்பதே சிக்கலுக்குரிய விசயம். இரண்டு வழிகளில் அதை முன்வைக்கலாம். ஒன்று—அறிக்கை வடிவில், இரண்டு—சில நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டும் முறையில். இதில் இரண்டாவது வழியை நான் பின்பற்றுகிறேன். எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் மூலம் வாசகர்களைச் சோர்வடையச் செய்ய நான் விரும்பவில்லை. தெளிவான ஒரு சில எடுத்துக்காட்டுகளை மட்டும் முன் வைக்கிறேன். முதல் எடுத்துக்காட்டு சென்னை மாகாணத்தைச் சேர்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



1909ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்துக்களான வேங்கட சுப்பா ரெட்டியும் அவரைச் சார்ந்தவர்களும் தங்களுக்கு மாவட்ட நீதிமன்றம் 339ஆம் பிரிவின்படி அளித்த தண்டனையை எதிர்த்து ஒரு வழக்குத் தொடுத்திருந்தனர். ஒரு பிரிவு சாதி இந்துக்களுக்கு இடையூறு செய்ததாக இவர்கள்மீது வழக்கு. சென்னை உயர்நீதிமன்றம் இந்த வழக்கு குறித்த விவரங்களைக் கூறித் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இந்துக்களுக்கும் உள்ள எதிர் உறவை அதிர்ச்சியூட்டும் அளவில் முன்வைத்தது. ஆகவே இந்தத் தீர்ப்பு மேற்கோளாகக் காட்டுவதற்குத் தகுதி உள்ளது. அந்தத் தீர்ப்பு பின்வருமாறு:

"வாதிகள் கோவிலில் இருந்து வீதிவழியாக ஊர் வலம் செல்வதைத் தடுக்கும் பொருட்டுப் பிரதிவாதிகள் (வெங்கடசுப்பா ரெட்டியும் அவர்களைச் சார்ந்தவர்களும்) சில பறையர்களைக் கோவிலின் முன்பாகப் பொது வீதியில் நிறுத்தி வைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தவறாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பறையர்கள் பக்கத்தில் சென்றால் தீட்டு ஏற்படும் என்ற பயத்தினால் இவர்கள் ஊர்வலம் நடத்தவில்லை. தங்கள் ஊர்வலத்தைத் தடுக்கும் பொறாமை எண்ணத்தோடுதான் பறையர்கள் அங்கு நிறுத்தப்பட்டார்கள் என வாதிகள் தரப்பில் கூறப்படுகிறது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தவறு இழைத்ததாக நாங்கள் கருதவில்லை. அவர்கள் செயலுக்கு 339ஆவது பிரிவின்படி தடை என்ற பொருள் கொள்ள முடியாது. பறையர்கள் ஒரு தடையே அல்ல. உண்மையில் வாதிகள் ஊர்வலம் செல்வதை எதுவுமே தடுக்கவில்லை. அவர்கள் விரும்பும் இடத்திற்கு (ஊர்வலம்) செல்ல உரிமையுண்டு. பறையர்களை நிறுத்தியதன் மூலம் ஊர்வலத்திற்குத்

படிப்பகம்

www.padippakam.com



திட்டு ஏற்படுத்தியதைத் தவிர வேறு எந்த நோக்கமும் அவர்களுக்கு இருந்ததாகச் சொல்ல முடியாது.

''பறையர்கள் வீதியில் நின்றதால் ஊர்வலம்கைவிடப் படவில்லை. மாறாக வாதிகளின் விருப்பமின்மையே ஊர்வலத்தைக் கைவிடக் காரணமாய் இருந்து இருக் கிறது. திரு. குப்புசாமி அய்யர் குறிப்பிட்டு உள்ளது போல வாதியின் சொந்த முடிவின் அடிப்படையிலே அவர் கோவிலைவிட்டு நீங்காமலிருந்தார். தண்டனைச் சட்டப் பொருளின்படி உதை விழும் என்ற அச்சத்தினால் அவர் அந்த முடிவை எடுக்கவில்லை. இதை வேறுவித மாகவும் கூற முடியும். வாதியின் தகுதியில் இருக்கும் ஒருவர், சொந்த வேலை காரணமாக வீதியில் நிற்கும் ஒரு பறையரைத் தனக்குத் தீட்டு நேரிடும் என்ற அச்சத்தினால் அவரை விலகச் சொல்லி அதற்கு அவர் மறுத்திருந்தால் தனக்கு எதிராக அவர் குற்றம் இழைத்ததாக வாதி முறை யிடுவதில் நியாயம் இருக்கும்.

''இந்த வழக்கில் தவறான செயல்கள் நடந்துள்ள தாகத் தெரியவில்லை. குற்றம்சாட்டப்பட்டவர்கள் பறை யர்களை வீதியில் நிறுத்தியிருந்தாலும், தவறானது என நாங்கள் நினைக்கவில்லை. ஆகவே நாங்கள் தண்டனை யைத் தள்ளுபடி செய்வதோடு தண்டனைத் தொகை ஏதாவது கட்டப்பட்டு இருந்தால் அதைத் திருப்பித் தரு மாறு ஆணையிடுகிறோம்.''

இந்த வழக்கு மிகத் தெளிவானது. இதில் இரண்டு கட்சிகள் இருக்கின்றன. வெங்கடசுப்பா ரெட்டி என்பவர் ஒரு கட்சியின் தலைவர். இரண்டு கட்சிக்காரர்களுமே சாதி இந்துக்கள்தான். ஒரு ஊர்வலம் நடத்துவது குறித்தே இவர்களுக்குள் சண்டை. வெங்கடசுப்பா ரெட்டி தன் எதிரிகளின் ஊர்வலத்தைத் தடுக்க விரும்பி னார். ஆனால் அதை எப்படிச் செய்வது எனத் தெரிய

www.padippakam.com



வில்லை திடீரென அவருக்கு ஒரு திட்டம் உதயமாயிற்று. சில தாழ்த்தப்பட்டவர்களை அழைத்து வந்து ஊர்வலப் பாதையில் அங்கேயே அசையாமல் இருக்கும்படிக் கேட்டுக் கொண்டார். இந்தத் தந்திரம் வெற்றி பெற்றது. தீட்டு பற்றிய பயத்தினால் அவர் எதிராளிகள் ஊர்வலம் நடத்தத் துணியவில்லை. பறையர்கள் பாதையில் நின்றதை ஒரு தடையாக எடுத்துக்கொள்ள முடியாது எனச் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. தடை என்ற சொல்லுக்குரிய சட்டப் பொருளின்படி இது தடை இல்லை என அத்தீர்ப்பில் கூறப்பட்டிருப்பது வேறு விசயம். பறையர்கள் பாதையில் நிற்பதே இந்துக்களைத் துரத்தபோதுமானது என்ற எதார்த்தமே இங்கு முக்கியம். இதன் பொருள் என்ன? இந்துக்கள் தாழ்த்தப்பட்டவர் களை மிகப் பெரும் வெறுப்போடு பார்க்கிறார்கள் என்பதே இதன் பொருள்.

இரண்டாவது எடுத்துக்காட்டும் மிகத் தெளிவானது தான். கதிவார் (Kathiavar) என்ற கிராமத்தைச் சார்ந்த ஒரு தாழ்த்தப்பட்ட ஆசிரியர் பற்றியது. இது குறித்துக் காந்தி நடத்தி வந்த ''யங் இந்தியா'' என்ற பத்திரிகை யில் 1929 டிசம்பர் 12 ஆம் நாளன்று ஒரு கடிதம் வெளி வந்துள்ளது. இதில் அந்தத் தாழ்த்தப்பட்ட ஆசிரியர், சமீபத்தில் பிரசவம் ஆன தன் மனைவிக்கு மருத்துவம் பார்க்க ஒரு இந்து மருத்துவரிடம் மன்றாடியதையும் சரி யான மருத்துவ உதவி கிட்டாமல் தன் மனைவியும் குழந் தையும் இறந்ததையும் சுட்டிக் காட்டியுள்ளார். அக் கடிதம் பின்வருமாறு:

''இம்மாதம் ஐந்தாம் தேதி எனக்கொரு குழந்தை பிறந்தது. ஏழாம் தேதி என் மனைவி காய்ச்சல், வயிற்றுப் போக்கினால் துன்பப்பட்டார் அவர் இதயத் துடிப்பு கீழிறங்கத் துவங்கியது. மார்பு தீப்போல் சுட்டது. மூச்சு

www.padippakam.com



விட மிகக் கடினமாக இருந்தது. விரா எலும்புகளில் கடுமையான வலி. நானொரு மருத்துவரை அழைக்கச் சென்றேன். ஆனால் அவர் ஒரு அரிசனன் வீட்டிற்கு வர மறுத்ததோடு குழந்தைக்கும் மருத்துவம் பார்க்க முடியாது என மறுத்துவிட்டார். பின் நான் நகர் சேத்திடமும் (Nagar Sethe) ஹரிசியா தர்பாரிடமும் (Garasia Dharbar) சென்று உதவி கேட்டு மன்றாடினேன். டாக்டருக்கு கொடுக்க வேண்டிய இரண்டு ரூபாய்க் கட்டணத்தை நான் கொடுத்துவிடுவேன் என நகர்சேத் டாக்டருக்கு உறுதியளித்தார்.

அதன்பின் மருத்துவர் ஒரு நிபந்தனையோடு வரச் சம்மதித்தார். அரிசனக் குடியிருப்புக்கு வெளியேதான் மருத்துவம் பார்க்க முடியும் என்பதே அந்த நிபந்தனை. பின் நான் என் மனைவியையும் பச்சிளம் குழந்தையையும் குடியிருப்புக்கு அப்பால் எடுத்துச் சென்றேன் அங்கு மருத்துவர் தர்மா மீட்டர் கருவியை ஒரு முஸ்லிமிடம் தந்து அவர் அதை எனக்குத் தந்து நான் என் மனைவிக்குத் தந்தேன். பின் அதே முறையில் டாக்டரிடம் திருப்பப்பட்டது. அப்பொழுது இரவு மணி எட்டு. விளக்கு வெளிச்சத்தில் தர்மா மீட்டரைப் பார்த்த மருத்துவர் நோயாளிக்கு நிமோனியா கண்டிருப்பதாகக் கூறினார். பின் மருத்துவர் சென்று மருந்துகளை அனுப்பிவைத்தார். நான்கடைவீதி சென்று சில ஆலி விதைகளை வாங்கிவந்து நோயாளிக்குத் தந்தேன். நான் மருத்துவருக்கு மருத்துவக் கட்டணத்தைச் செலுத்திய போதிலும் மீண்டும் ஒரு முறை வந்து என் மனைவியைப் பார்க்க மறுத்து விட்டார். இது ஒரு கொடிய நோய். கடவுள் மட்டுமே எங்களைக் காப்பாற்றுவார்.''

''எனது வாழ்க்கைத் தீபம் அணைந்து விட்டது. மதியம் இரண்டு மணியளவில் என் மனைவி இறந்துவிட்டாள்.''

படிப்பகம்

www.padippakam.com



இக்கடிதத்தில் பள்ளி ஆசிரியர் பெயர் தெரிவிக்கப்படவில்லை. அதைப் போலவே மருத்துவர் பெயரும் தெரிவிக்கப்படவில்லை. பின் விளைவுகளுக்கு அஞ்சித் தாழ்த்தப்பட்ட ஆசிரியர் கேட்டுக் கொண்ட தன் பேரில் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. இங்கு நடந்தேறியவை விவாதத்திற்கு அப்பாற்பட்டவை.

எந்த விளக்கமும் அவசியமில்லை. ஒரு படித்த மருத்துவர் கவலைக்கிடமான சூழலில் அவதிப்படும் ஒரு பெண்ணுக்குத் தெர்மா மீட்டர் கருவியைத் தர மறுக்கிறார். இவருடைய மறுப்பின் காரணமாக அந்தப் பெண் இறந்துவிடுகிறார். தன் தொழில் விதிகளை ஒதுக்கித் தள்ளியதில் இவருக்கு எந்த ஒரு மனச்சாட்சி உறுத்தலுமே இல்லை. ஒரு தாழ்த்தப்பட்டவரைத் தொடுவதைக் காட்டிலும் மனிதத் தன்மையற்ற நிலையையே ஒரு இந்து தேர்ந்தெடுக்கிறான்.

மூன்றாவது எடுத்துக் காட்டு ''பிரகாஷ்'' பத்திரிக்கையில் 1932 ஆகஸ்ட் 23 இல் வெளிவந்ததாகும். ஜப்பார்வால் (Jafarwall) வட்டத்தைச் சேர்ந்த ஜக்குவல் கிராமத்தில் ஆக்ஸ்ட் ஆறாம் தேதி அன்று ஒரு இளம் கன்று கிணற்றில் விழுந்துவிட்டது. டாம் சாதியைச் சேர்ந்த (உ.பி.. பீகார் பகுதிகளில் இச்சாதி ஒரு தாழ்த்தப்பட்ட சாதியாகும்) ராம்மாகாஷியா என்பவர் அப்பொழுது அதன் அருகில் இருந்தார் உடனே அவர் கிணற்றில் குதித்து அக்கன்றைத் தூக்கிக் கொண்டார். மூன்று அல்லது நான்கு நபர்கள் உதவியோடு அக்கன்று கிணற்றில் இருந்து காப்பாற்றப்பட்டது. ஆயினும் அக்கிராமத்தைச் சேர்ந்த இந்துக்கள் கிணறு அசுத்தம் அடைந்துவிட்டதாகக் கூச்சல் கிளப்பினர். அந்த ஏழை மனிதனைக் குற்றவாளியாக்கிச் சித்திரவதை செய்தனர். நல்ல வேளையாக அவ்வழியாக ஒரு வழக்கறிஞர் வந்தார்.

www.padippakam.com



அவர் வெறியோடு கூச்சலிட்டுக் கொண்டிருந்த அந்த மனிதர்களை எதிர்த்து அவர்களைச் சுயநினைவிற்குக் கொண்டு வந்தார். இவ்வாறாக ஒரு மனிதன் உயிர் காப்பாற்றப்பட்டது. இல்லையெனில் அம் மனிதனுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்பதை ஒருவருமே எண்ணிப் பார்க்க முடியாது. தாழ்த்தப்பட்டவர் இளம் பசுவைக் காப்பாற்றியது, அதன் மூலம் கிணறு அசுத்தமானது அல்லது இளம் கன்று காப்பாற்றப்படாமல் மாண்டு போவது அதனால் கிணறு அசுத்தமாகாமல் இருப்பது இதில் எது முக்கியம்? இந்துக்கள் கருத்துப்படி தாழ்த்தப் பட்டவனால் ''கிணறு அசுத்தமானதைவிடக் கன்று சாவதே நல்லது.''

''பாம்பே சமாச்சாரில்'' 1936 டிசம்பர் 19 அன்று இது போன்ற மற்றொரு நிகழ்ச்சி தரப்பட்டு இருந்தது.

''கள்ளிக் கோட்டை''யைச் சேர்ந்த களாதி கிராமத்தில் ஒரு இளம் பெண்குழந்தை கிணற்றில் விழுந்து விட்டது. உதவி கோரி அப் பெண் கூச்சலிட்டாள். ஆனால் அங்கு இருந்த எவருக்கும் கிணற்றில் இறங்கும் துணிச்சல் இல்லை. அவ்வழியாக வந்த ஒரு வழிப் போக்கர் கிணற்றில் குதித்து அக்குழந்தையைக் காப் பாற்றினார். பின் அங்குக் கூடியிருந்த மக்கள் யார் இந்தப் புண்ணியவான் என்று விசாரிக்கும் போது தான் ஒரு தாழ்த்தப்பட்டவன் எனப் பதிலளித்தார் அவருக்கு நன்றி சொல்வதற்குப் பதிலாக அவர் கிணற்றை அசுத்தம் செய்ததாகத் திட்டித் தாக்கப்பட்டார். ஒரு இந்து தாழ்த் தப்பட்டவனை அசுத்தமானவனாகவும் உறவுககு அருகதையற்றவனாகவும் பார்க்கிறான் என்பதற்குப் பின்வரும் நிகழ்ச்சி உதாரணமாகும்.

லக்னோவிலிருந்து வரும் ''ஆதி இந்து'' பத்திரிகையில் (ஜூலை 1937) இருந்து இது எடுக்கப்பட்டது.

www.padippakam.com



''சென்னை ஹோல்மஸ் நிறுவனத்தில் பணியாற்றி வந்த உயர் சாதி ஊழியர் சமீபத்தில் மரணமடைந்தார். மயானத்தில் அவர் சிதைக்குத் தீமூட்டிய போது அவரது சுற்றத்தார்களும் நண்பர்களும் அரிசி வீசினார்கள். துரதிருஷ்டவசமாக அவர் நண்பர்களில் ஆதிதிராவிடர் சாதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவரும் ஒருவர் இருந்தார். அவரும் சிதையின் மீது அரிசி வீசினார். உடனே உயர்சாதி இந்துக்கள் சிதையை அசுத்தப்படுத்தியதாக அவரிடம் சண்டையிட்டனர். இது குறித்து ஒரு சூடான வாக்குவாதம் ஏற்பட்டுச் சண்டையில் இருவர் கத்தியால் குத்தப்பட்டனர். ஒருவர் மருத்துவமனை செல்லும்வழியில் இறந்துவிட்டார். மற்றொருவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார்.

இதைவிட மிகத் தெளிவான மற்றொரு உதாரணத்தைப் பார்க்கலாம். 1938 மார்ச் ஆறாம் தேதியன்று பங்கிஸ் சாதியினரின் கூட்டம் ஒன்று பம்பாயில் கசர்வாதி தாதர் பகுதியில் இந்துலால் யாதினிக் என்பவரின் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஒரு பங்கிஸ் சிறுவன் தன் அனுபவத்தைப் பின்வருமாறு வர்ணித்தான்.

நான் 1933 இல் தாய்மொழி இறுதித் தேர்வில் தேர்ச்சி அடைந்தேன். நான்காம் வகுப்பு வரையில் ஆங்கிலம் கற்று வந்தேன். பம்பாயில் நகராட்சியைச் சேர்ந்த பள்ளிக்குழுவிற்கு ஆசிரியர் வேலை கேட்டு விண்ணப்பித்தேன். ஆனால் அங்கு ஆசிரியர் வேலை காலியில்லை. பின் ஆமதாபாத்திலுள்ள பிற்பட்டோர் வகுப்பு அலுவலருக்குத் தளதி (Talati - கிராமப் பட்வாரி) வேலை கேட்டு விண்ணப்பித்தேன். அவ்வேலை கிடைத்தது. 1936 பிப்ரவரி 19 அன்று கெடா மாவட்டம் போர்ஷத் வட்டத்தைச் சார்ந்த மம்மளத்தர் பகுதியில் ஒரு தளதியாக நியமிக்கப்பட்டேன்.

படிப்பகம்

www.padippakam.com



எனது குடும்பத்தினர் குஜராத்திலிருந்து குடி பெயர்ந்தவர்கள் என்ற போதிலும் நான் இதற்கு முன் குஜராத் வந்ததில்லை. குஜராத் செல்வது இதுவே என் முதல் அனுபவம் அதைப்போலவே அரசாங்க அலுவல கங்களிலும் தீண்டாமை கடைப்பிடிக்கப்பட்டு வருவது எனக்குத் தெரியாது. எனது விண்ணப்பத்தில் நான் ஒரு அரிசன் என்பதைக் குறிப்பிட்டு இருக்கிறேன் ஆகவே எனது அலுவலக நண்பர்களுக்கும் இது தெரிந்திருக்கும் என நான் நினைத்திருந்தேன். ஆனால் நான் என் பதவிப் பொறுப்பு எடுக்கும்பொழுது சகஊழியரின் அணுகு முறையைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன்.''

''கற்குன் (Karkun) மிக வெறுப்போடு என்னைப் பார்த்துக் கேட்டார், யார் நீ என்று. அதற்கு நான் ''ஒரு அரிசன்'' எனப் பதிலளித்தேன். உடனே அவர் ''சற்று எட்டி நில், என்னை நெருங்கி நிற்க உனக்கு எவ்வ ளவு துணிச்சல், அலுவலகமாகப் போய்விட்டது. இதே வெளியில் நடந்து இருந்தால் உன்னை உதைத்து இருப் பேன். எவ்வளவு துணிச்சல் இருந்தால் இங்கு வேலை செய்ய வந்திருப்பாய்'' எனச் சொன்னார். எனது சான்றி தழ்களையும் பணி ஆணையையும் கீழே வைக்கும்படிக் கேட்டுக்கொண்டார். நான் கீழே வைத்த உடன் அவற்றை எடுத்துக்கொண்டார். நான் போரீசத் பகுதி யில் பணியாற்றிய போது குடிநீருக்காகப் பெரும் துன்பப் பட்டேன். அலுவலக வராந்தாவில் குடிநீர்க் கேன்கள் வைக்கப்பட்டிருக்கும். இந்தக் குடிநீர்க் கேன்களுக்கு ஒருவர் பொறுப்பில் இருந்தார். ஊழியர்களுக்குத் தேவைப்படும் பொழுது குடிநீர் வழங்குவதே அவர் வேலை. அவர் இல்லாத நேரங்களில் ஊழியர்களே சென்று நீர் அருந்தி வருவார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை இது முடியாத காரியம் நான் அந்தக் கேனைத் தொடமுடியாது. காரணம் நான் தொட்டால் அந்நீர் அசுத்தமாகிவிடும். ஆகவே நான் குடிநீருக்காக

படிப்பகம்

www.padippakam.com



அந்த மனிதனின் கருணையை நம்பி இருந்தேன். எனது பயன்பாட்டுக்கென ஒரு சின்ன அசுத்தமான பாத்திரம் வைக்கப்பட்டு இருந்தது. என்னைத் தவிர வேறு யாரும் அதைத் தொடுவதோ அல்லது சுத்தம் செய்வதோ இல்லை இந்தப் பாத்திரத்தில்தான் அந்த மனிதன் எனக்கு நீரை ஊற்றிவிட்டுச் செல்வான். ஆனால் அம் மனிதன் இருந்தால்தான் எனக்கு நீர் கிடைக்கும். அந்த மனிதனுக்கு எனக்கு குடிநீர் கொடுக்கும் எண்ணம் இருப்பதில்லை. நான் குடிநீருக்காக வருவதைப் பார்த்தவுடன் அவர் வேறு எங்காவது நழுவிவிடுவார். இதன் விளைவு நான் குடிநீர் இல்லாமலேயே நாட் கணக்கிலேயே இருக்க வேண்டியிருந்தது.

''இதைப் போலவே நான் வசிக்கும் இடத்திற்காகவும் சிரமப்பட வேண்டி இருந்தது. அப்பகுதுக்கு நான் ஒரு அன்னியன். எந்த ஒரு சாதி இந்துவும் எனக்கு வாடகைக்கு வீடு தபமாட்டான். அப்பகுதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்களும் எனக்கு வீடு தரத் தயாரா இல்லை காரணம் அப்பகுதி இந்துக்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதே. ஒரு அரசாங்க ஊழியராக நான் சாதி இந்துக்களுக்கு உயர்வான நிலையில் இருப்பதை இந்துக்கள் விரும்பவில்லை. உணவிற்காக இதை விடப் பெரும் அளவிற்குச் சிரமப்பட வேண்டியிருந்தது. எனக்கு உணவு கொடுப்பதற்கு என ஒரு இடமோ அல்லது நபரோ இல்லை. காலையிலும் மாலையிலும் 'பஜ்காசை' வாங்கி கிராமத்திற்கு வெளியே தனியான இடதில் அதைத் தின்றுவிட்டு வந்து அலுவலக வராந்தாவிலேயே உறங்கிக் கொள்வேன். இம்மாதிரியாக நான்கு நாட்களைக் கழித்தேன். இதைச் சகித்துக்கொள்ள என்னால் முடியவில்லை. பின்னர் என் முன்னோர்கள் வாழ்ந்த ஜெனரல் என்ற கிராமத்திற்குச் சென்று குடியிருக்கத் தொடங்கினேன். எனது அலுவலகப் பகுதியிலிருந்து இது ஆறு மைல் தொலைவில் இருக்கிறது. ஒவ்வொரு நாளும்

படிப்பகம்

www.padippakam.com



நான் பதினொரு மைல் நடந்தேன். இவ்வாறாக ஒன்னரை மாதம் கடந்தது.''

''இதற்குப் பிறகு நான் ஒரு தளதியிடம் வேலைப் பழக அனுப்பப்பட்டேன். ஜெனரல் குப்பர், ஜெய்ப்பர் ஆகிய மூன்று கிராமங்களுக்கு இந்தத் தளதி பொறுப் பாளர். ஜெனரல் அவரது தலைமையிடம் ஆகும். ஜெனர லில் இந்த தளதியோடு இரண்டு மாதங்கள் இருந்தேன். இவர் எனக்கு எதுவுமே கற்றுத் தரவில்லை. நான் ஒரு முறை கூடக் கிராம அலுவலகத்திற்குள் சென்றதில்லை. குறிப்பாகக் கிராமத் தலைவர் பகைமையோடு என்னைப் பார்த்து வந்தார். ஒருமுறை அவர் ''பயலே உன் அப்பா வும் தம்பிகளும் இந்த அலுவலகத்தைச் சுத்தம் செய்து வந்த தோட்டிகள். ஆனால் நீயோ எங்களுக்குச் சமமாக உட்கார ஆசைப்படுகிறாய். சாக்கிரதை! இந்த வேலையைக் கைவிடுவது நல்லது''என்றார்.

''ஒருநாள் இந்தத் தளதி கிராம மக்கள் கணக்கெடுப் பிற்கு என்னை ஜெய்ப்பருக்கு அழைத்தார். நான் ஜெனர லில் இருந்து ஜெய்ப்பருக்குச் சென்றேன். அங்கே அலுவல கத்தில் கிராமத் தலைவரும் தளதியும் சில வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். நான் அலுவலக வாயிலோரம் நின்றுகொண்டு அவர்களுக்கு வணக்கம் தெரிவித்தேன். ஆனால் அவர்கள் என்னைக் கண்டுகொள்ளவே இல்லை. பதினைந்து நிமிடங்கள் வெளியில் நின்று கொண்டிருந் தேன். ஏற்கெனவே வாழ்க்கையில் நொந்து போனவன். இந்த அவமதிப்பும் புறக்கணிப்பும் கோபத்தை மூட்டின. பக்கத்தில் இருந்த நாற்காலியில் நான் அமர்ந்து கொண் டேன். நான் நாற்காலியில் அமருவதைப் பார்த்த கிராமத் தலைவரும் தளதியும் அமைதியாக வெளியில் சென்றுவிட் டனர். சிறிது நேரத்திற்குப் பின் ஒரு பெரும் கூட்டமே என்னைச் சூழ்ந்துகொண்டது. அக்கிராம நூலகத்தைச் சேர்ந்த நூலகப் பொறுப்பாளர் இக்கூட்டத்திற்குத்

படிப்பகம்

www.padippakam.com



தலைமை தாங்கினார். ஒரு படித்த மனிதர் இக்கும்பலுக்கு எப்படித் தலைமை தாங்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பிறகுதான் தெரிந்தது நான் அமர்ந்த நாற்காலி அவனுடையது என்று. மிகக் கெட்ட வார்த்தைகளில் என்னைத் திட்டினான். இராவணியா (கிராம வேலையாள்) வைப் பார்த்து 'இந்த அழுக்கு நாயை நாற்காலியில் உட்கார யார் அனுமதித்தது' எனக் கேட்டான். உடனே இராவணியா என்னை அப்புறப்படுத்தி நாற்காலியை என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டான். நான் தரையில் உட்கார்ந்து கொண்டேன். அதன்பின் அந்தக் கும்பல் அலுவலகத்திற்குள் நுழைந்து என்னைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டது. கோபம் கொண்ட அக்கும்பலில் சிலர் என்னைத் திட்டினார்கள். சிலர் துண்டு துண்டாக வெட்டி விடுவதாக மிரட்டினர். என்னை மன்னித்து விடும்படி அவர்களிடம் மன்றாடிய தோடு கருணை வேண்டி நின்றேன். ஆனால் அக்கும்பல் மசிவதாக இல்லை. எனக்கும் தப்பிப்பதற்கு வழி தெரிய வில்லை. ஆனால் உடனே எனக்கு ஒரு வழி தோன்றியது. எனக்கு நேர்ந்த விதி பற்றியும் ஒருவேளை இந்தக் கும்ப லில் நான் கொல்லப்பட்டால் எனது உடம்பை எப்படிப் புதைப்பது என்பது பற்றியும் விவரித்து மம்மலத்தார்க்கு (Mamlathar) ஒரு கடிதம் எழுத எண்ணினேன். இந்தக் கும்பலுக்கு எதிராக நான் மம்மலத்தார்க்குப் புகார் எழுதுவது இவர்களுக்குத் தெரிந்தால் இவர்கள் பணிந்து போய்விடலாம் என நம்பினேன். நான் இராவணியா விடம் ஒரு துண்டுக் காகிதம் கேட்க அவரும் தந்தார். உடனே நான் எனது பேனாவை எடுத்து ஒவ்வொருவரும் படித்துக் கொள்வதற்கு வசதியாகப் பெரிய எழுத்துக் களில் எழுத ஆரம்பித்தேன். அது பின்வருமாறு:-

தா—5

www.padippakam.com



பெறுநர்
மம்மலத்தார்
போர்சத் வட்டம்
ஐயா,

பர்மர் காளிதாஸ் சிவராம் ஆகிய நான் தெரிவிக்கும் பணிவான வணக்கங்கள். இன்று என் மீது மரண நிழல் விழுந்திருக்கிறது. நான் என் பெற்றோர்கள் பேச்சைக் கேட்டிருந்தால் ஒருவேளை இது தவிர்க்கப்பட்டிருக்க லாம். எனது மரணத்தை என் பெற்றோர்களுக்குத் தெரி வித்து விடுங்கள்.

இதைப் படித்துப் பார்த்த நூலகர் இதை உடனே கிழித்தெறியும்படி ஆணையிட்டார். நானும் அப்படியே செய்தேன். என்னை அவர்கள் கடுமையாக அவமானப் படுத்தி விட்டனர். "நாங்கள் உன்னைத் தளதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஆசைப்படுகிறாயா? நீயோ ஒரு பங்கி. இந்த அலுவலகத்தில் நுழைந்து இந்த நாற்காலியில் அமர ஆசைப்படுகிறாயா?" என்றார்கள். நான் கருணை கேட்டு மன்றாடியதோடு இனிமேல் இம் மாதிரி நிகழாது என்றும் எனது வேலையை விட்டுவிடுவ தாகவும் உறுதி அளித்தேன். கும்பல் கலைந்து செல்லும் போது மாலை 7 மணி. அதுவரை நான் அங்கேயே நிறுத்தி வைக்கப்பட்டேன். அதுவரை தளதியோ முக்கியாவோ (Mukkiya) அவ்விடத்திற்கு வந்து சேரவில்லை. அதற்குப் பின் 15 நாட்கள் விடுப்பெடுத்து என் பெற்றோர்களிடம் வந்து சேர்ந்தேன்."

தாழ்த்தப்பட்டவர்களை இந்துக்கள் பார்க்கும் சமூகப் பார்வைக்கு மற்றொரு முகம் இருக்கிறது. இதை யாரும் மறுத்துவிட முடியாது பின்வரும் எடுத்துக்காட்டி லிருந்து அப்பார்வை பற்றித் தெளிவாக தெரிந்துகொள்ள லாம். 1943 செப்டம்பர் 8, அல்ப்ஜால் இதழில் கீழ்க்கண்ட விப்ரம் உள்ளது.

www.padippakam.com



''செப்டம்பர் 1ஆம் தேதியன்று நாசிக்கில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த இந்துக்கள் ஒரு அச்சுக் குடும்பத்தினரைத் தாக்கினார்கள். அக்குடும்பத்தின் மூத்த பெண்ணின், கை கால்களைக் கட்டி மரக்குவியலில் வைத்துத் தீ வைத்தனர். கிராமத்தில் காலரா பரவுவதற்கு அப்பெண்ணே காரணமாக இருந்தாள் என அவர்கள் எண்ணியதே இத்தனைக்கும் காரணமாகும்.''

1946 — ஆகஸ்ட் 29 டைம்ஸ் ஆப் இந்தியாவில் கீழ்க் கண்ட செய்தி வந்துள்ளது. ஹைரா மாவட்டத்தில் சாதி இந்துக்கள் அரிசனக் குடியிருப்புகளைத் தாக்கி இருக்கிறார்கள். அரிசனங்களின் பில்லி சூனியத்தால் தங்கள் கால்நடைகள் இறந்து விட்டதாக இந்துக்கள் நினைத்ததே இதற்குக் காரணம்..

இருநூற்றுக்கு மேற்பட்ட கிராமத்தினர் தடிகளோடு அரிசனக் குடியிருப்புகளைத் தாக்கி இருக்கிறார்கள். ஒரு மூதாட்டியை மரத்தோடு கட்டி வைத்துத் தீ வைத்து இருக்கிறார்கள். இன்னொரு பெண்ணைக் கடுமையாக உதைத்து இருக்கிறார்கள்.

பீதியினால் அரிசனங்கள் கிராமத்தைக் காலி செய்து விட்டனர். இந்த நிகழ்ச்சியை அறிந்த மாவட்ட அரிசனச் சேவைச் சங்கச் செயலரான திரு. சோட்டாபாய்பட்டேல் அரிசனங்களை மீண்டும் கிராமத்திற்கு அழைத்து வந்ததோடு அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும்படி விண்ணப்பித்து இருந்தார்.

இதைப் போன்ற நிகழ்ச்சி வேறு ஒரு கிராமத்திலும் நடந்து இருக்கிறது. இதில் அரிசனங்கள் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரச்சினை இத்தோடு முடிந்துவிடவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான அம்மாதிரியான வன்முறை

www.padippakam.com



அடிக்கடி நடைபெற்று வருகிறது. இதில் இந்துக்கள் அனைவருமே பங்கெடுக்கிறார்கள். பாரத்ஜோதி பத்திரிகையில் 22 செப்டம்பர் 1946 அன்று வந்த ஒரு செய்தி கீழே தரப்பட்டு இருக்கிறது.

"போர்சத் வட்ட அரிசனச் சேவைச் சங்கச் செயலருக்கு வந்த செய்தியின்படி ஒரு பெண் உள்ளிட்ட ஐந்து அரிசனங்கள், ஒரு கிராமக் கும்பலால் படுகாயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ஏழு எருமைகள் இறந்ததற்குக் காரணம் அரிசனங்களின் மந்திர வேலையாக இருக்கலாம் என நினைத்துக் கிராமத்தார் இவ்வாறு செய்தனர். காயம் அடைந்தவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். சம்பவம் நடந்த இடத்திற்குக் காவல்துறை விரைந்து இருக்கிறது. சிலபேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

அரிசனங்கள் இது குறித்து அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தால் உயிரோடு கொளுத்திவிடுவதாகக் கிராமத்தினர் அச்சுறுத்தியதாகவும் தெரிய வருகிறது.

கையிரா மாவட்டக் கிராமங்களில் அடிக்கடி இம் மாதிரி நடைபெறுகிறது. அரிசனங்கள் மீது நடத்தப்படும் இம்மாதிரியான தொல்லைகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும்படி காவல்துறை அதிகாரிகளையும் நிர்வாகத்துறை அதிகாரிகளையும் மாவட்ட நீதிபதி கேட்டுக்கொண்டார்.

இந்தச் சம்பவங்கள் சொல்லும் செய்திகள் எளிமையானவை; தெளிவானவை. இதன்மீது எந்த விரிவுரையும் தேவையில்லை. ஒரு சராசரி இந்துவின் பார்வையில் ஒரு தாழ்த்தப்பட்டவன் மனித உறவுக்குக்கூட அருகதையற்றவன். அவன் பாவத்தைச் சுமந்து திரிபவன். அவன் மனிதனே அல்ல. அவன் வெறுக்கப்பட வேண்டியவன்

□□

www.padippakam.com

## அத்தியாயம்—6

# தீண்டாமையின் சட்டச் சீர்குலைவு

ஏற்றத்தாழ்வுகளே நிறைந்துள்ள இச்சமூகம் பின் எப்படித்தான் நீடித்து வருகிறது எனப் பலர் வியப்படையலாம் இந்த அமைப்பை ஆதரித்து வரும் சக்திகள் எவையெவை? இந்த அமைப்பை நீடிக்க வைத்திருக்கும் சக்திகளில் மிகவும் முக்கியமானவர்கள் இந்துக்கள். இவர்கள் என்ன விலை கொடுத்தேனும் இவ்வமைப்பை நிலை நிறுத்த உறுதி பூண்டுள்ளனர். தாழ்த்தப்பட்டவர்கள் சிறிதளவாவது இவ்வமைப்பைச் சீர்குலைக்க முயற்சித்தாலும்கூட அதனை ஒடுக்க அனைத்து வழிகளையும் இந்துக்கள் பயன்படுத்துகிறார்கள். சாதுவான சாதாரண ஒரு இந்துகூடத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கண்மூடித்தனமான வன்முறையைப் பயன்படுத்தத் தயக்கம் காட்டுவதில்லை. இச்சமூக அமைப்பை நிலைநிறுத்த அவன் அனைத்துக் கொடூரங்களையும் நடைமுறைப் படுத்துகிறான் பெரும்பாலானோர் இதனை நம்புவதே இல்லை. ஆனால் இதுவே உண்மை இந்தக் கருத்தில் யாரேனும் அவநம்பிக்கை கொண்டிருந்தால் அவர்களுக்காகப் பத்திரிக்கைகளில் வந்த சில செய்திகளைக் கீழே நான் காட்டியுள்ளேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக இந்துக்கள் கையாண்ட கொடூரங்களையும் கொடுமைகளையும் பற்றிய செய்திகள் இவை.

படிப்பகம்

www.padippakam.com



அ

தில்லியிலிருந்து வெளிவரும் டெஜ் (Tej) (செப்டம்பர் 4, 1927) பத்திரிகையில் வெளியான செய்தி இது:

''வைக்கத்திலுள்ள சிவன் கோவிலுக்கு மிக அருகில் அரிசனங்கள் நெருங்கி வந்ததால் அக்கோவில் தீட்டு அடைந்துவிட்டது. ஆகவே அக்கோவிலில் வழிபாடு செய்வதற்கு முன்பு பெரும் செலவு செய்து புனிதப்படுத்திய பின் வழிபாடு செய்யப்பட வேண்டும் என அப்பகுதி இந்துக்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.''

பிரதாப் பத்திரிகையின் நிருபர் செப்டம்பர் 2,1932 நாளன்று அப்பத்திரிகையில் ஒரு நிகழ்ச்சிபற்றிக் கீழ்க் கண்டவாறு எழுதியுள்ளார்.

''மீரட், ஆகஸ்ட் 1932—ஜென்மசத்மி திருநாளன்று சில அரிசனங்கள் சாதி இந்துக்களின் கோவிலுக்குள் நுழைய முயற்சித்தனர். உடனே பரவலாகக் கலகம் வெடித்தது. இவ்வாண்டு தங்களுக்குக் கோவில் கதவுகள் திறக்கப்படவில்லை என்றால் சத்தியாகிரகம் நடத்துவதாக அந்தப் பகுதி தலித் அமைப்பு முடிவு செய்து இருந்தது. இதை அறிந்த இந்துக்கள் இம் முயற்சியை முறியடிக்கத் திட்டம் தீட்டினர். அத்திருவிழா இரவன்று அரிசனச் சமூகத்தினர் ஊர்வலமாகச் சென்று கோவிலுக்குள் நுழைய முயற்சித்தனர். கோவில் குருக்களோ அனுமதிக்க மறுத்துவிட்டார். ''வீதியில் நின்றபடியே உங்களால் கடவுளைப் பார்க்க முடியும்'' எனக் கூறினார். உடனே அவ்விடத்தில் ஒரு பெருங்கூட்டம் கூடியது, பின் கோவில் குருக்களை மீறி கோவிலுக்குள் நுழைய முயற்சித்தார்கள். உடனே இருதரப்பினருக்கும் மோதல் உண்டாகி கைகலப்பு ஏற்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



இந்துக் கோவில்களுக்குள் நுழைவதற்குத் தாழ்த்தப்பட்டவர்களை இந்துக்கள் அனுமதிப்பதே இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுக்கெனச் சொந்தக் கோவில்களையும் அதில் கடவுள்களையும் வைத்திருக்க இந்துக்கள் தாழ்த்தப்பட்டவர்களை அனுமதித்திருக்கிறார்கள் என ஒரு வேளை நாம் நினைக்கக் கூடும். இது தவறான எண்ணம். இந்துக்கள் இதையும்கூட அனுமதிப்பதில்லை. இரண்டு எடுத்துக்காட்டுகளை முன்வைப்பது இதற்குப் போதுமானது. அதில் ஒன்று.

ஆக்ரா மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பார்ப்பனன் தன் வீட்டில் விஷ்ணு சிலையை வைத்து வழிபாடு செய்து வருவதைக் கண்ணுற்ற சாமர் (தாழ்த்தப்பட்டவர்-மொச்சி) தானும் தன் வீட்டில் அவ்வாறே செய்து வந்தார். இதை அறிந்த அப்பார்ப்பனன் பெருங் கோபம் கொண்டான். கிராம மக்கள் துணையோடு அந்தக் கேடுகெட்ட அரிசனனைப் பிடித்துக் கடுமையாக உதைத்தான். "விஷ்ணுக் கடவுளைச் சொந்தமாக்கிக்கொள்ள உனக்கு எவ்வளவு துணிச்சல்?" எனத் திட்டினான். பின் அக்கிராமத்தார் அவர் வாயில் கழிவுப் பொருட்களைத் திணித்துவிட்டுச் சென்றுவிட்டனர். முழுக்கவும் மனக்கசப்படைந்த அந்த சாமர் இந்து மதத்தைக் கைகழுவி விட்டு இஸ்லாமியத்தை தழுவிக்கொண்டார். (பிரதாப், பிப்ரவரி 1923)

## அடுத்த எடுத்துக்காட்டு

"1939 ஜூன் 29' அன்று பெல்லாரி மாவட்ட அரிசன ஆலோசனைக்குழுவின் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இல்லத்தில் நடந்தது. மாவட்ட ஆட்சித்தலைவரும் இக்குழுவின் தலைவருமான திரு. ஏ. டி. குரோம்பி சிஐஇ, ஐசிஎஸ் தலைமை தாங்கினார். நாராயண தேவராக்கிரி பகுதி அரிசனங்களிடமிருந்து கட்டாய உழைப்பு பெறப்

www.padippakam.com



படுவதாகவும் வட்டிக்கடைக்காரர்களால் அவர்கள் துன் புறுத்தப்படுவதாகவும் இன்னும் பல குற்றச்சாட்டுகளைக் கேள்விப்பட்டிருக்கிறோம். இதுகுறித்து ஏதேனும் தேவை யிருந்தால் நடவடிக்கை எடுப்பதற்காக அதிகாரப்பூர்வ அறிக்கை ஒன்றைப்பெறுவது என இவ்வாலோசனைக் குழு தீர்மானிக்கிறது.''

குடதினி கிராம அரிசன மக்களுக்கு இழைக்கப்பட் டுள்ள மத இடையூறுகள் பற்றி இக்குழுவின் கவனத்திற் குக் கொண்டு வரப்பட்டது. 12 ஆண்டுகளுக்கு முன்பே இக்கிராம அரிசன மக்கள் தங்கள் குடியிருப்பில் ஒரு கோயி லைக் கட்டி முடித்துவிட்டதாகவும் ஆனால் அக்கோவிலில் இதுவரை சிலைவைக்க முடியவில்லை என்றும் அச்சிலை யைக் கோயிலில் வைப்பதற்கு முன்பாக அதனை ஊர்வல மாக எடுத்துச்செல்ல சாதி இந்துக்கள் மறுத்து வருவதே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. (இந்து, ஜூலை 4— 1939)

ஆ

இந்துக்களின் கிணறுகளில் இருந்து தாழ்த்தப்பட்ட வர்கள் நீரெடுக்க முயற்சித்ததை இந்துக்கள் எப்படி எதிர் கொண்டார்கள் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சிகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம்:

மகாசயா சேத்தி லால்ஜி கூறுகிறார். ''கடவுள் வழி பாட்டிற்குச் சென்று கொண்டிருந்த ஒரு சாமர் தாகத்தின் காரணமாக வழியில் ஒரு கிணற்றிலிருந்து தன் பாத்திரத் தின் மூலம் நீரெடுத்து அருந்தினார். உடனே உயர்சாதி இந்துக்கள் கடுமையாக உதைத்து அவரை ஒரு அறையில் தள்ளிப் பூட்டிவிட்டனர். இந்நிகழ்ச்சி நடந்துகொண்டி ருக்கும்போது அவ்வழியாகச் சென்றேன். நான் ஏன் இம்

படிப்பகம்

www.padippakam.com



மனிதன் அடைக்கப்பட்டிருக்கிறார் எனக் கேட்டேன். அதற்குத் திவான்சாகிப் பின்வருமாறு பதில் கூறினார். இவன் எங்கள் கிணற்றில் நீரெடுத்ததன் மூலம் மதத் தீட்டை ஏற்படுத்தி விட்டான்.

இந்துக்கள் கிணற்றிலிருந்து நீரெடுக்க முயன்ற தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக இந்துக்கள் தொடுத்த தாக்குதலில் இந்துப் பெண்களும்கூடப் பங்கெடுக்கத் தயக்கம் காட்டியதில்லை.

''1932 பிப்ரவரி—19 அன்று புல்பஜீவன் கிராமத்தில் படு அவலமான ஒரு நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. மகாசயா ராம்லால் என்பவர் கிணறு ஒன்றில் நீரெடுக்க முயற்சித்தபோது இந்நிகழ்ச்சி நடைபெற்றது. 1932 சனவரி—13 அன்று சில ரசபுத்திரர்கள் இதே கிணற்றில் நீரெடுக்க முயற்சித்த மகாசயா ராம்லாலையும் அவரது நண்பர் பண்டிட் பன்சிலாலையும் கடுமையாக உதைத்திருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் கையில் கிடைத்த தடிகளோடு ரசப்புத்திரப் பெண்கள் அவ்விடத்திற்கு வந்து மகாசயாவை வர்ணிக்க முடியாத அளவுக்குக் கடுமையாக உதைத்திருக்கிறார்கள். அவருடைய உடல் ரத்தத்தில் மூழ்கியது. இப்பொழுது அவர் புக்லியான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்'' (பிரதாப். பிப்ரவரி 26—1932) தாழ்த்தப்பட்டவர்கள் கிணற்றிலிருந்து நீரெடுப்பதை அரசாங்க அதிகாரிகள் ஆதரித்த போதிலும் கூடத் தாக்குதல்களில் இருந்து இவர்களால் தப்பிக்க இயலவில்லை என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி தெளிவாக எடுத்துக்காட்டும்.

சில நாட்களுக்கு முன்பு பாசனத்துறை அதிகாரி ஒருவர் டெக்சில்சபா பகுதியில் உள்ள ரகியன் கிராமத்திற்கு வருகை புரிந்து இருந்தார். அவர் சில மெகா சாதி

www.padippakam.com



தாழ்த்தப்பட்டவர்களைப் பார்த்துக் கிணற்றிலிருந்து நீரெடுக்க உதவும்படிக் கேட்டுக் கொண்டார். முதலில் அவர்கள் மறுத்தார்கள். ஆனால் அதிகாரியோ அவர்களைக் கடிந்து உரைத்ததோடு நீரெடுக்கும்படிக் கட்டாயப்படுத்தினார். அடுத்த நாள் இந்துக்கள் அக்கிணற்றின் அருகே ஒன்று கூடி ஒரு சவுக்கிதாரை அனுப்பி மெகாசாதியினரை வரவழைத்தனர். கிணற்றில் நீரெடுக்க எப்படித் துணிச்சல் வந்தது எனக் கேட்டனர். அதற்கு ஒரு மெகா தாங்கள் அவ்வாறு செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் இதில் தங்களுடைய குற்றமேதும் இல்லை என்றும் பதிலளித்தார். இந்தப் பதிலைக் கேட்டவுடன் இந்துக்கள் அவரைக் கைகளாலும் தடிகளாலும் தாக்கினர். இச்சமயம் வரை அவருக்கு நினைவு திரும்பவில்லை அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரணமானவைதான் என மருத்துவர் சொல்லியிருந்த போதிலும் சட்ட விரோதமாகக் கூடியதாகவும், கொலை செய்ய முயன்றதாகவும் காவல் துறையால் வழக்கு எழுதப்பட்டிருக்கிறது. இது எப்படி இருந்தபோதிலும் காவல்துறையினரின் அசட்டையின் காரணமாக மெகா சாதி மக்களிடையே பெருமளவு பாதுகாப்பற்ற உணர்வே இருந்து வருகிறது அக்கிராமத்தினர் மெகாக்களைப் பெருமளவிற்குத் துன்புறுத்தி வருகிறார்கள் தங்கள் கிணறுகளிலும் குளங்களிலும் மெகா சாதியினரின் கால்நடைகளைக்கூட நீர் அருந்த அனுமதிப்பதில்லை.'' (மிலாப், ஜூன் 7—1924)

தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக்களின் கிணறுகளில் இருந்து நீரெடுக்க முடிவதில்லை என்பதோடு பிரச்சினை நின்று விடுவதில்லை. செங்கற்களைக் கொண்டு தங்களுக்கெனச் சுத்தமான ஒரு கிணற்றை இவர்கள் அமைத்துக் கொள்ள முடியாது. இவர்களிடம் அதற்குத் தேவையான பணம் இருந்தாலும்கூட இதைச் செய்ய முடியாது. தங்களுக்கென ஒரு சுத்தமான கிணற்றை உருவாக்கிக்

www.padippakam.com



கொள்வது என்பது இந்துக்களின் அந்தஸ்த்திற்குச் சமமாகத் தங்களை உயர்த்திக்கொள்ளும் ஒரு முயற்சியாகவே பார்க்கப்படுகிறது. இம்முயற்சி நடப்பூச் சமூக ஒழுங்கிற்கு எதிரானதாகக் கருதப்படுகிறது.

அச்சத், உத்தர்க் குழுவின் செயலாளரான லால்ராம் பிரசாதி என்பவர் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

கோடைக் காலங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை பற்றி எண்ணற்ற புகார்கள் வருகின்றன. இது ஒரு பெரும் பிரச்சினை. தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் தங்களுக்கெனச் சொந்தமான எந்தக் கிணறும் இல்லாததால் மற்றவர்கள் கிணற்றடியில் நீருக்காகப் பாத்திரங்களோடு காத்திருக்கின்றனர். யாரேனும் சிலர் இவர்கள் மீது கருணை கொண்டு நீர் அளித்தால் உண்டு; இல்லையென்றால் அநாதையாக அங்கேயே அமர்ந்திருப்பார்கள். சில இடங்களில் பணம் கொடுத்தால் இவர்களுக்கு நீர் கொடுப்பதில்லை. அவ்வாறு யாரேனும் செய்ய முன்வநதால் அவர்களுக்கு உதை காத்திருக்கும். கிராமக் கிணறுகள் மட்டுமே இவர்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கவில்லை. தங்கள் சொந்தப் பணத்தில் தங்களுக்கெனச் சொந்தமாகக் கிணறு வெட்டிக்கொள்வதற்கும்கூட இவர்களுக்கு அனுமதியில்லை. (மிலாப், ஜூன் 6—1934)

இதே போல் மற்றும் ஒரு நிகழ்ச்சி. ''உபாடு கிராமத்தில் 250 சாமர் சாதியினர் வசிக்கிறார்கள். ஒன்றரை மாதங்களுக்கு முன்புவரை முஸ்லிம்களின் தோல்பையை இவர்கள் குடிநீருக்காகப் பயன்படுத்தி வந்தார்கள். இப்பொழுதோ நீருக்காகப் பெரும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அக்கிராமத்தைச் சேர்ந்த சாட் சாதியினர் கிராமக் கிணறுகளில் இருந்து நீர் எடுப்பதை மட்டுமல்ல, அவர்கள் சொந்தமாகக் கிணறு வெட்டிக்கொள்வதையும் அனுமதிப்பதில்லை குளங்களிலும் சாக்கடைகளிலும்

www.padippakam.com



கிடைக்கும் நீரை நம்பியே இந்த ஏழைச் சாமர்கள் வாழ்ந்து வருகிறார்கள். நேற்று தலித் மேம்பாட்டுக் குழுவின் செயலாளரான டாக்டர் சுக்தேஜி இதுபற்றி ஒரு ஆய்வை நடத்தினார். அனைத்தையும் நேரிலேயே பார்த்து அறிந்தார். சாமர்களின் நிலைமை வார்த்தை களால் வர்ணிக்க முடியாதது என்றும் சாட் சாதியினர் இவர்களைக் கொடுமைப்படுத்துவது உண்மையே என்றும் கண்டறிந்தார். (டெஜ்,ஏப்ரல் 21—1924)

பரோடா மாகாணத்தில், அதனை ஒட்டிய ஆங்கி லேய ஆட்சிப்பகுதிகளைக் காட்டிலும் தாழ்த்தப்பட்ட வர்கள் ஓரளவிற்கு நல்லமுறையாக நடத்தப்பட்டு வருகி றார்கள். காரணம் அங்கு அன்ஜெயா சாதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்களைச் சாதி இந்துக்களுக்குச் சமமாக சட்டம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆயினும்கூட பத்ரால் வட்டத்தில் ஒரு அன்ஜெயா சாதிப் பெண்ணின் பயிர்கள் தீக்கிரையாக்கப்பட்டன, அப்பெண்ணும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானார். தன் மகனைப் பள்ளிக்கு அனுப்பத் துணிந்ததே அப்பெண் செய்த தவறு. அடுத்த படியாக காதிபிரான் பகுதியைச் சேர்ந்த சனஸ்மா என்ற தச்சரின் சோகக்கதையைப் பார்க்கலாம்.

அன்ஜெயா சாதியினரின் துணையோடு இவர் ஒரு கிணறு வெட்டினார். அக்கிணற்றை அச்சாதியினர் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பதாக உறுதியளித்திருந் தார். ஆனால் அக்கிணறு பயன்பாட்டிற்குத் தயாரான போது அவர்களுக்கு இதில் உரிமையில்லை என அனுமதி மறுக்கப்பட்டது. பின் அச்சாதியினர் பஞ் அலுவலரிடம் இது குறித்துப் புகார் செய்தபோது அவர் கிணற்றி லிருந்து ஐநூறு அடி தூரத்திற்குக் குழாய் போட்டு அதி லிருந்து நீர் பெற்றுக்கொள்ளும்படி பெருந்தன்மையோடு அனுமதித்தார். அப்பொழுது அந்தக் குழாய் வரும் நிலத் துக்குச் சொந்தக்காரர் இதை எதிர்க்கவே மீண்டும்

படிப்பகம்

www.padippakam.com



அக்குழாய் உள்ளூர் நீர்த்தொட்டிவரை கொண்டு செல்லப் பட்டது. இதனால் அந்நீர்த் தொட்டி தீட்டு அடையும் எனக் கருதி மீண்டும் அக்குழாயை வேறு இடத்திற்கு மாற்றச் சொன்னார்கள். ஆனால் தொல்லை அத்தோடு ஓயவில்லை. கோபமுற்ற சாதி இந்துக்கள் பலமுறை அக் குழாயைத் துண்டித்து விட்டார்கள். அன்ஜெயா சாதி யினர் நீரின்றியே இருக்க வேண்டி இருந்தது. காந்தியின் வார்த்தைகளை இங்குப் பயன்படுத்துவது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது தங்களுடைய சக மதத்தவர் தங்களை நடத்திய விதம் குறித்துத் தாழ்த்தப்பட்டவர்கள் என்ன நினைத்திருப்பார்கள். (டைம்ஸ் ஆப் இந்தியா, மே 9—1931)

தாழ்த்தப்பட்டவர்கள் குடிநீருக்காகப் படும் கொடும் அவலங்களைத் திரு. தாக்கர் 1927இல் நேரில் பார்த்த தைப் பற்றி திரு. சஞ்சனா டைம்ஸ் ஆப் இந்தியாவிற்கு (நவம்பர் 7—1928) கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதியுள் ளார்.

''பால்சத் வட்டத்தில் பங்கிப் பெண் ஒருத்தி குடிநீருச் காகச் சில இரக்கக் குணமுடைய மக்களை எதிர்நோக்கிக் கிணற்று அருகே காத்திருந்ததைத் தாக்கர் கண்டார். அப்பெண் காலையிலிருந்து மதியம்வரை காத்திருந்தும் நீர் தருவார் எவரும் இல்லை. இதைக் காட்டிலும் மனத்தை மிகவும் உறுத்தியது பங்கிகளுக்கு நீர் கொடுக் கப்பட்ட முறைதான். பங்கிகளுக்கு நேரடியாக யாரும் நீர் தரமாட்டார்கள். அப்படி நீர் கொடுத்தவர்கள் தீட்டுப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள்.

ஒருமுறை எங்களது ஆசிரியர் சன்னிப்பாய் முட்டாள் தனமான துணிச்சலோடு நேரடியாகப் பங்கியின் பாத்தி ரத்தில் நீர் ஊற்றினார். அதற்கு இம்மாதிரியான வேலை யெல்லாம் இங்கு வேண்டாம் என்ற எச்சரிக்கையே பதி

www.padippakam.com



லாகக் கிடைத்தது. கிணற்றிற்கு அருகே சிறு தொட்டி ஒன்று கட்டப்பட்டிருக்கும். இரக்கக் குணமுள்ளவர் யாரேனும் இருந்தால் அத்தொட்டியில் தண்ணீர் ஊற்று வார்கள். அந்தத் தொட்டியோடு மூங்கில்குழாய் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். பங்கிப் பெண்கள் அந்த மூங்கில் குழாயின் அடியில் தங்கள் பாத்திரத்தை வைத்திருப்பார் கள். அதில் தண்ணீர் நிரம்புவதற்கு ஒரு மணி நேரமோ அதற்கு மேலேயோ ஆகலாம். பெரும்பாலும் தேவைப் படாத தண்ணீரைத்தான் அத்தொட்டியில் ஊற்றுவது வழக்கம். அதுவும்கூடக் காத்திருக்கும் பங்கிப்பெண்ணின் மீது இரக்கப்பட்டால் தான் ஊற்றுவார்கள்'' என தாக்கர் மேலும் கூறுகிறார்.

இ

நிலவுகின்ற சமூக அமைப்பில் தாழ்த்தப்பட்டவர் களுக்குக் கல்வி கற்க உரிமையில்லை. கிராமப்பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்க அவர்களுக்கு நிச்சயமாக உரிமையில்லை. இந்த விதியைத் துணிச்சலோடு மீறிய சில தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக்களால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். இம்மாதிரி நடந்த எண்ணற்ற நிகழ்ச்சிகளில் சிலவற்றைப் பார்ப்போம்

''சூரத் மாவட்டத்திலுள்ள சிசோதரி கிராமத்தைப் பற்றி மகசயா 'யங் இந்தியா' பத்திரிகையில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். இந்தக் கிராமம் ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஒரு முன் உதாரணம் என்று கூறுமளவிற்கு மிகக்குறுகிய காலத்திற்குள் தேசிய உணர்வில் மேலோங்கி நின்றது. ஆயினும் அரிசனங்கள் மீதான வெறுப்பு அப்படியே இருந்து வருகிறது. அக்கிராமத்தில் உள்ள தேசியப் பள்ளிக்குச் சென்றபோது அங்கு மூலையில் தாழ்ந்த (Dhed) சாதி சிறுவன் தனியே அமர்ந்து இருப்

www.padippakam.com



பதைக் கண்டேன். அச்சிறுவனின் தோற்றமே அவன் தீண்டத்தகாதவன் என்பதைப் பறைசாற்றியது. உங்களோடு ஏன் இச்சிறுவனைச் சேர்த்துக்கொள்ளவில்லை எனக் கேட்டபோது, அச்சிறுவன் குடியையும் புலால் உண்பதையும் நிறுத்தும் வரை எங்களோடு அவனைச் சேர்த்துக் கொள்ள முடியாது எனப் பதிலளித்தார்கள். உடனே அவ்வரிசனச் சிறுவன் அம்மாதிரியான பழக்கங்களைத் தான் ஏற்கெனவே கைவிட்டு விட்டதாகப் பதிலளித்தான். இதற்கு உயர்சாதி மாணவர்கள் எதுவுமே சொல்லவில்லை'' (ஆரியா கெசட், லாகூர், சூன் 30-1921).

1923 பிப்ரவரி 12 பிரதாப் இதழில் கீழ்க்கண்ட தகவலை மகாசயா சாந்ராம் தருகிறார். இந்நிகழ்ச்சி சமீபத்தில்தான் நடந்தது சாமர் சாதி சிறுவர்களுக்கு ஆசிரியராக ஒரு பார்ப்பனரை அரசாங்கம் நியமித்திருந்தது அவர் அப்பள்ளிக்குச் சென்றபோது பார்ப்பனர்களும் சத்திரியர்களும் ஏனைய சாதியினரும் அவரைப் பறக்கணித்ததோடு ''சாமர் சாதியினருக்குக் கல்வி கற்றுக் கொடுத்து நம் அந்தஸ்திற்கு உயர்த்தவா நீங்கள் வந்தீர்கள்'' எனக் கேட்டனர்.

சுவாமி சர்தானந்தாஜி பின்வருமாறு எழுதுகிறார். கட்சியாஸ் (Khatsayas) பகுதியிலுள்ள தேசியப் பள்ளி ஒன்றுக்கு நான் 1921 நவம்பர் கடைசி வாக்கில் சென்றிருந்தேன். எவ்வளவு அரிசனச் சிறுவர் இங்குப் படிக்கிறார்கள் எனக் கேட்டதற்கு மூன்று சிறுவர்கள் படிப்பதாகவும் அவர்களும் கூட வகுப்பறைக்கு வெளியேதான் அமர்ந்திருப்பதாகவும் பதில் தந்தார்கள். எனது உரையில் இந்தச் செயலைக் கண்டித்ததோடு இம்மாதிரியான தேசிய நிறுவனங்களில் அரிசனச் சிறுவர்களையும் வகுப்பறைக்குள் உட்கார அனுமதிப்பதே முறையானதாக இருக்கும் என்று கூறினேன். பள்ளி மேலாளரும் எனது அறிவுரைப்படியே நடந்தார். அடுத்த நாளில் இருந்து

www.padippakam.com



அப்பள்ளிக்கு எந்த மாணவர்களும் வரவில்லை. இதுநாள் வரை அப்பள்ளி பூட்டியே கிடக்கிறது. (டெஜ், ஏப்ரல் 11—924).

''கீழ்க்கண்ட நிகழ்ச்சி கோசுக்காபாத்தில் நடை பெற்றது. பள்ளிகளில் அரிசனச் சிறுவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என மாவட்டக்குழு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி இருந்தது. தலைமை ஆசிரியர்களும் அவ்வாறே செய்தனர். அதில் ஒரு பள்ளியில் சில அரிசன மாணவர்கள் சேர்க்கப்பட்டதை அறிந்த அம்மாவட்ட நீதிபதி இதை ஒரு மிகப் பெரிய குற்றமாகக் கருதித் தனது குழந்தையை அப்பள்ளியிலிருந்து விலக்கிக் கொண்டார் மற்றவர்களும் அவ்வாறே செய்தனர். பள்ளிக் குழுவின் கூட்டம் கூட்டப்பட்டு அதில் சில தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. அரிசனங்களுக்குக் கல்வி தருவது பொது மக்கள் விருப்பத்திற்கு எதிரானது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அரிசனச் சிறுவர்களுடன் பார்ப்பனச் சிறுவர்களும் பழகுவதால் தங்கள் பூணூலை மாற்றிக் கொள்ள நேரிடுகிறது. ஆகவே அரிசனச் சிறுவர்களுக்குக் கல்வி தரும் இப்பள்ளியைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.'' (மிலாப், ஏப்ரல் 18—1924).

''ஆமதாபாத் ஏப்ரல்—1932 : பரோடா மாகாணத்தில் உள்ள நவகோன் கிராமத்திலிருந்து ஒரு செய்தி வந்துள்ளது. அரிசனப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளதால் கிராமத்திலுள்ள பொதுப் பள்ளிகளில் அரிசனச் சிறுவர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி தரப்பட்டது. இதனால் அக்கிராம மக்கள் அரிசனங்களை முடிவற்ற சித்திரவதைக்கு உள்ளாக்கி வருகிறார்கள். அரிசன விவசாயிகளுக்குச் சொந்தமான ஏராளமான வைக்கோல் போர்களுக்குத் தீ வைக்கப்பட்டிருக்கிறது; அரிசனங்களின் கிணறுகளில் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டிருக்

படிப்பகம்

www.padippakam.com



கிறது; அரிசனங்கள் வீடுகளுக்குத் தீ வைக்க முயற்சி செய்யப்பட்டிருக்கிறது; பள்ளிக்குச் செல்லும் வழியில் அரிசனச் சிறுவன் ஒருவன் தாக்கப்பட்டிருக்கிறான்; அரிசனங்களை மொத்தமாகப் புறக்கணிக்கும்படி அறிவித்துள்ளார்கள். (பிரதாப், ஏப்ரல் 3—1932).

''கட்டிப்போர் கிராமத்திலுள்ள இரவுப் பள்ளியின் மீது ஒரு கும்பல் தாக்குதல் தொடுத்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இப்பள்ளியில்தான் விவசாயிகளும் ஏனையோரும் கல்வி கற்று வந்தனர். அக்கும்பல் அந்தப் பள்ளி ஆசிரியரைப் பள்ளியை மூடி விடும்படி மிரட்டியது. தாழ்த்தப்பட்டவர்கள் கல்வி பெற்றால் தங்களையும் சமமாக மதிக்கும்படி வலியுறுத்துவார்கள் என்ற காரணத்தை அக்கும்பல் முன் வைத்தது. இதற்கு இணங்க மறுத்த அவ்வாசிரியர் கடுமையாகத் தாக்கப்பட்டார். மாணவர்களை ஓடி விடும்படி அக்கும்பல் கூறியது. (இந்துஸ்தான் டைம்ஸ், மே 26—1939).

பம்பாய் மாகாணத்தில் ஆமதாபாத் மாவட்டத்தில் தோல்கா வட்டத்திலுள்ள கவிதா கிராமத்தில் 1935 ஆம் ஆண்டில் நடந்த நிகழ்ச்சியை இறுதியாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகஸ்ட் 8—1935 அன்று இந்நிகழ்ச்சி நடந்தது.

அரசாங்கப் பள்ளிகளில் தாழ்த்தப்பட்டவர்களின் பிள்ளைகளும் சேர்த்துக் கொள்ளப்படுவர் என பம்பாய் அரசு ஒரு ஆணை வெளியிட்டிருந்தது. இந்த ஆணையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள கவிதா கிராமத் தாழ்த்தப்பட்டவர்கள் நினைத்து இருந்தனர். அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கீழே தருகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



8—8—1935 அன்று கவிதா கிராமத் தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் குழந்தைகளில் நால்வரைப் பள்ளியில் சேர்க்கச் சென்றனர். அக்கிராமச் சாதி இந்துக்கள் இக்காட்சியைக் காண அப்பள்ளியருகே கூடி நின்றனர். மாணவர் சேர்க்கை நிகழ்ச்சி அமைதியாக நடந்துவிட்டது, விரும்பத்தகாத நிகழ்ச்சி ஏதும் நடைபெறவில்லை. இதற்கு அடுத்த நாள் சாதி இந்துக்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பவில்லை. தாழ்த்தப்பட்டவர்களோடு தங்கள் பிள்ளைகளும் அமர்ந்து தீட்டாவதை இந்துக்கள் விரும்பவில்லை. இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு ஆகஸ்ட் 13, 1935 அன்று அக்கிராமத் தாழ்த்தப்பட்டவர் ஒருவர் பார்ப்பனரால் தாக்கப்பட்டார். இது குறித்து வழக்கு ஒன்றைப் பதிவு செய்ய அக்கிராமத் தாழ்த்தப்பட்ட ஆண்கள் அனைவரும் டோல்கா நீதிமன்றத்திற்கு வந்துவிட்டனர். அரிசன சேரிக்குள் ஆண்கள் யாரும் இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட இந்துக்கள் சேரிக்குள் புகுந்து தடி, கத்தி, ஈட்டி ஆகிய ஆயுதங்களால் முதிய ஆண்கள், பெண்கள் ஆகிய இரு தரப்பினரையும் தாக்கினர். இத்தாக்குதலில் ஈடுபட்டவர்களில் பெண்களும் அடங்குவர். சிலர் காட்டுக்குள் ஓடித் தப்பித்துக் கொண்டனர்; சிலர் மறைந்து கொண்டனர்.

அக்கிராமப் பள்ளியில் அரிசனக் குழந்தைகளைச் சேர்ப்பதில் முன்னோடிகளாக இருந்ததாக இந்துக்கள் சந்தேகித்த தாழ்த்தப்பட்டவர்கள் மீது இந்த ஆக்கிரமிப்பாளர்கள் கோபம் திரும்பியது. அவர்கள அங்கு இல்லாததால் வீட்டுக் கதவுகளை உடைத்துக் கூரைகளை நாசமாக்கி வீடுகளைச் சூறையாடினர்.

தாக்குதலுக்குள்ளான தாழ்த்தப்பட்டவர்கள் டோல்காவுக்கு (புகார் தர) சென்றவர்களின் பாதுகாப்பு குறித்துக் கவலைப்பட்டனர். அவர்கள் இரவு நேரத்தில் திரும்புவதாக இருந்தது. டோல்காவுக்குப் புகார் தரச்

படிப்பகம்

www.padippakam.com



சென்ற தாழ்த்தப்பட்டோர் தலைவர்களின் வருகையைத் தெரிந்துகொண்ட சாதி இந்துக்கள் அவர்கள் வரும் வழியில் புதர்கள் மறைவில் ஒளிந்து கொண்டனர். இதையறிந்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர், இருட்டில் யாருக்கும் தெரியாமல் கிராமத்தை விட்டு வெளியே வநது திரும்பி வந்துகொண்டிருந்த தங்கள் தலைவர்களைப் பார்த்துச் சாதி இந்துக்கள் அவர்களைத் தாக்க வழியில் காத்திருப்பதைச் சொல்லி அவர்களைக் கிராமத்திற்குள் வரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் அத்தலைவர்களோ செவி சாய்க்கவில்லை. தாங்கள் கிராமத்திற்குத் திரும்பவில்லையென்றால் சாதி இந்துக்கள் அதனைப் 'பயன்படுத்தி மேலும் கொடுமைகள் பல செய்யலாம் என அஞ்சினார்கள். அதே சமயத்தில் கிராமத்திற்குச் சென்றாலோ தாங்கள் தாக்கப்படலாம் எனவும் அஞ்சினார்கள். எனவே கிராமத்திற்கு வெளியே இரவு முடியும் வரை காத்திருப்பது என முடிவெடுத்தனர்.

இதற்கிடையில் புதர்கள் மறைவில் காத்திருந்த சாதி இந்துக்கள் பொறுமையிழந்து இறுதியாக அத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டு வீடு திரும்பினர். தாழ்த்தப்பட்ட சாதித் தலைவர்கள் அதிகாலை 3 மணியளவில் கிராமத்திற்குத் திரும்பினர். அவர்கள் இதற்கு முன்னரே கிளம்பியிருந்தால் கொலைக் கும்பலின் கைகளில் சிக்கிமாண்டிருக்கக் கூடும். தங்கள் சொத்துக்களுக்கும் ஆட்களுக்கும் விளைந்த சேதத்தைக் கண்ணுற்ற அவர்கள் விடிவதற்கு முன்னே அகமதாபாத் வந்து சேர்ந்தனர். இதுகுறித்து அரிசன நலச் சங்கச் செயலரிடம் தெரிவித்தனர். இந்த அரிசன நலச் சங்கம் தாழ்த்தப்பட்டவர்களின் நலனுக்காகக் காந்தியால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். ஆனால் இந்தச் சங்கச் செயலாளரால் ஒன்றும் செய்ய இயலவில்லை. சாதி இந்துக்கள் வன்முறையோடு

படிப்பகம்

www.padippakam.com



மட்டும் நிற்கவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாழ்க்கையில் தாங்க முடியாத இன்னல்களையும் கொடுக்கத் திட்டமிட்டனர். தாழ்த்தப்பட்டவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள மறுத்தனர். அவர்களுக்கு மளிகைப் பொருட்களை விற்க மறுத்தனர். அவர்கள் கால்நடைகளைப் புல் மேய அனுமதிக்க மறுத்தனர். அவர்களை அவ்வப்போது தாக்கவும் செய்னர். இத்தோடு மட்டுமா? சாதி இந்துக்கள் வெறியில் தாழ்த்தப்பட்டவர்கள் நீர் எடுக்கும் கிணறுகளில் மண்ணெண்ணெய் ஊற்றினா. இதை அவர்கள் தொடர்ந்து பல நாட்களுக்குச் செய்தனர். இதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அருந்த நீர் கிடைக்கவில்லை. நிலைமை இந்தக் கட்டத்தை அடைந்தவுடன் தாழ்த்தப்பட்டவர்கள் சில இந்துக்கள் மீது குற்றம் சாட்டி நீதிபதியிடம் அக்டோபர் 17 அன்று கொலை வழ்க்கு ஒன்றைப் பதிவு செய்தனர்.''

''இந்த நாடகத்தில் திருவாளர் காந்தி, அவரின் சீடர் சர்தார் வல்லபாய் பட்டேல் ஆகிய இருவரின் பங்களிப்பு தான் வியப்பைத் தருகிறது. கவிதா கிராமத் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் மீது நடைபெற்ற அனைத்துக் கொடுமைகளையும் தாக்குதல்களையும் அறிந்த காந்தி அம்மக்கள் கிராமத்தை விட்டு வெளியேறுவதே நல்லது என அறிவுரை கூறினார். அயோக்கியர்களை வழக்கு மன்றத்திற்கு இழுக்க வேண்டும் என்று கூட அவர் கருதவில்லை. இவரின் கைத்தடியான வல்லபாய் பட்டேல் ஆற்றிய பங்களிப்போ, இதைவிட வியப்பைத் தருகிறது. கவிதா கிராமத்திற்குச் சென்று அக்கிராமச் சாதி இந்துக்களிடம் தாழ்த்தப்பட்டவர்களை தாக்க வேண்டாம் என அறிவுறுத்தினார். ஆனால் இந்துக்கள் இதனைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

ஆனால் இதே ஆள்தான் (பட்டேல்) வழக்கு மன்றத்தின் மூலமாக இந்துக்களை விசாரிக்கத் தாழ்த்தப்பட்ட

www.padippakam.com



வர்கள் செய்த முயற்சியை எதிர்த்தார். இவர் எதிர்ப்பையும் மீறித் தாழ்த்தப்பட்டவர்கள் வழக்குப் பதிவு செய்தனர். ஆனால் இறுதியாக திரு. பட்டேல் ஒரு சமரசத்தின் மூலம் வழக்கைத் திரும்பப் பெற வைத்தார். தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்கக்கூடாது என்ற சமரசமே அது. ஆனால் இதனை அவர்களால் நடைமுறைப் படுத்தவே முடியாது. இதன் விளைவு தாழ்த்தப்பட்டவர்கள் மேலும் துயரத்திற்குள்ளானார்கள். கொடுங்கோலர்களோ காந்தியின் நண்பர் பட்டேலின் உதவியால் தப்பித்துக் கொண்டார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களும் இந்துக்கள்தான் என இந்துக்கள் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் இந்துக்கள் இடுகாட்டில் தாழ்த்தப்பட்டவரின் சடலத்தை எரிக்க முடியவில்லை. ''மற்றவர்கள் உணர்வைப் புண்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு நான்கு மாதக் கடுங்காவல் தண்டனைக்கு உள்ளான மதுரையைச் சேர்ந்த இரு அரிசனங்களின் வழக்கு பற்றிப் பத்திரிகைகளுக்குக் குறிப்பிட்ட திரு. ஏ. எஸ். வைத்தியநாத அய்யர் தீண்டாமையினால் அரிசனங்கள் படும் கொடூர. வேதனையைப் பொதுமக்கள் பார்வைக்குக் கொண்டு வந்தார்.

திரு. வைத்தியநாத அய்யர் பின்வருமாறு கூறுகிறார்: மதுரை அரிசனர் ஒருவர் இறந்துபோன தன் மூத்த குழந்தையின் சடலத்தை மதுரை நகராட்சி இடுகாட்டில் அரிசனங்களுக்கு ஒதுக்கப் ட்ட பகுதியில் எரிக்காமல் சாது இந்துக்கள் பகுதியில் எரித்து விட்டார். இம்மாதிரியான இட ஒதுக்கீடு தனக்குத் தெரியாது என்றும் மேலும் அப்போது மழை பெய்துகொண்டிருந்ததால், எரிப்பதற்கு அவ்விடம் வசதியாக இருந்ததால் அவ்விடத்தில் எரித்ததாகவும் கூறினார்.

சாதி இந்துக்கள் தரப்பிலிருந்து இதற்கு எந்த எதிர்ப்பும் வரவில்லை. யாருக்கேனும் உணர்வு புண்பட்டதாக

படிப்பகம்

www.padippakam.com



எந்த ஆதாரமும் இல்லை. இந்த நிகழ்ச்சியைக் கேள்வி யுற்ற மதுரைக் காவல்துறை அந்த அரிசனனின் மீதும் அவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் மீதும் இவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதால் இவர்களின் இந்தச் செயலானது மற்றவர்களின் உணர்வைப் புண்படுத்தி விட்டது எனத் தாங்களாகவே வழக்குத் தொடுத்து விட்டனர்.

இவ்வழக்கை சென்னை மாகாண மந்திரி சபையின் கவனத்திற்குத் தான் கொண்டு சென்றதாகவும் திரு. அய்யர் கூறினார்.

"மார்ச் 18—1945 அன்று முஜோபர் நகர் மாவட்டத் தைச் சேர்ந்த புளோடாவ் கிராமத்தில் ஒரு தோட்டி இறந்து போனார். அக்கிராமத் தோட்டிகள் அச் சடலத்தை இடுகாட்டிற்குக் கொண்டு சென்றனர். இது அக்கிராமத்தைச் சேர்ந்த தியாகி (Tyagi) பார்ப்பனர்க ளுக்குக் கோபத்தை மூட்டியது. சாதி இந்துக்களின் இடத்தில் சடலத்தைக் கொண்டு போனதற்காக அவர்கள் தோட்டிகளைத் திட்டினர். தோட்டிகளோ தாங்கள் இந்துக்கள் என்றும் சடலத்தை எரிப்போம் என்றும் எதிர்ப்புக் காட்டினர். ஆனால் பார்ப்பனர்களோ நியா யத்திற்கு இணங்க மறுத்தனர். முஸ்லீம்களோ இந்துக் களோ யாராயினும் தோட்டிகள் தங்கள் சடலத்தைப் புதைத்துதான் ஆகவேண்டும், இல்லையெனில் தாங்களே அதைச் செய்து விடுவதாகப் பார்ப்பனர்கள் கூறினர். அப்பாவித் தோட்டிகளோ அச்சுறுத்தல்களுக்கும் உதைக் கும் பயந்து சடலத்தைப் புதைத்தனர்" (சவதான், ஏப்ரல் 2—1945)

விசயம் இத்தோடு முடிந்து விடவில்லை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு அம்சம் இதில் இருக்

www.padippakam.com



கிறது. தீண்டத்தகுந்த இந்துக்கள் சலடங்களை எரித்து விடுவார்கள். ஆனால் இதனையே தாழ்த்தப்பட்டவர்கள் செய்தால் இந்துக்களின் அந்தஸ்திற்கு அவர்களும் உயர்வதாகப் பொருள். ஆகவே தாழ்த்தப்பட்டவர்கள் விரும்பாவிட்டாலும்கூட அவர்கள் சடலங்களைப் புதைப்பது அவசியமானது.

மிலாப் (ஜூன் 6—1924) பத்திரிகையில் இம்மாதிரி கட்டாயமாகப் புதைக்கப்பட்ட நிகழ்ச்சி குறித்து ஒரு செய்தி வந்துள்ளது.

''இந்துக்களின் கொடுமையே தாழ்த்தப்பட்டவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட முக்கியக் காரணமாக இருக்கிறது. இதுபற்றி எனக்கொன்றும் தெரியாது. ஆனால் பல்வேறு நபர்களிடமிருந்து எனக்கு வரும் செய்திகள் மிகுந்த வேதனையைத் தருவதாக இருக்கின்றன. ஒரு பகுதியில் தீண்டத்தகாதவர்கள் தங்கள் சடலங்களை எரித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை என்ற செய்தி எனக்குக் கிடைத்திருக்கிறது. இது அப்பகுதித் தோட்டிகளிடையே ஒரு புதிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கி விட்டது. இவர்கள் மற்றவர்களுக்கு மாறாகச் சடலத்தை தலைமாட்டிலிருந்து எரியூட்டினர். மற்றவர்களை அப்படியே தாங்களும் பின்பற்றினால் அது தங்களுக்கு அவமானம் எனத் தோட்டிகள் எண்ணினர்.

உ

பூணூல் அணிவது உயர்பிறப்பின் அடையாளமாகும். தங்களையும் உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் தாங்களும் பூணூல் அணியத் தாழ்த்தப்பட்டவர்கள் நினைத்தனர். உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த கார்வால் மாவட்டத்திலுள்ள ரிங்வாரி கிராமத் தாழ்த்தப்பட்ட

www.padippakam.com



வர்கள் மீது சாதி இந்துக்கள் நடத்திய கொடுமைகள் குறித்து நேசனல் ஹெரால்டில் சூன் 6இல் செய்தி வந்துள்ளது.

''சாதி இந்துக்களிடம் சித்திரவதைகளை அனுபவித்த பத்து அரிசனக் குடும்பங்கள் இரண்டு மாத கால அகதி வாழ்க்கைக்குப் பின்பு கார்வால் மாவட்ட அதிகாரிகள் உதவியோடு ரிங்வாரி கிராமத்திலுள்ள தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர். சுவாமி சாரதா நந்தாவும், மகாத்மா காந்தியும் அரிசனங்களின் வளர்ச்சிக்காகத் தொடங்கிய சமூக இயக்கத்தை முழு அளவில் அக்கிராம அரிசனங்கள் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை இங்கு நினைவூட்ட வேண்டும். இந்த அரிசனங்கள் பூணூல் அணிந்து சந்தியா சடங்குகளைச் செய்வது தங்கள் கடமைகளில் ஒன்றாகக் கடைப்பிடித்து வந்தனர். ஆனால் கார்வால் பகுதிச் சாதி இந்துக்களுக்கு இது கோபமூட்டியது. அவர்கள் கருத்துப்படி இச்செயலானது தங்கள் உரிமைகளையும் சலுகைகளையும் மீறுவதாகும். அதனால் அரிசனங்களை அடிக்கடி தாக்கினர். ரிங்வாரியில் இக்கொடுமைகள் ஒரு உச்சத்தை எட்டின. சாதி இந்துக்களுக்கு அடிபணிய மறுத்த அரிசனங்களுக்கு குளம், குட்டைகள், மேய்ச்சல் நிலங்கள், ஏனைய பொது இடங்கள் அனைத்தும் மறுக்கப்பட்டன. இதன் விளைவாகத்தான் மேற்குறிப்பிட்ட பத்து குடும்பங்கள் அதனால் வரும் இன்னல்களைத் தவிர்க்க தங்கள் கிராமத்தைவிட்டுச் சென்றனர்.

இதேபோன்ற சில நிகழ்ச்சிகளைக் கீழே தந்துள்ளேன்.

1) ''ஆரிய சமாஜவாதிகள் சிலர் தாழ்த்தப்பட்ட சாதியினர் சிலரை உயர்த்துவதற்குச் சாதிச் சின்னமான புனித நூலை அவர்கள் கழுத்தில் கட்டிவிட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் சனாதனவாதிகளால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. காரணம் தாழ்த்தப்பட்டவர்கள் புனித நூல் அணிவதை அவர்கள் மதம் அனுமதிப்பது இல்லை. ஆகவேதான் இந்நூல் அணிந்த தாழ்த்தப்பட்டவர்கள் உயர்சாதி இந்துக்களால் தினந்தோறும் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

2) ஜம்மு மாகாணத்திலுள்ள மிர்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பகத் ஹரிசந்த் என்பவரை ஆரிய சமாஜவாதிகள் புனிதப்படுத்தி அவருக்குப் புனித நூல் அணிவித்தனர். அப்பகுதி ஜாட் இந்துக்கள் அந்நூலை அகற்றும்படி பயமுறுத்தினர். ஆனால் ஹரிசந்தோ உறுதியாக இருந்தார். கடைசியாக ஒருநாள் ஹரிசந்த் காயத்ரி விரதத்தை முடித்துக்கொண்டு வரும் நேரத்தில் ஜாட் இந்துக்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். புனித நூலும் அறுத்து எறியப்பட்டது. மெகா சாதியினர் புனிதச் சடங்கிற்கு முன்பு ஜாட்டுகளை ஹரீப் நவாஸ் (ஏழைகளின் காவலன்) என்று அழைத்து வந்தனர். புனிதச் சடங்கிற்குப் பின்போ 'நமஸ்தே' என்று மட்டும் சொல்லி வந்தார்கள். ஜாட்டுகளின் கோபத்திற்கு இதுவே காரணம்.

''குர்தாஸ்பர் மாவட்டத்திலுள்ள பெர்ஹம்பூர் நகரத்திற்கு அருகிலுள்ள ரமணி கிராம இந்து இரஜப்புத்திரர்கள் தங்கள் கிராமத் தாழ்த்தப்பட்டவர்களை அழைத்துப் பூணூலை அகற்றும்படியும் மீண்டும் இவ்வாறு அணியமாட்டோம் என உறுதிக் கூறும்படியும் இல்லை எனில் ஆபத்துக்குள்ளாக நேரிடும் என்றும் எச்சரித்தனர். இதற்குத் தாழ்த்தப்பட்டவர்கள் பின்வருமாறு அமைதியாகப் பதிலளித்தனர். ''மகாராஜா, ஏன் எங்கள் மீது கோபப்படுகிறீர்கள. உங்கள் சொந்தச் சகோதரர்களான ஆரிய சமாஜிகள்தான் இந்த நூலை எங்கள் கழுத்தில்

படிப்பகம்

www.padippakam.com



கட்டி விட்டனர். அத்தோடு இந்நூல் இந்து நம்பிக்கையின் உண்மையான சின்னம். ஆதலால் இதனை எப்போதும் பாதுகாத்து வாருங்கள் என்றும் எங்களுக்குக் கட்டளை இட்டு இருக்கிறார்கள். இதற்கு நீங்கள் எதிர்ப்பாக இருந்தால் இந்த நூலை எங்கள் உடலில் இருந்து நீங்களே அறுத்து எறிந்து விடுங்கள்.'' இதைக் கேட்டவுடன் ரஜப்புத்திரர்கள் நீண்டநேரம் அவர்களைத் தடிகளால் தாக்கினர். தாழ்த்தப்பட்டவர்கள் பெரும் மனோ வலிமையோடு இந்தச் சித்திரவதையைத் தாங்கிக் கொண்டனர். எந்த எதிர்ப்பும் காட்டவில்லை. ஆனால் இவர்களின் பொறுமையினால் எந்தப் பயனும் ஏற்படவில்லை. மூன்று அல்லது நான்கு ரஜப்புத்திரர்கள் கோரிராம் என்ற அரிசனனின் பூணூலை அறுத்தெறிந்ததோடு மண்வெட்டியால் அவன் உடம்பில் பூணூலைப் போன்ற ஒரு காயத்தை ஏற்படுத்தி விட்டனர்.'' (ஆரிய கெஜட், செப்டம்பர் 14—1929).

''பாமணி கிராம இரஜப்புத்திரர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக நெடுங்காலமாகப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். பூணூலை அறுத்தெறிய வேண்டும் என்ற வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது. வேறு ஒரு வழக்கும் நடந்து வருகிறது. அக்டோபர் 7-1929 அன்று தாழ்த்தப்பட்ட பெண் ஒருத்தி அறுவடை செய்யச் சென்ற போது இரஜப்புத்திரரால் கடுமையாகச் சவுக்கால் அடிக்கப்பட்டார். அவர் உடம்பில் காயங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அவர் இப்பொழுது படுக்கையில் இருக்கிறார். இதுதான் அந்த வழக்கு.

## ௨ஊ

இந்து ஒருவரின் முன்னிலையில் தாழ்த்தப்பட்டவர் கட்டிலில் அமர்ந்திருந்தால் அவருக்கு என்ன நேரிடும் என்

படிப்பகம்

www.padippakam.com



பதைப் பின்வரும் நிகழ்ச்சியிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பச்கா கிராமத்தைச் சேர்ந்த நந்தாராமும், மங்களி பிரசாத்தும் ஒரு மதச் சடங்கிற்குத் தங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் அழைத்திருந்தனர். விருந்தினர்கள் கட்டிலில் அமர்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தனர் அப்பொழுது அக்கிராம சமீன்தார்களான தாக்கூர் சூரஜ் பக்சிங்கும், ஹர்பல் சிங்கும் அங்கு வந்திருந்தனர். கட்டிலில் அமர்ந்து புகை பிடிப்பவர்கள் யார் என அவர்கள் நந்தாராமையும், மங்களி பிரசாத்தையும் கேட்டனர். அதற்கு அவர்கள் இவர்கள் எங்களின் நண்பர்களும் உறவினர்களும் ஆவர் எனப் பதிலளித்தனர். தாக்கூர்கள் மட்டும்தான் கட்டிலில் அமர வேண்டுமா? — என அவர்கள் திருப்பிக் கேட்டனர் இதனால் கோபமடைந்த அந்த சமீன் சகோதரர்கள் விருந்தினர்களைக் கடுமையாக அடித்துவிட்டனர். இதில் ஒரு ஆணும், பெண்ணும் உணர்விழந்தனர்; ஏனையோர் காயமடைந்தனர். (ஜீவன், ஜூலை 1938).

எ

தாழ்த்தப்பட்டவர்களும் இந்துக்களே. இவர்களும் சம உரிமைகள் கொண்ட குடிமக்களே. ஆனால் நடப்புச் சமூக அமைப்பின் விதிகளுக்கு முரணான உரிமைகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் கோர முடியாது.

உதாரணமாக, விடுதிகளில் தங்குவதற்கு தாழ்த்தப்பட்டவர்கள் அறைகள் கோர முடியாது. விடுதிகள் அனைவருக்கும் பொதுவானது என்ற போதிலும் இது முடியாது. பெடிகார் பகுதியைச் சேர்ந்த கண்கெயாலால் ஜாதவ் என்பவரின் அனுபவத்தை 'ஜீவன், ஆகஸ்ட் 1938' பிரசுரித்திருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



"நான் ஆகஸ்ட் 15—1938 அலகாபாத் இரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள தர்மசாலாவில் தங்கச் சென்றிருந்தேன். அறை எடுப்பதில் எந்தச் சிரமும் இல்லை ரு. 1 முன்பணம் கட்டியவுடன் கட்டில் ஒன்றைத் தந்தனர். ஆனால் இரவு 11 மணியளவில் அறை எடுத்தவர்கள் தர்மசாலா மேலாளரிடம் தங்கள் முகவரிகளைக் கொடுக்கச் சென்றனர். எனது முகவரியில் என் சாதி ஜாதவ் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கண்ணுற்ற மேலாளர் கடும்கோபமுற்று, தர்மசாலா என்பது கீழ்ச்சாதியினர் தங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல, உடனே அறையைக் காலி செய்ய வேண்டும் எனச் சொன்னார் தர்மசாலா விதிகளின்படி, இந்த விடுதி இந்துக்களுக்கு மட்டுமே உரியது, தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிக்க எந்தத் தடையும் இல்லை என நான் எடுத்துக்காட்டினேன். நான் இந்து அல்ல என்பதால்தான் என்னை வெளியேறச் சொல்கிறீர்களா என்றும் கேட்டேன். நான் பருக்தா பாத் பகுதியைச் சேர்ந்தவன், எனக்கு அலகாபாத்தில் தெரிந்தவர் யாரும் கிடையாது. ஆகவே 11 மணிக்குப் பின் நான் எங்கு தங்குவேன் என அவரிடம் மன்றாடினேன். இதைக்கேட்ட மேலாளர் கோபமடைந்து இராமாயணத்திலிருந்து ஒரு பழமொழியைச் சொல்லிக் காட்டினார். (முட்டாள் சூத்திரர்கள், கால்நடைகள், பெண்கள் ஆகிய அனைவரும் உதை வாங்கத் தகுதியானவர்கள்.) நீ ஒரு கீழ்ச்சாதிக்காரனாக இருந்தும், எனக்கு விதிகளையும், சட்டத்தையும் துணிச்சலாக விளக்கிக் காட்டுகிறாயா? உதை வாங்காமல் இடத்தைக் காலி செய்யமாட்டாய் போலிருக்கிறது எனச் சொன்னார். உடனே திடீரென எனது படுக்கையையும் மற்ற பொருட்களையும் வெளியில் வீசிவிட்டார். எல்லோரும் என்னை அடிக்கத் தயாரானார்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையில் நான் உடனே விடுதியை விட்டு அகன்று, பக்கத்தில் உள்ள கடையின் அருகில் இருந்த மரத்தின் மீது அமர்ந்தேன். அந்த இரவு தங்குவதற்காகக் கடைக்-

படிப்பகம்

www.padippakam.com



காரருக்கு 2 அணா வாடகை தந்தேன். ஆகவே நான் எனது தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்குச் சொல்லிக் கொள்வது என்னவென்றால், அங்கங்கே கூட்டங்கள் நடத்தி, நமது மக்களுக்குத் தனி விடுதிகளைக் கட்டித் தரும்படி அரசாங்கத்தை வேண்டிக் கொள்ளவேண்டும் அல்லது தற்போதுள்ள விடுதிகளில் எல்லோரையும் அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும்.''

ஏ

நடப்புச் சமூக அமைப்பில் இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்துவது, தோட்டி வேலை ஆகிய பணிகள் இந்துக்களின் கௌரவத்திற்குக் கீழான செயல்கள் ஆகும். இவ்வேலைகளைத் தாழ்த்தப்பட்டவர்கள்தான் செய்ய வேண்டும். தங்கள் கௌரவத்திற்கு இவ்வேலைகள் அவமானத்தைத் தருகின்றன என்ற சிந்தனை தாழ்த்தப் பட்டவர்களிடையே எழ ஆரம்பித்துவிட்டது அதனால் அவர்கள் இவ்வேலைகளைச் செய்ய மறுக்கின்றனர். ஆயினும், தாழ்த்தப்பட்டவர்களின் விருப்பத்திற்குமாறாக இவ்வேலைகளைச் செய்யும்படி இந்துக்கள் அவர்களைக் கட்டாயப்படுத்துகின்றனர்.

மே 1938, ஒரு நாள் அலிகார் மாவட்டத்திலுள்ள பிபோலி கிராமத்தைச் சார்ந்த பாஜ்ஜி ராம் ஜாதவ் என்பவர் தன் வீட்டில் உட்கார்ந்திருந்தார். காலை 11 மணியளவில் பிரிதிக், கோடல், சீதாராம், தேவு, அனி ஆகிய பார்ப்பனர்கள் கைகளில் தடிகளோடு வந்து, இறந்த கால்நடையை அப்புறப்படுத்தும்படி அவரைக் கட்டாயப் படுத்தினர். அதற்கு அவர் தனக்கு அவ்வேலை செய்து பழக்கமில்லை என்றும, அவ்வேலைசெய்கிறவர்கள் யாரை யாவது அழைத்துச் செல்லும்படியும் கேட்டுக்கொண்

www.padippakam.com



டார். அதற்காக அவர் இரக்கமின்றித் தாக்கப்பட்டார் (ஜீவன், ஜூன் 1938).

இதே பத்திரிக்கை 1938 அக்டோபர் இதழில் பின் வரும் நிகழ்ச்சியைத் தந்திருக்கிறது.

''முட்ரா மாவட்டத்தில் உள்ள சதாபாத் வட்டத்தைச் சேர்ந்த லாட்கரி கிராமத்தில் 1938 அக்டோபர் 24 அன்று ஒரு பார்ப்பானின் கால்நடைகள் சில இறந்து போயின; இதனை அப்புறப்படுத்தும்படி அக்கிராமத் தாழ்த்தப்பட்ட சாதி மக்களிடம் சொல்லப்பட்டது. அதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர். இதனால் கோபமடைந்த சாதி இந்துக்கள் குளிப்பதற்கோ அல்லது கால்நடைகளை மேய்ப்பதற்கோ தங்கள் நிலங்களுக்குச் செல்லக்கூடாது எனத் தாழ்ந்த சாதி மக்களை எச்சரித்தனர்.

ஐ

தாழ்த்தப்பட்டவர்கள் ஒழுங்கான ஆடைகளை அணியக்கூடாது, தங்கம், வெள்ளி அணிகலன்களை அணியக் கூடாது. இந்த விதிகளை அம்மக்கள் மீறினால், உடனே இந்துக்கள் அதை ஒழுங்குபடுத்தத் தயங்கமாட்டார்கள். இவ்விதிகளை மீறும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைப் பத்திரிகையில் காணும் பின்வரும் நிகழ்ச்சிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்

''1922 வரை பந்தி மாவட்டத்திலுள்ள பெரர் கிராமத் தாழ்த்தப்பட்ட சாதியினர் கோதுமை உண்பது தடை செய்யப்பட்டிருந்தது. 1922 பிப்ரவரியில் ஒரு சாமர் சாதிப்பெண் ஙநய உதைக்கப்பட்டார். அப்பெண் தன் கால்களில் வெள்ளி ஆபரணம் அணிந்ததே இதற்குக்

படிப்பகம்

www.padippakam.com



காரணம். மேல்சாதி ஆண்கள் மட்டுமே வெள்ளி அணிய வேண்டும்; கோதுமை உண்ணவேண்டும் என இதற்குக் காரணம் கூறப்பட்டது. கீழ்ச்சாதியினர் இதன்மீது விருப்பம் கொண்டு அதனை அடைய முயலக்கூடாது. இம்மாதிரியான பழமையான கருத்துகள் இப்பொழுதெல்லாம் ஒழிந்துவிட்டது. என்றே நாம் இதுவரை எண்ணி வந்தோம்.''

மத்திய இந்தியாவைச் சேர்ந்த பலாய்ஸ் என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் சுத்தமான ஆடைகளையும், தங்க ஆபரணங்களையும் அணிய விரும்பியதால் அவர்கள் மீது ஏவப்பட்ட கொடுமைகளையும், ஒடுக்குமுறைகளையும் பற்றி 'டைம்ஸ் ஆப் இந்தியா' (ஜனவரி 4, 1928) கூறுகிறது.

''மே மாதம் (1927) இந்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கனாரியா, பிக்கோலி கப்சி, பிக்கோலி மர்டனா முதலிய 15 கிராமங்களைச் சேர்ந்த உயர்சாதி இந்துக்கள் (ராசபுத்திரர்கள், பார்ப்பனர்கள், பட்டேல்கள், பட்வாரிகள் முதலியோர்) பலாய் சாதி மக்கள் (தாழ்த்தப்பட்டோர்) தங்களுடன் சேர்ந்து வாழவேண்டுமாயின் பின்வரும் விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவித்தனர்.

1) தங்கச் சரிகை கொண்ட தலைப்பாகை அணியக் கூடாது.

2) வண்ணக்கரை கொண்ட அல்லது கவர்ச்சியூட்டும் கரை கொண்ட துணிகளை அணியக்கூடாது.

3) இந்துக்களின் வீடுகளில் ஏற்படும் மரணச் செய்திகளை அந்த இந்துவின் உறவினர்களுக்கு அவர்கள் எவ்வளவு தொலைவில் இருந்தபோதிலும் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



4) இந்துக்களின் திருமணங்களின்போதும், திருமண ஊர்வலங்களின் போதும், பலாய் சாதியினர் மேளம் அடிக்க வேண்டும்.

5) பலாய் சாதிப் பெண்கள் கவர்ச்சியூட்டும் கவுன்களை அணியக்கூடாது.

6) இந்துப் பெண்களின் பிரசவ வேலைகளைப் பலாய் சாதிப் பெண்கள் கவனித்துக்கொள்ள வேண்டும்.

7) பலாய் சாதியினர் எவ்விதக் கூலியும் கேட்காமல் இந்துக்களுக்கு ஊழியம் புரியவேண்டும்.

இந்த விதிகளுக்குப் பலாய் சாதியினர் உடன்பட மறுத்தனர்.

''ஆகவே இந்துக்கள் பின்வரும் எதிர் நடவடிக்கைகளை எடுத்தனர். கிராமக் கிணறுகளிலிருந்து பலாய் சாதியினருக்கு நீரெடுக்க அனுமதி மறுக்கப்பட்டது. அவர்கள் தங்கள் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்ப அனுமதி மறுக்கப்பட்டது. இந்துக்களுக்குச் சொந்தமான பாதைகளில் செல்ல அவர்களுக்குத தடை போடப்பட்டது. அதனால் பலாய் சாதியினரின் நிலம் இந்துக்களின் நிலங்களின் நடுவே இருந்ததால் அவர்கள் தங்கள் நிலத்தைப் பயிரிடமுடியாமல் போனது. பலாய் சாதியினர் நிலங்களில் இந்துக்கள் தங்கள் கால்நடைகளை மேயவிட்டனர்.''

''இக்கொடுமைகளுக்கு எதிராக விண்ணப்பம் ஒன்றை இந்து தர்பாரிடம் பலாய் சாதியினர் கொடுத்தனர். ஆனால் உடனடியாக இதற்கு உதவி கிட்டவில்லை. அடக்குமுறைகள் தொடர்ந்தன. நூற்றுக்கணக்கான பலாய் சாதியினர் தங்கள் மனைவி குழந்தைகளோடு

படிப்பகம்

www.padippakam.com



தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த தங்கள் சொந்த வீடுகளை விட்டுப் பக்கத்து மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்தனர். சில நாட்களுக்கு முன்பு இந்தூர் நகரத்தின் வடக்குப் பகுதியில் இருந்து வெறும் எட்டு கல் தொலைவிலே உள்ள ரோட்டி கிராமத்தைச் சேர்ந்த இந்துக்கள், பலாய் சாதியினருக்கு எதிராக மற்ற கிராம இந்துக்கள் கடைப்பிடித்து வரும் விதிகளில் இவர்களையும் கையெழுத்திடுமாறு ஆணையிட்டனர். பலாய் சாதியினர் அதற்கு மறுத்தனர். இதனால் இந்துக்களால் அவர்கள் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பலாய் சாதியினர் ஒருவரைக் கம்பத்தில் கட்டி வைத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் விடுவிப்பதாகச் சொன்னார்கள். அவர் கையெழுத்திட்ட பின்பே விடுவிக்கப்பட்டார்.''

அடுத்ததாக ஆரிய கெசட்டில் (1928 ஜனவரி 21) இருந்து ஒரு செய்தி:

''அரிசனங்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் பற்றிய செய்திகளை இதுவரை பெரும்பாலும் சென்னை மாகாணத்திலிருந்தே கேட்டு வந்தோம். ஆனால் சிம்லா மலைகளில் இருந்து இம்மாதிரியான கதைகளை இப்போது கேட்க முடிகிறது. இதற்காக அவ்வளவு தொலைவு செல்லத் தேவையில்லை. மாவட்டத்தில் கூலி என்ற ஒரு சாதியினர் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் கடின உழைப்பாளிகள், சற்று வசதியானவர்கள். ஆனால் இந்துக்கள் இவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாகவே கருதி வந்தார்கள். இந்து மதத்தின் பார்வையில் இழிவாகக் கருதப்பட்ட எந்த ஒரு தொழில்களையும் அவர்கள் செய்து வராதபோதிலும், தாழ்த்தப்பட்டவர்களாகவே கருதப்பட்டார்கள். இச்சாதியினர் வசதியானவர்கள் மட்டுமல்ல; புத்திசாலிகளுங்கூட. ஏறத்தாழ சிம்லா மலைப்பகுதியில் பாடப்பட்டு வரும்



படிப்பகம்

www.padippakam.com



அனைத்துப் பாடல்களும் இவர்களால் உருவாக்கப் பட்டவைதான். இம்மக்கள் நாள் முழுவதும் கடுமையாக உழைப்பவர்கள். அளவுக்கு அதிகமாகப் பார்ப்பனர் களுக்கு மரியாதை தருபவர்கள். இருந்த போதிலும் ஒரு பார்ப்பனனின் வீட்டுப் பக்கம் கூடச் செல்லமுடியாது. இவர்கள் குழந்தைகள் பள்ளிகளுக்குச் சென்று படிக்க முடியாது. பர்ணசாலைகளுக்கும் (மதப் பள்ளிகள்) சென்று படிக்க முடியாது. இச்சாதியைச் சேர்ந்த பெண்கள் தங்க ஆபரணங்களை அணியமுடியாது. இச் சாதியினர் சிலர் பஞ்சாபிற்குச் சென்று அங்குப் பணம் சம்பாதித்து அதன்மூலம் தங்க ஆபரணங்களை வாங்கி இருந்தனர். ஆனால் அதனை அவர்கள் தங்கள் கிராமத் திற்குக் கொண்டு வந்தபோது சிறையில் அடைக்கப் பட்டனர். அரசாங்க அதிகாரிகள் கைகளில் இந்த ஆபரணங்கள் ஒப்படைக்கப்பட்ட பின்பே அவர்கள் விடு விக்கப்பட்டனர்.''

பின்வரும் கடிதம் ''பிரதாப்பில்'' (ஜூன் 23– 1926) வெளியாகி இருந்தது.

சுவாமி இராமநன்ஜி சன்னியாசி எழுதுகிறார்:

''1926 மார்ச் 23ஆம் தேதி மாலை நேரத்தில் ஒரு சாமர் சாதிக்காரர் என்னிடம் வந்தார். இவர் மிக அண்மையில் ஜாட்டுகளின் காவலில் இருந்து தப்பித்து வந்தவர். குர்கான் மாவட்டத்தில் உள்ளபரிதாபாத்திற்குப் பக்கத்திலுள்ள ஹெறி கிராமத்தில் தன் சாதியினர் அனுபவித்துவரும் இன்னல்களை இவர் எனக்குக் கூறினார்.

''மார்ச் 24 காலையில் நான் நேரில் உண்மைகளைக் கண்டறிய அங்குச் சென்றேன். எனது விசாரணையின் முடிவுகளைச் சுருக்கமாகக் கீழே தந்துள்ளேன்.

படிப்பகம்

www.padippakam.com



"மார்ச் 5ஆம் தேதியன்று கோர்க்கி என்ற ஒரு சாமரின் மகள் திருமணம் நடைபெற்றது இச்சாமர் ஓப்பீட்டளவில் வசதிபடைத்தவராக இருந்தார் ஆகவே உயர்சாதியினரைப் போலவே தன் விருந்தினர்களையும் இவர் உபசரித்தார். இதற்கும் மேலாகத் தன் மகளுக்கு மூன்று தங்க ஆபரணங்களையும் தந்தார். இச்செய்திகள் ஜாட்டுகளிடையே பரவியது. விரிவாக விவாதிக்கப் பட்டது. கீழ்ச்சாதியினர் தங்களோடு போட்டியிட முயற்சிப்பதால் தாங்கள் அவமதிக்கப்பட்டதாக மேல்சாதியினர் முடிவு செய்தனர். மார்ச் 20 வரை அசம்பாவிதச் சம்பவங்கள் ஏதும் நடைபெறவில்லை. ஆனால் 21ஆம் தேதி காலையில் இப்பிரச்சினை பற்றி விவாதிக்கக் கிராம பஞ்சாயத்து கூட்டப்பட்டது இந்தநேரத்தில் சாமர்களில் ஒரு பெரும்பகுதியினர்—சிறுவர், சிறுமியர், பெண்கள்—தங்கள் அன்றாட வேலையின் காரணமாகப் பரிதாபாத்திற்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தனர். இவர்கள் தர்மசலா என்ற இடம் வரைதான் சென்று இருப்பார்கள். அதற்குள்ளாகவே ஜாட் சாதியினர் தாக்க ஆரம்பித்து விட்டார்கள். அனைத்துச் சாமர் சாதி ஆண்களும் கடுமையாக உதைக்கப்பட்டார்கள். பெண்களைச் செருப்பால் அடித்தார்கள். சிலரின் முதுகு பிய்ந்துபோனது. சிலரின் கைகள் முறிந்துபோயின. இவர்களின் கருவிகள் கூட நாசமாக்கப்பட்டன. அவ்வழியாக ஒரு முஸ்லீம் வந்தார். அவரையும்கூட ஜாட்டுகள் பிடித்துக்கொண்டனர். அவர் அணிந்திருந்த தங்க கடுக்கன்களையும், அவரிடமிருந்த 28 ரூபாயையும் பறித்துக் கொண்டனர். மார்ச் 22ஆம் தேதியன்று சில ஜாட்டுகள் சாமர்களின் நிலங்களுக்குச் சென்று அதிலுள்ள பயிர்களை நாசம் செய்தனர். இவ்வாறு நாசம் செய்யப்பட்ட பயிர்களின் மதிப்பு ரூ. 1000 என மதிப்பிடப்படுகிறது. இச்சமயத்தில் கோரி என்பவரின் மகனான நன்வா என்பவர் நிலத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். ஜாட்டுகள் அவருக்கும் கடுமை

படிப்பகம்

www.padippakam.com



யாக உதை தந்தனர். 22 மார்ச் அன்று மீண்டும் சில ஜாட்டுகள் மண்ணெண்ணெய்க்குள் ஊறிய தீப்பந்தங்களை ஏந்திச் சாமர்களின் வீடுகளுக்குத் தீ வைக்கும் நோக்கத்தோடு சென்றுகொண்டிருந்தனர். ஆனால் திரும்பிவிட்டனர். மார்ச் 23ஆம் தேதியன்று நடு இரவில் மேலே கூறப்பட்ட மணப்பெண்ணின் பாட்டனார் வீட்டிற்குத் தீ வைக்கப்பட்டது. அவ்வீடு இப்பொழுது சாம்பல் குவியலாகிவிட்டது. அவ்வீட்டில் செருப்புத் தைக்க தயார்நிலையில் இருந்த தோல்கள் எரிந்துவிட்டன. அதன் மதிப்பு 90 ரூபாய். ஏனைய வீட்டுச் சாமான்களும் தீயில் பொசுக்கப்பட்டன. இப்பொழுது அங்குக் காணப்படும் பொதுவான சூழ்நிலை என்னவென்றால் ஜாட்டுகள் நகரத்தைச் சூழ்ந்து இருக்கிறார்கள். ஒரு சாமரும்கூட வெளியில் செல்ல அனுமதிக்கப்படவில்லை. பணியாக்களும்கூட ஜாட்டுகளுக்கு அஞ்சி சாமர்களுக்குப் பொருட்களை விற்க மறுக்கின்றனர். மூன்று நாட்களாகச் சாமர்களும் அவர்களின் கால்நடைகளும் பசியால் வாடிக் கொண்டிருக்கின்றன.''

பின்வரும் செய்தி மிகச் சமீபத்தில் மலபார் பகுதியில் நடைபெற்றது. 1945 ஜூன் 5 அன்று சட்டமன்ற உறுப்பினரான திரு. கே. கண்ணன் தலைமையில் முதலாவது சிராக்கள் வட்ட அரிசன மாநாடு மலபாரில் உள்ள செருக்கன் என்ற இடத்தில் நடைபெற்றது. அம் மாநாட்டுத் தீர்மானத்தில் இருந்து இந்நிகழ்ச்சியைப் பற்றிய செய்தி வெளியானது

''மலபார் பகுதித் தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கு எதிராக இந்துக்களும் முஸ்லிம்களும் கிறித்துவர்களும் நடத்தி வரும் மனிதாபிமானமற்ற கொடுமைகளை அரசாங்கத்தின் உடனடிக் கவனத்திற்கும் பொதுமக்களின் கவனத்திற்கும் கொண்டுவர இம்மாநாடு எண்ணுகிறது. குறிப்

படிப்பகம்

www.padippakam.com



பாகப் பொன்னானி வட்டத்தைச் சேர்ந்த நாட்டிகா பிர்கா பகுதியில் உள்ள அரிசனங்கள் தங்க ஆபரணங்களையும் தூய ஆடைகளையும் அணிய முயற்சிப்பதை எதிர்த்து அன்றாடம் கடுமையான முறையில் கொடுமையாக வேட்டையாடப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

"இதற்கும் மேலாக ஒரு அரிசனத் திருமணக் கூட்டம் செல்லும் வழியில் தடுத்து நிறுத்தப்பட்டது. அரிசன ஆண்களின் சட்டைகளும் பெண்களின் சேலைகளும் பலவந்தமாகக் கிழித்தெறியப்பட்டன. மே 27 ஆம் தேதியன்று வதனப்பள்ளி என்ற இடத்தினருகே ஒரு அரிசன மாணவர் கொடூரமாகத் தாக்கப்பட்டார். திருவாளர்கள் சி.எஸ். கோபாலன், எம். எஸ். சங்கரநாராயணன், இராம கிருஷ்ண வைத்தியர் ஆகியோர் தலைமையில் முற்போக்கான இளைஞர்கள் அரிசனங்களுக்கு உதவ எடுத்து வரும் பெரும் முயற்சிகளுக்கு இம்மாநாடு நன்றி செலுத்துகிறது. ஆனால் அதே சமயத்தில் உள்ளூர் அதிகாரிகள் குறிப்பாக காவல்துறை அதிகாரிகள் பாதுக்கப்பட்ட அரிசனங்களுக்கு உடனடிப் பாதுகாப்பு தராமல் அவர்களிடம் காழ்ப்புணர்வோடு நடந்து கொள்வதை இம்மாநாடு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

"மேலே குறிப்பிட்ட அனைத்து ஒடுக்குமுறை நிகழ்ச்சிகளிலும் அரிசனங்கள் காவல்துறையிடமிருந்து பாதுகாப்பையோ நியாயத்தையோ பெற முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட இம்மாநாடு விரும்புகிறது. இந்தக் கொடுமைகளுக்கு எதராகச சாட்சி சொல்லவந்த ஏழை அரிசனங்களைக் காவல்துறை தாக்கியதற்கான எடுத்துக்காட்டுகள் பல இரக்கின்றன. இம்மாதிரியான நிகழ்ச்சிகள் மலபார் பகுதி அரிசனங்களை மிகத் துயரமான நிலைக்குக் கொண்டு சென்று இருக்கிறது. இச்சூழ்

படிப்பகம்

www.padippakam.com



நிலை அப்படியே நீடித்தால் சாதிய விலங்குகளையும் பொருளாதாரச் சுரண்டலையும் உடைத்தெறிந்த முற்போக்கான அரிசனங்களின் வாழ்க்கையும் கூட ஆபத்திற்கு உள்ளாகும் நெருக்கடி தோன்றக்கூடும். ஆகவே இந்திய அரசாங்கத்திற்கும் மரியாதைக்குரிய டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுக்கும் நம் நாட்டிலுள்ள ஏனைய சான்றோர்களுக்கும் இம்மாநாடு ஒரு வேண்டுகோள் விடுக்கிறது. ஒரு சனநாயக நாட்டில் வாழும் சுதந்திரக் குடிமக்களைப் போல அரிசனங்களும் வாழ அனுமதிக்கப்பட வேண்டும். எந்த மக்களாலும் அவர்கள் துன்புறுத்தப்படக்கூடாது. ஏனையோரால் அவர்கள் ஒடுக்கப்பட்டால் அரசு நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு அவர்களைப் பாதுகாக்க வேண்டும்''.

ஓ

தாழ்த்தப்பட்டவர்கள் தங்களிடம் வசதி இருந்த போதிலும் உயர்ரக உணவு வகைகளை உண்ணக்கூடாது. தங்கள் அந்தஸ்திற்கு மீறுவது ஒரு குற்றமாகும்.

''ஜோத்பூர் மாகாணத்தின் சந்தையல் என்ற இடத்தில் அரிசனங்கள் ஹல்வா என்ற உணவினை உண்ண அனுமதி மறுக்கபபட்டிருக்கிறது. சர்குரோஸ் என்ற சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதிகளில் ஒரு பிரிவினர். சில காலங்களுக்கு முன்பு இச்சாதியினர் ஒரு திருமண நிகழ்ச்சியின் போது ஹல்வா உணவினை விருந்திற்காகத் தயார் செய்தனர் இதற்காக தாகூர் சாகிப்பிடம் மைதாமாவை வாங்கி வந்தனர். உணவு வேளையின் போது கண்வர் சாகிப் என்பவர் ஹல்வா உணவை உண்ணக்கூடாது என ஆணை பிறப்பித்தார். நத்திப்பிழைப்போர் சிலர் கண்வர் சாகிப்புடன் ஒரு சமரச ஏற்பாடு செய்து கொண்டனர்,

படிப்பகம்

www.padippakam.com



அதன்படி அவருக்கு ரூ. 200/-பணம் தந்துவிட வேண்டும். அவர் ஹல்வாவை உண்ண அனுமதித்து விடுவார். இந்தச் சமரச ஏற்பாடு சர்குரோஸ் சாதியினரிடையே கோபத்தைத் தூண்டியது. அவர்கள் பணம் தர மறுத்தனர்". (பிரதாப், பிப்ரவரி.26—1928)

௫

கிராமத்தின் முக்கிய வீதிகளில் திருமண ஊர்வலங்களை நடத்துவது ஒவ்வொரு சாதி இந்துவின் உரிமையாகும். இந்த உரிமையைக் கொண்டுள்ள ஒரு சாதி மரியாதைக்குரிய சாதியாகக் கருதப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு அம்மாதிரியான உரிமைகள் ஏதும் கிடையாது. ஆனால் தங்கள் சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள தாழ்த்தப்பட்டவர்களும் கிராம முக்கிய வீதிகளில் திருமண ஊர்வலம் நடத்தும் உரிமைக்காக முயற்சித்தனர். பின்வரும் நிகழ்ச்சி இம்முயற்சிகளுக்கு இந்துக்கள் காட்டிய எதிர்வினையை எடுத்துக்காட்டுகிறது.

''பெங்களூர் 27, மே—1927: ஏழு பார்ப்பனர்கள் நூறு ரூபாய் அபராதத் தொகை கட்டும்படி முதல் வகுப்பு நீதிபதியால் தண்டிக்கப்பட்டனர். காரணம் பார்ப்பனர்கள் வசிக்கும் மல்கோட் என்ற சாலை வழியாகத் தாழ்த்தப்பட்ட சாதியினரான பறையர்கள் ஊர்வலம் வந்ததை இவர்கள் பொறுப்பற்ற முறையில் தாக்கினர்'' (ஆதி இந்து, ஜூலை—1927).

''கார்வால் மாவட்டத்தைச் சேர்ந்த ஹர்கோன் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் திருமண ஊர்வலம் வருவதையும் மணப்பெண் பல்லக்கில் அமர்ந்து வருவதையும் கேள்விப்பட்ட மேல்சாதி இந்துக்கள் பெரும் எண்ணிக்கையில் அணி திரண்டு ஊர்வலத்தைச் சூழ்ந்து

படிப்பகம்

www.padippakam.com



கடுமையாகத் தாக்கினர். அத்திருமணக் கூட்டத்தை உண்ண உணவு ஏதுமின்றி இருபத்து நான்கு மணி நேரக் காவலில் வைத்து இருந்தனர். இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து காவல்துறை உதவியோடு இவர்கள் தப்பிக்க முடிந்தது'' (பிரதாப், அக்டோபர் 25—1931).

''தில்லிக்குப் பக்கத்தில் மணப்பெண்ணைப் பல்லக்கில் தாங்கி ஒரு திருமண ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. மேல்சாதி இந்துக்கள் இதைத் தங்களுக்கு இழைக்கப்பட்ட அவமானமாகக் கருதி அத்திருமணக் கூட்டத்தை இரண்டு நாட்கள் சிறைவைத்தனர். அவர்களுக்கு உண்ண உணவோ, குடிக்க நீரோ தரவில்லை. இறுதியாகக் காவல்துறை இக்கொடுங்கோலர்களைக் கைது செய்து திருமணக் கூட்டத்தை விடுவித்தது''. (''சத்தியசம்வாத்'' லாகூர், நவம்பர் 3—1931)

(1) ''செவ்ரா கிராமத்திலுள்ள கோலா சாதியினர் (பூர்வதாக்கர்கள்) தங்களைக் காங்கிரஸ்காரர்கள் என்று அகந்தையோடு சொல்லிக் கொள்பவர்கள். இவர்கள் தங்கள் கிராமத்தைச் சேர்ந்த அப்பாவி ஜாதவ் சாதியினரைக் கொடூரமாக ஆயுதங்களால் தாக்கினர். அதில் ஐவர் கைகால்களும் விலா எலும்புகளும் உடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். பன்சி என்பவரின் மண்டையோடு கடுமையாக உடைந்து மயங்கிய நிலையில் இருந்து வருகிறார். ஒரு திருமண ஊர்வலம் அக்கிரமத்திற்கு வந்ததும், மணமகன் கிரீடம் அணிந்திருந்ததுமே இவை அனைத்திற்கும் காரணமாகும். மேல்சாதி தாக்கர்கள் இதை ஒரு குற்றமாகக் கருதி அத்திருமண ஊர்வலத்தைத் தாக்கினர். ஆனால் திருமணக் கூட்டத்தின் எண்ணிக்கை வலிமையின் காரணமாகத் தாக்குதலை அரைகுறையாக் கைவிட்டு விட்டனர். சமீன்தார் பகுதிக்குள் திருமண ஊர்வலத்தை

www.padippakam.com



அவமதித்ததே போதும் என்ற திருப்தியோடு நின்று கொண்டனர்.''

(2) ''ஆக்ரா மாவட்டத்தைச் சேர்ந்த தூராகிரத்திலுள்ள மோதிராம் ஜாதவ் என்பவர் வீட்டிற்கு ராம்பூர் கிராமத்திலிருந்து ஒரு திருமணக் கூட்டம் வருகை புரிந்தது. மணமகன் மின்னும் கிரீடத்தைச் சூட்டியிருந்ததோடு; இசைக்குழுவும் வாண வேடிக்கையும் திருமண ஊர்வலத்தில் பங்கெடுத்தன. திருமண ஊர்வலத்தில் இசைக்குழுவும் வாணவேடிக்கையும் பங்கெடுத்து இருப்பதற்குச் சாதி இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். மோதிராம் இதனை எதிர்த்ததோடு மற்றவர்களைப் போலவே இவர்களும் மனிதர்கள்தான் எனக் கூறினார். இதனால் சாதி இந்துக்கள் மோதிராமைப் பிடித்துக் கடுமையாக உதைத்ததோடு திருமண ஊர்வலத்தையும் தாக்கினார்கள். மோதிராம் தலைப்பாகையில் இருந்த பணத்தையும் பறித்துக் கொண்டனர்.''

(3) ''அலிகார் மாவட்டத்தைச் சார்ந்த சக்கினி காவல் சரகத்திற்கு உட்பட்ட குர்வா கிராமத்திலுள்ள பிரேம்சிங் கிர்வர்சிங் என்ற ஜாதவ் சாதியினர் வீட்டிற்கு ஒரு திருமண ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. 'இசைக்குழு நிறுத்தப்படவில்லையென்றால் மேலும் ஊர்வலம் செல்ல அனுமதிக்கப்படாது' எனச் சாதி இந்துக்கள் தடுத்து நிறுத்தினர். 'இசை நிறுத்தப்படவில்லையென்றால் ஊர்வலத்தினர் கொல்லப்படுவார்கள்' என அச்சுறுத்தப்பட்டனர். திருமண ஊர்வலத்தில் இசைக்குழு இருப்பதைக் கண்டு சாதி இந்துக்கள் கோபத்திற்கு உள்ளாயினர். திருமண ஊர்வலத்தினர் இசையை நிறுத்த மறுத்ததால் சாதி இந்துக்கள் மேலும் கோபமடைந்து ஊர்வலத்தினர் மீது கற்களையும் செங்கற்களையும் வீசினர்.'' (ஜீவன், ஜூன்—1938; ஒரு இந்து பத்திரிகை).

www.padippakam.com



இதே பிரச்சினை குறித்த வேறொரு நிகழ்ச்சியை "இந்துஸ்தான் டைம்ஸ்" (மார்ச் 24, 1945) வெளியிட்டுள்ளது.

"மால்தன்கு கிராமத்திலுள்ள மணமகள் இல்லத்தை நோக்கித் தன்ரி கிராமத்திலிருந்து ஒரு திருமணக் கூட்டம் மணமகனைப் "பல்கி"யில் ஊர்வலமாக அழைத்துச் சென்றுகொண்டிருந்தது, மால்தன்கு பட்வாரியின் முகவர் (ஏஜண்ட்) என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட ஒரு நபர், சாதி இந்துக்களின் இடையூறைத் தவிர்க்க ஊர்வலத்தை வேறுவழியில் செல்லும்படி ஆலோசனை கூறினார்.

"அதன்படி ஊர்வலம் ஒரு காட்டுவழியே சென்றது. அவ்வூர்வலம் ஒரு தனிமையான இடத்தை அடைந்த போது, ஒரு சீழ்க்கை ஒலி எழும்பியது. உடனே 200 சாதி இந்துக்கள் திரண்டு ஊர்வலத்தைத் தாக்கி "பல்கி"யை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

"மணமகள் இல்லத்திற்கு அந்தத் திருமணக்கூட்டம் 2 நாட்கள் தாமதித்தே சென்றது. மாவட்டத் துணை நீதிபதி முன்னிலையில் அத்திருமணம் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. நீதிபதி காவல்துறையை அழைத்து வந்திருந்தார்.

"இது தொடர்பாக அந்தப் பட்வாரி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்."

"சிவில் அன் மிலிடரி கெசட் ஆப் லாகூர்" என்ற பத்திரிகை ஜூன் 24. 1945 அன்று தன் இதழில் வெளியிட்டிருப்பதாவது:

"கோடாரி, தடி, ஈட்டி முதலிய ஆயுதங்களைத் தாங்கிய இராசபுத்திரக் கும்பலொன்று குவாலியர் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு கிராம அரிசனர்களைத்

படிப்பகம்

www.padippakam.com



தாக்கியுள்ளது. ஒரு நபர் கொல்லப்பட்டார். நான்கு பேருக்குக் கடுமையான காயங்கள்.''

''குவாலியர் அரசவைக்கு அடுத்த வாரிசு நியமிக்கப் பட்ட நிகழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் சில தினங் களுக்கு முன் அரிசனங்கள் ஊர்வலம் ஒன்றை நடத்தி யிருந்தனர். அதிலிருந்தே இராசபுத்திரர்களுக்கும் அரிசனங்களுக்கும் இடையே பகைமை இருந்து வந்திருக் கிறது. இராசபுத்திரர்கள் ஊர்வலத்திற்குக் கடும் எதிர்ப்புக் காட்டினர். அவர்கள் கருத்துப்படி அரிசனங் களுக்கு இம்மாதிரியான விழாக்களைக் கொண்டாட உரிமையில்லை.

''அரிசனங்களுக்கும் சம உரிமையைத் தரும் அறிவிப்பு ஒன்று மகாராஜாவால் சென்ற மாதம் வெளியிடப் பட்டது.''

இந்துக்களின் நடத்தைகளையும் வழிகளையும் தாழ்த்தப்பட்டவர்களும் அப்படியே பின்பற்ற முயற்சித் ததை இந்துக்கள் எப்படி வன்முறையால் தாக்கினர் என்பதைச் சில நிகழ்ச்சிகள் மூலம் இங்குப் பார்க்கலாம். பின்வரும் செய்தி ''பம்பாய் சமாச்சார்'' (நவம்பர் 4, 1936) இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

''உட்டபாலம் (மலபார் பகுதி) என்ற இடத்தைச் சேர்ந்த ஈழவ சாதி இளைஞரான 17 வயது சிவராமன், சாதி இநதுவின் கடைக்கு உப்பு வாங்கச் சென்றார். மலையாள மொழியில் ''உப்பு'' எனக் கேட்டார். மலபார் பகுதியில் அங்குள்ள வழக்கத்தின்படி சாதி இந்துக்கள் மட்டுமே உப்புவைக் குறிக்க ''உப்பு'' என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும். இவர் ஒரு அரிசனன் என்பதால் புலி சாதன் (Pulichatan) என்ற சொல்லையே பயன் படுத்தவேண்டும். இதனால் ஆத்திரமுற்ற அந்த மேல்

www.padippakam.com



சாதி வியாபாரி, அவரைக் கடுமையாகச் சவுக்கால் அடித்தார். அதனால் அந்த இளைஞர் இறந்துபோனதாகச் சொல்லப்படுகிறது.''

பின்வரும் நிகழ்ச்சிகள் ''சமதா''விலிருந்து எடுக்கப்பட்டவை :— 1) ''கத்தி (பூனா மாவட்டம்) பகுதி மக்கள் தாழ்த்தப்பட்டவர்களைக் கொடுமைப்படுத்தி வருகின்றனர். தாழ்த்தப்பட்டவர்கள் ''ராம், ராம் வணக்கம்'' எனச் சொல்லத் தொடங்கியதே இதற்குக் காரணம். அறிமுகம் இல்லாதவர்களைப் பார்த்து இவ்வாறு சொல்வது மேல்சாதியினரின் உரிமையாகும். மகர்கள் ஜோகர் என்றோ பயாலகு (உங்கள் காலடிகளை வணங்குகிறேன்) என்றோ தான் சொல்லவேண்டும்.''

2) ''டானு பகுதி (பூனா மாவட்டம்) தாழ்த்தப்பட்டவர்கள் தங்களைத் ''தீண்டத் தகுந்த இந்து மக்களைப் போல்'' கருதி நடக்க முயற்சித்தனர். இந்தத் துடுக்குத்தனமான நடவடிக்கையின் விளைவு எண்ணற்றோர் கிராமத்தைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று. ஒரு சிலர் பாட்டா பகுதிக்கு இடம் பெயர்ந்துவிட்டனர்.''

3) ''வாலாபர் பகுதி (சோயாப்பூர் மாவட்டம்) மகர்கள் தாழ்த்தப்படாதவர்களைப் பார்த்து ''சாகிப்'' என்று சொல்ல மறுத்தாலும், 'உங்கள் காலடிகளை வணங்குகிறேன்' எனக் கூறி வணங்க மறுத்தாலும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள்.''

4) ஜம்பாத் பகுதி (சோலாப்பூர் மாவட்டம்) தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் எசமானர்களின் பொழுது போக்கிற்காக ''நாட்ச்'', ''சூமாவ்ரா'' ஆகியவற்றைச் செய்ய மறுத்ததால் சவுக்கால் அடிக்கப்பட்டனர். குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன அல்லது இடிக்கப்பட்டன. கிராமங்களைவிட்டுத் துரத்தப்பட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com



5) பால்டா பகுதி (பூனா மாவட்டம்) தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் சாதிச் சகோதரர்களிடம் மேல்சாதியினர் தரும் மிச்சம் மீதிகளையும், இறந்த விலங்குகளையும் உண்ணவேண்டாம் என்றும், இழிவான தொழில்களைச் செய்யவேண்டாம் என்றும் அறிவுறுத்தினார்கள். இதற்கு அக்கிராமப் பெரியவர்களோ மகர்களிடம் இதுவரை உண்டு வந்தபடியே உண்ணுவதும் இதுவரை செய்துவந்த வேலைகளையே செய்வதும் ''தர்மம்'' எனக் கூறினார்கள். தங்கள் முன்னோர்கள் செய்து வந்த ''குல தர்மத்தை'' பின்பற்ற மறுதத மகர்கள் சவுக்கால் அடிக்கப்பட்டனர். கிராமத்தைவிட்டுத் துரத்தப்படுவார்கள் என எச்சரிக்கப்பட்டனர்.

இந்துச் சமூகத்திற்கு ஊழியம் புரியத்தான் தாழ்த்தப்பட்டவர்கள் பிறப்பெடுத்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் இந்துக்கள் தாழ்த்தப்பட்டவர்களைக் கையாளுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் கடமை இந்துக்களுக்கு ஊழியம் புரிவதே. இந்துக்கள் அழைக்கும் போதெல்லாம் அவர்களுக்கு ஊழியம் புரிய தாழ்த்தப்பட்டவர்கள் மறுக்க முடியாது. தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கட்டளையிடும் ஆணையாளராகவே தங்களைக் கிராம இந்துக்கள் கருதிக் கொள்கிறார்கள். இந்த முறைக்குப் பெகர் அல்லது கட்டாய உழைப்பு என்று பெயர். இந்தக் கட்டாய உழைப்புக்கு அடிபணிய மறுத்ததால் தாழ்த்தப்பட்டவர்கள் ஆபத்தான பின் விளைவுகளைச் சந்திக்க நேர்ந்ததைச் சில காட்டுகள் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

''ஜீவன்'' (டிசம்பர், 1938) பின்வரும் நிகழ்ச்சியை வெளியிட்டிருக்கிறது. ''1938 நவம்பர் 29 அன்று, மட்ரா மாவட்டத்திலுள்ள கோகனா கிராமத்தைச் சேர்ந்த ஜாதவர்களை அக்கிராம ஜாட்டுகளும், பார்ப்பனர்களும்

படிப்பகம்

www.padippakam.com



கடுமையாகக் கொடுமைப் படுத்தினர். கட்டாய உழைப்புக்கு அவர்கள் அடிபணிய மறுத்ததே இதற்குக் காரணம்.

அக்கிராம தாக்கூர்களும், பார்ப்பனர்களும், ஜாதவ் சாதியினரிடமிருந்து கட்டாய உழைப்பைப் பெறுவதைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்தார்கள் இதற்காக அவர்களை அச்சுறுத்தியும் வந்தனர். ஜாதவ் சாதியினரோ, கட்டாய உழைப்பை இனி செய்வதில்லையென்றும் கூலிக்கு மட்டுமே வேலை செய்வது என்றும் தீர்மானித்து விட்டனர். அண்மையில், இக்கிராமத்தில் ஒரு எருது மாண்டு விட்டது. தாக்கூர்களும், ஏனைய ஜாதி இந்துக்களும், இதனை அப்புறப்படுத்தும்படி ஜாதவர்களைக் கட்டாயப் படுத்தினர். இதற்குரிய கூலி கொடுத்தால் மட்டுமே இவ் வேலையைச் செய்யமுடியும் என்று ஜாதவர்கள் சொல்லி விட்டனர். இதனால் சாதி இந்துக்கள் ஆத்திரமுற்றனர். ஜாதவர் கிணற்றில் மலம் வீசும்படியும், அவர்களுக்கு எந்த வேலையும் செய்ய வேண்டாம் என்றும் ஒரு தோட்டிக்குச் சாதி இந்துக்கள் கட்டளையிட்டார்கள். அனைத்து வழிகளிலும் அவர்களைப் பழிவாங்க முடிவு செய்தார்கள். அத்தோட்டி தங்கள் கிணற்றில் மலம் வீசுவதை ஜாதவர்கள் தடுத்துவிட்டனர். உடனே அத் தோட்டி, ஜாதவர்களைத் தாக்க தயாராயிருந்த ஜாட்டுகளையும், தாக்கூர்களையும், பார்ப்பனர்களையும் கூப்பிட்டார். இவர்கள் ஜாதவர்களைத் தடிகளால் தாக்கிக் கடுமையாகக் காயப்படுத்தினர். அவர்கள் வீடுகளுக்குத் தீவைத்தனர். இதனால் 8 வீடுகள் எரிந்து சாம்பலாயின. 18 ஜாதவர்கள் கடுமையாகக் காயமுறறனர். வீட்டுச் சாமான்கள் ரவுடிகளால் சூறையாடப்பட்டன ''

இதே பத்திரிகை தனது பிப்ரவரி 1939 இதழில் கூறியிருப்பதாவது.

''ஆக்ரா மாவட்டத்திலுள்ள அப்கய்புரா ஜாட்டுகள் அக்கிராம வறிய தாழ்த்தப்பட்ட சாதி மக்களிடமிருந்து

படிப்பகம்

www.padippakam.com



கட்டாய உழைப்பைப் பெற்று வந்தனர். அவர்கள் கூலி கேட்டால் உதைத்தனர். 3 மாதங்களுக்கு முன்பு சுக்கி என்ற ஒரு ஜாட், ஜாதன் சாதியைச் சேர்ந்த சுக்ராம், கன்சியாம், கம்கா என்ற மூவரிடம் வேலை வாங்கிய தோடு, அவர்களுக்குக் கூலி கொடுக்கவில்லை. இந்த அடா வடிச் செயலைப் பார்த்து மனம் வெறுத்துப் போன அம் மூவரும், பக்கத்துக் கிராமங்களிலுள்ள தங்கள் உறவினர் கள் வீட்டில் தங்கி வாழ்க்கை நடத்திவருகிறார்கள். இவர் களது வீட்டுப் பொருட்கள் ஜாட்டுகளால் பறிமுதல் செய்யப்பட்டன.

''சவாதீன்'' (ஜூன் 3, 1945) பின்வரும் நிகழ்ச்சியை வெளியிட்டிருக்கிறது.

''மெக்ராஜி கோரி என்ற ஒரு தாழ்த்தப்பட்ட சாதிப் பெண் பிரம்மாசிங், சுலிமான், அப்டேப் என்ற மூன்று காவலர்கள்மீது மாவட்ட நீதிபதியான மெக்பூப் அல மிடம் 376, 341, 354-ஏ என்ற சட்டப் பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். 1945 மே மாதம் 2ஆம் நாளன்று இந்த மூன்று காவலர்களும், சும, சுகர், கல்லுபிபிளின் மகன் ஆகியோரும், வேறு சிலரும் அப் பெண் வீட்டைச் சோதனையிட்டனர். பின் அப்பெண் ணைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இரவு முழுக்க வைத்திருந்தனர். அதிகாலை நேரத்தில் இக்காவ லர்கள் அப்பெண்ணை ஒரு சிறு அறைக்குள் அழைத்துச் சென்றனர். அறையின் கதவைத் தாழிட்டபின் அப் பெண்ணைக் கற்பழித்தனர். மீண்டும் அப்பெண்ணை வேறொரு அறைக்கு அழைத்துச் சென்று அங்கு அப் பெண்ணின் பிறப்புறுப்பில் காகிதக் குப்பைகளைத் திணித்தனர். தங்கள் ஆணுறுப்புகளை அப்பெண்ணின் வாயில் திணித்தனர். அப்பெண்ணின் ஆடைகள் கிழிக்கப் பட்டு இரத்தத்தில் நனைந்திருந்தன. அதற்கு அடுத்த

www.padippakam.com



நாள் அப்பெண்ணின் தாயாரிடம் ஒருநாள் முழுக்கக் கட்டாய உழைப்பை வாங்கிவிட்டு இருவரையும் இரவு 10 மணியளவில் விடுதலை செய்தனர்.

இப்பெண்ணின் கணவனின் சகோதரன் மனைவியான முரளாவும் இதைப் போன்ற ஒரு புகாரைப் பதிவு செய்திருக்கிறார். அதே இரவில் தன்னைச் சில காவலர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பின் வீடு செல்ல அனுமதித்ததாகவும் வீட்டிற்கு வரும் வழியில், குமர்டோலா என்ற இடத்திற்கு அருகில் மடரிடெவி என்பவரால் தான் கற்பழிக்கப்பட்டதாகவும் தன் வீடு இடிக்கப்பட்டதாகவும் இவர் குற்றம் சாட்டியுள்ளார். திருமதி. முன்னாலால், திரு. ராம்பரோஸ் ஆகிய வழக்கறிஞர்கள் வாதிக்குச் சார்பாக ஆஜரானார்கள்.''

''இந்துஸ்தான் டைம்ஸில்'' (ஏப்ரல் 13, 1945) கீழ்க்கண்ட நிகழ்ச்சி காணப்படுகிறது.

''அம்பலா மாவட்டத்தைச் சேர்ந்த துக்கிரி கிராமத்தில் கட்டாய உழைப்பிற்கு உடன்பட மறுத்த அரிசனங்களை இராசபுத்திரக் கும்பல் ஒன்று தாக்கியதாகச் சொல்லப்படுகிறது. ஒரு அரிசன ஆணும் பெண்ணும் கொல்லப்பட்டனர். அரிசனங்களுக்குச் சொந்தமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து ஒரு விசாரணையை மேற்கொள்ள வேண்டி காவல்துறை ஆணையருக்கும், உதவி ஆய்வாளருக்கும் தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

தாழ்த்தப்பட்டவர்களை அடக்கி வைப்பதற்கும், நடப்புச் சமூக ஒழுங்கை நிலைநிறுத்தவும், வன்முறையைக் கையாள இந்துக்கள் தயக்கம் காட்ட மாட்டார்கள் என்பதை மேற்கண்ட நிகழ்ச்சிகளிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இதற்காகக் கொலை செய்யக் கூட இந்துக்கள் தயார்.

படிப்பகம்

www.padippakam.com



திரு. மாயோ எழுதிய ''அன்னை இந்தியா'' புத்தகத்திற்குப் பதிலளிக்கும் முகமாக திரு லஜபதிராய் ''துயரமான இந்தியா'' என்ற புத்தகம் ஒன்றை எழுதினார். அப்புத்தகத்தில், அமெரிக்காவில் கறுப்பர்கள் மீது நடைபெற்றுவரும் சட்ட விரோதச் செயல்களை விரிவாகவும் விளக்கமாகவும் தந்துள்ளார். கு. கிளக்ஸ் கிளேன் (Ku Klux Klan) உறுப்பினர்கள் கறுப்பர்கள்மீது புரிந்த கொடுமைகளைக் குறிப்பிட்டுப் பின்வருமாறு கேட்கிறார்.

''அவர் (மாயோ) கேட்க வேண்டிய மிகப் பொருத்தமான கேள்வி என்ன தெரியுமா? அமெரிக்கா கிளேன்ஸ் கறுப்பர்களை நடத்துவதைக் காட்டிலும் மிக அநியாயமான முறையிலும், மிகக் குரூரமாகவும் பார்ப்பனர்கள் பறையர்களை நடத்துகிறார்களா?

வெள்ளையர் அல்லாதவர்களை, வெள்ளையர்கள் நடத்தும் முறைக்குப் பக்கத்தில் இந்தியாவில் நடக்கும் சாதிக் கொடுமைகளை வைக்க முடியுமா?''

லாலா லஜபதிராய் மிகக் கவனமாக ஆராய்ந்திருந்தால், அமெரிக்கர்கள் கறுப்பர்கள்மீது தொடுத்துவரும் குரூரத்திற்கும் கொடுமைகளுக்கும் எந்தவிதத்திலும் குறைந்ததல்ல, தாழ்த்தப்பட்டவர்கள்மீது இந்துக்கள் நடத்திவரும் குரூரங்களும், கொடுமைகளும் என்பதைக் கண்டு கொண்டிருப்பார்

கறுப்பர்கள்மீது நடைபெற்றுவரும் கொடுமைகள் உலகிற்குத் தெரிந்திருப்பதைப்போல இந்துக்களின் கொடுமைகள் உலகிற்குத் தெரியவில்லை என்பதனால் இம்மாதிரி கொடுமைகள் நடக்கவில்லை என்றாகிவிடாது. இக்கொடுமைகள் வெளி உலகிற்குத் தெரியாததற்குக் காரணம், இந்துக்கள் தங்கள் கேவலத்தை மறைப்



படிப்பகம்

www.padippakam.com



பதற்காக, இம்மாதிரியான உண்மைகளை மறைத்துவிடுகிறார்கள் என்பதே.

நடப்புச் சமூக ஒழுங்கு பற்றிய விவரங்களும், அதன் விதிகளும், மிகப் பழங்காலத்தைச் சார்ந்தவை என ஒரு சிலர் நினைக்கக்கூடும். இது முழுக்கவே தவறானது. நடப்புச் சமூக ஒழுங்கும், அதன் விதிகளும், அவை தோன்றிய காலத்தைப் போலவே, இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. *''இந்துஸ்தான் டைம்ஸ்'' இல் தாழ்த்தப்பட்டவர்கள் நிலைபற்றி வெளியாகியிருக்கும் பின்வரும் இரண்டு உதாரணங்களிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம். முதல் நிகழ்ச்சி மார்ச் 8, 1945 அன்று வெளியாகியிருக்கிறது. உதய்பூரிலுள்ள வித்யா பவன் பள்ளிக்கூட தலைமையாசிரியரான கேசரிலால்ஜி போர்டியா இதை எழுதியிருக்கிறார். அது பின்வருமாறு:

''மேவார் பகுதி அரிசனங்கள் எண்ணற்ற இன்னல்களுக்கிடையில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் கோவில்களுக்குள் நுழைய முடியாது. பொதுக் கிணற்றில் நீர் எடுக்க முடியாது. திருவிழாக்களிலும் ஊர்வலங்களிலும் இவர்கள் சாதி இந்துக்களோடு சமமாக உறவாட முடியாது. அரிசனங்கள் தங்களின் ரதயாத்ராவை அல்லது பொம்மை ஊர்வலத்தை வேறு வழியில், வேறு நாளில் தான் நடத்த வேண்டும். அவர்கள் கிராமத்து வழியில் குதிரை சவாரி செய்ய முடியாது.

தங்க ஆபரணங்களை விடுங்கள், வெள்ளி ஆபரணங்களைக்கூட இவர்கள் அணிந்தால் போதும், சாதி இந்துக்கள் ஆத்திரப்படுவார்கள். ஆகவே இவர்கள் தகரம், பித்தளை ஆபரணங்களோடு திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். மிகப் பழங்காலப் பழக்கத்தின்படி இவர்கள் திருமண விருந்துகளில் வெண்ணெய் பயன்படுத்துவது தடை செய்யப்பட்ட ஒன்று.

படிப்பகம்

www.padippakam.com



பள்ளிகளிலும், இதரப் பொது இடங்களிலும், அரிசனச் சிறுவர்கள் சாதி இந்துக்களின் சிறுவர்களோடு சமமாக உட்கார முடியாது. பள்ளி ஆய்வு நாளின்போது, ஆய்வாளருக்கு ஆத்திரம் வரக்கூடாது என்பதற்காக இந்த அரிசனச் சிறுவர்கள் அன்று விடுமுறை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள்

மாகாண அரசாங்கத்திடம் ஒரு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மிகத் தெளிவான முறையில் இந்தக் கொடுமைகளைக் கண்டிக்குமானால் அது அதிகாரப் பூர்வமற்ற முறையில் தீண்டாமைக்கு எதிராகப் போராடி வரும் அமைப்புகளின் கரங்களை வலுப்படுத்துவதாக அமையும்.''

இரண்டாவது நிகழ்ச்சி அறிக்கைவடிவில் இருக்கிறது. மேவார் மாகாணத் தாழ்த்தப்பட்டவர்களின் நிலையைப் பற்றி அரிசன நலச்சங்கத் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கை அது. அது பின்வருமாறு:

''அரிசனங்கள் படும் பல்வேறு இன்னல்கள் குறித்தும் அவர்தம் துயரம் குறித்தும் மேவார் அரிசன நலச்சங்கம் மாகாண அரசாங்கத்தின் கவனத்திற்கு மனு ஒன்றை அனுப்பியிருக்கிறது. சாதிவெறி கொண்ட சனாதன இந்துக்களினால். அரிசனங்களின் குடியுரிமைகள் எப்படிப் பல்வேறு வழிகளிலும் அடைபட்டு நிற்கின்றன என்பதை இம்மனு கவனத்திற்குக் கொண்டு வருகிறது.

இம்மாகாணத்தில் இன்றும் நடைமுறையில் இருந்து வரும் சில அநியாய நடைமுறைகளைக் கீழே விவரித்துள்ளேன். அவற்றைச் சீர்செய்ய அரசாங்கம் எந்தத் திறமையான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அது பின் வருமாறு:

www.padippakam.com



1) அரிசனங்களுக்குத் தங்கள் ஆடைகளைத் தேர்ந்தெடுக்கச் சுதந்திரம் இல்லை. பழைய காலப் பாணியில்தான் ஆடைகள் அமைந்திருக்க வேண்டும். ஆடைகளைத் தேர்ந்தெடுப்பதில் தனிநபர் விருப்பங்களுக்கு இடம் இல்லை.

2) தங்களின் திருமண விருந்துகளில்கூட அவர்கள் விருப்பமான உணவு வகைகளைத் தேர்ந்தெடுக்க முடியாது.

3) கிராமத்திற்குள் இவர்கள் குதிரைச்சவாரி செய்ய முடியாது.

4) பொது ஊர்களில் அவர்கள் பயணம் செய்ய அனுமதி இல்லை.

5) மதப்பண்டிகைகளின்போது அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட வழியைத்தவிர வேறு வழிகளில் அவர்கள் தங்கள் சாமி ஊர்வலத்தை நடத்த முடியாது.

6) பொதுக்கிணறுகளையும், கோவில்களையும் அவர்கள் பயன்படுத்த முடியாது.

மேலும் அவர் கூறுகிறார்: மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தாக்கர் பாபாவின் துணையோடு மாகாணம் முழுக்கப் பயணம் செய்தேன். மாகாணத்தில் நிலவி வரும் சூழ்நிலைமைகள் குறித்த என் மனப்பதிவுகளை அரசாங்கத்தின் முன்பும், மக்களின் முன்பும் வைத்தேன். அதில் சீர்திருத்தம் கோரி மன்றாடியும்இருந்தேன். மேற்கொண்ட மனுவின்படியும் எனக்கு வந்துள்ள பிற தகவல் படியும், கடந்த ஆண்டுகளில் மாற்றம் ஏற்பட்டதற்கான எந்தவொரு அறிகுறியும் காணவில்லை என்பதைக் கண்டு கொண்டேன். சூழ்நிலைமைகள் ஏறத்தாழத் தேங்கிய நிலையிலேயே இருந்துவருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



"காலம் நம் சூழ்நிலைமையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதைக் காணும்போது நெஞ்சம் வெடிக்கிறது. நமது பழைய நடைமுறைகளில், காழ்ப் புணர்ச்சிகளில் எந்தவொரு மாற்றமும் இல்லை. நமது பாதையில் காணும் கொடுமைகளையும், அநியாயங்களை யும், நமது வக்கிரக்குணம் மறைத்து விட்டது. இதன் விளைவாக, நாம் அனுபவித்துவரும், கணக்கிடமுடியாத தொல்லைகளை இந்த வக்கிரக்குணம் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஒரு சராசரி மனிதன் கொண்டுள்ள அறியாமையான காழ்ப்புணர்ச்சிகள் கைவிடப்படவில்லை என்றாலும்கூட, இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு அரசாங்கம் மிக்க விழிப்புணர்வு கொண்டதாக இருக்க வேண்டும்.

இந்த அறிவிப்பு வெளியான நாள் முக்கியமானது. 1945இல் இது வெளியிடப்பட்டிருக்கிறது. நடப்பில் நில வும் இந்துச் சமூக ஒழுங்கு என்பது கடந்துபோன பழைய ஒரு விசயம் என்று எவருமே சொல்லிவிடமுடியாது. சமீ பத்தில் நாம் பார்த்த உதாரணங்கள் இந்திய மாகாணங் களில் நடந்த நிகழ்ச்சிகள் என்பதால், இம்மாதிரியான நிகழ்ச்சிகள் பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளில் ஒழிக்கப் பட்டுவிட்டன என்று பொருள் கொள்ள முடியாது. பிரிடடிஷ்—இந்தியப் பகுதிகளிலும், இந்த இந்துச் சமூக ஒழுங்கு ஊக்கத்தோடு இருந்து வருகிறது என்பதற்குப் பின்வரும் பகுதி போதுமான ஆதாரமாக இருக்கும்

"டைம்ஸ் ஆப் இந்தியாவில் (ஆகஸ்ட் 31, 1950) கீழ்க் கண்ட செய்தி காணப்படுகிறது.

"அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் ஒரு மேல்முறையீடு சம்பந்தப்பட்ட விசாரணையின்போது பின்வரும் உண்மைகள் வெளியாயின. கிராமப்பகுதிகளிலுள்ள

www.padippakam.com



தாழ்த்தப்பட்ட சாதி மக்களின் சமூக—பொருளாதாரச் சூழ்நிலைமைகளை இவை தெளிவாகக் காட்டுகின்றன.

எட்டா மாவட்டத்திலுள்ள சராஸ் கிராமத்தைச் சேர்ந்த வண்ணார் சாதிக்காரச் சிரான்ஜி என்பவர் கடைசி யுத்தத்தில் இராணுவ ஊழியராக இருந்தார். கிராமத்திற்கு வெளியே 4 அல்லது 5 ஆண்டுகள் அவ்வாறு இருந்து வந்தார். பணியிலிருந்து விடுபட்டவுடன் தன் கிராமத்திற்குத் திரும்பினார். இவர் (தன் குலத்தொழிலான) துணி துவைப்பதை விட்டுவிட்டார். இராணுவச் சீருடையோடு கிராமத்திற்குள் நடமாடி வந்தார். அக் கிராமத்தின் ஒரே சமீன்தாரின் ஆடைகளைத் துவைத்துத் தர மறுத்து விட்டார். இதனால் கிராமத்தினர் ஆத்திரமுற்றனர்.

1947, டிசம்பர் 31 ஆம் தேதியன்று இந்த வண்ணார் தன் ஆடைகளைத் துவைத்துக் கொண்டிருந்தபோது, சமீன்தாரின் வேலையாள் உள்ளிட்ட நான்கு பேர் அவரை அணுகி, தங்கள் துணிகளையும் துவைத்துத் தரும்படி கேட்டனர். அதற்கு அவர் மறுத்துவிட்டார். சமீன்தார் வீட்டிற்கு அவரை அழைத்து வந்து உதை கொடுத்தனர். அவரின் தாயாரும் சின்னம்மாவும், அவருக்காகப் பரிந்து இடைமறித்தபோது அவர்களும் தாக்கப்பட்டார்கள்.

பின் இராம்சிங் என்பவர் பாதுகாப்பில் சிரான்ஜியை விட்டுவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர். இராம்சிங்கைத் தாக்கிவிட்டுச் சிரான்ஜி தப்பிச் சென்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இராம்சிங்கும் மற்றவர்களும், சிரான்ஜி ஒளிந்திருந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டனர். கதவைத் திறக்கும்படி அவர்கள் கோரியதற்கு எந்தப் பதிலும் இல்லாததால் வீட்டிற்குத் தீ வைத்தனர். இதனால் மற்ற குடிசைகளும் சேர்ந்து சாம்பலாயின.

படிப்பகம்

www.padippakam.com



இது குறித்து அந்த வண்ணார் காவல் நிலையத்தில் ஒரு புகார் தந்தார். காவலர் அப்புகாரை நம்ப மறுத்த தோடு, பொய்ப் புகார் தந்ததாக அவரையே தண்டிக்க வேண்டும் என்று கூறினார். ஆகவே அவர் மாவட்ட நீதி மன்றத்தில் ஒரு புகார் தாக்கல் செய்தார். குற்றவாளி களுக்கு மூன்றாண்டுச் சிறைத் தண்டனை கிடைத்தது. உயர் நீதி மன்றமும் இந்தத் தீர்ப்பை உறுதி செய்தது.''

பின்வரும் செய்தி இந்தியன் நியூஸ் கெரானிக்கில் (ஆகஸ்ட் 31, 1950) வெளியானது:

பெப்சுவிலுள்ள அரிசனங்கள் மனிதாபிமானமற்ற முறையில் கையாளப்படுகிறார்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் கழகம் அரசாங்கத்திற்குத் தந்த மனு:

''பாட்டியாலா, ஆகஸ்ட் 1950, எவ்விதக் காரணமு மின்றி பிற்படுத்தப்பட்ட மக்கள் சவுக்கால் அடிக்கப்படு கிறார்கள். அநாகரீகமான முறையில் அவ்வகுப்புப் பெண்கள் அவமானப்படுத்தப்படுகிறார்கள். அரிசனங் கள் அவர்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து வெளி யேற்றப்படுகிறார்கள். அரிசனங்களும், அவர்களது கால்நடைகளும், நாட்கணக்கில் சேற்றில் அடைத்து வைக்கப்படுகிறார்கள். பொதுவான குற்றச் செயல்கள் குறைந்து வருவதற்கு ஏற்றாற்போல, இம்மாதிரியான வேதனை தரும் நிகழ்ச்சிகள் அதிகரித்துவருகின்றன.'' மாகாண அரசாங்கத்திற்குப் பெப்சு மாகாண ஒடுக்கப் பட்ட மக்கள்கழகம் அளித்த மனுவில் இவ்வாறு சொல்லப் பட்டிருக்கிறது.

இம்மனு மேலும் கூறுவதாவது: ''காவல்துறையில் கடுமையான முயற்சிகளினால் குற்றச் செயல்கள் குறைந்துவிட்ட போதிலும், பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் பாதுகாப்பைச் சமூக விரோதச் சக்திகளிடம் இழந் திருப்பது பரிதாபகரமானது. பிறபடுத்தப்பட்ட மக்கள்

படிப்பகம்

www.padippakam.com



சமூக, பொருளாதார ரீதியாக ஊனமுற்ற நிலையிலிருப்ப தால் தங்களின் அன்றாடக் குறைகளை அதிகாரிகளிடம் சொல்லித் தீர்த்துக்கொள்வதில் மிகுந்த இடையூறுகளை காண்கிறார்கள். அவர்களை உடனடியாகக் காப்பாற்ற வேண்டிய நிலையில் உள்ள அதிகாரிகளே, ஆக்கிரமிப் பாளர்களுக்கு அடிபணிந்து நிற்கிறார்கள். இதனால் தற்போதைய நடப்புகளின் மீதான அதிருப்தி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. சுயநலம் கொண்ட சக்திகள் இந்த அதிருப்தியைச் சேகரித்து வருகின்றன.

பெப்சு பகுதி அரிசனங்கள் எவ்வளவு தூரம் அநாக ரீகமாகக் கையாளப்பட்டு வருகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தை மாகாண ஒடுக்கப்பட்ட மக்கள் கழகம் வெளியிட்டிருக்கிறது. கட்டு கிராம அரிசனரான சந்த் சிங் ஒரு உயர்சாதி சமீன்தாரின் கிணற்று நீரைக் குடித்த தற்காக, அவர் முகத்தில் கரிபூசி கழுதை மீது அமர வைத்துக் கிராமத்தைச் சுற்றவைத்திருக்கிறார்கள். "சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட மாறுபட்ட சூழ் நிலைமையின் கீழ் உயர்சாதி இந்துக்கள் கட்டவிழ்த் துள்ள பெரும் ஒடுக்குமுறையின் விளைவாக, பெப்சு பகுதி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அன்றாடம் ஒரு இறுக்கமான சூழ்நிலையில் தாங்கள் இருப்பதை உணர்கி றார்கள்."

மாகாணங்களில் மாவட்ட அளவிலும் மையத்திலும் அரிசனங்களின் புகார்களைக் கவனிக்கப் பரவலான அதி காரங்களைக் கொண்ட சிறப்புநிலை ஆணைக்குழுக்களை ஏற்படுத்தி அக்குழுக்களுக்கு ஏனைய வசதிகளையும் ஏற் படுத்தித் தர வேண்டுமென மாகாண ஒடுக்கப்பட்டோர் மக்கள் கழகம் மேலும் ஆலோசனை வழங்கியுள்ளது.

முடிவாக, சூழ்நிலைமைகள் மேலும் மோசமடை யாமல் சுமுகத்திற்கு வர, தற்காலிகமாகவேணும், அரி சனங்களுக்குச் சம உரிமையைத் தருகின்ற ஒரு அகில இந்தியச் சட்டத்தை இயற்ற வேண்டுமென மாகாண அரசாங்கத்தை இக்கழகம் வலியுறுத்தியது. □□

படிப்பகம்

www.padippakam.com

## அத்தியாயம்—7

# பிரச்சினைக்கான வேர்கள்
# இணையான உதாரணங்கள்

I ரோமாபுரி அடிமை முறை

II இங்கிலாந்திலிருந்த பண்ணையடிமை முறை

III யூதர்களும் அடிமை முறையும்

சமூகச் சமத்துவமின்மை இந்துக்களிடம் மட்டுமே காணப்பட்ட ஒன்றல்ல. மற்ற நாடுகளிலும் இது காணப்பட்டது. சமூகத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், சுதந்திரமானவர்கள், அடிமைகள், சான்றோர், கீழோர் என்ற வேறுபாடுகளுக்குக் காரணமாய் இது இருந்திருக்கிறது. மற்ற நாடுகளில் பழங்காலத்தில் காணப்பட்ட— நவீன காலங்களில் காணப்படுகின்ற அடிமைகளின் நிலையையும் இழிவுக்குள்ளான மக்களின் நிலையையும், அந்தஸ்தையும், இந்தியத் தாழ்த்தப்பட்டோரின் நிலையோடும், அந்தஸ்தோடும் ஒப்பிட்டுப் பார்ப்பது சுவையானதாக இருக்கும். இம்மாதிரியான ஒப்பீடுகள் செய்வதற்கு முன்பு, இதற்கு (தீண்டாமை) இணையான நிகழ்ச்சிகள் பற்றிய வரலாற்றைச் சிறிது தெரிந்துகொள்

படிப்பகம்

www.padippakam.com



வது, அவசியம். அப்பொழுதுதான் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் அறிவுப்பூர்வமாகப் புரிந்துகொள்ள முடியும். உலகின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அனைத்து அடிமை மக்கள் பற்றிய விவரங்களைத் தருவது சாத்தியமானதல்ல. அதற்கு அவசியமுமில்லை சிலவகை மாதிரிகளை மட்டும் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும்.

இந்துக்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையிலான உறவை ஆய்வு செய்யும்போது,மூன்று கேள்விகள் நம் சிந்தனையில் எழுகின்றன. ஏன் தீண்டாமை ஒழியவில்லை? தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக இந்துக்கள் நடத்தும் சட்டவிரோதச் செயல்களை அவர்கள் (இந்துக்கள்) நியாயமானதாகவும் சட்டத்திற்குட்பட்டதாகவும் கருதுவது ஏன்? தாழ்த்தப்பட்டவர்களைக் கையாளும் விதத்தில் இந்துக்களின் மனச்சாட்சி ஏன் உறுத்துவதில்லை?

தாழ்த்தப்பட்டவர்களைப் போலவே, இழிவுக்குள்ளான சமூக குழுக்கள் மற்ற சமூகங்களில் இருந்திருக்கின்றன. உதாரணத்திற்குப் பண்டைய உரோமாபுரியின் மக்கள் தொகை 5 பிரிவுகளில் அடங்கும். (1) பேட்ரிசன்கள் (2) பிளேபியன்கள் (3) கிளியண்டுகள் (4) அடிமைகள் (5) சுதந்திரமானவர்கள்.

பேட்ரிசன்கள் ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். அனைத்துப் பொருளிலும் அவர்களே குடிமக்கள். மீதி அனைவரும் அந்தஸ்தில் அடிமைகளே. பிளேபியன்களும், கிளியண்டுகளும் போரில் அழிந்து போயினர். புதிதாக நகரத்திற்குள் குடி வருபவர்கள் புகழ்பெற்ற பேட்ரிசன் குடும்பங்களின் பாதுகாப்பைக் கோரி தஞ்சம் அடைந்தால் உடனே அவர்கள் குத்தகைக்காரர்களாக இருக்க அனுமதிக்கப்படுவர். இவர்கள் கிளியண்டுகள் என்றழைக்கப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டனர். தனிப் பண்ணையார்களின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு தங்களை நேரடியாக அவர்களின் பாதுகாப்பின் கீழ் ஒப்படைத்துக் கொண்டவர்கள் பணக்காரக் குத்தகைதாரர்களானார்கள் இவர்கள் - பிளேபியன்கள் என்றழைக்கப்பட்டனர். அசையும் சொத்துகளையும், அசையாச் சொத்துகளையும் வைத்துக்கொள்ள பிளேபியன்களுக்கு உரிமையிருந்தது. இந்த உரிமைக்கு நீதிமன்றப் பாதுகாப்பும் கிடைத்தது. இவர் ஒரு அரைகுறை குடிமகன். நகர மத நடவடிக்கையில் கலந்து கொள்ள இவர்களுக்கு உரிமையில்லை. இவர்கள் ஐயத்திற்கு உள்ளானவர்களாக இருந்ததால், இவர்களுக்கும் பேட்ரிசன்களுக்கும இடையே கலப்புத் திருமணம் என்ற கேள்விக்கே இடமில்லாமல் போயிற்று. கிளியண்டுகள் தங்கள் பாதுகாப்பிற்கும் வாழ்க்கைக்கும் பேட்ரிசன்களை எதிர்நோக்கியிருந்தனர். கிளியண்டுகள் குடும்பத்தின் அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பேட்ரிசன்கள் கவனித்து வந்தனர். இவர்களுக்கு இடையிலான உறவு பரம்பரையானது. தந்தையிடமிருந்து மகனுக்குச் சேரும். கிளியண்டுகள் தங்கள் வாழ்க்கைக்கு மட்டுமல்ல, சட்டப் பாதுகாப்பிற்கும் கூடப் பேட்ரிசன்களையே சார்ந்திருக்க வேண்டியிருந்தது. கிளியண்டுகளுக்குக் குடிமகன் என்ற உரிமையில்லாததால் அவர்கள் வழக்குத் தொடர முடியாது. அதனால் கிளியண்டு பாதிக்கப்பட்டால் அதற்குப் பேட்டரிசனே உதவவேண்டும். அவர் ஏதேனும் வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தால் அவரின் சார்பாக பேட்ரிசனே ஆஜராக வேண்டும்.

மில்லியன் கணக்கில் அடிமைகள் இருந்திருக்கிறார்கள். ஒரு பணக்கார் நிலக்கிழார் மட்டுமே நூற்றுக்கணக்கான ஏன் ஆயிரக்கணக்கான அடிமைகளை வைத்திருக்கலாம். ஒரு ஏழை சில அடிமைகளையும்கூட, தன் கீழ் வைத்திருக்க முடியாமல் இருந்திருக்கும். அடிமைகள்

www.padippakam.com



பொருட்களாகவே கருதப்பட்டு வந்தார்கள். சட்டத்தின் பார்வையில் அவர்கள் மனிதர்கள் அல்ல. ஆகவே அவர்களுக்கு எந்த உரிமைகளும் இல்லை. கருணையுள்ள எசமானர்கள் சிலர் இவர்களைக் கருணையோடு நடத்தியிருக்கிறார்கள். ஆனால் பொதுவாக அடிமைகள் மிகக் குரூரமாகவே கையாளப்பட்டு வந்தார்கள். ''உணவு உண்ணும்போது ஒரு அடிமை இருமினாலோ தும்மினாலோ சாவியைத் தரையில் தவறவிட்டு அதனால் சத்தம் எழுந்தாலோ நாங்கள் மிகுந்த கோபமடைந்தோம்... அடிக்கடி அவர்களைக் கடுமையாக அடித்து விடுவோம். பல்லையோ அல்லது கைகாலையோ உடைத்து விடுவோம்'' என்று சனிக்கா கூறுகிறார். ஒரு பணக்கார எசமான் கவனக்குறைவாக வேலை பார்த்த அடிமைகளை முதலைகளுக்கு இரையாகக் குளத்தில் எறிந்திருக்கிறார். எசமான்களுக்குச் சங்கடம் விளைவிக்கும் அடிமைகளைச் சாதாரணமாகப் பாதாளச் சிறையில் அடைத்துவிடுவர். அங்கே அவர்கள் கனத்த இரும்புச் சங்கிலிகளைச் சுமந்து கொண்டே வேலை செய்ய வேண்டும். ஒரு ஆலையில் வேலை பார்த்துவந்த அடிமைகளின் நிலை குறித்து ஒரு ரோமன் ஆசிரியர் பின்வருமாறு வர்ணிக்கிறார். ''கடவுளே எவ்வளவு கூனிப்போன மனிதர்கள்? சவுக்கடிகளால் இவர்கள் தோல் உரிந்து இருக்கிறது இவர்கள் கிழிசல்களாகிப் போன துணிகள்தான். கூன்விழுந்து, தலை மொட்டையடிக்கப்பட்டு, கால்கள் விலங்கிடப்பட்டுத் தீயினால் உடல் அவலமடைந்து, இமைகள் தீக்கொழுந்தில் நாசமாகி தானியத் தூசுகளால் மூடுண்டு கிடக்கிறார்கள்.''

ஆங்கிலச் சமூகத்திலும் ஒரு காலத்தில் அடிமை வர்க்கம் இருந்திருக்கிறது. நார்மன் ஆக்கிரமிப்பின் போது ஆங்கிலச் சமூகத்தின் நிலையை அறிய டாம்ஸ்டே புத்தகத்தை (Domesday Book) ஒருவர் பார்க்க வேண்டியிருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



வில்லியம் என்ற ஆக்கிரமிப்பாளர் 1086இல் இங்கிலாந்தைக் கைப்பற்றிய உடனே ஏற்படுத்தி பல்வேறு வகையான குத்தகை முறைகளையும் இங்கிலாந்துச் சமூகம் பற்றிய புள்ளி விவரங்களையும் பற்றிய தொகுப்பே டாம்ஸ்டே புத்தகம். அதில் காணப்பட்டுள்ள மக்கள் பிரிவுகள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1) சீமான்கள் | முதன்மை குத்தகைதாரர் | —1400 | |
| மதகுரு | கீழ்க்குத்தகைதாரர் | —7900 | |
| | | | —9300 |
| 2) சுதந்திர உடைமையாளர்கள் | சுதந்திரமானவர்கள் | —12000 | |
| குடியானவர் | ஏனையோர் | —32000 | |
| | | | —44000 |
| 3) அரை சுதந்திரம் | பண்ணையடிமை | —169000 | |
| அல்லது | பண்ணையாள், | | |
| சுதந்திரமற்றவர் | அண்டையர் | —9000 | |
| | | | —259000 |
| 4) அடிமைகள் | | | —25000 |

3,37,000 எண்ணிக்கையில் ஏறத்தாழ 2,84,000 பேர்; ஒன்று சுதந்திரமற்றவர்களாக அல்லது அடிமைகளாக இருந்திருக்கிறார்கள்.

இம்மாதிரியான அடிமைமுறைகளில் இனத்திற்கோ மதத்திற்கோ எந்தப் பங்கும் இல்லை. ஆனால் அடிமை முறைக்கு இனமோ மதமோ காரணமாயிருந்திருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



உதாரணங்களும் வரலாற்றில் உண்டு. இதில் முதன்மையானது யூதர்கள். கிறிஸ்துவின் இறப்பிற்கு யூதர்கள் தான் காரணம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், யூதர்கள் கொடுமைகளுக்குள்ளாகியிருக்கிறார்கள். மத்திய காலங்களில் ஏறத்தாழ அனைத்து ஐரோப்பிய நகரங்களிலும் யூதர்கள் கொடுமைகளுக்குள்ளாகியிருக் கிறார்கள். மத்திய காலங்களில் ஏறத்தாழ அனைத்து ஐரோப்பிய நகரங்களிலும் யூதர்கள நகரங்களில் ஒரு தனித்த பகுதிகளில் மட்டுமே தங்கி வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தார்கள். இந்தப் பகுதி கெட்டோ (Ghetto) என அழைக்கப்பட்டது. 1050இல் ஆஸ்திரேலிய கொயான்ஸ் சாவில் கூடிய ஒரு நகர ஆட்சிக்குழு பின்வரும் சட்டத்தை இயற்றியது. "யூதர்கள் வர்மும் வீட்டில் எந்தக் கிறித்துவர்களும் வசிக்கக்கூடாது. அவர்களுடன் அமர்ந்து உணவு உண்ணக்கூடாது. இந்தச் சட்டத்தை யார் மீறினாலும் அவர்கள் 7 நாட்கள் விரதம் கடைப்பிடிக்க வேண்டும். அல்லது இதைச் செய்ய மறுத்தால் அவர்கள் நல்ல தகுதியில் உள்ளவர்களாக இருப்பின் 1 ஆண்டிறகுச் சமூக விலக்கிற்கு உள்ளாவர். கீழ் நிலையில் இருப்பவர்களாக இருந்தால் அவர்கஞ்க்கு 100 கசையடி கிடைக்கும்.

1588இல் பலேன்சி நகர ஆட்சிக்குழு பின்வரும் சட்டத்தை இயற்றியது. "யூதர்களுக்கும், மூர் இனத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள குடியிருப்புகளில் கிறித்துவர்கள் வசிக்கக்கூடாது. அப்படி யாராவது வசித்து வந்தால் இந்த அறிவிப்பு வெளியான இரண்டு மாதங்களுக்குள் அவர்கள் அந்த இடத்தைக் காலி செய்துவிட வேண்டும. அப்படிச் செய்யத்தவறினால், மாதாக்கோவில் கண்டனத்திற்கு அவர்கள் உள்ளாக நேரிடும்." மத்தியக் காலங்களில் யூதர்கள் திருநீராட்டு (communal bath) நடத்த வேண்டியிருந்தது, ஆனால் யூதர்களால் இதனைச் செய்ய ம்டியவில்லை. காரணம் கிறித்துவர்கள் பயன் படுத்தும் ஆறுகளில் யூதர்கள் குளிக்க அரசாங்கம் தடை

www.padippakam.com



போட்டிருந்தது. 14ஆம் நூற்றாண்டில் ஆகஸ் பகுதி யூதர்கள் பல்வேறு கடுமையான நிபந்தனைகளின் பேரில, நகரங்களுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர் அவற்றில் ஒன்று, யூதர்கள் மெய்னி ஆற்றில் குளிக்கக்கூடாது என்பது. அரசாங்கம் யூதர்கள் மீது பல வரிகளை விதித்திருந்தது. அவை மூன்று வகைப்பட்டன. தலைவரி, குறிப்பிட்ட தண்டத்தொகைகள், தனி நபர் சலுகைகளுக்குக் கட்ட வேண்டிய கட்டணங்கள. தலைவரி கட்டுவதற்கான வயது வரம்பு பல்வேறு நிலைகளில் இருந்தது. ஆனால் அவ்வரம்பு இளம்வயதை மீறாமல் இருந்தது.

1273 இல் இங்கிலாந்தில் இருந்ததைப் போலவே, ஸ்பெயினிலும் 10 வயதைத் தாண்டியவர்கள் வரிவிதிப்பிற்கு உட்பட்டிருந்தனர். அமைதிக்காலங்களில், இராணுவத்தினருக்குச் சேவை செய்வது யூதர்கள் மீது சுமத்தப்பட்ட கட்டாய வேலையாய் இருந்தது. மத்தியக் காலம் முழுவதுமே, எல்லா இடங்களிலும் யூதர்கள் மீது எண்ணற்ற வெறுப்பூட்டும் கட்டணங்கள் விதிக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தையும் விவரிப்பது சாத்தியமல்ல. இவை எல்லாவற்றிற்கும் சிகரமாக இரண்டாம் இன்னோசென்ட் போப் 1215 ஆம் ஆண்டில யூதர்கள், கிறித்துவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக்காட்டும் அடையாள அட்டையைத் தங்கள் உடையில் பார்வையில் படும் இடத்தில் அணிய வேண்டும் எனக் கட்டளையிட்டிருந்தார். யூதர்கள் அடையாள அட்டை அணியவேண்டும் என்பதில் லேட்டர்னன் திருக்கோயில் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்தது.ஆனால் அடையாள அட்டைகள் பற்றிய விவரத்தைக் கூறவில்லை. இந்த அவமான அடையாள அட்டைகளின் வடிவம், வண்ணம், தகுதி ஆகியவற்றை உள்ளூர் ஆளுநர்கள் அரசாங்கங்கள் விருப்பத்திற்கே விட்டுவிட்டனர். ஒவ்வொரு ஆளுநரும், அரசும் ஒவ்வொரு வகை அட்டைகளைத் தீர்மானித்தனர். சராசரிக்கும் மீறிய வடிவத்தில் வடிவமாற்றம் அடிக்கடி இடம்

படிப்பகம்

www.padippakam.com



பெற்றதால் சிலசமயம் யூதர்கள் ஏமாற்றியும் வந்தனர். அடிக்கடி இந்த அட்டைகளை யூதர்கள் மறைத்துக்கொள்வதால், ஏமம் கிளிமெண்ட் போப் இதனை மஞ்சள் குல்லாவாக மாற்றினார்.

தாழ்த்தப்பட்டவர்களின் நிலை, இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்கர்கள் நிலையை நினைவுபடுத்துகிறது. கத்தோலிக்கர்கள் எண்ணற்ற இன்னல்களுக்கு உள்ளாகியிருந்தனர். அந்த இன்னல்களின் பட்டியல் பின்வருமாறு:

1. ''கத்தோலிக்கர்கள் திருமணமோ கத்தோலிக்க பாதிரியார்கள் செய்து வைத்த கத்தோலிக்கத் திருமணங்களோ நடப்புச் சட்டங்களின்படி செல்லத்தக்கவையல்ல. ஆகவே, மணமகனோ மணமகளோ எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரிந்து சென்றால் மாவட்ட மாதாக்கோவிலிலிருந்தோ அல்லது மணமகள்/மணமகன் சம்பந்தப்பட்ட நாட்டுச் சட்டத்தின்படியோ எந்த உதவியும் பெறமுடியாது அந்தப் பாதிரியார், நாடு கடத்தப்படலாம் அல்லது சிறையில் அடைக்கப்படலாம் அல்லது கண்டிக்கப்படுவார்.''

2. ''கத்தோலிக்கர் பாதிரியாரின் வாழ்க்கைச் செலவிற்கோ கத்தோலிக்க மதத்திற்கோ உதவியாகத் தரப்பட்ட பணம் அல்லது நன்கொடை நடப்புச் சட்டப்படி, மூடநம்பிக்கை நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும். அப்பணம் பறிமுதல் செய்யப்படும். கொடிய நபர்களிடமிருந்து பறிக்கப்பட்ட அப்பணத்தைச் சட்டத்தின் மூலம் திரும்பப்பெற முடியாது''.

3. மாண்புமிகு மன்னரின் இராணுவத்திலும், கப்பல் படையிலும் பணியாற்றிவரும் கத்தோலிக்கர்கள் தங்கள் மதச் சடங்குகளின்படி ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தும் பிரார்த்தனைகளிலும் ஏனைய மதப் பண்டிகைகளிலும்

www.padippakam.com



கலந்து கொள்வது தடைசெய்யப்பட்டிருக்கிறது. இச் சமயங்களில் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்கள் புரோட்டடஸ்டண்ட் மாதாக் கோவில்களுக்குச் செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டனர். தைரியமான, விசுவாசமான குடிமக்கள்கூட இது குறித்துப் புகார் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். எதிரிக்கு எதிராக ஒருமுக மாகச் சண்டையிட வேண்டிய சமயத்தில் இங்கிலாந்து ஐக்கியமாக இருக்கவேண்டிய தருணத்தில் இந்தக் கட்டா யப்படுத்துதலால் அதிருப்திக்கு உள்ளாயிருந்தனர்.

4. பதிமூன்றாவது சார்லஸ் II இயற்றிய சட்டம்; கார்ப்பரேசன் சட்டம் எனப் பொதுவாக அழைக்கப் பட்டது. இதன்படி மாவட்ட, நகர அலுவல்களிலிருந்து கத்தோலிக்கர்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

5. இருபத்தைந்தாம் சார்லஸ் II இயற்றிய சோத னைச் சட்டப்படி அரசாங்க வேலை வாய்ப்புகள், இராணுவம் ஆகியவற்றில் கத்தோலிக்கர்கள் அனுமதிக் கப் படவில்லை.

6. ஏழாவது, எட்டாவது வில்லியம்ஸ் III இயற்றிய சட்டப்படி கத்தோலிக்கர்களுக்கு வாக்குரிமை இல்லை.

7. முப்பதாவது சார்லஸ் II இயற்றிய சட்டப்படி, கத்தோலிக்கப் பிரபுக்கள் பாராளுமன்றத்தில் தங்களுக்குப் பதிலாக வேறொரு நபரை வாரிசாக நியமிப்பது தடை செய்யப்பட்டது.

8. அதே சட்டப்படி, பொதுச் சபையில் கத்தோலிக் கர்கள் பங்கெடுப்பதும் நிறுத்தப்பட்டது.

9. யூதர்களுக்குச் சட்டப்படி அனுமதிக்கப்பட்டிருந்த சொத்துரிமைகூடக் கத்தோலிக்கர்களுக்கு இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



10. மன்னரின் கப்பற்படையிலும், தரைப்படையிலும், கணிசமான எண்ணிக்கையில் கத்தோலிக்கர்கள் இருந்தபோதிலும், அவர்களின் மத வசதிக்கான எந்த ஒரு சட்டப்பிரிவும் இல்லை. ஆனால் போர்ச் சட்டப்படி அந்நாட்டின் அதிகாரப்பூர்வ மாதாக் கோவிலின் சடங்குகளில் பங்குகொள்ள மறுப்பவர்கள்மீது வேதனை தரும் சுமைகளும் தண்டத் தொகைகளும் விதிக்கப்பட்டன. போர்ச் சட்டப்படி, தெய்வீகச் சடங்குகளில் பங்கு கொள்ள மறுக்கும் ஒரு வீரரிடமிருந்து முதல் முறை ஒரு சில்லிங் அபராதமாகப் பறிமுதல் செய்யப்பட்டது. அடுத்தடுத்து நிகழ்ந்தால் அதற்கு ஒரு சில்லிங் அபராதம் வசூலிக்கப்படுவதோடு அவர்கள் விலங்கிடப்படுவார்கள். இதே சட்டத்தின்படி பிரிவு 5, பிரிவு 2இன்படி ''தனது மேலதிகாரியின் கட்டளைக்கு அடிபணிய மறுக்கும் (தெய்வீகச் சடங்குகளில் கலந்துகொள்ள மேலதிகாரி கட்டளையிட்டு அதற்கும் அடிபணிய மறுத்தால்) அவர் நீதிமன்றத் தீர்ப்பின்படி கொல்லப் படுவார் அல்லது வேறு தண்டனைகள் தரப்படும்.

11. கத்தோலிக்கர்கள் ஏனைய மதத்தினரைப் போலவே, அதிகாரப்பூர்வ மதத்திற்கு (புரோட்டடஸ்டண்ட்) நன்கொடைகள் தரவேண்டும் இவர்கள் தங்கள் சொந்த மதத்தின் செலவுகளையும் கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. அந்த விதத்தில் இரட்டை மதச் செலவுகளை ஏற்க வேண்டியிருந்தது. ஆனால், இது குறித்து அவர்கள் புகார் தெரிவிக்கவில்லை. அவர்கள் வருத்தம் எல்லாம் புரொட்டஸ்டன்ட் மதப் பிரிவினைபோல தங்கள் மத நன்கொடைகளும் சட்ட அங்கீகாரம் பெறவில்லை என்பதே.

12. கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த அமைச்சர்கள். பள்ளிகள், மருத்துவமனைகள், ஏனைய பொது நிறுவனங்

www.padippakam.com



களில் பங்கெடுப்பது சில சமயங்களில் மறுக்கப்பட்டு இருந்தது. கத்தோலிக்க மதக் குழந்தைகள், தன் பெற்றோர்களின் கண்முன்பாகவே, புரோட்டஸ்டெண்ட் பள்ளிகளுக்குக் கட்டாயமாக அனுப்பப் பட்டனர். கத்தோலிக்கர்களைப் போல தாழ்த்தப்பட்டவர்களும் எண்ணற்ற இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

□□

படிப்பகம்

www.padippakam.com

## அத்தியாயம்—8

# இந்துக்களும் மனச்சாட்சித் தேவையும்

தாழ்த்தப்பட்டவர்கள் அனைவருக்கும் சமஉரிமை கோரி போராடியபொழுதெல்லாம் இந்துக்கள் அவர்களைத் தாக்கியுள்ளனர். இந்துக்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் வழக்குகள் எல்லாம் இத்தகைய வழக்குகளே. தாழ்த்தப்பட்டவர்கள் ஊர்வலம் செல்ல விரும்பினால் அவர்கள் ஊர்வலம் தடுக்கப்படுகிறது. ஆனால் அதே மாதிரியான ஊர்வலத்தை இந்துக்கள் நடத்தும் பொழுது தாழ்த்தப்பட்டவர்கள் எந்த எதிர்ப்பும் காட்டுவதில்லையே. தாழ்த்தப்பட்டவர்கள் தங்கம், வெள்ளி ஆபரணங்களை அணிந்துகொள்ள விரும்பினால் அந்த உரிமை மறுக்கப்படுகிறது. ஆனால் இந்துக்கள் இவ்வாறு அணிவதைத் தாழ்த்தப்பட்டவர்கள் எதிர்ப்பதில்லையே. தங்கள் குழந்தைகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் பள்ளிக்கு அனுப்பும்பொழுது தடுக்கப் படுகிறார்கள். ஆனால் இந்துக்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கப்பெற்றுள்ள முழு உரிமையையும் இவர்கள் மறுப்பதில்லையே. தாழ்த்தப்பட்டவர்கள் கிணற்றில் இருந்து நீர் எடுக்கத் தடுக்கப்படுகிறது. ஆனால் இந்துக்கள் இவ்வாறு நீர் எடுப்பதை இவர்கள் தடுப்பதில்லையே. இவ்வாறு

www.padippakam.com



அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் அதற்கு அவசிய மில்லை. விசயம் சாதாரணமானது; புரிந்துகொள்வதற்கு எளிமையானது. தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுக்கென்று ஒரு தனித்த சலுகையாகச் சுதந்திரத்தைக் கோரவில்லை. இவர்கள் கோரும் சுதந்திரம் இந்துக்களின் உரிமை களோடு முரண்படுபவையும் அல்ல. அப்படியானால் இந்துக்கள் இந்த அப்பாவிகளை அடக்குவது ஏன்? முற்று முழுதான, நியாயமான செயல்களை ஒடுக்குவது ஏன்? இந்து ஒருவன் சட்ட விரோதச் செயலைச் சட்ட பூர்வ மானது என ஏன் நினைக்கிறான்? தாழ்த்தப்பட்டவர் களிடம் இந்துக்கள் கொண்டுள்ள அணுகுமுறையில் உள்ள தவறுகளையும் கோளாறுகளையும் சமூக விரோதச் செயல்கள் என்ற பெயரில் இல்லாமல் வேறு எந்தப் பெயர் இட்டும் அழைக்க முடியாது என்பதை ஏன் எந்த ஒரு இந்துவும் உணருவதில்லை.

இச்செயல்களை அநியாயம் என்றோ அவமரியாதை என்றோ வெறுமனே சொல்லிவிட முடியாது. இவை மனிதனுக்கு மனிதன் காட்டும் அநாகரிகத்தின் மொத்த அடையாளங்கள். ஒரு நோயாளி தாழ்த்தப்பட்டவர் என் பதால் ஒரு மருத்துவர் அவருக்கு மருத்துவம் பார்க்க வில்லை. மொத்தக் கிராமமே தாழ்த்தப்பட்டவர்களின் குடிசைகளுக்குத் தீ வைக்கிறது. அவர்கள் கிணற்றில் மலத்தைக் கொட்டுகிறது. இவையெல்லாம் காட்டு மிராண்டித்தனம் அல்ல என்றால், பின் எதைத்தான் காட்டுமிராண்டித்தனம் என்பது? ஏன் இந்து மனச்சாட்சி அற்றவனாக இருக்கிறான்? என்ற கேள்வி எழுகிறது.

இக்கேள்விகளுக்கு ஒரே ஒரு பதில்தான் உண்டு. வேறு நாடுகளில் பொருளாதார, சமூக அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்ட வர்க்கக் கட்டுமானம் இருந் தது. அடிமைத்தனத்திற்கும் பண்ணையடிமைத்தனத்

www.padippakam.com



திற்கும் மதம் அடிப்படைக் காரணமாய் இருக்கவில்லை. தீண்டாமை என்பது இந்துக்களுக்குப் பொருளாதார நன்மைகள் அளித்தபோதிலும், இது (தீண்டாமை) முக்கியமாக மதத்தின் அடிப்படையில்தான் எழுந்தது. பொருளாதார, சமூக நலன்களில் புனிதம் என்பதற்கு இடமில்லை. காலத்திற்கும், சூழலுக்கும் இசைய இந் நலன்கள் வளைந்து கொடுக்கும் அடிமைத்தனமும், பண்ணையடிமைத்தனமும் அழிந்து போனதற்கும் தீண்டாமை அழியாமல் இருப்பதற்கும் இதுதான் விரிவான விளக்கம். மற்ற இரண்டு கேள்விகளுக்கும் இது தான் விடை. இந்து தீண்டாமையைக் கடைப்பிடிப்ப தற்குக் காரணம் மதம் அவனை அவ்வாறு செய்யச் சொல் கிறது. நடப்பில் நிலவிவரும் சமூகம் தெய்வீகமானது; ஆகவே புனிதமானது என்று இந்துவுக்கு அவன் மதம் சொல்லியிருக்கிறது. அத்தோடு மட்டுமா, இச்சமூகத்தை எவ்வழியிலும் கட்டிக்காக்கும் கடமையையும் இந்துவின் மீதே சுமத்தியுமிருக்கிறது. ஆகவேதான், தாழ்த்தப்பட்ட வர்கள் இச்சமூக அமைப்பை எதிர்த்து எழுச்சி கொள்ளும் போதெல்லாம் இந்து அவ்வெழுச்சியைச் சட்டவிரோத மான செயல்களினால் இரக்கமின்றி அடக்கி ஒடுக்கு கிறான். மனிதாபிமானத்தின் பெயரால் விடும் அழைப்பை இந்து சட்டை செய்வதே இல்லை. காரணம் தாழ்த்தப்பட்டவர்களை மனிதர்களாகப் பார்க்கும்படி மதம் அவனுக்குச் சொல்லவில்லை. தாழ்த்தப்பட்டவர் களின்மீது நடத்தப்படும் தாக்குதல்கள், சூறையாடல்கள், தீவைப்புகள், இன்னும் ஏனைய கொடுமைகள் குறித்து இந்துவின் மனச்சாட்சி உறுத்துவதேயில்லை. காரணம் சமூக அமைப்பைக் காக்கச் செய்யும் எந்த ஒரு செயல் பாடும் பாவமில்லை என அவன் மதம் சொல்லியிருக் கிறது.

தங்கள் மதத்தைக் கேலி செய்யவே இவ்வாறு சொல்லப்படுவதாக எண்ணற்ற இந்துக்கள் கருதுகின்

படிப்பகம்

www.padippakam.com



றனர். இந்தச் சமூகத்தை நிர்மாணித்த மனுவின் சூத்திரங்களை மேற்கோளாகக் காட்டுவதே அக்குற்றச்சாட்டை மறுப்பதற்கான ஒரு சரியான வழியாகும். நான் சொல்வதை மறுக்கும் ஒருவர், தீண்டாமை குறித்தும் தாழ்த்தப்பட்டவர் குறித்தும், இவர்களிடம் இந்துக்கள் கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்தும் மனு கூறியுள்ள பின்வரும் கட்டளைகளைப் படிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

(1) பிரம்மாவின் முகத்திலிருந்தும், தோள்களிலிருந்தும், தொடைகளிலிருந்தும், பாதங்களிலிருந்தும் பிறந்தவர்களைக் கொண்ட சமூகத்திலிருந்து, இந்த உலகத்தில் உள்ள தஸ்யூக்கள் என அழைக்கப்படும் அனைத்துப் பழங்குடி மக்களும் விலக்கி வைக்கப்பட்டுள்ளனர்; அவர்கள் காட்டுமிராண்டி மொழி பேசினாலும் சரி அல்லது ஆரிய மொழி பேசினாலும் சரி.

(2) மரத்தடி, இடுகாடு, மலைத் தோப்புகள் ஆகிய இடங்களில் இவர்கள் (பழங்குடியினர்) வசிக்க வேண்டும். தங்களுக்கெனச் சில அடையாளங்களை வைத்திருக்க வேண்டும். தங்கள் குலத்தொழில் செய்து உயிர் பிழைக்க வேண்டும்.

(3) சண்டாளர்களும், ஸ்வபாகர்களும் கிராமத்திற்கு வெளியே வசித்துவர வேண்டும். நாய்களும் கழுதைகளுமே அவர்கள் சொத்து.

(4) பிணத்தின் ஆடைகளையே இவர்கள் அணிய வேண்டும் உடைசல் பாத்திரங்கள் மூலமே உணவு உண்ணவேண்டும். இரும்பே இவர்கள் ஆபரணங்கள். நாடோடிகளாகவே இவர்கள் திரியவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



(5) மதக்கடமைகளை நிறைவேற்றிய ஒருவர் இவர்களோடு உறவு வைத்துக்கொள்ளக்கூடாது. தனக்குச் சமமானவர்களோடுதான் அவர் கொள்வினை, கொடுப்பினை, திருமண உறவு ஆகியன வைத்திருக்கவேண்டும்.

(6) இவர்களுக்கு நேரடியாக உணவு பரிமாறாமல் உடைந்த பாத்திரங்களில்தான் உணவு வழங்க வேண்டும். இரவு நேரங்களில் இவர்கள் கிராமங்களிலோ நகரங்களிலோ நடமாடக் கூடாது.

(7) பகலில்தான் இவர்கள் தங்களின் வேலைகளின் பொருட்டு வெளியில் வரவேண்டும் அரசனின் கட்டளைப்படி வித்தியாசமான அடையாளங்கள் மூலம் தங்களைத் தனித்துக் காட்டவேண்டும். அனாதைப் பிணங்களை இவர்கள்தான் எடுத்துச் செல்லவேண்டும். இதுதான் நடைமுறை விதி.

(8) அரசனின் ஆணையின் பேரில், சட்டம் கூறியபடி கொலைக்குற்றவாளிகளைக் கொல்வது இவர்கள் வேலை. குற்றவாளிகளின் உடைகள், படுக்கை, ஆபரணங்கள் ஆகியவற்றை இவர்கள் எடுத்துக்கொள்ளலாம்.

(9) தாழ்ந்த சாதிப்பெண் ஒருத்தியிடம் உறவு வைத்திருப்பவனுக்குத் தண்டனை மரணமே.

(10) ஒரு இரு பிறப்பாளரை வேறொரு இரு பிறப்பாளர்தான் தொடவேண்டும் சண்டாளர்களோ தாழ்ந்த சாதியினரோ அவர்களைத் தொட்டுத் தீட்டு ஏற்படுத்தினால் அவர்களுக்கு மரணமே தண்டனை.

தீண்டாமை நீடிப்பதற்கும், தாழ்த்தப்பட்டவர்களிடம் இந்துக்கள் மனசாட்சி இலலாமல் நடந்துகொள்வதற்கும், இந்துக்களின் சட்ட விரோதச் செயல்களுக்கும்

www.padippakam.com



இந்து மதம்தான் காரணம் என்பதை மனுவின் மேற் கண்ட கட்டளைகளைப் படிக்கும் ஒருவராவது மறுத்து விடமுடியுமா? தாழ்த்தப்பட்டவர்கள் என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன செய்யக் கூடாது என்ற விவரங் களை இதற்கு முந்தைய அத்தியாயங்களில் விரிவாகப் பார்த்தோமல்லவா! அவை உண்மையில் இந்தப் பத்து கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டவையே. மனுவின் கட்டளைகளை வெறுமனே பின்பற்றுவதுதான் இந்துக்களின் வேலையே! இந்துக்கள் தாழ்த்தப்பட்டவர் களைத் தீண்டாமல் இருப்பதற்கும், தாழ்த்தப்பட்டவர் கள் இந்துக்களைத் தீண்டுவது குற்றம் எனக் கருதுவதற் கும் மனுவின் கட்டளை 5உம், 10உம் அடிப்படைகளாக இருக்கின்றன. இந்துக்கள் தாழ்த்தப்பட்டவர்களைப் பிரித்து ஒதுக்கி வைத்திருப்பதற்கு மனுவின் கட்டளை 3 காரணமாக இருக்கின்றது. தாழ்த்தப்பட்டவர்கள் சுத்த மான ஆடை அணிவதையோ தங்க ஆபரணங்கள் அணிவ தையோ இந்து தடுப்பதற்கு மனுவின் கட்டளை 8 காரண மாக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் செல்வம், சொத்து சேர்ப்பதை இந்து சகித்துக்கொள்ள முடியா மைக்கு மனுவின் கட்டளை 3 காரணமாக இருக்கிறது.

இப்பிரச்சினையை மேலும் விவரிக்க அவசியமில்லை. தாழ்த்தப்பட்டவர்களின் தலைவிதிக்கு முக்கியக் காரண மாயிருப்பது இந்து மதமும் அதன் போதனைகளுமே என்பதில் விவாதத்திற்கு இடமில்லை. புறச்சமயமும் கிறித்துவமும் அடிமை முறையோடு கொண்டிருந்த உறவையும், இந்து மதம் தீண்டாமையோடு கொண்டி ருந்த உறவையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மனித நிறுவனங் களின் மீது இவ்விரண்டு மதங்களும் செலுத்திய பாதிப்பு கள் எவ்வளவு வேறுபாடானவை என்பதையும், கிறிஸ்துவ மதத்தின் பாதிப்பு அந்நிறுவனங்களை எவ்வாறு மேன்மை யுறச் செய்தது என்பதையும், இந்து மதத்தின் பாதிப்பு

படிப்பகம்

www.padippakam.com



எவ்வாறு இழிவுறச் செய்தது என்பதையும் தெளிவாக அறியலாம். தீண்டாமையை அடிமை முறையோடு ஒப்பிட விரும்பும் ஒருவர், இரண்டிற்குமிடையில் முரண் இருப்பதை உணர முடியாது. சட்ட ரீதியாக அடிமையொருவன் சுதந்திரமானவன் அல்ல; ஆனால் சமூக ரீதியாகத் தன்னுடைய ஆளுமையை வளர்த்துக்கொள்ள அனைத்துச் சுதந்திரத்தையும் பெற்றுள்ளான். ஆனால் தீண்டத்தகாதவனோ சட்ட ரீதியாகச் சுதந்திரமானவன். ஆனால் சமூக ரீதியாகத் தன்னுடைய ஆளுமையை வளர்த்துக் கொள்ள எந்தச் சுதந்திரமும் இல்லை.

இது ஒரு வெளிப்படையான முரண். இந்த முரணிற்கு என்ன விளக்கம் தரமுடியும்? இதற்கு ஒரே ஒரு விளக்கம் தான் இருக்கிறது. அடிமைக்கு ஆதரவாக மதம் அங்கே நின்றது ஆனால் (இங்கு) மதம் தாழ்த்தப்பட்டவர்க்கு எதிராக நிற்கிறது. அடிமை ஒரு மனிதனல்ல என உரோமன் நாட்டுச் சட்டம் அறிவித்திருந்தது. ஆனால் உரோமன் நாட்டு மதமோ அதனை எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ளவில்லை. சட்டத்தைச் சமூகத் தளத்திற்குக் கொண்டுசெல்வதை உரோம் நாட்டு மதம் தடுத்து விட்டது அடிமையைத் தோழமை உறவுக்கு தகுதியுடைய மனிதனாகவே நடத்தியது. தாழ்த்தப்பட்டவர் ஒரு மனிதனே அல்ல என இந்துச் சட்டம் அறிவித்தது உரோம் மதத்திற்கு மாறாக இந்து மதமோ, இந்தக் கொள்கையை ஒத்துக்கொண்டதோடு மட்டுமல்ல; அதனைச் சமூகத் தளத்திற்கும் எடுத்துச் சென்றது. இந்துச் சட்டம், தாழ்த்தப்பட்டவரை மனிதனாக மதிப்பதில்லை. அதைப் போலவே இந்து மதம் அவனைத் தோழமைக்குரிய மனித உயிராகப் பார்ப்பதில்லை. உரோம் மதம் அடிமையைச் சமூக இழிவிலிருந்து காப்பாற்றியதால் அவனைச் சட்ட ரீதியான இழிவிலிருந்தும் காப்பாற்றியது என்பதில் ஐயமில்லை. அவனை மூன்று வழிகளில் சட்ட ரீதியான இழி

www.padippakam.com



விலிருந்து காப்பாற்றியது. மிகவும் புனிதமான ஒரு இடத்தில் நுழைய அவனுக்கும் அனுமதி வழங்கியது அவ்வழிகளில் ஒன்று.

''உரோம் மதம் அடிமைக்குப் பகையானதாக இல்லை. அடிமைக்குத் தன் ஆலயக் கதவுகளை மூடிக்கொள்ள வில்லை. தன் மத விழாக்களிலிருந்து அவனை ஒதுக்கி வைக்கவில்லை. சில சடங்குகளிலிருந்து அடிமைகள் விலக்கப்பட்டிருந்தார்கள் என்றால் அந்த விலக்கு சுதந்திர மனிதர்களுக்கும், பெண்களுக்கும் சேர்த்துத்தான். போனா டீ, வெஸ்டா, சிரஸ் ஆகிய சடங்குகளிலிருந்து ஆண்களும், சில சடங்குகளிலிருந்து பெண்களும் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். சில கோரிக்கைகளுக்காக, பழைய உரோம் தெய்வங்களை ஜெபம் செய்யும்போது அக்குடும்பத்தோடு அடிமையும் சேர்த்துக்கொள்ளப்படு வார்கள். கடவுளின் குடும்பப் பாதுகாப்பின் கீழ் தான் இருப்பதாகத் தன்னைக் கருதிக்கொள்ள முடிந்தது. வெஸ்ட்டா புரோகிதராகச் சுதந்திரப் பெண்கள் இருக்க வேண்டும் என அகஸ்தஸ் ஆணையிட்டிருந்தார். அடிமை யின் கல்லறையைப் புனிதமாகக் கருத உரோம் நாட்டுச் சட்டம் வலியுறுத்தியது உரோம் நாட்டுப் புராணிகம் அடிமையின் ஆத்மாவிற்கெனத் தனித்த சொர்க்கத் தையோ நரகத்தையோ ஒதுக்கி வைக்கவில்லை. அடிமை யின் உடலும் உயிரும், எஜமானனின் உடலையும் உயிரை யும் போன்றதுதான் என ஜுவனலே (juvenale) ஒத்துக் கொள்கிறார்.

உரோம் மதம் அடிமையைக் காப்பாற்றிய இரண்டா வது வழி பின் வருமாறு:

உரோம் நகரப் படையதிகாரி முன்பு, ஒரு அடிமை தன் எஜமான் தனக்கிழைத்த தீங்குகளை வழக்காகக் கொண்டு செல்ல அனுமதித்தது. இது ஒரு மதச்சார்பற்ற

www.padippakam.com



தீர்வு ஆகும். மேலும் உரோம் மதம் மற்றொரு சரியான தீர்வையும் வைத்திருந்தது. ஒரு அடிமை தானே முன் வந்து கருணையுள்ள எஜமானருக்குத் தன்னை விற்கும்படி கோரமுடியும் என்பதே அது.

அடிமையை உரோம் மதம் காப்பாற்றிய மூன்றாவது வழியானது: மனித உயிர் என்ற முறையில் அவனுடைய ஆளுமையின் புனிதத்தை உரோம் சட்டம் அழித்து விடாமல் காப்பாற்றியதாகும்.

மனித உறவுகளுக்கும், தோழமைக்கும் பொருத்த மற்றவனாக அடிமையை மதம் கருதவில்லை. உரோம் அடிமையைப் பொறுத்த அளவில் இது ஒரு மிகப் பெரும் கருணை ஆகும்.

அடிமைகளின் கைகளிலிருந்து காய்கறிகள் பால், வெண்ணெய் அல்லது நீர், அல்லது மது ஆகியவற்றை வாங்குவதை உரோம் சமூகம் தடுத்திருந்தால், அடிமைகள் தங்களைத் தீண்டுவதை-தங்கள் வீட்டிற்குள் நடமாடுவதை—தங்களுடன் பயணம் செய்வதை—இன்ன பிற செயல்களை—அச்சமூகம் தடுத்திருந்தால், ஒரு எஜமான் தன் அடிமையை அரைக்காட்டுமிராண்டித்தனத்திலிருந்து ஒரு பண்பட்ட நிலைக்கு உயர்த்துவதற்குச் சாத்தியமிருந்திருக்குமா? நிச்சயமாக அதற்கான சாத்தியம் இருந்திருக்காது. இதற்கான காரணம் அடிமை தாழ்த்தப்பட்டவனாய் கருதப்படவில்லை. அதனால், அவன் எஜமான் அவனைப் பயன்படுத்தி உயர்த்த முடிந்தது. எனவே நாம் மீண்டும் அதே முடிவுக்கு வருகிறோம் (அடிமையின் ஆளுமையைச் சமூகம் அங்கீகரித்தது அதனால் அவன் அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டான். இந்துச் சமூகமோ. தாழ்த்தப்படாதவனின் ஆளுமையை அங்கீகரிக்கவில்லை; அவனை அசுத்தமானவனாகப் பார்த்தது. இது மனித உறவுக்கும் பொது உறவுக்கும்

www.padippakam.com



தகுதியற்றவனாக அவனை ஆக்கியது. இந்துச் சமூகத்தின் இவ்வணுகு முறையே அவனை அழித்தது.)

அடிமைக்கும் சமூகத்தின் பிற பகுதிகளுக்கும் இடையே அல்லது மத அடிப்படையில் எந்தப் பெரும் பிளவும் இல்லை. மேலெழுந்தவாரியான தோற்றத்தில் ஒரு அடிமை சுதந்திர மனிதனிலிருந்து வேறுபட்டு நிற்கவில்லை. நிறம் உடை ஆகியவை அவன் சூழலை வேறுபடுத்திக் காட்டவில்லை. அவன் சுதந்திரமான மனிதனாகவே இருந்து வந்தான். நகரப் பஞ்சாயத்துக்களில், அரசாங்க வேலைகளில், வணிகத்தில் அவன் சுதந்திர மனிதர்களைப் போலவே வாழ்க்கையில் பங்கெடுத்து வந்தான். சட்டத்தின் முன் குறிக்கப்பட்டுள்ள உரிமைகளைக் காட்டிலும் நடைமுறை யதார்த்தத்தில் சமமாக நடத்தப்படுவதே தனியொருவனுக்கு மிகவும் முக்கியமாகும். அடிமைக்கும் சுதந்திர மனிதனுக்குமிடையே மிகச் சிறிய தடையே இருந்து வந்தது. அடிமைக்கும் சுதந்திரமானவனுக்குமிடையே திருமணக் கலப்பு என்பது பரவலாகவே நடைமுறையில் இருந்தது. அடிமை அந்தஸ்து என்பது ஒரு பாவக் கறையாகக் கருதப்படவில்லை. அடிமை தாழ்த்தப்படாதவனாக - மரியாதைக்கு உரியவனாகவே அணுகப்பட்டான்.

உரோம் மதம் அடிமைகளிடம் கொண்டிருந்த அணுகுமுறையே இவ்வனைத்திற்கும் காரணமாக இருந்தது.

கிறித்துவமதம் அடிமை முறையோடு கொண்டிருந்த அணுகுமுறையைப் பற்றி விரிவாகப் பேச இங்கு இடமில்லை. ஆனால் இது புறச்சமயத்திலிருந்து வேறுபட்டு இருந்தது. அமெரிக்காவில் அடிமை முறை இருந்த காலத்தில் நீக்ரோ அடிமைகளைக் கிறித்துவர்களாக மதம் மாற்ற பாதிரிமார்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்ற செய்தி பலருக்குத் தெரிந்து இருக்காது. ஒரு அடிமை

www.padippakam.com



கிறித்துவனாக மாறிய பின்னும் அடிமையாக நீடித்து வருவது கிறித்துவச் சமயத்தை இழிவுபடுத்துவதாக அப்பாதிரிகள் நினைத்ததே இதற்குக் காரணமாகும். அவர்கள் கருத்துப்படி ஒரு கிறித்துவன் மற்றொரு கிறித்துவனை அடிமையாக வைத்திருக்க முடியாது. சகதோழனாகவே பார்க்க வேண்டும்.

தொகுத்துச் சொன்னால் சட்டமும் மதமும் மனித நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் இரு சக்திகள் ஆகும் சில சமயங்களில் இவை தங்களுக்குள் ஏவல்செய்து கொள்ளும். சில சமயங்களில் இவை ஒன்றை ஒன்று எதிர்த்தும் பணியாற்றும். இந்த இரு சக்திகளில் சட்டம் தனி மனிதன் சம்பந்தப்பட்டது. மதமோ பொதுவானது சட்டம் தனி மனிதன் சம்பந்தப்பட்டதால் அதில் அநீதியும் சமத்துவமின்மையும் இருப்பதற்குச் சாத்தியமுண்டு. ஆனால் மதம் பொதுவானது என்பதால் அது பாரபட்சமற்றதாக இருக்க வேண்டும். மதம் பாரபட்சமற்றதாக இருந்து வந்தால் சட்டம் ஏற்படுத்திய ஏற்றத்தாழ்வைத் தோற்கடிக்கும் திறனுள்ளதாய் இருக்கும். உரோமாபுரியின் அடிமைகளைப் பொறுத்தமட்டில் உண்மையில் இதுதான் நடந்தேறியது. ஆகவே மதம் ஒரு மனிதனை மேம்படுத்தவே செய்யும். அவனைத் தாழ்த்தாது என நம்பப்பட்டது. இந்துயிசம் ஒரு விதிவிலக்காகும் இது தாழ்த்தப்பட்டவர்களைக் கீழ்நிலை மக்களாக மாற்றியது இந்துக்களைக் காட்டுமிராண்டிகளாக்கியது. இச்சமூக அமைப்பிலிருந்து கீழ் நிலை மக்களோ காட்டுமிராண்டிகளோ தப்பிப்பதற்கு எந்த வழியுமில்லை. □□

படிப்பகம்

www.padippakam.com

## அத்தியாயம்—9

# இந்துக்களும் சமூக மனச்சாட்சியின் தேவையும்

தாழ்த்தப்பட்டவர்களின் துயரமான சூழ்நிலையை உணரும் எவருமே ''தாழ்த்தப்பட்டவர்களுக்கு நாம் ஏதாவது செய்தாகவேண்டும்'' என்றே தங்கள் பேச்சைத் தொடங்குவார்கள். இப்பிரச்சினையில் நாட்டமுள்ள ஒருவராவது ''இந்துக்களைத் திருத்த நாம் ஏதாவது செய்தாக வேண்டும்'' எனக் கூறுவதைக் கேட்க முடியாது. தாழ்த்தப்பட்டவனின் ஒழுங்கீனமே தீண்டாமைக்குக் காரணம் என்பது போலவும், அவனது நிலைமைக்கு அவனே முழுக்காரணம் என்பது போலக் கருதப்பட்டும் திருத்தப்படவேண்டியவன் தாழ்த்தப்பட்டவனே எனப் பொதுவாகக் கருதப்பட்டும் வருகிறது. மக்களைச் சீர் திருத்தும் மதகுருமார்களின் நிறுவனம் என ஒன்று இருக்குமேயானால் அது பணியாற்றக்கூடியது தாழ்த்தப் பட்டோரிடையேதான். இந்துக்களைப் பொறுத்தமட்டில் செய்யவேண்டியது ஒன்றுமே இல்லை. இந்து ஒருவன் நல்ல சிந்தனையோடு, நற்பண்புகளோடு, நன்நடத்தைக ளோடு இருக்கிறான். அவன் ஒரு முழுமனிதன், அவனிடம்

www.padippakam.com



தவறேதும் இல்லை. அவன் பாவப்பட்டவனுமல்ல. இதுவே பொதுவான கருத்தாக இருக்கிறது.

ஆனால் எதார்த்த நடைமுறை என்ன? இந்துக்களிடம் தவறேதும் இல்லை, தாழ்த்தப்பட்டவர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்குத் தாழ்த்தப்பட்டவர்களே காரணமாக இருக்கிறார்கள் என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. யூதர்கள் விஷயத்தில் கிறித்துவர்கள் நடந்துகொண்ட மனிதாபிமானமற்ற அணுகுமுறைகளை நியாயப்படுத்தி முன்வைக்கப்பட்ட வாதங்களைப் போன்றதுதான் இதுவும். இந்த வாதத்திற்குக் தகுந்த பதிலடியாக யூதர்கள் சார்பாக திரு லூயிஸ் கோல்டிங் கிறித்துவர்கள் முன்னே முன்வைத்துள்ளார். யூதப் பிரச்சினையின் காரணம் பற்றி விவாதிக்கும்போது பின்வருமாறு கூறுகிறார்:

''யூதப்பிரச்சினை என்பது சாராம்சத்தில் புறச்சமயப் பிரச்சினைதான் என்றே நான் கூறுகிறேன். இதை விளக்க எல்லோருக்கும் புரியக்கூடிய ஒரு எளிய உதாரணத்தைக் கூறுகிறேன். ஜான்சுமித் என்பவர் எனக்கு மிக நெருக்கமான அண்டை வீட்டுக்காரர். இவர் பேடி என்ற ஒரு நாயை வளர்த்து வந்தார். இது ஒரு அயர்லாந்து பகுதி கலப்பின நாய் ஆகும். எனது நண்பர் இந்நாயைக் கண்ணின் மணிபோலப் பார்த்து வந்தார். இந்த நாய்க்கு ஸ்காட்லாந்து பகுதி நாய்களைக் கண்டால் பிடிக்காது. இந்நாய்க்கு இருபது அடி தூரத்தில் அந்த நாய்கள் ஏதேனும் வந்தால் பிறர் காது செவிடாகும்படி குரைக்க ஆரம்பித்து விடும். ஜான் சுமித் இதற்காக வருத்தப்படுவார். ஆகவே இந்நாயின் பக்கம் வாயில்லாப் பூச்சிகள் எந்த ஒன்றும் செல்லாவண்ணம் மிகக் கவனமாகப் பார்த்துக் கொண்டார். பேடி என்ற இந்த நாயின் மீது அவர் மிகுந்த அன்பு வைத்திருந்தார் இருப்பினும் நாயின் இந்தப் பழக்கத்திற்குக் காரணம் அதனுள் ஏதேனும் ஒரு வெறுப்பு தொடக்கத்திலிருந்தே இருக்கக்கூடும் என்றே

www.padippakam.com

C



அவர் கருதினார். நானும் அப்படியே கருதுகிறேன். ஸ்காட்லாந்து பகுதியைச் சார்ந்த நாய்கள்தான் இந்தப் பிரச்சினைக்குக் காரணமாக இருக்கிறது என நாங்கள் கருதவில்லை. ஏதேனும் ஒரு நாய் மாலைநேரத்தில் மோப்பம் பிடித்தபடி அமைதியாக நின்றுகொண்டிருந்தால் உடனே பேடி அதைப் பார்த்துக் குறைக்க ஆரம்பித்து விடும். அந்த நாயின் இருப்பே இதனைச் சண்டைக்குத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.''

பேடி நாயை இந்துக்களோடும், ஸ்காட்லாந்து பகுதி நாயைத் தாழ்த்தப்பட்டவர்களோடும் ஒப்பிட்டால் கோல்டிங் வைக்கும் வாதமானது, கிறித்துவர்களைப் போலவே இந்துக்களுக்கும் பொருத்தமாக இருக்கிறது. திரு. கோல்டிங் கூறிய கருத்துப்படி பார்த்தால் யூதப் பிரச்சினை உண்மையில் கிறித்துவர்கள் பிரச்சினையாகும். அதைப்போலத் தாழ்த்தப்பட்டவர் பிரச்சினை என்பது இந்துக்கள் பிரச்சினையாகும்.

தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுக்குப் பிரச்சினையாக இருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்ளும் அளவிற்கு இந்துக்கள் விழிப்புணர்வோடு இருக்கிறார்களா? அவர்கள் இதைப்பற்றிக் கவலைப்படுகிறார்களா? இப்பிரச்சினை அவர்கள் மனத்தை அழுத்துகிறதா? உண்மையை உறுதிப் படுத்திக்கொள்ள சில வெளிப்படையான சோதனைகளை மேற்கொள்ளலாம். அதில் ஒன்று, இப்பிரச்சினை குறித்துக் காணப்படும் எண்ணற்ற இலக்கியங்களாகும். அமெரிக்க நீக்ரோக்களைப் பற்றி வந்துள்ள இலக்கியங்களை ஒருவர் நிலையான அளவுகோலாக எடுத்துக் கொள்ளமுடியும். நீக்ரோக்கள் பிரச்சினை குறித்து அமெரிக்காவில் காணப்படும் மிகப்பெரும் எண்ணிக்கையிலான எழுத்து ஆதாரங்கள், ஒருவரை வியப்பில் ஆழ்த்தி விடும். பல்லாயிரக்கணக்கான தலைப்புகளில் நீக்ரோ



படிப்பகம்

www.padippakam.com



பிரச்சினை குறித்து ஒரு முழுமையான விவர அகராதியே அங்கு இருக்கிறது. இவ்விலக்கியங்கள் உண்மையில் கணக்கில் அடங்காதவை. நீக்ரோ பிரச்சினையை வெள்ளையர்கள் தங்கள் பிரச்சினையாகக் கருதுவதற்கான ஆதாரமே இவை. மதக்குருமார்கள், அரசியல் தத்துவ இயலாளர்கள், ராஜதந்திரிகள், மனித இன ஆய்வாளர்கள், சமூக விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், வணிகர்கள், சாதாரண குடிமக்கள் உள்ளிட்ட அமெரிக்காவின் அனைத்து வகைப்பட்ட மக்களையும் பல தலைமுறைகளாக இப்பிரச்சினை பாதித்து இருக்கிறது.

இந்தியாவிலோ தாழ்த்தப்பட்டவர்கள் குறித்து ஏதேனும் இலக்கியங்களைக் காணமுடியுமா? அரை டசன் துண்டறிக்கைகளுக்கு மேல் வேறு ஒன்றையும் காண முடியாது.

மற்றொரு சோதனை சமூக நடத்தை பற்றிய சோதனையாகும். பத்திரிக்கையில் காணப்பட்ட இரு நிகழ்ச்சிகளை நான் கீழே தந்துள்ளேன். அவற்றில் ஒன்று பின்வருமாறு:

''பிப்ரவரி 23ஆம் தேதியன்று லக்னோவைச் சேர்ந்த பேகம் கேன்ச் (Begum Canj) பகுதியில் சுமார் பதிமனாரு மணியளவில் பன்னிரண்டு அல்லது பதின்மூன்று பேர் நிலத்தைக் குடைந்து கொண்டிருந்தார்கள். நிலம் சரிந்து அனைவரும் புதைந்துவிட்டார்கள். ஒரு சிறுவனும் ஆறு பெண்களும் அதிலிருந்து மீட்கப்பட்டனர். அதில் ஒரு பெண் மட்டுமே பிழைக்க முடிந்தது. அப்பெண் மிர்யூரைச் சேர்ந்தவர் அப்பெண் கடுமையாகக்காயமுற்று இருநததோடு நிலைமையும் ஆபத்தாக இருந்தது. ஆனால் அப்பகுதி இந்துக்களோ அப்பெண்ணைப் படுக்க வைக்க ஒரு படுக்கையைத் தர மறுத்து விட்டனர். கடைசியாக ஒரு முஸ்லிம் படுக்கையைத் தந்தார். அப்பெண்ணை வீட்டிற்குக் கொண்டு சேர்க்க எந்த ஒரு இந்துவும் முன்

www.padippakam.com



வரவில்லை. கடைசியாக ஒரு தோட்டியை அழைத்து வந்து அப்பெண்ணைப் படுத்தபடியே அவர் வீட்டில் சேர்த்தனர்'' (பிரதாப், மார்ச் 5—1926)

இந்துக்கள் தாழ்த்தப்பட்டவர்களிடம் மனச்சாட்சி இல்லாமல் நடந்து கொள்வதற்குப் பின்வரும் ஒரு உதாரணம் நல்ல எடுத்துக்காட்டாகும். சங்ராம் பத்திரிக்கை நிருபர் கூறுகிறார்:

''கிறித்துவர்கள் மாப்ஸ் கிராமத்தில் (கோவா) அஜில் என்ற பெயரில் நடந்திவந்த ஒரு அனாதை இல்லத்தில் ஜூலை 8—1946 அன்று ஒரு பெண் மாண்டுவிட்டார் அப்பெண் இந்துவெனக் கருதப்பட்டார் ஒரு அனாதை. அவர் பிணத்தைப் புதைப்பதற்கும் ஈமச்சடங்குகள் செய்வதற்கும் உரியவர்கள் யாரும் இல்லாததால் அக்கிராம இந்துக்களே அதனைச் செய்ய முன்வந்தனர். அதற்காக நிதி திரட்டினர். அவர்கள் அநாதை இல்லத்திலிருந்து அப்பிணத்தை எடுக்கும் சமயத்தில் சில தாழ்த்தப்பட்டவர்கள் அப்பெண்ணை அடையாளம் கண்டனர். இறந்த அடபெண் தாழ்த்தப்பட்டவர் என்று தெரிந்தவுடனேயே இந்துக்கள் அப்பிணத்தைக் கீழே போட்டுவிட்டுச் சென்று விட்டனர்: அப்பெண்ணைப் புதைப்பதற்குத் திரட்டியநிதியைத் தங்களிடம் கொடுக்குமாறு தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக்களிடம் கோரினர். இப்பெண் இந்து எனச் சொல்லியே நிதி திரட்டியதாகவும் ஆகவே இதை தர முடியாது எனவும் இந்துக்கள் மறுத்தனர். அப்பெண் இநது அல்ல, தாழ்த்தப்பட்டவர். ஆகவே அப்பெண்ணின் ஈமச்சடங்கிற்கு நிதியைக் கொடுக்க முடியாது என்றனர். தாழ்த்தப்பட்டவர்கள் அப்பிணத்தைப புதைத்தனர். தாழ்த்தப்பட்டவர்கள் மீது இந்துக்கள் கொண்டுள்ள அன்பையும் நேசத்தையும் வெளிக்காட்டும் நல்ல ஆதாரம் இது'' (சங்ராம், ஜூலை 10, 1946)

செப்டம்பர் முதல் வாரத்தில் ஒருநாள் மாலை ருத்தர் பிராயக் இடத்திலுள்ள தர்ம சத்திரத்திற்கு ஒரு அரிசன்

படிப்பகம்

www.padippakam.com



வந்திருந்தார். அப்பகுதியில் இரவு நேரங்களில் புலி ஒன்று நடமாடுவதை அறிந்த அரிசன் அன்று இரவுமட்டும் சத்திரத்தின் ஏதாவது ஒரு மூலையில் தான் விடியும் வரை தங்கிக்கொள்வதாக அச்சத்திரப் பொறுப்பாளரிடம் அனுமதி கேட்டார். ஆனால் இரக்கமற்ற அந்தப் பொறுப்பாளரோ அரிசனனின் அந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்காமல் சத்திரத்தை மூடிவிட்டார். பாவப் பட்ட அந்த அரிசனனோ சத்திரத்திற்கு வெளியே ஒரு மூலையில் படுத்துக்கொண்டார் இரவு நேரத்தில் அங்கே வந்த புலி அவரைத் தாக்கி விட்டது. அம்மனிதர் ஆரோக்கியமானவராகவும் வலிமையானவராகவும் அச்ச மற்றவராகவும் இருந்ததால் புலியின் கழுத்தைப் பிடித்துக் கொண்டு "நான் புலியைப் பிடித்துவிட்டேன், யாராவது வந்து அதைக் கொல்லுங்கள்" எனச் சத்தமிட்டார். ஆனால் அந்த உயர்சாதி சத்திரப் பொறுப்பாளரோ கதவைத் திறக்கவில்லை. அல்லது வேறு வகையிலாவது அவருக்கு உதவவில்லை. ஆகவே அரிசனனின் பிடி தளர்ந்தவுடன் அப்புலி தப்பி ஓடிவிட்டது. இப்பொழுது அம்மனிதர் சிரி (கார்வால்) நகரில் மருத்துவம் பார்த்து வருகிறார். அவர் நிலைமை ஆபத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது." (மிளாப், அக்டோபர் 2— 1925)

தாழ்த்தப்பட்டவருக்குத் தான் என்ன செய்தோம் அல்லது தாழ்த்தப்பட்டோருக்கு என்ன நேரிடுகிறது என்பது பற்றி ஒரு இந்து கவலைப்படுவதே இல்லை என் பதையே மேற்கண்ட இரக்கமற்ற நிகழ்ச்சி வெளிக்காட்டு கிறது.

மூன்றாவது சோதனை தாழ்த்தப்பட்டவர்களின் வளர்ச்சிக்காகச் செய்யப்பட்ட பணிகளையும் தியாகங் களையும்பற்றிய சோதனையாகும். நீக்ரோக்களின் வளர்ச் சிக்காக அமெரிக்கர்கள் செய்த பணிகளையும் தியாகங்

www.padippakam.com



களையும் நமது நிலையான அளவுகோலாக இங்கே மீண்டும் எடுத்துக்கொள்வோம். நீக்ரோக்களின் கல்விக்காக வெள்ளையர்கள் அளித்த நன்கொடையைப் பாருங்கள்.

| [1]கொடையாளி | தொகை டாலர்களில் | கொடையாளி | தொகை டாலர்களில் |
|---|---|---|---|
| கேன் | 50,000 | மேசன் | 1,00,000 |
| கார்டன் | 5,000 | நான்பர்ட் | 40,000 |
| டிராப்டன் | 1,60,600 | ஹாரிசன் | 2,30,000 |
| ஒட்டிஞ்சர் | 500 | மஞ்சர் | 75 000 |
| கேம்ரிளி | 35,000 | கார்லிஸ் | 45,000 |
| ஜேர்ப்ஜி | 1,000 | ரோசன் பேனின் | 1,000 |
| | | பர்டன் | 1,000 |
| ஸ்டார்க் | 500 | ஹான்ராய் | 1 00,000 |
| ஹிட்டர் | 5,000 | ஹெண்ட் | 10 000 |
| கிளேடின் | 10 000 | டியூக் | 1,40 000 |
| உட் | 500 | மார்சிலியட் | 5 000 |

1. இந்தப் பட்டியலானது "நீக்ரோ" ஆண்டுப் புத்தகப் 931-32 பக்கப் 202இல் கொடுக்கப்பட்ட விவரங்களில் இருநத தயாரிக்கப்பட்டதாகும்.

www.padippakam.com



| | | | |
|---|---|---|---|
| ஹார்டனஸ் | 12,50,000 | மேசி | 25,000 |
| பீட்டி | 2,90 000 | நிக்கலோஸ் | 20,000 |
| மார்க்குவாண்ட் | 5,000 | ஹாரட்சன் | 15,00,000 |
| நியூட்டன் | 5,000 | கேச்சர் | 20,000 |
| ஹம்மிங்டன் | 25,000 | ரைட் | 10,000 |
| பெல்ப்ஸ் ஸ்டோர்க்ஸ் | 28 0,000 | பட்லர் | 30,000 |

இவை 1900க்கு முந்திய காலத்தைச் சேர்ந்தவை, [2] நீக்ரோக்களின் கல்வி வளர்ச்சிக்கு அவர்களே ஏற்படுத்தியுள்ள கல்வி நிதியை இதனோடு ஒப்பிட்டுப் பாருங்கள். (அ) ஏவரி நிதி (ஆ) விலாஸ் நன்கொடை (இ) ஆப்பிரிக்கா நிதி (ஈ) பக்கிங்காம் நிதி (உ) சார்ஜ்வாசிங்டன் கல்வி நிதி (எ) மினர் நிதி (ஏ) ஸ்டுவார்டு கிறித்துவ அமைப்பு (ஐ) டேனியல் ஹேண்ட் நிதி (ஒ) ஜான் ஸ்லேட்டர் நிதி (ஔ) பெல்ப்-ஸ்டோக்ஸ் நிதி.

இவற்றோடு கூட, கர்னீஜ கார்ப்பரேசன், ஜீலிஸ் ரோசன் வால்டுநிதி, ராக்பெல்லர் பொது நிதி போன்ற நிதி அமைப்புகள் செலவிடும் தொகை பற்றிய விவரங்கள் தெரியவில்லை. ஆனால் அவற்றின் எண்ணிக்கை மில்லியன் கணக்கில்தான் இருக்கும்.

நீக்ரோக்களின் கல்வி வளர்ச்சிக்கு மத நிறுவனங்கள் செலவிடும் தொகையை இத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். சில சுவையான விவரங்களைப் பார்க்கலாம்.

---

2. அந்த புத்தகம், பக்கம் 213-218

www.padippakam.com

| நிறுவனத்தின் பெயர் | ஆண்டுச் செலவு (டாலர்களில்) | நீக்ரோ கல்விக்கான நிலையான நிதி (டாலர்களில்) | பள்ளி தளவாடங்கள் இன்னும் பிறவற்றின் மதிப்பு (டாலர்களில் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அமெரிக்கன் பேப்டிஸ்ட் ஹோம் மிசன் போர்டு | 1,16,247 | 1,59,790 | 35,94,251 |
| நீக்ரோக்களுக்கான அமெரிக்கன் சர்ச் நிறுவனம் | 1,85,100 | 4,50,000 | 30,00,000 |
| அமெரிக்கன் மதநிறுவனச் சங்கம் | 3,68,057 | 32,28,421 | 32,00,000 |
| கிறிஸ்து சர்ச் (சீடர்கள்) ஒன்றிய கிறிஸ்துவ மத நிறுவனம் | 91,072 | — | 5,00,000 |

3. அதே புத்தகம், பக்கம் 213

படிப்பகம்

www.padippakam.com

| | | | |
|---|---|---|---|
| வட அமெரிக்க போர்டு கலர்டு மிசனுடைய லுத்ரன், எவஞ்சிலிக் கல் சினோடிகல் கான்பிரன்ஸ் | 74,900 | — | 1,75,000 |
| மெத்தாடிஸ்ட் எபிஸ்கோப்பல் சர்ச் கல்விக்கழகம், நீக்ரோக்களுக் கான நிறுவனங்கள் | 2,59,264 | 19,62,729 | 50,00,000 |
| பெண்களின் உள்நாட்டு மத நிறு வனக் கழகம், மெத்தாடிஸ்ட் எபிஸ்கோப்பல் சர்ச் | 1,04,925 | — | 3,60,000 |
| ஐக்கிய அமெரிக்காவில் உள்ள பிரிஸ்பைட்டீரியன் சர்ச், கறுப்பர் களுக்கான மத நிறுவனப் பகுதி | 4,05,327 | 19,94,032 | 35,60,000 |
| சுதந்திர மனிதர்களுக்கான மத நிறுவனத்தைச் சார்ந்த ஐக்கிய பிரஸ்பைட்டீரியன் சர்ச் கழகம் | 98,000 | 6,45,000 | 10,00,000 |

www.padippakam.com



1865க்கும் 1930க்கும் இடையில் மத, மற்றும் கருணை நிறுவனங்கள் நீக்ரோக்களின் வளர்ச்சிக்குச் செலவிட்ட தொகை 13,50,00,000 டாலர்கள். இவற்றில் 8,50,00,000 டாலர்கள் வெள்ளையர் தந்தவை.

தாழ்த்தப்பட்டவர்களின் வளர்ச்சிக்கு இந்துக்கள் செய்த பணிகள் அளித்த நன்கொடைகள் என்னென்ன? இந்துக்கள் பெருமிதம் கொள்ள முடிகின்ற ஒரே அமைப்பு அரிசன சேவை சங்கமாகும். இதன் மூலதனம் ரூ. 10 இலட்சத்திற்கு மேல் இருக்காது. இதன் ஆண்டுச் செலவு சில ஆயிரம் ரூபாய்க்குள்தான் இருக்கும். அதுவும்கூட, அற்பமான முக்கியத்துவமற்ற வேலைகளுக்குத்தான் செலவிடப்படுகிறது. இதுவும்கூட நலநிதி அல்ல. தாழ்த் தப்பட்டவர்களின் வாக்குகளை இந்துக்களுக்குத் திரட்டப் பயன்படும் ஒரு அரசியல் நிதி அமைப்பு ஆகும்.

ஏன் இந்த வேறுபாடு? நீக்ரோக்களின் வளர்ச்சிக்கு அமெரிக்கர்கள் கடுமையாக உழைப்பதும், பெரும் தியாகம் செய்வதும் ஏன்? தாழ்த்தப்பட்டவர்களின் வளர்ச்சியில் இந்துக்கள் எதுவும் செய்ய அக்கறை காட்டாதது ஏன்? அமெரிக்கர்களுக்குச் சமூக மனசாட்சி இருக்கிறது. இந்துக்களுக்கு அது இல்லை என்பதே அதற்கான பதிலாகும். நல்லது எது, கெட்டது எது? நன்மை எது, தீமை எது? ஒழுக்கம் எது, ஒழுக்கக்கேடு எது என்பது பற்றிய உணர்வு இந்துக்களுக்கு இல்லை என்று இதற்குப் பொருள் கொள்ளக்கூடாது. குறிப்பிட்ட மக்களோடு அதாவது தன் சாதி மக்களோடு இந்துவின் தார்மீகக் கடமை முடிந்துபோய் விடுகிறது. இதில்தான் தவறே இருக்கிறது.

திரு. எச். ஜே. பர்ட்டன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார். "ஒரு மனிதன் ஒழுக்கமானவன் என்றில்லாமலேயே சிறு சமூகத்தில் நல்ல மனிதனாக இருக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



சுயதல வாழ்க்கை நடத்தி வரும் ஒரு தனி மனிதனிடம் கூட நல்லொழுக்கத்தின் நிழல்களை அல்லது எதிர்பார்ப்பு களை உண்மையில் காண முடியும். எந்த ஒரு சமூகத்தி லும், கொள்ளையர் கூட்டத்திலும் கூட, அதற்கு விசுவாச மாக இருக்கும் ஒருவனிடம் நாம் காணும் ஏதேனும் ஒன்றை நற்பண்பாக் தவறாகக் கருதிக் கொள்கிறோம். கொள்ளையர்கள் தங்களுக்கிடையில் மரியாதையாக நடந்துகொண்டாலும் கொள்ளையனை நாம் மரியாதைக் குரியவனாகக் கருத முடியாது. வரையறுக்கப்பட்ட— குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டும் நல்ல உறுப்பினராக இருப்பவனை நற்பண்புள்ள ஒருவன் என அழைக்க முடியாது. மாறாகப் பரந்த சமுதாயத்திற்கு நல்ல உறுப் பினராக இருப்பவனையே நற்பண்பு உள்ளவராகக் கருத முடியும். இங்கு பரந்த சமுதாயம் என்பது எல்லாப் பிரிவு களையும் உள்ளடக்கிய எல்லாத் தேவைகளையும் உள் ளடக்கிய, முரண்பாடுகள் ஏதுமில்லாத ஒரு பரந்த அமைப்பையே குறிக்கிறது.

தாழ்த்தப்பட்டவர்கள் இந்துச் சமூகத்தைச் சேர்ந்த வர்கள் அல்ல. தாழ்த்தப்பட்டவர்களும், தானும், ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வு இந்துவுக்கும் இல்லை. அதனால்தான் இந்துக்களின் நடத்தைகளில் ஒரு தார்மீகப் பொறுப்பின்மை காணப்படுகிறது.

மனசாட்சி இல்லாததால்தான் தாழ்த்தப்பட்டவர் களின் வேதனைகளுக்குக் காரணமான அநீதிகளை எதிர்க் கும் ஒரு நியாய ஆவேசம் இந்துவிடம் இல்லை. இந்த அநியாயங்களும் அநீதிகளும் தவறாக இந்துவுக்குத் தெரிய வில்லை. தன் முடிவை மாற்றிக் கொள்ள மறுக்கிறான். இந்துவிடம் காணப்படும் மனச்சாட்சியின்மையே தீண் டாமை ஒழிப்பிற்கு எதிரான பெரிய தடைக்கல்லாக இருந்து வருகிறது. □□

www.padippakam.com

## அத்தியாயம்—10

# இந்துவும் சாதியில் அவன் கொண்டுள்ள நம்பிக்கையும்

இந்துச் சமூகச் சீர்த்திருத்தவாதிகளிடையே ஒரு மிதவாதப் பிரிவு இருந்து வருகிறது. இந்தப் பிரிவு தீண்டாமை என்பது சாதி அமைப்பிலிருந்து தனித்து நிற்பது எனக் கூறி வருகிறது. இவர்களின் இந்தக் கொள்கையின் காரணமாகச் சாதியமைப்பைத் தகர்க்காமலேயே தீண்டாமையை ஒழிப்பது சாத்தியமென்றும் கூறி வருகிறார்கள். மதச் சிந்தனை கொண்ட இந்துவோ சாதியமைப்பை ஒழிப்பதற்கு எதிராக இருப்பது போலவே தீண்டாமை ஒழிப்பிற்கும் எதிராக இருக்கிறார். சமூக சீர்திருத்தத்தை இரண்டு கட்டங்களாகச் செய்வதை இவர் எதிர்க்கிறார். காரணம் ஒரு கட்டத்தில் இவரும் அதனோடு உறவு வைத்து இருக்கிறார். ஆனால் அரசியல் சிந்தனை கொண்ட இந்துவோ இந்தக் கருத்தின் மீது மாளாக் காதல் கொண்டிருந்தார். இதற்கு இரண்டு காரணங்கள். முதலாவதாக, உலக அரங்கில் சனநாயகத்துக்கான சிறந்ததொரு எடுத்துக்காட்டாக அவர் தன்னைக் காட்டிக் கொள்ள முடிகிறது ஆனால் அவர் அவ்விதம் இல்லை. இரண்டாவதாக தீண்டாமையிலிருந்து சாதியைத் தனியாகப் பிரித்துவிடுவதன் மூலம் அவர் காங்கிரசைக் கைவிட வேண்டிய அவசியம் இல்லாமல் போய் விடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



சாதியமைப்பைத் தகர்க்காமலேயே தீண்டாமையை ஒழித்துவிடலாம் எனக் கருதுபவர்கள் தங்களுக்கு ஆதரவாக மனுஸ்மிருதி 10 ஆம் அத்தியாயத்திலுள்ள நான்காம் சூத்திரத்தைத் துணைக்கு அழைக்கிறார்கள். நான்கு வர்ணங்களே இருக்கின்றன. ஐந்தாவது என ஒரு வர்ணம் கிடையாது என மனு இந்தச் சூத்திரத்தில் கூறியுள்ளார். ஆகவே தாழ்த்தப்பட்டவர்கள் நான்காவது வர்ணத்திற்குள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் இவர்கள் சூத்திரர்களின் ஒரு பகுதிதான். சூத்திரர்களைத் தொடுவதற்கு எந்தத் தடையுமில்லை. அதைப் போலவே தாழ்த்தப்பட்டவர்களைத் தொடுவதற்கும் எந்தத் தடையும் இருக்க முடியாது என இதற்கு விளக்கம் தரப்படுகிறது. இம்மாதிரியான இட்டுக்கட்டல்கள் ஒரு இந்து அரசியல்வாதிக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கலாம். ஆனால் மனு சொல்ல வந்த செய்திக்கும் இதற்கும் எந்த உறவும் இல்லை. இந்தப் பாடல்களுக்கு வேறு ஒரு விளக்கமும் இருக்கிறது.

நான்கு வர்ணங்களுக்கு அப்பால் இருக்கும் மக்களை ஐந்தாம் வர்ணமாக அங்கீகரித்து நால் வருணத்தைப் பஞ்சவர்ணமாக மாற்ற மனு விரும்பவில்லை. ஐந்தாம் வர்ணம் இல்லையென்று மனு சொல்லியதன் பொருள் என்னவென்றால் நால் வர்ணமாக உள்ள இந்துச் சமூகத்தை ஐந்து வர்ணச் சமூகமாக மாற்றி இச்சமூகத்திற்குள் நான்காம் வர்ணத்திற்கு அப்பால் உள்ள மக்களை உள்ளிழுத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை என்பதேயாகும்.

நான்கு வர்ணத்திற்கு வெளியில்இருப்பவரைப் பயாஸ் அல்லது வர்ண பயாஸ் என அழைபபதன் மூலம் இந்த நோக்கத்தை மிகத் தெளிவாக முன்வைத்து விடுகிறார். பயாஸ் என்பதன் பொருள் நான்கு வர்ணததிற்கு வெளியில் இருப்பவர்கள் என்பதே. அனைத்து மக்களையும்

www.padippakam.com



நான்கு வர்ணத்திற்குள் உள்ளடக்க மனு விரும்பியிருந்தால் ஒரு சிலரை வர்ண பயாஸ் என்று அழைத்திருக்க வேண்டியதில்லை. உண்மையில் வர்ண பயாஸ் வகுப்பிற்குள் மனு இரண்டு துணைப் பிரிவுகளை அங்கீகரிக்கிறார். அவற்றை ஹினாஸ் என்றும் அண்டையி வசின்ஸ் என்றும் அழைக்கிறார். இந்த உண்மைகளை கணக்கில் கொண்டால் மனுஸ்மிருதி சூத்திரத்திற்கு வியாக்கியானங்கள் தருவதன் மூலம் தீண்டாமையைக் கடைப்பிடிப்பது மனுஸ்மிருதிக்கு எதிரானது என்றும், எனவே தீண்டாமை ஒழிப்பு இந்த மதத்திற்கு அப்பாற்பட்ட விசயமல்ல என்றும் வைதீக இந்துவை ஏமாற்றிவிட முடியாது என்பதைத் தெளிவாகக் காணலாம்.

மனுவின் இந்தப் பாடல் பற்றிய வியாக்கியானங்கள் ஒரு சராசரி இந்துவுக்கு அதிகப்படியான அறிவுஜீவித்தனமாக இருக்கும். அவனுக்குத் தெரிந்ததெல்லாம் இரண்டே இரண்டுதான். ஒன்று சமூக உறவுகளில் மூன்று தடைகளை அவன் கடைப்பிடிக்க வேண்டும். (1) கலந்துண்ணலுக்கு எதிரான தடை. (2) கலப்பு மணத்திற்கு எதிரான தடை. (3) சில குறிப்பிட்ட வகுப்பு மக்களைத் தொடுவதற்குத் தடை. முதல் இரண்டு தடைகளும் சாதியை நிலை நிறுத்துகின்றன. மூன்றாவது தடை தீண்டாமையை உருவாக்குகிறது. தடைகளின் எண்ணிக்கைகளைப்பற்றிச் சாதி இந்து கவலைப்படுவதே இல்லை. இந்தத் தடைகளை எப்படிக் கடைப்பிடிப்பது என்பதில் மட்டுமே அவன் கவனம் செலுத்துவான். இந்தத் தடைகளை பின்பற்றாதே எனக் கேட்டுக்கொண்டால், உடனே ஏன் கூடாது எனத் திருப்பிக் கேட்பான். முதல் இரண்டு தடைகளைப் பின்பற்ற எனக்குச் சுதந்திரம் இருக்கும்போது மூன்றாவது தடையைப் பின்பற்றுவதில் மட்டும் என்ன தவறு நேர்ந்து விட்டது என வாதிடுவான். உளவியல் ரீதியாகச் சாதியும் தீண்டாமையும் ஓர் ஒருங்

www.padippakam.com



கிணைந்த பகுதியாக ஒரே கொள்கையின்மீது அமைந்திருக்கின்றன. சாதி இந்து தீண்டாமையைக் கடைபிடிப்பதற்குக் காரணம் அவன் சாதியில் நம்பிக்கை கொண்டிருப்பதுதான்.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால், சாதி அமைப்பைத் தகர்க்காமலேயே தீண்டாமையை ஒழித்து விடலாம் என்று நம்புவது மிகமிக முட்டாள்தனமானது. சாதியும் தீண்டாமையும் வெவ்வேறானவை என்ற கருத்து அபத்தமானவை இவை இரண்டும் ஒன்றே. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாது. சாதி அமைப்பின் விரிவாக்கம் தான் தீண்டாமை. இந்த இரண்டிற்கும் இடையில் எந்த ஒரு இடைவெளியும் இல்லை. இந்த இரண்டும் இணைந்தே நிற்கும்; இணைந்தே வீழும்.

பகுத்தறிவு அல்லது சட்ட வழி இவற்றில் எந்தவொரு வழிமுறையினாலும்கூடத் தீண்டாமையை ஒழித்துவிட முடியாது. இதற்கு வேறொரு காரணம் இருக்கிறது. ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளதைப்போல, இந்துச் சமூக அமைப்பு படிநிலை சமத்துவமின்மைக் கொள்கையின் மீது அமைந்தது. பெரும்பாலானோர் இந்தக் கொள்கையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவேயில்லை எனக் கூறுவது மிகைப்படுத்தவல்ல. உண்மையில் ஏற்றத்தாழ்வான சமூகம் படிநிலை சமத்துவமின்மைச் சமூகம் ஆகிய இரண்டும் வெவ்வேறான அடிப்படைகளைக் கொண்டவை. இவற்றில் முன்னது ஒரு பலவீனமான அமைப்பாகும். தன்னைத்தானே காத்துக் கொள்ளும் திறனற்றது. ஆனால் பின்னதோ தன்னைத் தானே காத்துக்கொள்ளும் திறன்பெற்றது. ஏற்றத் தாழ்வான சமூக அமைப்பில் கீழ்நிலையில் உள்ளவர்கள் ஒன்றிணைந்து அந்த அமைப்பைத் தூக்கி எறிய முடியும். எந்த ஒரு பிரிவுமே அந்த அமைப்பைக் கட்டிக்காக்கும் நாட்டமுடையவர்களாக இருக்கமாட்டார்கள். ஆனால்

படிப்பகம்

www.padippakam.com



பன்மடிப் படிநிலையிலான சமத்துவமற்ற சமூக அமைப்பில் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றிணைந்து பொதுத் தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை. இச்சமூக அமைப்பில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் சமமான தகுதியில் இல்லை. செல்வந்தர்கள், வறியவர்கள் என்ற இரண்டே பிரிவு உள்ள இடத்தில்தான் இது சாத்தியம்.

இந்தப் பன்மடிப்படிநிலையிலான சமத்துவமற்ற அமைப்பில் முதல் அடுக்கில் மிகவும் உயர்ந்தவர்கள் (பார்ப்பனர்கள்). இவர்களுக்குச் சற்றுக் கீழே இரண்டாம் அடுக்கில் சத்திரியர்கள், இவர்களுக்குச் சற்றுக் கீழே மூன்றாம் அடுக்கில் வைசியர்கள், இவர்களுக்குக் கீழே நான்காம் அடுக்கில் சூத்திரர்கள், இந்தக் கீழானவர்களுக்கும் கீழே ஐந்தாம் அடுக்கில் தாழ்த்தப்பட்டவர்கள். மேல் அடுக்கில் உள்ளவர்களுக்கு எதிரான அதிருப்தி இவர்கள் அனைவரிடமும் இருக்கிறது. அவர்களை வீழ்த்த விருப்பமும் கூட; ஆனால் ஐக்கியப்படமாட்டார்கள். இரண்டாம் அடுக்கில் இருப்பவர் முதல் அடுக்கில் இருப்பவரை வீழ்த்தக் கவலைப்படுவதுண்டு. ஆனால் அதற்காகத் தனக்குக் கீழே இருப்பவர்களோடு ஐக்கியப் படமாட்டார். காரணம அவர்கள் தமக்குச் சமமான நிலையில் வந்துவிடக்கூடாது என்பதே மூன்றாம் அடுக்கில் இருப்பவர் தனக்கு மேலே இரண்டு அடுக்குகளில் இருப்பவரை வீழ்த்த விரும்புவார். ஆனால் அதற்காகத் தனக்குக் கீழே இருப்பவர்களோடு இணையமாட்டார், காரணம் கீழே இருப்பவர்கள் தனக்கு இணையான அந்தஸ்திற்கு உயர்ந்துவிடக்கூடாது அல்லவா? நான்காம் அடுக்கிலிருப்பவர் தனக்கு மேலே உள்ள முதல் மூன்று அடுக்கினரை வீழ்த்த அக்கறைப்படுவார். ஆனால் அதற்காகத் தனக்குக் கீழே இருப்பவர்களோடு பொது இலட்சியத்தைப் பங்கிடமாட்டார். காரணம் அவர்கள் உயர்ந்து தன் அந்தஸ்திற்கு வந்துவிடுவார்கள் அல்லவா?

படிப்பகம்

www.padippakam.com



இந்தப் பன்மடிப்படிநிலைச் சமத்துவமின்மை சமுதாய அமைப்பில் முழுக்க முழுக்கச் சலுகைகளற்ற வகுப்பாக அடிநிலையில் உள்ள வகுப்பைத் தவிர வேறெதுவும் இல்லை. இவ்வகுப்பே இச்சமூகப் பிரமிடுக்கு அடித்தளமாக இருக்கிறது. மற்ற வகுப்பினருக்குத் தங்கள் படிநிலைக்குத் தகுந்தவாறு சலுகைகள் உள்ளன

ஐந்தாம் அடுக்கில் இருப்பவரோடு ஒப்பிடும்போது நான்காம் அடுக்கில் இருப்பவர் ஒரு சலுகை பெற்ற வகுப்பாகவே இருக்கிறார். ஒவ்வொரு வகுப்புமே சலுகை பெற்ற வகுப்பு. ஆகவே இச்சமூக அமைப்பைக் கட்டிக் காப்பதில் ஒவ்வொரு வகுப்புமே அக்கறை கொண்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தீண்டாமை என்பது ஒரு துரதிருஷ்டமாக இருக்கலாம். ஆனால் இந்துக்களுக்கோ தீண்டாமை என்பது வரப்பிரசாதமாகும். தனக்குக் கீழான நிலையில் சிலரை வைத்துக்கொள்ள இவ்வமைப்பு அனுமதிக்கிறது. எல்லோரும் எல்லாம் பெற்ற சமூகத்தையோ எல்லோரும் எதுவுமே பெறாத சமூகத்தையோ இந்துக்கள் விரும்பவில்லை. மாறாக ஒரு சிலர் ஏதோ சில பெற்றிருக்க ஏனையோர் எதுவுமே பெறாத சமூகத்தையே இந்துக்கள் விரும்புகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதுவுமேயில்லை. இவர்களோடு ஒப்பிடும்போது இந்துக்களுக்கு ஏதோ சில இருக்கின்றன. தீண்டாமைப் பழக்கத்தினால் இந்துக்கள் தங்கள் பிறவிப் பெருமையைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள். தங்களை மேலான நிலையில் வைத்துப் புளகாங்கிதம் கொள்கிறார்கள். இந்துக்கள் தீண்டாமையைக் கைவிடாமல் இருப்பதற்கு இது ஒரு கூடுதல் காரணமாகும்.

இந்துச் சமூக அமைப்பு முழுவதுமே அழியாமல், குறிப்பாகச் சாதி அமைப்பு அழியாமல் தீண்டாமை

படிப்பகம்

www.padippakam.com



மறையாது. இது சாத்தியம்தானா? ஒவ்வொரு நிறுவனமும் சிலவகை புனிதத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு நிறுவனத்தின் உயிர் ஆற்றலுக்கு மூன்று வகையான புனிதங்கள் காரணமாக இருந்து வருகின்றன. அவை சட்டம், சமூகம், மதம் ஆகியனவாகும். சாதி அமைப்பிற்குக் காரணமாக இருக்கும் புனிதத்தின் இயல்பென்ன? துரதிருஷ்ட வசமாகச் சாதி அமைப்பின் புனிதத்திற்குப் பின்னணி மதம் ஆகும். வர்ண அமைப்பின் புதிய வடிவமான சாதி வேதங்களிலிருந்து தன் புனிதத்தைப் பெறுகிறது. இந்த வேதங்கள் இந்து மதத்தின் புனிதப் புத்தகங்கள்; இவை தவறேயில்லாதவை. மதப் புனிதம் பெற்ற எதுவுமே அழிவற்றதாக — புனிதமானதாக மாறி விடுகிறது இதைச் சொல்வதற்குத் துக்கமாகத்தான் இருக்கிறது. இந்துவுக்குச் சாதி புனிதமானது; அழிவு இல்லாதது. சாதி அமைப்பு அழியாதபோது தீண்டாமை மட்டும் அழியும் என்பதை நம்புவதெப்படி? □□



படிப்பகம்

www.padippakam.com

## அத்தியாயம்—11

# அரசு இயந்திரத்தின் பகைமை

இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு—2 பின்வருமாறு கூறுகிறது: ''இச்சட்டத்தின் தண்டனைக்கு ஒவ்வொரு நபரும் உட்படுவர். சட்டப் பிரிவுகளைப் புறக்கணிக்கும் அல்லது எதிர்க்கும் செயல்கள் அனைத்தும் தண்டனைக்குட்படும். பிரிட்டிஷ்– இந்தியாப் பகுதிக்குள் அவர்கள் குற்றவாளியாகக் கருதப்படுவர்.''

தண்டனைச் சட்ட வரைவை (மசோதா) உருவாக்கிய ஆய்வுக்குழுவினர், அரசுச் செயலருக்குத் தாங்கள் அளித்த அறிக்கையில், ''ஒவ்வொரு நபருக்கும்'' என்ற சொல்லின் மீது கவனத்தைச் செலுத்துவது அவசியமானது எனத் தங்கள் எண்ணத்தை வெளியிட்டிருந்தனர். அவர்களின் கூற்று பின்வருமாறு :

''நிறுவனத்தின் ஆட்சிப் பகுதிகளுக்குள் இருக்கும் பழம் ஆட்சியதிகாரப் பிரிவினர் எவருக்கும் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு தராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அம்மாதிரி ஒரு பிரச்சினை தோன்றினால் தற்போது நடப்பில் நிலவிவரும் ஒப்பந்தங்களைப் பற்றிக் கறாராகத் தெரிந்து கொள்ளலாம். எந்தப் பொருளில் இந்த ஒப்பந்தங்கள் புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றன.

www.padippakam.com



சமரசம், ஏற்பட்ட வரலாறு, குறிப்பிட்ட குடும்பங்களின் அதிகாரம்—மனநிலை, இந்தக் குடும்பங்களைப்பற்றி ஏனையோர் கொண்டுள்ள உணர்வு ஆகியவற்றைக் கணக்கிலெடுக்காமல் விதிவிலக்கு தரும் முயற்சியை முடிவு செய்யக்கூடாது.

நாங்கள் மன்றாடிக் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான்: ''இப்படியான விதிவிலக்குகள் தீமை பயப்பவையாகவே முடியும். சட்டத்துக்கு மேலானவனாக எந்தவொரு மனிதனும் இருக்க முடியும் என்கிற நிலை மிகவும் தீமைபயப்பது. சட்டத்துக்கு மேம்பட்டவராக இருப்பது பிறரைப் பொறாமை கொள்ளச் செய்யும் அளவுக்கு சிறப்பு வாய்ந்தது என பொது மக்கள் கருதிவிடும்படி ஆக்கிவிடுவது இதை விடவும் மேலானது. இப்படியான சலுகைகளை அனுபவிக்க விட்டுவிட்டால் பிறகு அவற்றை நீக்குவது மிகவும் சிரமம். அரசாங்கம் பல்வேறுபட்ட இன, மத மக்களை கட்டுப்படுத்தும் விதமாக ஒரு புதிய சட்டத்தை அமல்படுத்தும் தருணத்தைக் காட்டிலும் இந்தச் சலுகைகளை நீக்கிவிடுவதற்கு ஏற்றதொரு நல்ல சந்தர்ப்பம வேறு கிடைக்காது. இவற்றையும் மீறி விதி விலக்குகள் தர நீங்கள் பரிசீலிப்பீர்களேயானால் அது ஒட்டுமொத்த மக்களின் முழு ஆதரவையும் பெற்றிராத பட்சத்தில் சமநீதி தருகின்ற அனுகூலங்களைவிட எவ்விதத்திலும் சிறந்ததாயிருக்க முடியாது என்று நாங்கள் நம்புகிறோம்.''

நடப்பில் நிலவிவந்த சமூக அமைப்பின் மீது இந்தச் சமநீதிக் கோட்பாடு ஒரு மரண அடி தந்திருக்கும் என நினைத்திருக்கக்கூடும். உண்மையில் சொல்லப் போனால் நடப்புச் சமூக அமைப்பு சேதமுறுவதற்குப் பதிலாக அப்படியே தொடர்ந்து இயங்கி வந்தது. ஏன் இந்தச் சமநீதிக் கோட்பாடு தோல்வியுற்றது என ஒருவர் கேட்கலாம். இதற்கான விடை சாதாரணமானது, நீதிக்கோட்

www.padippakam.com



பாட்டை உருவாக்குவது என்பது வேறு விசயம்,அதனைத் திறம்படச் செயல்படுத்துவது என்பது வேறு விசயம். சமநீதிக் கோட்பாடுகள் திறனுள்ளவையா அல்லது திறனற்றவையா என்பது இக்கோட்பாடுகளை நடை முறைப்படுத்தும் அரசு ஊழியர்களின் இயல்பு,குணாம்சம் ஆகியவற்றை நிச்சயமாகச் சார்ந்திருக்கிறது. அரசு ஊழி யர்கள் பழைய சமூக அமைப்பின் நண்பர்களாக—புதிய சமூக அமைப்பின் எதிரிகளாக இருக்கும் பட்சத்தில் புதிய சமூக அமைப்பு எப்பொழுதும் நடைமுறைக்கு வராது. புதிய சமூக அமைப்பிற்கு இணைந்ததாக அரசு ஊழியர் கள் இருக்க வேண்டியது அவசியம். 1871 இல் பாரிஸ் கம்யூன் ஏற்பட்டபோது காரல் மார்க்சாலும் சோவியத் கம்யூனிசத்திற்கான அரசியலமைப்பின் போது லெனினா லும் இந்த அவசியம் ஒத்துக்கொள்ளப்பட்டது. துரதிருஷ்டவசமாக, ஆங்கில அரசாங்கம், அரசு ஊழியர் களின் அக உணர்வுகளைக் கணக்கில் கொள்ளவேயில்லை. உண்மையில், சமத்துவத்திற்கு இடம்தராத பழைய இந்துச் சமூக அமைப்பில் நம்பிக்கை கொண்ட வர்க்கப் பிரிவினர்களுக்கே ஆங்கில அரசு தன் நிர்வாகக் கதவு களைத் திறந்துவிட்டது.

இதன் விளைவு இந்தியா ஆங்கிலேயர்களால் ஆட்சி செய்யப்பட்டது. ஆனால் இந்துக்களால் நிர்வகிக்கப் பட்டது. ஒருசில அரசுத்துறை ஊழியர்கள் பற்றிய புள்ளி விவரங்களைப் பார்த்தாலே இந்த உண்மை முழுமையாக விளங்கிவிடும்.

தலைநகர் தில்லியிலிருந்து, கிராமங்கள் வரை அனைத்து நிர்வாகங்களையும் இந்துக்களே பறித்துக் கொண்டனர். அனைத்து நிர்வாகத்துறைகளிலும் ஊடுருவி, ஒவ்வொரு மூலை முடுக்கிலும், தங்கள் அதிகா ரத்தைக் கொண்டிருக்கும் சர்வ வல்லமை வாய்ந்த சக்தி களாக இந்துக்கள் விளங்குகிறார்கள். பழம் சமூக்

www.padippakam.com



அமைப்பை எதிர்ப்பவர்கள் தப்புவதற்கு எந்த ஒரு ஓட்டையுமேயில்லை. வருமானத்துறையா அல்லது காவல் துறையா அல்லது நீதித்துறையா எந்தத் துறையானாலும் இந்துக்களே அதிகாரம் செலுத்துகின்றனர். பழம் சமூக அமைப்பு நீடித்து வருகிறது என்றால் அதற்குக் காரணம் அரசு அதிகாரிகளிடம் அது பெற்று வந்த தடையற்ற ஆதரவே. இந்து அரசு அதிகாரிகள் வெறுமனே தங்கள் தகுதியை மட்டுமே வைத்து நிர்வாகத்தை நடத்தவில்லை. பொதுமக்களை ஓர வஞ்சனையோடு பார்த்துத்தான் நிர்வாகம் நடத்தி வந்தனர். எல்லோருக்கும் சமநீதி என்பதல்ல இவர்கள் கோட்பாடு. பழம் சமூக அமைப்பிற்கு ஒத்த நீதியே இவர்களுடைய கோட்பாடு. இது தவிர்க்க முடியாதது. தன் சமூகத்தில் உள்ள பல்வேறு வகுப்புகள் குறித்த தங்கள் அணுகுமுறையோடு தான் நிர்வாகத்தை நடத்துகிறார்கள். நிர்வாக விசயங்களில் அரசு அதிகாரிகள் தாழ்த்தப்பட்டவர்களை அணுகுவதிலிருந்தே இதனை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

காவல்துறைக்குப் புகார் கொடுக்கச் செல்லும் ஒவ்வொரு தீண்டத்தகாதவரும் இதனைத் தெரிந்து கொள்ள முடியும். சாதி இந்துவுக்கு எதிராக, புகார் கொடுக்கத் தீண்டத்தகாதவர் காவல் நிலையத்திற்குச் சென்றால் அவருக்கு அங்குப் பாதுகாப்புக் கிடைக்காது, மாறாகக் கணக்கற்ற பழிச்சொற்களே கிடைக்கும். ஒன்று அவரது புகார் எடுத்துக்கொள்ளப்படாமல் வெறுமனே திருப்பி அனுப்பப்படுவார்; அல்லது பிரச்சினைக்குரிய தீண்டத் தகுந்தவர் எளிதில் தப்பித்துக்கொள்ளும் விதத்தில் புகார் மோசடியாக எழுதிக்கொள்ளப்படும். தாழ்த்தப்பட்டவர் ஒருவேளை சாதி இந்துவை வழக்குமன்றத்தின் மூலம் விசாரித்தால் அவ்வழக்கு விசாரணையின் கதி முன்னமே தெரிந்ததுதான். தாழ்த்தப்பட்டவர் சாதி இந்துக்களை (தனக்கு ஆதரவு) சாட்சியாகக் கொண்டு வரமுடியாது. காரணம் என்னதான் நியாயம் என்றபோதிலும் கிராமத்

படிப்பகம்

www.padippakam.com



தார் அதற்கு இடம் தராமல் சதிவேலை செய்துவிடுவார்கள். ஒருவேளை தாழ்த்தப்பட்டவரையே சாட்சியாகக் கொண்டுவந்தால் இந்தச் சாட்சி உள்நோக்கம் கொண்டது; சுயேச்சையாகச் செய்யவில்லை என நீதிபதி மறுத்துவிடுவார் சுயேச்சையாகச் சாட்சி சொல்வதாக வைத்துக்கொண்டால், அச்சாட்சி உண்மையான சாட்சி என்று என் கருத்துக்குத் தெரியவில்லை எனக் கூறி நீதிபதி மிக எளிதாகக் குற்றவாளியை விடுவித்துவிடுவார். மேல் நீதிமன்றங்கள் நீதிபதியின் விசாரணையை மாற்றாது என நன்றாகத் தெரிந்து இருப்பதனாலேயே நீதிபதி இதை அச்சமின்றிச் செய்கிறார். விசாரணை நீதிமன்றங்களின் தீர்ப்புகளில் அப்பீல் நீதிமன்றங்கள் குறுக்கிடக்கூடாது என்பது நடப்பில் உள்ள விதி.

இம்மாதிரியான ஓரவஞ்சனைகள் நடைமுறையில் இருப்பதை இப்பொழுது காங்கிரஸ் கட்சியினரே ஒப்புக்கொள்கின்றனர். தமிழ்நாடு அரிசனச் சேவைச் சங்கத்தின் ஆண்டு அறிக்கை (செப்டம்பர் 30—1937) கூறுவதாவது:

"சட்ட உரிமைகள் தொலைதூரக் கிராமங்களிலும் அரிசனங்களின் அரசியல் உணர்வை எழுச்சி பெற வைத்திருக்கிறது. இக்கிராமங்களில் காவல்துறை ஆட்சியே நடப்பில் இருக்கிறது. அரிசனங்கள் தங்கள் உரிமையை உறுதிசெய்ய முடியவில்லை. அவ்வாறு உறுதி செய்தால் அது சாதி இந்துக்களுக்கும் இவர்களுக்குமான மோதலாகவே புரிந்து கொள்ளப்படுகிறது. இந்த மோதலில் சாதி இந்துக்களின் கையே மேலோங்கி நிற்கிறது. இந்தக் கலவரங்களின் இறுதி விளைவு, ஒன்று காவல்துறையில் புகார் செய்வது அல்லது வழக்கு மன்றத்திற்குச் செல்வது. வழக்கு மன்றத்திற்குச் செல்வது அரிசனங்களின் சக்துக்கு அப்பாற்பட்டது. பெரும்பாலான வழக்குகள் விசாரிக்கப்படுவதே இல்லை. சில வழக்குகள் சாதி இந்துக்களுக்குச்

படிப்பகம்

www.padippakam.com



சாதகமாகவே முடிகின்றன. காவல்துறையில் நாம் தரும் புகார்களுக்கும் இதே தலைவிதிதான். அடிமட்டக் காவலர்களின் சிந்தனைப்போக்கில் எந்த ஒரு மாற்றமும் இல்லை என்பதே இங்குத் தொல்லையாக இருக்கிறது. அரிசனங்களின் உரிமைகளுக்குத் தாங்கள் தான் பாதுகாப்பு என்ற விழிப்புணர்வு இக்காவலர்களிடம் இல்லை அல்லது சாதி இந்துக்கள் இவர்கள் மீது செல்வாக்கு செலுத்துகிறார்கள். அல்லது காவலர்கள் முழுக்கவே அசட்டையாக இருக்கிறார்கள் சில பிரச்சினைகளில் காவலர்கள் பணக்காரச் சாதி இந்துக்களின் பக்கம் சாய்வதற்கு ஊழல் ஒரு காரணமாய் இருக்கிறது.''

இந்து அரசு அதிகாரிகள் எவ்வளவு தூரம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரானவர்களாக, இந்துக்களுக்கு ஆதரவானவர்களாக இருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது. எப்பொழுது அதிகாரம் அவர்கள் கையில் கிடைத்தாலும் அதைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராகவே பயன்படுத்துகிறார்கள்.

சில சமயங்களில் காவலர்களும் நீதிபதிகளும் ஊழலுக்கு உட்பட்டுவிடுகிறார்கள். இவர்கள் ஊழல் பேர்வழிகளாய் மட்டுமே இருந்தால் அதனை ஒரு பெரும் தீமையாகப் பார்க்க முடியாது. காரணம் ஊழல் பேர்வழியைப் பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே விலைக்கு வாங்க முடியும். ஆனால் இவர்கள் இருவருமே ஊழல் பேர்வழிகள் என்பதைக் காட்டிலும் அதிகமாக ஓரவஞ்சனையாளர்களாகவே இருந்துவருவது துரதிருஷ்டவசமானது. இந்துக்களுக்குச் சார்பாகவும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராகவும் இவர்கள் இருப்பதன் விளைவு தாழ்த்தப்பட்டவர்களுக்கு நீதியும் பாதுகாப்பும் மறுக்கப்படுகின்றன. இந்த ஓரவஞ்சனைக்கு எதிராக எந்தத் தீர்வும் இல்லை. இநத ஓரவஞ்சனைக்குக் காரணம் சமூக, மத வெறுப்பே. இது ஒவ்வொரு இந்துவின் பிறவிக்

படிப்பகம்

www.padippakam.com



குணம். காவலர்களும் நீதிபதிகளும் தங்கள் நோக்கம் வளர்ப்பு முறை ஆகியவற்றின் காரணமாகத் தாழ்த்தப் பட்டவர்களின் வாழ்நிலையை அனுதாபத்தோடு நோக்கு வதில்லை. தாழ்த்தப்பட்டவர்களை வாட்டுகின்ற வேதனைகள், தேவைகள், விருப்பங்கள், ஏக்கங்கள் ஆகி யன இவர்களைக் கிஞ்சிற்றும் பாதிப்பதில்லை. இதன் விளைவு அவர்களின் எழுச்சிக்கு எதிராக வெளிப்படை யாகவே எதிரிகளாக—பகையாக இருக்கிறார்கள். அவர்கள் முன்னேற உதவுவதில்லை. அவர்கள் இலட்சி யத்தைத் திசை திருப்புகிறார்கள். சுயமரியாதை, தன் முனைப்பு ஆகியவை முளைவிடும்போதே கிள்ளி விடு கிறார்கள். மறுபுறம் இவர்கள் (காவலர்கள், நீதிபதிகள்) இந்துக்களின் உணர்வுகளில் பங்கெடுத்துக் கொள் கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் மீது இந்துக்கள் தங்கள் அதிகாரத்தை, கௌரவத்தை, பெருமையை நிலை நிறுத்தும் முயற்சிகளுக்கு இவர்கள் ஆதரவாக இருக் கிறார்கள்.

இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடை யிலான மோதலில் தாழ்த்தப்பட்டவர்களின் கலகத்தை அடக்கும் இந்து ஏஜெண்டுகளாகவே இவர்கள் நடந்து கொள்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாடம் புகட்டுவது, அவர்களை அடக்கியே வைத்திருப்பது போன்ற இழிவான முயற்சிகளில் படித்தவர், பாமரன் என அனைத்து இந்துக்களும் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த முயற்சிகளில் காவலர்களும் நீதிபதிகளும் வெளிப் படையாகவும் மறைமுகமாகவும் பங்கெடுக்கிறார்கள்.

சட்டத்தின் எல்லைக்குள்ளாகவே இந்த அனைத்து அநீதிகளும் கொடுமைகளும் நீடித்து வருவது மிக மோச மானது. தாழ்த்தப்பட்டவனை வேலைக்கு வைத்துக் கொள்ளமாட்டேன், அவனை அவன் நிலத்திலிருந்து வெளியேற்றுவேன், தன் நிலத்தின் வழியாகக் கால்நடை

www.padippakam.com



களை ஓட்டிவர அனுமதிக்கமாட்டேன் என ஒரு இந்து, சட்டத்திற்கு எந்தச் சிறு இடையூறும் இல்லாமல் சொல்லி விடுவான். இவ்வாறு செய்வதன்மூலம் அந்த இந்து தன் உரிமைகளை மட்டுமே வெளிப்படுத்துகிறான். சட்டமோ அவன் எந்த நோக்கத்தில் இதைச் செய்கிறான் என்பது பற்றிக் கவலைப்படாது. இந்தச் செயல்களினால் தாழ்த்தப்பட்டவன் எப்படிப் பாதிக்கப்படுகிறான் என் பதையும் சட்டம் கவனிக்காது. காவலர் தன் அதிகாரத் தைத் தவறாகப் பயன்படுத்தலாம். அவன் நடக்காததை நடந்ததாக எழுதுவதன்மூலமோ நடந்ததை மாற்றி எழுதுவதன் மூலமோ திட்டமிட்டே மோசடி செய்யலாம். தனக்குச் சாதகமான தரப்பினருக்குச் சார்பாக ஆதாரத் தைக் காட்டலாம், கைது செய்ய மறுக்கலாம். ஒரு வழக்கை மறைக்க அவர் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம். தான் பிடிபட்டு விடுவோம் என்ற அச்சம் கொஞ்சமும் இன்றி அனைத்தையும் அவரால் செய்ய முடியும், சட்டத்தில் ஆயிரத்தெட்டு ஓட்டைகள். இவை அனைத்தும் இவருக்கு அத்துப்படி.

நீதிபதி இக்காவலர் கையில் எண்ணற்ற அதிகாரங் களைத் தந்திருக்கிறார். தன் விருப்பத்திற்கு இவர் அதைப் பயன்படுத்தலாம். ஒரு வழக்கின் முடிவு ஆதாரங்களைத் தரும் சாட்சிகளைச் சார்ந்தே இருக்கிறது. ஆனால் சாட்சிகளை நம்புவதா வேண்டாமா என்பதைப் பொறுத்தே வழக்கின் முடிவு அமைந்துவிடுகிறது. ஒரு தரப்பினர் மீது நம்பிக்கை வைப்பது மாற்றுத் தரப் பினரை அவநம்பிக்கையோடு பார்ப்பது என்பது நீதிபதி யின் சொந்த முடிவு. எத்தரப்பை நம்புவது என்பது நீதிபதியின் தன்னிச்சைக்கு உட்பட்டது. இதில் யாரும் குறுக்கிட முடியாது நீதிபதிகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக எண்ணற்ற வழக்குகளில் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் சாட்சி எவ்வளவுதான் உண்மையாக இருந்தபோதிலும்

www.padippakam.com



"நான் இதை நம்பவில்லை" என நீதிபதி எளிதாகச் சொல்லிவிடுவார். நீதிபதியின் இந்த முடிவை யாரும் கேள்விக்கு உள்ளாக்க முடியாது. என்ன தண்டனை தருவது என்பதும் கூட நீதிபதியின் முடிவுக்கு உட்பட்ட விசயம். மேல்முறையீட்டுக்கு உட்படாத தண்டனைகளும் உண்டு. மேல்முறையீடு என்பது குறைதீர்க்கும் ஒரு வழி முறையாகும். ஆனால் மேல்முறையீட்டிற்குக் கட்டுப் பட்ட தண்டனைகளைத் தர மறுப்பதன்மூலம் நீதிபதி இவ்வழியை அடைத்துவிடுகிறார்.

நடப்பில் நிலவும் சமூக ஒழுங்கை நிலைநிறுத்துவதில் இந்துச் சமூகம் பங்காற்றுகிறது என வைத்துக் கொண்டால் அரசாங்க இந்து அதிகாரிகளும் இதனையே செய்து வருகிறார்கள். இந்த இரண்டுமே நடப்புச் சமூக ஒழுங்கைத் தகர்க்க முடியாத ஒன்றாக மாற்றிவிட்டன.

□□

www.padippakam.com

## அத்தியாயம்—12

# ஓரவஞ்சனைப் பிரச்சினை

தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் தங்களை மனிதர்களாகத் தக்கவைத்துக் கொள்வதே முதல் பிரச்சினையாக இருக்கிறது. இதற்கு அடுத்தபடியாகத் தான் ஓரவஞ்சனையை ஒரு பிரச்சினையாகக் கருத வேண்டியுள்ளது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக இந்துக்கள் காட்டும் ஓரவஞ்சனையின் அளவையும் எல்லையையும் அந்நியர் ஒருவரால் கற்பனை செய்து கூடப் பார்க்கமுடியாது. ஓரவஞ்சனைக்கு உட்படாமல் தாழ்த்தப்பட்ட வர்களும் இந்துக்களும் வாழ்க்கையின் எந்தத் துறையிலும் போட்டியிட முடியாது. இந்த ஓர வஞ்சனைகூட மிகவும் நச்சு வடிவம் கொண்டது.

நடனம், குளியல், உணவு உண்ணுதல், நீர் அருந்து தல், மற்போர், கடவுள் வழிபாடு ஆகியவற்றிற்குத் தடை என்ற வடிவில் சமூக உறவுகளில் ஓரவஞ்சனை கடைப் பிடிக்கப்படுகிறது. அனைத்துச் சராசரிச் செயல்பாடு களுக்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகள், கிணறுகள், கோவில்கள், போக்குவரத்து ஆகியவற்றி லிருந்து தாழ்த்தப்பட்டவர்களை விலக்கி வைத்ததன் மூலமும் ஓரவஞ்சனை கடைப்பிடிக்கப்படுகிறது. பொது

படிப்பகம்

www.padippakam.com



நிர்வாகம் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான ஓரவஞ்சனையில் மூழ்கி இருக்கிறது நீதிமன்றங்கள், அரசுத்துறைகள், கூட்டுறவு, வங்கிகள் குறிப்பாகக் காவல் துறை ஆகிய அனைத்தையுமே இது பாதித்து இருக்கிறது. நில உரிமை, கடன், வேலைவாய்ப்பு ஆகிய பிரச்சினைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராகக் காணப்படும் ஓரவஞ்சனை மூர்க்கமாக வெளிப்படுகிறது. அரசு செயல்பாடுகளில் இந்த ஓரவஞ்சனை மிக வன்மையாக வெளிப்படுகிறது. அரசு வேலைகளில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைய, பதவி உயர்வு பெற நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் இதில் உள் நுழைவதற்குப் பெரும்பாலும் முடிவதில்லை. அனைத்துத் துறைகளுமே இவர்களுக்கு மூடிக்கிடக்கின்றன. துணி ஆலைகளில் நெசவுத் துறையைப் பொறுத்தவரை அப்பகுதி முழுவதும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மூடியே கிடக்கிறது. அப்படியே உள் நுழைந்தாலும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் அவர்களால் மேல்செல்ல முடியாது.

தாழ்த்தப்பட்டவரின் திறமை அல்லது பணிக்காலம் ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதேயில்லை நிர்வாகத் துறைகளில் இந்துக்களுக்கு மேலான இடத்தில் தாழ்த்தப்பட்டவர்களைப் பணி அமர்த்தக்கூடாது என்ற ஒரு கோட்பாடு பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது இதன் விளைவு அரசுப்பணி முழுவதுமே தாழ்த்தப்பட்டவர்களுக்குத் திறந்துவிடப்படாத நிலையில் அவர்கள் ஒருசில பணிகளில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். இன்னும் துல்லியமாகச் சொல்ல வேண்டுமானால் தோட்டி வேலையில் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஓரவஞ்சனை பார்க்கப்படுவதில்லை. இந்த வேலையில் பாகுபாடு பார்ப்பதற்கு அவசியமில்லை. இது முழுக்கவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரியது. இந்துக்கள் இந்த

www.padippakam.com



வேலைக்குப் போட்டியிட மாட்டார்கள். இந்த வேலையிலும்கூட உயர்பதவிகளில் ஓரவஞ்சனை கடைப்பிடிக்கப்படுகிறது அனைத்து அசுத்தமான வேலைகளையும் தாழ்த்தப்பட்டவர்களே செய்து வருகிறார்கள். ஆனால் உயர் சம்பளத்துடன் கூடிய அனைத்து மேற்பார்வை வேலைகளையும் அசுத்தத்தோடு தொடர்பில்லாத வேலைகளையும் இந்துக்களே பார்த்து வருகின்றனர். இம்மாதிரியான சூழலில் குடியுரிமை என்பதன் பொருள் தாழ்த்தப்பட்டவனின் உரிமையாக எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் அரசாங்கங்கள் என்பதைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கான அரசாங்கங்கள் என்று பொருள் கொள்ளமுடியாது. சமஉரிமை என்பது தாழ்த்தப்பட்டவர்களுக்கான சமஉரிமையாகப் பொருள் கொள்ளமுடியாது. அனைவருக்கும் சமவாய்ப்பு என்பது தாழ்த்தப்பட்டவர்களுக்கான சமவாய்ப்பு என பொருள் கொள்ளமுடியாது. நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் தாழ்த்தப்பட்டவர்கள் இடையூறுகளை -ஓரவஞ்சனைகளை—அநீதிகளை எதிர்கொண்டு வருகிறார்கள். இந்தியாவிலேயே சலுகையில்லாத ஒரு மக்கள் கூட்டம் தாழ்த்தப்பட்டவர்கள்தான். இந்த அநீதிகளை அனுபவித்து வரும் தாழ்த்தப்பட்டவர்களால் மட்டுமே இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். இந்த ஓரவஞ்சனை தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான—உறுதியான தடையாக இருந்து வருகிறது. அவர்களின் எழுச்சியை இது தடுக்கிறது. இந்த ஓரவஞ்சனையினால் தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்க்கையே நிரந்தர அச்சத்தில் இருந்து வருகிறது. வேலை வாய்ப்பின்மை, தாக்குதல், சித்திரவதை ஆகியன மாறிமாறி வருகின்றன. இது ஒரு பாதுகாப்பற்ற வாழ்க்கை.

இன்னொரு வடிவிலும் ஓரவஞ்சனை கடைப்பிடிக்கப்படுகிறது. இது நுட்பமானது என்றபோதிலும் உண்மையானது. இம்முறையின் கீழ் தகுதியையும் திறமையையும்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டதாழ்த்தப்பட்டவர்களின் கவுரவத்தையும் அந்தஸ்தையும் கீழ்நிலையில் வைத்திருக்கத் திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்துத் தலைவர் ஒருவர் ஒரு பெரும் இந்தியத் தலைவராக வர்ணிக்கப் படுவார். அவர் ஒரு காஷ்மீர் பார்ப்பனராக இருந்தாலும் கூட அவரைக் காஷ்மீர் பார்ப்பனத் தலைவர் என்று வர்ணிக்கமாட்டார்கள். ஒரு தாழ்த்தப்பட்டவர் தலைவராக உருவானால் அவரைத் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவராகவே வர்ணிப்பார்கள். ஒரு அய்யங்கார் மருத்துவர் அய்யங்காராகவே இருந்துவந்தபோதிலும் அவரைப் பெரிய இந்திய மருத்துவராகவே வர்ணிப்பார்கள். ஆனால் ஒரு தாழ்த்தப்பட்டவர் மருத்துவராக இருந்தால் அவரை அந்தச் சாதியைச் சேர்ந்த தாழ்த்தப் பட்ட மருத்துவர் என்றே வர்ணிப்பார்கள். இந்துப் பாடகரை மிகச் சிறந்த இந்தியப்பாடகராக வர்ணிப்பர். ஆனால் ஒரு தாழ்த்தப்பட்ட பாடகரை அச்சாதியைக் கொண்டே அழைப்பர். ஒரு இந்து மற்போர் வீரரை மாபெரும் இநதிய விளையாட்டு வீரராக வர்ணிப்பர். ஆனால் ஒரு தாழ்த்தப்பட்டவர் அவ்வாறு இருந்தால் அவரை அச்சாதியின் பெயர் கொண்டே அழைப்பர்.

தாழ்த்தப்பட்டவர் தகுதி குறைவானவர்கள். அவர்களில் ஒருவர் எவ்வளவுதான் தகுதியுடையவராக உயர்ந்த போதிலும் அவர் தாழ்த்தப்பட்டவர்களில் மட்டுமே உயர்ந்தமனிதராக இருக்கமுடியும். அவர்கள் ஒருபோதும் இந்துத் தலைவர்களுக்கு மேலான அல்லது அவர்களுக்கு இணையான தலைவராக வரமுடியாது. இந்துக்கள் சிந்தனையில் நிலவும் இப்பார்வைதான் இம்மாதிரியான ஓரவஞ்சனைக்கு அடிப்படையாய் அமைந்திருக்கிறது. இம் மாதிரியான ஓரவஞ்சனை சமூகத் தளத்தில் இருந்த போதிலும், பொருளாதார விசயங்களில் காட்டப்படும் ஓரவஞ்சனைக்கு இது எந்த விதத்திலும் குறைந்ததல்ல.

www.padippakam.com



ஓரவஞ்சனை என்பது சுதந்திரம் மறுக்கப்படுவதின் மறுபெயராகும். சுதந்திரம் என்பது குறிப்பிட்ட காலம், இடம் ஆகிய எதார்த்தங்களைப் புறக்கணித்ததாக இருக்க முடியாது. நடக்கிறதோ நடைபெறவில்லையோ இது இரண்டு மாற்றுகளுக்கு இடையிலான தேர்வு செய்யும் அதிகாரத்தை உள்ளடக்கியது. தேர்வு செய்தல் என்பது பெயரளவில் இல்லாமல் அல்லது காகிதத்தில் மட்டுமே இடம் பெற்றதாக இல்லாமல் உண்மையானதாக இருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் இதன் பொருள் குறிப்பிட்ட சூழலில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கு அல்லது தவிர்ப்பதற்கான திறமையைக் கொண்டிருப்பதாகும். ஒரு மனிதன் சிந்திக்கும் போதும் செயல் படும்போதும் மட்டுமே மனிதனாக இருக்கிறான். சுதந்திரம் என்பது வெளிச்செயல்களைக் குறிப்பதே. அன்றாட வாழ்க்கையில் இது முழுக்கவும் நடைமுறைக்கு உகந்தது; எதார்த்தமானது. ஒவ்வொரு மனிதனும் குறிப்பிட்ட தேவைகளைக் கொண்டு இருக்கிறார் தன் இருப்பிற்கு அவசியமான பொருள் வகைத் தேவையிலிருந்து தன் பேச்சு, எழுத்து ஆகியவற்றை வெளிப்படுத்துவது, பொது நலனில் பங்கெடுபபது, கடவுளை வணங்குவது. அல்லது வணங்காமல் இருப்பது. இவ்வாறாகத்தனது நலனுக்கு அவசியமான தேவைகளைக் கொண்டிருப்பார். இதை மிகக் கடுமையாகச் சுருக்கிச் சொல்வதானால் இயற்கையின் எல்லைக்குட்பட்டு ஒருவனுக்குத் தரப்பட்டுள்ள வாய்ப்பு, சக நண்பர்கள் பெற்றுவரும் சமமான வாய்ப்பு, இந்தத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அவசியப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பது ஆகிய இவைதான் சுதந்திரம் என்பதன் பொருளாகும்.''

விடுதலைக்கு அவசியமான உரிமைகளைப் பட்டிய லிடுவது என் நோக்கமல்ல. காரணம் ஏற்கெனவே அம் மாதிரியான பட்டியல்கள் இருந்து வருகின்றன. ஆனால்

www.padippakam.com



இரண்டு கருதுகோள்கள் அனைவருக்கும் பொருந்து கின்றன. முதலாவதாக, சுதந்திரத்தின் திறன்வாய்ந்த உத்தரவாதமாக உரிமைகள் இருக்கவேண்டுமானால் அவை பெயரளவிற்கு இருக்கக்கூடாது. சமயம் வாய்க்கும் போதெல்லாம் உண்மையில் அவை செயல்படுத்தத் தக்க வையாக இருக்கவேண்டும்.

வேலை வாய்ப்புக்கான கதவுகள் அடைபட்ட நிலை யில் விருப்பப்பட்ட தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் என்பது ஒரு பங்குச் சூதாட்டமே எந்த ஒரு ஏழையும் நீதிக்குப் பணம் கொடுக்க முடியாத நிலையில், அனைவருக்கும் நீதிகேட்க உரிமையுண்டு என்பது ஒரு பங்குச் சூதாட்டமே. பிறக்கும் குழந்தைகளில் பெரும் பாலானவை ஒரு ஆண்டிற்குள் இறந்து விடக்கூடிய ஒரு சுற்றுச் சூழலில் அனைவரும் மகிழ்ச்சியோடும் சுதந்திரத் தோடும் வாழ்வதற்கு உரிமையுண்டு என்பது ஒரு பங்குச் சூதாட்டமே இரண்டாவதாக விடுதலைக்கான உரிமை கள் ஒருசிறுபான்மையினருக்கு என்றில்லாமல் அனைத்துத் தரப்பினருக்கும் உரியதாக இருக்கவேண்டும். ஐந்துசதவீத மக்கள் பலதார மணம் புரிந்தவர்களாகவும் பெரும் பாலான மக்கள் திருமணம் செய்துகொள்ள இயலாதவர் களாகவும் உள்ள ஒரு சூழ்நிலையில் திருமணம் என்பதை ஒரு தேசிய நிறுவனமாகக் கருதமுடியாது என சில ஞானிகள் கூறியுள்ளார்கள் விடுதலைக்கும் இதே உண்மை பொருந்தும். ஒரு சமூகத்தில் சில குழுக்கள் தாங்கள் விரும்பியதை எல்லாம் செயல்படுத்திக்கொள்ளும் ஒரு சூழலும் மற்றவர்கள் தங்கள் விருப்பத்தைச் சிறி தளவே செயல்படுத்திக்கொள்கிற அவரவர் சொந்த விருப்பத்தைச் சார்ந்த ஒரு சூழலும்இருக்கலாம். அதனால் இவர்களில் ஒரு தரப்பினருக்குச் சுதந்திரம் இல்லை என் றாகிறது.

சமூகத்தின் அனைத்து உறுப்புகளுமே கொள்கை யளவில் இல்லாமல் யதார்த்தத்தில் தங்களின் பெரும்

www.padippakam.com



பாலான அதிகாரங்களை உருவாக்கிக் கொள்கின்ற, தங்களின் முழு ஆளுமையை வளர்த்துக் கொள்கின்ற, தங்களின் கடமை எனத் தாங்கள் உணர்ந்ததைத் செயல் படுத்திக்கொள்கின்ற சாத்தியப்பாடுகளைப் பொறுத்துத் தான் சுதந்திரம், சுதந்திரமாக இருக்கும். சுதந்திரம் என்பது மிகமிகக் கண்டிப்பானதாக இருக்கக்கூடாது. மக்கள் தங்கள் உள்ளக்கிடக்கையைத் தடையின்றி வெளிக் கொணர்வதாக இருக்கவேண்டும். தகுதியான மனித வாழ் விற்கான வாய்ப்புகள் சிறுபான்மையினருக்கு மட்டுமே உறுதி செய்யப்பட்ட ஒரு சூழலில் சுதந்திரம் என்பதை மிகச்சரியாகச் சொல்வதானால் சலுகை என்றே வர்ணிக்க வேண்டும். இந்துக்களின் ஆழமான, உறுதியான மன உணர்வுகளே தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிரான ஓரவஞ் சனையாகப் பிரதிபலிக்கின்றன. இந்த உணர்வுகளே சட்டத்திலும், நிர்வாகத்துறைகளிலும் எடுத்துச் செல்லப் படுகின்றன. தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாதகமான முறையில், இந்துக்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையே பாகுபாட்டை உருவாக்குவதை நியாயப் படுத்துவதும் இந்த உணர்வுகள்தான். சுதந்திரமான போட்டிக்களத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வாழ்நிலையை மீறி எழுச்சி பெற்று இந்துச் சமூக ஒழுங்கிற்கு அபாயமாக உருவாகி விடு வார்கள் என்ற இந்துக்களின் அச்சமே, இந்த ஓரவஞ் சனைகளுக்கு வேர்களாக இருந்துவருகின்றன. ஏனெனில், இந்துக்களின் மேலாதிக்கத்திற்கும் தீண்டத்தகாதவர் களின் மீதான இந்து ஆதிக்கத்திற்கும் உயிராதாரமாக இந்த இந்துச் சமூக அமைப்பு இருந்து வருகிறது. இந்துச் சமூக அமைப்பு நீடிக்கும் நாள்வரையிலும் தாழ்த்தப் பட்டவர்களுக்கு எதிரான ஓரவஞ்சனையும் நீடிக்கவே செய்யும். □□



படிப்பகம்

www.padippakam.com

## அத்தியாயம்—13

## ஒதுக்குதல் என்ற பிரச்சினை

தாழ்த்தப்பட்டவர்களின் இயக்கம் ஏன் வெற்றி பெறுவதில்லை? அவர்களுக்கு நண்பர்களே இல்லையா? நண்பர்கள் இருந்தால், அவர்கள் ஏன் தாழ்த்தப்பட்டவர்களோடு ஒன்றிணைவதோ உதவி செய்வதோ இல்லை? இது ஒரு சரியான கேள்வி. இதைச் சரியாகப் புரிந்து கொள்வது அவசியமானதாகும். இக்கேள்விக்குப் பதில் தர வேண்டுமாயின் இந்துச் சமூக அமைப்புப் பற்றியும் அதில் உள்ள வகுப்புகள் பற்றியும் மிகத் தெளிவான சித்திரம் அவசியமாகும். இந்துச் சமூகத்தின் கட்டமைப்பு மிகச் சிக்கலான ஒன்று. இச்சமூகத்தில் உறுப்பினராக இல்லாத ஒருவர் இதன் வடிவத்தைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கும். ஒருவேளை ஒரு வரைபடத்தை முன் வைப்பது இதற்கு உதவிகரமாக இருக்கலாம். இந்துச் சமூக அமைப்பைப் புரிந்துகொள்ள உதவியாக எனக்குத் தெரிந்த அளவில் ஒரு வரைபடத்தை முன் வைக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

இந்துக்கள்

- சாதி இந்துக்கள் (சவர்ண இந்துக்கள்)
  - முதல் அடுக்கு: உயர்சாதி-துவிஜர்கள் மூவர்ணத்தார் — பார்ப்பனர், சத்திரியர் வைசியர் ஆகிய மூவர்ணங்களிலிருந்து உண்டான சாதியினர்
  - இரண்டாம் அடுக்கு: தாழ்ந்த சாதிகள் சூத்திரர் அல்லது — நான்காம் வர்ணத்திலிருந்து உருவான சாதிகள்
- சாதிகளில் அடங்காத இந்துக்கள் (அவர்ண இந்துக்கள்)
  - மூன்றாம் அடுக்கு:
    1. பழங்குடியினர்
    2. குற்றப் பரம்பரையினர்
  - நான்காம் அடுக்கு: தாழ்த்தப்பட்டவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



இந்துக்களிடையே எண்ணற்ற சாதிகள் இருந்த போதிலும் அவை அனைத்தையும் நான்கு பிரிவுகளுக்குள் அடக்கிவிட முடியும் என்பதை இந்த வரைபடம் காட்டு கிறது. இந்த நான்கு பிரிவுகளில் முதல் அடுக்கினர் ஆளும் வர்க்கம். மூன்றாம் நான்காம் அடுக்கினர் ஆளுகைக்கு உட்பட்ட மக்கள்.

இந்தப் பிரிவுகளில் தாழ்த்தப்பட்டவர்களின் இயற்கையான தோழனாக யார் இருக்கமுடியும் என்பதை இப்பொழுது பார்க்கலாம். முதல் அடுக்கினர் இந்துச் சமூகத்தில் சலுகை பெற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள்தான் இந்துச் சமூக அமைப்பை உருவாக்கிய வர்கள். இதனால் பயன் பெறுபவர்களும் இவர்கள் மட்டுமே. ஆகவே இந்த முதல் அடுக்கினரின் இலட்சியமே இந்த அமைப்பைப் பாதுகாப்பதுதான். வகுப்பு நலன் கள் அல்லது கொள்கை உடன்பாடு ஆகியவற்றின் காரண மாக இவர்களுக்கிடையில் முரண்பாடு உருவாவதில்லை.

குற்றப் பரம்பரையினர், பழங்குடியினர் நிலை யென்ன? இந்துச் சமூக அமைப்பை இவர்கள் தூக்கியெறி வதற்கு வலுவான காரணங்கள் இருக்கின்றன.

சூத்திரர்களின் நிலை என்ன? இரண்டாம் அடுக்கைச் சேர்ந்த சூத்திரர்களை இந்துச் சமூக அமைப்பு விதிகள் வெறுப்பாகப் பார்ப்பதைப் போலவே, நான்காம் அடுக் கினரான தாழ்த்தப்பட்டவர்களையும் வெறுப்போடுதான் பார்க்கிறது. இந்துச் சமூகத்தின் நிர்மாணியும் சட்ட வல்லுநனுமான மனு இந்துச் சமூகத்தில் சூத்திரர்களின் அந்தஸ்து பற்றிச் சொல்லி இருப்பதை அறிந்துகொள்வது சுவையாக இருக்கும். எளிமையாகப் புரிந்து கொள்வதற் காகச் சூத்திரர்களின் தகுதி குறித்த விதிகள் தனித்தனித் தலைப்புகளின் கீழ்த் தரப்பட்டிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பனிய- சத்திரிய- வைசியக் குடும்பங்களை மனு பின்வருமாறு கேட்டுக் கொள்கிறார்.

6:61 "சூத்திரர்கள் அரசர்களாக இருக்கும் ஒரு நாட்டில் வசிக்க வேண்டாம்."

ஒரு சூத்திரனை மரியாதையுள்ள மனிதனாகக் கருதக் கூடாது. அதற்காக மனு உருவாக்கிய விதி.

11:24 "மதக் காரணங்களுக்காகச் செய்யப்படும் ஒரு வேள்விக்காகக்கூட ஒரு பார்ப்பனன் ஒரு சூத்திரனிடமிருந்து பொருட்களை வாங்கக்கூடாது."

சூத்திரர்கள் உடனான அனைத்துத் திருமணங்களும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. மூன்று மேல் வகுப்புப் பெண்களைத் திருமணம் செய்வது தடைசெய்யப்பட்டு இருக்கிறது. மேல் வகுப்புப் பெண்களுடன் ஒரு சூத்திரர் தொடர்பு வைத்திருக்கக் கூடாது. அப்பெண்ணோடு ஒரு சூத்திரன் கள்ள உறவு கொண்டிருந்தால் அது ஒரு கடும் தண்டனைக்குரிய குற்றமாக மனுவால் கருதப்பட்டது.

8:374 உறவினர் பாதுகாப்பில் அல்லது பாதுகாப்பற்ற நிலையில் இருக்குப் ஒரு உயர்சாதிப் பெண்ணுடன் ஒரு சூத்திரன் உடலுறவு கொண்டால் அவன் பின்வருமாறு தண்டிக்கப்படுவான். அப்பெண் பாதுகாப்பற்ற அனாதையாக இருந்தால் சூத்திரனின் ஆணுறுப்பு வெட்டப்படும். அப்பெண் பாதுகாப்பில் இருந்தால் சூத்திரன் கொல்லப்படுவதோடு அவன் சொத்தும் பறிமுதல் செய்யப்படும்.

8:20 ஒழுக்கத்தினால் மட்டுமே பார்ப்பனராக இருக்கும் ஒருவன், அவனுக்கு வேதம் தெரியவில்லையென்றாலும் சரி அல்லது வேதங்கள் கோரும் ஏனைய வியங்சகள் தெரியவில்லையென்றாலும் சரி, அரசனின் விருப்பத்

www.padippakam.com



தின்பேரில் அவன் நீதிபதியாக நியமிக்கப்படலாம். ஆனால் ஒரு சூத்திரனை (அவன் எவ்வளவு படித்தவனாக இருந்தாலும்) அப்படி நியமிக்கக் கூடாது.

8:21 சூத்திரர்கள் சட்டம் இயற்றும் ஒரு அரசாங்கம் சேற்றில் பசு மூழ்குவதைப்போல மூழ்கிவிடும்.

8:272 பார்ப்பனனுக்கு மதபோதனை செய்ய நினைக்கும் ஒரு திமிரான சூத்திரனின் வாயிலும் காதுகளிலும் அரசன் கொதிக்கும் எண்ணெய்யை ஊற்றவேண்டும்.

கல்வி கற்றல், அறிவு பெறுதல் ஆகிய விசயங்கள் குறித்த மனுவின் கட்டளைகளைப் பார்க்கலாம்.

3:156 சூத்திரர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் ஒருவர் அல்லது சூத்திரரிடம் கல்வி கற்கும் ஒருவர் சிராத்தா சடங்குக்கு அருகதையற்றவர்.

4:99 சூத்திரர்கள் முன்னிலையில் வேதம் படிக்கக் கூடாது.

வேதங்களைப் படிக்கும் சூத்திரர்களுக்குத் தரப்படும் தண்டனை விசயத்தில் மனுவின் சீடர்கள் குருவை மிஞ்சிய குரூரப் பேர்வழிகளாக இருக்கிறார்கள். மாதிரிக்கு ஒன்று. வேதங்களைக் கேட்கும் அல்லது வேதத்தை உச்சரிக்கும் சூத்திரனின் நாக்கை வெட்டி அவன் காதுகளில் காய்ச்சிய ஈயத்தை ஊற்றவேண்டும் எனக் கட்யாயனா உத்தர விடுகிறார்.

சூத்திரர்கள் சொத்து சேர்ப்பதுபற்றி மனு கூறுவதைப் பார்க்கலாம்:

10:129 ஒரு சூத்திரனுக்குச் சொத்து சேர்க்க வாய்ப்பிருந்த போதிலும் அவன் சொத்து சேர்க்கக்கூடாது;

www.padippakam.com



காரணம் ஒரு வேலைக்காரனான அவன் செல்வந்தனானால் அதனால் தலைக்கனம் ஏற்பட்டுப் பார்ப்பனர்களை அவமதிப்பான்.

8:417 வறுமையில் வாடும் பார்ப்பனன் ஒருவன், எவ்விதத் தயக்கமுமின்றிச் சூத்திரனின் பொருட்களைப் பறித்துக் கொள்ளலாம்.

சூத்திரனுக்கு ஒரே ஒரு தொழில்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மனுவின் இக்கட்டளை மீறப்படமுடியாதது. மனு கூறுகிறார்:

1:91 மூன்று சாதியினருக்கும் (பார்ப்பனர், சத்திரியர், வைசியர்) பணிவோடு பணிவிடை செய்வதே சூத்திரர்களுக்குக் கடவுள் பரிந்துரைத்த ஒரே வேலை.

10:121 பார்ப்பனனுக்குப் பணிவிடை செய்யும் சூத்திரனால் தன் வாழ்க்கையை நடத்த முடியவில்லையென்றால் ஒரு செல்வந்த வைசியனுக்குப் பணிவிடை செய்து வாழ்க்கையை நடத்திக் கொள்ளலாம்.

10:122 இம்மையின் பொருட்டோ மறுமையின் பொருட்டோ ஒரு சூத்திரன் பார்ப்பனனுக்குப் பணிவிடை புரியலாம். பார்ப்பனனின் பணியாள் என்ற ஒன்றே போதும், அவனுக்கு எல்லா நன்மைகளும் கிட்டும்.

10:123 பார்ப்பனனுக்குப் பணிவிடைபுரிவதே சூத்திரனின் உன்னதமான தொழில் ஆகும். இதைத் தவிர அவன் வேறு என்ன செய்தாலும் அதனால் ஒரு பலனும் கிட்டாது.

சூத்திரனுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொழில் அவன் விருப்பம் சார்ந்தது அல்ல. அவன் பணி செய்ய மறுத்தால், அதற்கான கட்டளைகளையும் மனு கொடுத்திருக்கிறார்:

படிப்பகம்

www.padippakam.com



8:413 விலைக்கு வாங்கினாலும் சரி, அல்லது வாங்கா விட்டாலும் சரி ஒரு சூத்திரனைத் தனக்குப் பணிவிடை செய்யும்படி பார்ப்பனன் கட்டாயப்படுத்தலாம். காரணம் பார்ப்பனனுக்கு அடிமையாக இருக்கவே சூத்திரன் உண்டாக்கப்பட்டிருக்கிறான்.

10:124 சூத்திரனின் திறமை, அவன் வேலை, அவனைச் சார்ந்திருக்கும் குடும்பத்தினரின் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்துப் பார்ப்பனன் அவனுக்கு வாழ்வதற்கான வசதி செய்து தரவேண்டும்.

10:125 மிஞ்சிய உணவு, பழைய தட்டுமுட்டுச் சாமான்கள் ஆகியவற்றை சூத்திரனுக்குத் தரவேண்டும்.

மற்ற சாதியினரிடத்தில் சூத்திரன் பணிவோடு நடந்து கொள்ள வேண்டும் என மனு கேட்டுக் கொள் கிறார்.

8:270 இரு பிறப்பாளர்களைத் தன் பேச்சினால் அவ மதிக்கும் சூத்திரனின் நாக்கு வெட்டப்பட வேண்டும். ஏனெனில் அவன் ஒரு இழி பிறப்பாளன்.

8:271 இரு பிறப்பாளர்களின் சாதியையோ பெயர் களையோ ஒரு சூத்திரன் குறிப்பிட்டுப் பேசினால். அவன் வாயில் பத்தடி நீளமுள்ள பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் திணிக்க வேண்டும்.

மனு இதோடு திருப்தி கொள்ளவில்லை. பெயர் சூட்டுவதில்கூடச் சூத்திரர்களின் தாழ்வான அந்தஸ்து வெளிப்பட வேண்டும் என அவர் விரும்பினார்.

**மனு கூறுகிறார்:**

2:31 பார்ப்பனர் பெயர்களில் முதல் பகுதி மங்கள கரமானதாகவும், சத்திரியருடையது அதிகாரத்தைக் குறிப்

படிப்பகம்

www.padippakam.com



பதாகவும் வைசியருடையது செல்வத்தைக் குறிப்பதாக வும் இருக்க வேண்டும். ஆனால் சூத்திரனின் பெயர் வெறுப்பைத் தருவதாக இருக்க வேண்டும்.

2.32 பார்ப்பனன் பெயரின் இரண்டாம் பகுதி மகிழ்ச்சியைக் குறிப்பதாகவும், சத்திரியருடையது பாது காப்பைக் குறிப்பதாகவும், வைசியருடையது செழுமை யைக் குறிப்பதாகவும், சூத்திரருடையது பணிவிடையைக் குறிப்பதாகவும் இருக்கவேண்டும்.

இந்த மூன்று வர்க்கத்தினருமே (சூத்திரர், பழங்குடி யினர், தாழ்த்தப்பட்டோர்) இயற்கையான தோழமைச் சக்திகளாவர். இந்துச் சமூக அமைப்பை ஒழிப்பதற்காக இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்வதற்கு அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன. ஆனால் அவர்கள் அவ்வாறு ஒன்றிணைவதில்லை. இவர்களை ஐக்கியப்படுத்துவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்துச் சமூக அமைப்பின் நிர்மாணிகளும் அதனால் முதன்மைப் பயனடைந்தவர்களும் அதன் தீவிர ஆதரவாளர்களுமான பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகப் பார்ப்ப னரல்லாதார் கட்சி 1919—35 காலப் பகுதியில் இவர்களை ஐக்கியப்படுத்த ஒரு முயற்சியை மேற்கொண்டது.

இந்த மூன்று வர்க்கத்தினரை ஐக்கியப்படுத்த மேற் கொள்ளப்பட்ட முயற்சி இது ஒன்று மட்டுமே அல்ல; தொழிலாளர் தலைவர்களால் குறிப்பாகக் கம்யூனிஸ்டு களால் மற்றொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எந்தச் சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தொழிலாளி வர்க்கத்தின் நலன் ஒன்றே என அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். அவர்களிடையே வர்க்க உணர்வையும் வர்க்க ஐக்கியத்தையும் வளர்த்திருக்கவேண்டும். ஒருமுறை அவர்கள் ஐக்கியப் பட்டுவிட்டால் தங்களின் அச்சமூட்டும் எண்ணிக்கையினால் பொருளாதார அமைப்பை

www.padippakam.com



நொறுக்கிவிடுவார்கள். பொருளாதார அமைப்பும் இந்துக்களின் சமூக அமைப்பும் தூள் தூள் ஆகிவிடும். ஆனால் நடந்தது என்ன? ஐக்கியம் உருவாகவில்லை. பார்ப்பனரைக் காட்டிலும் சூத்திரர்களும் குற்றப் பரம்பரையினரும் பழங்குடி மக்களும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக மிகுந்த பகைமையோடு இருக்கிறார்கள். உண்மையில் இந்துச் சமூக அமைப்பில் தாழ்த்தப்பட்டவர்களின் தாக்குதலை முறியடிக்கும் பார்ப்பனக் காவல்துறையாகச் சூத்திரர்கள் செயல்பட்டு வருகிறார்கள் இது ஒரு வியப்பான நிகழ்ச்சிப் போக்குதான்; ஆனால் இதுவே உண்மை! நிலவுகின்ற நிலைநிறுத்தப்பட்ட சமூக அமைப்பின் விதிகளையும், ஒழுங்குகளையும் மீறுகின்ற செயல்களில் தாழ்த்தப்பட்டோர் ஈடுபட்டபோதெல்லாம் அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். அவர்களுக்கு எதிரான வன்முறைகளை முன்னர்ப் பார்த்தோம். இவை யாவற்றையும் செய்தவர்கள் சூத்திரர்களே.

ஐக்கியத்திற்கான தேவை குன்றிப் போய் இருப்பதற்கான காரணங்களைத் தேடுவதற்கு நாம் வெகு தூரம் போக வேண்டியதில்லை. பன்மடிப் படிநிலையிலான சமத்துவமற்ற அமைப்பில் அதற்கான காரணம் காணக் கிடக்கிறது. இச்சமூக அமைப்பில் பார்ப்பனன் அனைவருக்கும் மேலான நிலையில் இருக்கிறான். சூத்திரன் அவனுக்கும் கீழாக ஆனால் தாழ்த்தப்பட்டவனுக்கும் மேலாக இருக்கிறான். இந்துச் சமூக அமைப்பு சமத்துவமற்ற சமூகமாக மட்டுமே இருந்திருந்தால் அது எப்பொழுதோ தூக்கியெறியப்பட்டிருக்கும். ஆனால் இது பன்மடிப்படி நிலையிலான சமத்துவமின்மையின் மீது இருந்து வருகிறது. ஆகவே ஒரு சூத்திரன் பார்ப்பனனைக் கீழிறக்குவது குறித்துக் கவலைப்படுவான். ஆனால் ஒரு தாழ்த்தப்பட்டவன் தனக்குச் சமமான நிலைக்கு உயர்வதை இவன் சகித்துக்கொள்ளமாட்டான். தாழ்த்தப்பட்டவர்களோடு இணைந்து இச்சமூக

www.padippakam.com



அமைப்பை நொறுக்குவதைக் காட்டிலும் பார்ப்பனர்கள் தனக்கு இழைக்கும் அவமானத்தைத் தாங்கிக்கொள்ளவே ஒரு சூத்திரன் விருப்பப்படுவான். இதன் விளைவு தாழ்த்தப்பட்டவர்களின் போராட்டத்தில் அவர்களோடு இணைவதற்கு ஒருவருமே இல்லை என்றாகிவிட்டது. அவன் முழுமையாக ஒதுக்கப்பட்டவனாகிவிட்டான். இவன் ஒதுக்கப்பட்டது மட்டுமல்ல; இவனது இயற்கை யான தோழமை சக்திகளும்கூட இவனை எதிர்த்தே நிற் கின்றன. தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் இந்தத் தனிமைப்படல் மேலும் ஒரு தடையாக இருக் கிறது.

□□

படிப்பகம்

www.padippakam.com



குறிப்புகளுக்காக

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தீண்டாமை என்பது ஒரு துரதிருஷ்டமாக இருக்கலாம். ஆனால் இந்துக்களுக்கோ தீண்டாமை என்பது வரப்பிரசாதமாகும். தனக்குக் கீழான நிலையில் சிலரை வைத்துக்கொள்ள இவ்வமைப்பு அனுமதிக்கிறது. எல்லோரும் எல்லாம் பெற்ற சமூகத்தையோ எல்லோரும் எதுவுமே பெறாத சமூகத்தையோ இந்துக்கள் விரும்பவில்லை. மாறாக ஒருசிலர் ஏதோ சில பெற்றிருக்க ஏனையோர் எதுவுமே பெறாத சமூகத்தையே இந்துக்கள் விரும்புகிறார்கள். தீண்டத்தகாதவர்களுக்கு எதுவுமே இல்லை. இவர்களோடு ஒப்பிடும்போது இந்துக்களுக்கு ஏதோ சில இருக்கின்றன. தீண்டாமைப் பழக்கத்தினால் இந்துக்கள் தங்கள் பிறவிப் பெருமையை தக்கவைத்துக் கொள்கிறார்கள். தங்களை மேலான நிலையில் வைத்துப் புளகாங்கிதம் கொள்கிறார்கள். இந்துக்கள் தீண்டாமையைக் கைவிடாமல் இருப்பதற்கு இது ஒரு கூடுதல் காரணமாகும்.

**— அண்ணல் அம்பேத்கர்**

படிப்பகம்